Sangathamil

# சங்கத்தமிழ்

யாதும் ஊரே யாவரும் கேளிர்

குரல் – 114 | சர்வதேச மின் செய்தித்தாள் | பெப்ரவரி 01 2026




**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

NISHANTHAN LAW OFFICE
SERVICES
Purchasing a Residential Property
Selling a Residential Property
Residential Mortgage Refinancing
Wills and Powers of Attorney
NOTARY SERVICES
NEW LOCATION
Umananthini Nishanthan
Barrister, Solicitor & Notary Public
416-289-9229
nishanthanlaw@bellnet.ca
www.nishanthanlaw.com
39 Devonshire Ave., Markham ON L3S 3P2
McCowan Rd & Devonshire Ave. (Between Steeles & Denison St)

MT CPA CA
MAYURAN THARMABALAN PROFESSIONAL CORPORATION
CHARTERED PROFESSIONAL ACCOUNTANT
AUDIT · REVIEW ENGAGEMENT · NOTICE TO READER · BUSINESS ADVISORY · CONTROLLERSHIP SERVICES
CORPORATE TAXES · PERSONAL TAXES · FINANCIAL PLANNING · CRA AUDITS · PAYROLL · BOOKKEEPING
Mayuran Tharmabalan, CPA, CA, LPA
647-748-6344 · 647-989-6298 · 647-748-6444 · www.tharmabalan.ca
Suite 402 - 1585 Markham Rd, Scarborough ON M1B 2W1
A LICENSED PUBLIC ACCOUNTING FIRM

Ideal Auto Tech Ontario
For all your vehicle repair and Service needs
www.idealautotech.com
All Mechanical Services - Muffler & Tire Works
Wheel Alignment - Engine & Transmission Repairs
To Wing Services
We do Vehicle Appraisal & Safety Inspection
T: 416 752 LUBE (5823) C: 647 219 5922 F: 416 752 0457
1815 Lawrence Ave., East, Unit 02, Scarborough
(Pharmacy & Lawrence) ON M1R 2Y3

JRS AUTO TECH
Call Subas
Cell: 416-206-9489
Office: 416-628-4399
AC $119.99 +
OIL CHANGE $59.99 +
USED TIRE $74.99 +
BRAKES JOB $299.99 +
7 DAY - OPEN: 9 AM - 9PM
2655 Lawrence Ave., E, Unit 05
Scarborough ON M1P 2S2
ALL MECHANICAL & ELECTRICAL REPAIRS
SERVICE@JRSAUTOTECH.CA

வீடு வாங்குதல், விற்றல், குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ் ஒழுங்குகள் மற்றும் இலவச ஆலோசனைகளும் வழங்கப்படும்
Nesan Chathanantham
Broker
Dir: 416-827-7343
Email: CCN5@hotmail.com
RE/MAX COMMUNITY
1265 morningside Ave Suite #203
Toronto, Ontario M1B 3V9
Tel: 416.287.2222 | Fax: 416282.4488

LONGO LAWYERS
Our Clients aren't just a file, each is a life.
We specialize in handling serious and life-changing personal injury claims resulting from all types of accidents. Our team of experienced trial lawyers is dedicated to providing the highest possible standard of legal services. If English isn't your first language, we have members of our team that are fluent in Tamil.
Cell: 647.992.2417
TP: 416.800.4232 Fax: 416.800.6247
Toll Free: 1.844.800.4232
Shenthuran Subramaniam
B.Sc., M.B.A., J.D
Personal Injury Lawyer
4950 Yonge St, Suite 401, Toronto ON M2N 6K1

உங்கள் கனவு இல்லத்தை நனவாக்கிட என்னை அழையுங்கள்!
Kaja Sivalingam
Sales Representative
647-338-5252
skajaruban@gmail.com
Higher Standard Agents... Higher Results!
HOMELIFE/GTA REALTY INC.
5215 Finch Ave E, Suite 203, Scarborough ON M1S 0C2 OFFICE: 416-321-6969

Muhunthan Sivathasan (Danny)
Graphic Designer & Printer
Silver Print House
Digital Printing, Graphics & Publication
D'impression numérique, les graphiques et la publication
437 423 5460
Silverprinthouse@gmail.com
Please call & book an appointment before visiting... I will provide the adress after booking.....

உங்கள் விருப்பத்திற்கேற்ப வீடு, வியாபாரம் வாங்க, விற்க நம்பிக்கையுடன் நாடுங்கள்
ST THINKING OF BUYING OR SELLING
Suresh Theivendram
Broker
416.890.7179
realtorsuresh@outlook.com

RIGHT AT HOME Realtor Group
JEY RASATHURAI MBA, BBA
REALTOR & MORTGAGE BROKER
Mortgage, Line of Credit, Refinance, Renewal
Private 1st,2nd & 3rd Mortgages - No Income Verification
Solutions for Power of Sale Issues
Buying & Selling & Lease Commercial & Residential Properties
Cell : 416-624-4843
Bus : 416-816-9011
301-305 Milner Ave, Toronto ON M1B 3V4
" NO PROMISES BUT SOLUTIONS"

MORTGAGE ARCHITECTS
Brokerage No. 12728
Need Assistance for your
First and Second Mortgages?
Re-Financing? Secured Line of Credit?
Commercial Mortgages?
Are you... Self Employed?
Temporary Resident? New Immigrant?
Not to Worry!
Please Call - THEVEN KANKESU
Mortgage Agent, FSCO Lic# M08008759
416.939.8789
thevenk1.tk@gmail.com / theven.kankesu@mtgarc.ca

ACCIDENT HAPPENS!
But your injuries don't have to last a lifetime.
TRUST ARAM LEGAL SERVICES!
ONE CALL - WE WILL HANDLE IT ALL!
Motor Vehicle Accident? Questions? Get Answers
ARAM Legal Services
Selva Thiyagarajah
416-618-1447
www.aramlegal.ca

விளம்பரத் தொடர்பிற்கு அழையுங்கள்: 437.345.4203



"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது."
தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

Sangathamil
சங்கத்தமிழ்
யாதும் ஊரே யாவரும் கேளிர்
சர்வதேச மின் செய்தித்தாள்
www.sangathamil.ca

## தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து

தமிழீழ மக்களாகிய நாம் ஒரு தேசிய இனக்கட்டமைப்பைக் கொண்டவர்கள். பழம்பொரும் மொழியும், பண்பாடும், பாரம்பரிய தாயகமும், பழமை மிக்க வரலாறும் கொண்ட ஒரு தனித்துவ தேசமாக நாம் வாழ்ந்து வருகின்றோம். இந்தத் தமிழர் தேசத்தையே தமிழீழம் என அழைக்கின்றோம்.







# சங்கத்தமிழ்

## தொடர்புகளுக்கு

**தொலைபேசி**
437 345 4203

**மின்னஞ்சல்** (Email)
sangathamilcanada@gmail.com

**இணையத்தளம்** (Website)
www.sangathamil.ca


அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சியும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பரதாரர் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.




# புலிகள் இயக்கத்தின் முதலாவது பாசறையின் பொறுப்பாளர்

# லெப். கேணல் பொன்னம்மான்




தந்தை தாய் இருந்தால் நமக்கிந்த தாழ்வெல்லாம் வருமோ ஐயா...



என்ற பாடல் முகாமுக்குள் ஒலித்துக் கொண்டிருந்த ஓரிரவில் தோழர்கள் காற்று வெளியில் நின்று கொண்டிருந்தார்கள். அருமையான அந்தப் பாடல் காற்றில் என்னமாய் வந்து அவர்களை உதைத்தது.

எமது இயக்கத்தில் புதிதாக இணைந்து பயிற்சி எடுப்பதற்காக பயிற்சி முகாமில் நின்று கொண்டிருந்த புதியவர்களுக்கு நெஞ்சில் மெல்லிய சோகத்தை அந்த வரிகள் எழுதியிருக்கக்கூடும்.

ஆனால் அந்த அத்தனை பேருக்கும் தாயாக, தந்தையாக, அண்ணனாக, அம்மானாக, நின்ற பொன்னம்மானே அந்தப் பாடலைப் பாடிக் கொண்டிருந்தார். அம்மான் இருக்கும் இடத்தில் எப்போதுமே சந்தோசம் குடிகொண்டிருக்கும். ஆனால் எப்போதும் தமிழர் துயரநிலை கண்டு அவர் உள்ளம்

லெப். கேணல் பொன்னம்மான் (அற்புதன் – குகன்)



கொதித்துக் கொண்டிருந்தது. அவர் அந்தப் பாடலை அடிக்கடி பாடும்போது தமிழர் துயரநிலையை சூட்சுமமாகப் பாடுவதாக தோழர்கள் நினைத்துக் கொள்வார்கள்.


எமது இயக்கத்தில் எமது தேசியத் தலைவர் பிரபாகரனுடன் அக்காலத்தில் தோளோடு தோளாய் நின்று இயக்கத்தைப் பலமாகக் கட்டியெழுப்புவதற்காக அயராது உழைத்தார் அம்மான். எழுபதுகளின் நடுப்பகுதியில் எமது தலைவருடன் இணைந்து கொண்டு செயற்படத் தொடங்கி உமையாள்புரம், திருநெல்வேலி தாக்குதல் உட்பட பல தாக்குதல்களில் தனது துணிவையும், வீரத்தையும் வெளிப்படுத்தியிருந்தார்.

1983ஆம் ஆண்டு திருநெல்வேலியில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்ட நடவடிக்கைக்குப் பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மிகவும் வேகமாகவும் அதேவேளை நிதானத்துடனும் வளரத் தொடங்கியது. போர்ப்பயிற்சிகள் இந்தியாவில் ஆரம்பமாகின. அங்கு நடந்த முதலாவது பாசறையின் பொறுப்பாளராக இருந்த பொன்னம்மான் பயிற்சியின் போதே சகவீரர்களை எமது இயக்கத்தின் விதிமுறைக்கேற்ப உருவாக்கிக் கொண்டிருந்தார். இந்தப் பாசறையில் தளபதிகளான கிட்டு, விக்டர், புலேந்திரன், சூசை, பொட்டு, கணேஸ், அருணா, ராதா, பரமதேவா, பதுமன், கேடில்ஸ் போன்றவர்கள் உட்பட சுமார் நூறுபோராளிகள் இருந்தனர். பயிற்சியை முடித்துக் கொண்ட பொன்னம்மான் தமிழ்நாட்டில் பல இடங்களில் பயிற்சி முகாம்களை ஏற்படுத்தி புதிய வீரர்களை புரட்சியாளர்களாக்கினார். உலகமே வியக்கக்கூடிய வகையில் எமது போராட்டம் வளர்ச்சியடைவதற்குத் தேவையான, புதிய வீரர்களிற்குப் பயிற்சி அளித்தல், வேண்டிய ஆயுதங்களைச் செய்து கொள்ளல் போன்ற முக்கிய விடயங்களில் பொன்னம்மானின் முயற்சி கணிசமாக இருந்தது என்றே சொல்லலாம்.

வெடிமருந்துகளைக் கையாள்வதில் பொன்னம்மான் மிகவும் வல்லுனராக இருந்தார். அதற்கேற்றவாறு மேலும் பல வீரர்களை, ஆயுதங்கள் செய்யும் பிரிவிற்குத் தகுதியுள்ளவர்களாகவும் ஆக்கியிருந்தார். பேராட்டத்திற்கு கை எறிகுண்டு கணிசமான அளவு தேவையாக இருந்தது. அன்றைய காலகட்டத்தில் குண்டு தயாரிப்பு வேலைகள் சாத்தியமற்றதாக இருந்தது. பொன்னம்மானின் கடுமையாக முயற்சியினால் 1985, 1986 ஆம் ஆண்டுகாலப் பகுதியில் மாதாமாதம் ஆயிரக்கணக்கில் கைக்குண்டுகள் தயாரிக்க வழிசெய்தார். இந்தியாவில் 2000 இற்கும் அதிகமான வீரர்களைத் தோற்றுவித்தது மாத்திரமன்றி இராணுவத் தொழில்நுட்பத் வளர்ச்சிக்கும் முக்கிய காரணியாக பொன்னம்மான் செயற்பட்டார்.

பெரும் எண்ணிக்கையிலான விடுதலை வீரர்களை உருவாக்கி இயக்க வரலாற்றில் பெரும் சாதனை படைத்தவர் பொன்னம்மான். பல சிறப்புக்களும், தகுதியும், ஆளுமையும் மிக்க பொன்னம்மானின் போராட்ட வாழ்வின் இறுதிக்கணங்கள் வீரம் செறிந்தவை. யாழ்ப்பாணத்தில் உள்ள நாவற்குழி எனும் இராணுவ முகாம் மீது தாக்குதலை நடத்த கிட்டண்ணாவும் தோழர்களும் திட்டமிட்டுக் கொண்டிருந்தார்கள். அத்தாக்குதலில் பொன்னம்மானும் முக்கிய பங்கேற்று செயற்பட்டுக் கொண்டிருந்தார். இராணுவ முகாம் மிகவும் பலம் பொருந்திய வெளி அமைப்பைக் கொண்டிருந்தது. அது கடல் நீர் உள்வாங்கிய பகுதி. சுற்றிவர நூறு யாருக்கும் மேலாக ஒரே வெளிப் பிரதேசம். வெட்டை வெளி. சிறு நகர்வும் எதிரிக்குத் தெரிந்து விடக்கூடிய அபாயம் இருந்தது. இராணுவ முகாமைச் சுற்றி நான்கு பாதுகாப்பு அரண்கள் அமைக்கப்பட்டு மண்ணை





சுவர்போல குவித்து வைத்திருந்தனர்.

அவர்களுடைய காவல் அரண்களை உடைத்துக் கொண்டு உட்புகுவது என்பது மிகவும் சிரமத்துக்குரியதும் எமது வீரர்கள் தரப்பில் அதிக சேதத்தை ஏற்படுத்தக் கூடியதுமான முயற்சி. எனவே அவர்களுக்கு அதிர்ச்சியூட்டி அந்த அதிர்ச்சியில் இருந்து மீண்டு அவர்கள் காவல் அரண்களை பலப்படுத்துவதற்கு முன்னர் நாம் தாக்கி உட்புகக் கூடியதாகத் திட்டம் தீட்டப்பட்டது. தினமும் அந்த இராணுவ முகாமுக்கு தண்ணீர் எடுத்துக் கொண்டு ஒரு பவுசர் செல்வது வழக்கம். அது வெளியாரின் வண்டி: சம்பளத்திற்கு அமர்த்தப்பட்டு இருந்தது. எனவே அதைப் போலவே ஒரு பவுசர் வண்டியைத் தயாரித்து, அதன் கீழ் அரைவாசிப் பகுதிக்கு தண்ணீரை விட்டு, திட்டமிட்ட நாளில் உள்ளே அனுப்பி வெடிக்க வைத்து முகாமை தாக்கியழிப்பதற்கான வேலைகள் நடக்கத் தொடங்கின. பழைய வண்டியைப் போல் ஒரு புதிய வண்டியைத் தயாரிப்பது என்பது மிகவும் கஸ்டமான விடயமாக இருந்தது.

அதிலும் அந்த பவுசர் எங்கோ தாக்குதலுக்குள்ளாகி ஒரு பக்கத்தில் நசுங்கியும் இருந்தது. அது மாத்திரமல்ல தோழர்கள் செய்யும் வண்டி வாயில் காவலர்களைத் தாண்டிச் செல்ல வேண்டி இருந்ததால் அதேபோல் நசுக்கப்பட வேண்டி இருந்தது. இயற்கையாக விபத்துக்குள்ளான வண்டியைப் போல் வெடிமருந்தேற்றிச் செல்லும் வண்டியை மிகச் சிரமத்திற்குப் பின் உருவாக்கினார்கள். புதிதாக மை பூசிய புவுசரை பழைய பவுசரைப் போல் உருமாற்றம் செய்ய வேண்டியிருந்தது. ஏன் பழைய வண்டியில் ஏற்பட்டிருந்த துருப்பிடித்த பகுதிகூட தாக்குதலுக்கு தயாரான பவுசரில் இருந்தாக வேண்டும். அதைவிடவும் பவுசர் இரு பகுதியாகப் பிரிக்கப்பட்டு கீழ் பகுதி வெடிமருந்து நிரப்பிய பகுதியாகவும், மேல் பகுதியில் தண்ணீர் நிரம்பிய பகுதியாகவும் தயாரித்தோம்.

ஏனென்றால் முகாம் வாயிலில் உள்ள காவல் அரணில் இருப்பவர்கள் பவுசரின் மேல் ஏறி மூடியைத் திறந்து தண்ணீரைப் பார்த்தபின்தான் உள்ளே அனுமதிப்பார்கள். இத்தனை சிரமங்களின் மத்தியிலும் அந்த பவுசரை மிக நேர்த்தியாக வடிவமைத்தார்கள். பவுசருக்கு வெடிமருந்தை இணைக்கும் பணியை பொன்னம்மான் எடுத்துக் கொண்டார். இம்முயற்சிக்கு வழிகோலி, அயராது உழைத்து வந்தவன் கேடில்ஸ்தான். கேடில்ஸ் அப்போது சாவகச்சேரிப் பகுதிக்கு பொறுப்பளராக விளங்கியவன். மிகத் துல்லியமாக முகாமை வேவு பார்த்து, இராணுவ முகாமினது ஒவ்வொரு நடவடிக்கையையும் அவதானித்து வைத்திருந்தான். கேடில்சும், வாசுவும் சேர்ந்துதான் இரவுபகலாக உழைத்து அந்த பவுசரை உருவாக்கினார்கள்.



அவர்களுக்குத் துணையாக ரஞ்சன் எனும் பொறியியலாளர் ஒருவர் பணியாற்றினார். அவர் பொன்னம்மானின் உறவினருங்கூட. மிகுந்த மதிநுட்பம் வாய்ந்த ரஞ்சன், வாசுவோடு சேர்ந்து விமானமொன்றைத் தயாரிக்கும் பணியிலும் ஈடுபட்டு வந்தார். முழுவதுமாக தன்னை இயக்கத்துடனேயே இணைத்துக் கொண்டவர்.


14.02.1987 அன்று தாக்குதல் நடத்துவதாக இருந்தது. கெரில்லா தாக்குதல்களை இரவு நடத்துவதுதான் தோழர்களுக்கு உசிதமாக இருந்தது. தாக்குதல் தொடங்கினால் இராணுவ ஹெலிகொப்டர்களும், குண்டு வீச்சு விமானங்களும் தகவல் பெற்று எம்மைத் தாக்கத் தொடங்கலாம். பகல் வேளையானால் மேலிருந்து கண்டுபிடித்து குண்டு வீசுவது அவர்களுக்கு மிகவும் சுலபமான விடயம். ஆனால் பிற்பகல் 6 மணிக்குப் பின் இராணுவ முகாமுக்கு தண்ணீர் கொண்டு செல்ல அனுமதிக்கப்படுவதில்லை. எனவே கடைசி சந்தர்ப்பத்தை தோழர்கள் தாக்குதலுக்கான நேரமாக குறித்துக் கொண்டார்கள். 6:30 மணிக்கு சண்டை தொடங்குமானால் சுமார் ஒரு மணி நேரத்தில் இருட்டடித்துவிடும். அதன்பின் தோழர்களுக்கு மிகவும் பாதுகாப்பாகவே இருக்கும்.

முதல்நாள் இரவிரவாக பொன்னம்மான், வாசு, ரஞ்சன் ஆகியோர் மருந்தடைத்தனர். வெடிமருந்தின் நச்சுத்தன்மை அவர்களைப் பாதித்தது. அதனால் மூவரும் மிகச் சோர்வாக வேறு இருந்தார்கள். அதிகாலை வெடிமருந்து இணைக்கப்பட்ட நிலையில் பவுசர் தயாராக நின்றது. அம்மான் அவ்விடத்திலேயே தூங்கியும் விட்டார். வாசுவும் கிட்டண்ணாவும் தாக்குதல் குழுக்களைப் பிரித்து அவரவர்களுக்குத் தேவையான வெடி பொருட்களை இணைத்து கொடுத்துக் கொண்டிருந்தார்கள். மூன்று பெரிய லொறிகள் தயார்ப்படுத்தப்பட்டன. முகாமுக்குள் சென்ற பவுசர் வெடித்ததும் ஜொனி, கேடில்ஸ், சூசை தலைமையிலான குழுக்கள் லொறிகளில் விரைந்து முகாமுக்குள் சுட்டுக் கொண்டே உட்புகுவதாகத் திட்டம். லொறியின் முன்புறமும், மேல்பக்கமும் மணல் மூட்டைகள் அடுக்கப்பட்டன. முதல் லொறியில் ரொக்கட் லோஞ்சருடன் நிற்பவன் உட்புகும் போது ரொக்கட்டால் வாயில் காவல் அரணை உடைத்தெறிவதாக திட்டம் தீட்டப்பட்டிருந்தது.



www.sangathamil.ca





நேரம் பிற்பகலை நெருங்கிக் கொண்டிருக்க தாக்குதல் குழுக்கள் தத்தமது நிலைகளுக்கு செல்லத் தொடங்கி விட்டனர். பவுசரை அனுப்பும் பொறுப்பு பொன்னம்மான், கேடில்ஸ், வாசு, ஆகியோரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. கிட்டண்ணா தாக் குதலை நடத்துவதற்காக, சகலருடனும் வாக்கிடோக்கியில் தொடர்பு ஏற்படுத்தக்கூடிய வகையில் இடம் தெரிந்தெடுக்கப்பட்டு அதற்குரிய வசதிகள் செய்திருந்தார்.

கிட்டண்ணா ஐந்து மணியளவில் எல்லாக் குழுக்களையும் சரி பார்த்து வந்து கொண்டிருந்தார். நேரம் நெருங்கிக் கொண்டிருக் கிறது. கிட்டண்ணா ஒரு குழுவினர் நின்ற வீட்டில் அவர்களை சரிபார்த்துக் கொண்டிருந்தார்... மிகப்பெரிய சத்தத்தைத் தொடர்ந்து ஒரு முறை பூமி அதிர்ந்தது. அதிர்ச்சி, வியப்பு, சற்றும் புரியவில்லை. 5:30க்கு வேறு இந்த வெடிச்சத்தம் கேட்டதால் தோழர்கள் மத்தியில் ஒரே குழப்பம். கிட்டண்ணா பொன் னம்மானை வாக்கியில் பலதடவை கூப்பிட்டார். கேடில்சைக் கூப்பிட்டார். வாசுவைக் கூப்பிட்டார். பதில் இல்லை. பல தட வைகள் அழைத்தார். மீண்டும் பதில் இல்லை. ஜொனியை அழைத்தார்: பதில் வந்தது. ஜொனியை அழைத்து உடனடியாக சத்தம் கேட்ட இடத்திற்கு அனுப்பினார். ஜொனி அங்கு சென்ற போது எங்கும் தூசிமயம். பிரளயம் ஒன்று ஏற்பட்டதைப் போல இருந்தது. அவ்விடத்தில் பெரிய குழி, அதற்கருகில் கேடில் சினுடைய கார் நொறுங்கிப் போய் கிடந்தது. இதற்கு 50 யார் தூரத்தில் லொறி நின்றது. லொறிக்குள் பார்த்தபோது ஐவர் அதற்குள் இறந்து கிடந்தார்கள். தண்ணீர் நிரப்பிக் கொண்டிருக் கையில் பவுசர் வெடித்து விட்டது. ஆனால் அந்த இடத்தில் நின்று சம்பவத்தைப் பார்த்த யாரும் உயிருடன் இல்லை.

பொன்னம்மான், கேடில்ஸ், வாசு, ரஞ்சன் ஆகியோர் அந்த





இடத்துக்கு வந்ததாக தோழர்கள் கூறினார்கள். பவுசரில் தண்ணீர் நிரப்பும்போது தண்ணீர் சிறிது ஒழுகியதாம். அதைப் பொன்னம்மான் கேடில்சுக்கும் வாசுவுக்கும் தெரிவித்து பொறியி யலாளர் ரஞ்சனையும் அழைத்துக் கொண்டு பவுசர் நின்ற இடத் திற்கு சென்றார்கள். பொறியியல் நடவடிக்கையின் போது வெடி விபத்து ஏற்பட்டுள்ளது. இதனை உறுதிப்படுத்த, அங்கு நின்ற எவருமே இல்லை. எல்லோரையும் தேடினார்கள். வாசுவின் பிஸ்டலும், அடையாள அட்டையும் கேடில்சின் காற்சட்டையின் ஒரு பகுதியும்தான் கிடைத்தது. பொன்னம்மானை அடை யாளம் காணக்கூடியவகையில் அவருடைய உடலோ, உடலின் பகுதியோ எந்தத் தடமும் கிடைக்கவில்லை. ஈழத்தில் வீசிக் கொண்டிருக்கும் காற்றோடு காற்றாய் அவர் மறைந்து விட்டார்

முகாம்கங்களில் கலைநிகழ்ச்சிகளை வைப்பித்தும், குறும்புகள் செய்தும், நடித்தும், சிரிக்க வைத்து, எந்த நேரமும் சந்தோசத் தைக் குடிகொள்ள வைத்திருக்கும் அந்த மனிதன் இன்று



இல்லை. “அம்மான் ஒரு பாட்டுப் பாடுங்கோ” என்று தோழர்கள் அடம் பிடிப்பதும் அவர் எப்போதும் தோழர்களுக்காய் பாடிக் காட்டும் அந்தப் பாட்டும் நினைவில் நனைய கண்கள் பனிக் கின்றன. ஈரமான இதயம் சுமந்த மனிதர்களின் நண்பனாய், தந்தையாய், தனையனாய், தாயாய், எல்லாமுமாய் நின்ற எங்கள் அம்மானிடம் வளர்ந்த எத்தனையோ தோழர்கள் இன்றும் அவரது கனவைச் சுமந்தபடி மண்ணில் நிற்கிறார்கள்.

லெப்.கேணல் பொன்னம்மானுடன் வீரச்சாவடைந்த போராளிகள் :-

மேஜர் கேடில்ஸ் (திலீபன்), கப்டன் வாசு (சுதாகர்), லெப். சித்தாத்தர் (வசீகரன்), 2ம்லெப். பரன் (அர்ச்சுணன்), வீர வேங்கைகளான யோகேஸ் (பாலன்), கவர் (நகுலேஸ்வரன்), அக்பர் (லோகநாதன்), குமணன்(மோகனலிங்கம்), தேவன் (வசந்தகுமார்)

“புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்”
























லெப். கேணல்

# பொன்னம்மான்

நிழல் படிமம்




# கேணல் கிட்டு உள்ளிட்ட பத்து மாவீரர்களின் 33 ஆம் ஆண்டு நினைவேந்தல் – தேராவில், முல்லை

01.01.2026

கடந்த 1993ஆம் ஆண்டு வங்கக்கடலில் வீரகாவியமான விடுதலைப்புலிகளின் முத்த தளபதிகளில் ஒருவரான கேணல் கிட்டு உள்ளிட்ட பத்து மாவீரர்களின் 33ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் 16.01.2026இன்று முல்லைத்தீவு மாவட்டத்தின் இறுவேறு இடங்களில் உணர்வெழுச்சியுடன் முன்னெடுக்கப்பட்டன.






அந்தவகையில் முல்லைத்தீவு - தேராவில் மாவீரர் துயிலுமில்ல மண்டபத்திலும், மூங்கிலாறு வடக்கு மாதர்கிராம அபிவிருத்திச் சங்க வளாகத்திலும் இந்த நினைவேந்தல் நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன.

அதற்கமைய அகவணக்கம் செலுத்தப்பட்டு, மாவீரர்களின் திரு உருவப் படத்திற்கு சுடர் ஏற்றப்பட்டு, மலர்மாலை அணிவிக்கப் பட்டு, மலர்தூவி வணக்க நிகழ்வுகள் உணர்வெழுச்சியுடன் இடம்பெற்றிருந்தன.

மேலும் தேரவில் மாவீரர் துயிலுமில்லத்தில் கேணல் கிட்டு உள்ளிட்ட மாவீரர்களின் நினைவாக மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும், மரக்கன்றுகளும் வழங்கிவைக்கப் பட்டிருந்தன.















"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது."

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

www.sangathamil.ca

# யாழ். கிட்டுப் பூங்காவில் கேணல் கிட்டு உட்பட 10 மாவீரர்களின் 33ஆம் ஆண்டு நினைவேந்தல்

16.01.2026

வங்கக்கடலில் காவியமான தளபதி கேணல் கிட்டு உட்பட 10 வீரர்களின் 33 வது நினைவேந்தல் நிகழ்வு இன்று 16.01.2026 வெள்ளிக்கிழமை நல்லூர் முத்திரைச் சந்தியில் அமைந்திருக்கும் கேணல் கிட்டுப் பூங்காவில் போராளிகள் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றது.





இந் நினைவேந்தல் நிகழ்வில் சிறப்பம்சமாக நல்லூர் ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபன் ஆவணக் காப்பகத்தினால் உருவாக்கப்பட்ட 'கிட்டு ஒரு தனி மனித வரலாறு' என்னும் தொனிப் பொருளுடன் தளபதி கிட்டுவின் வாழ்வியல் தொடர்பான ஆவணக் காட்சியகமும் திறந்து வைக்கப்பட்டது.























## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

www.sangathamil.ca

# யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற பொங்குதமிழ் பிரகடனத்தின் 25ஆம் ஆண்டு நிறைவு!

17.01.2026

யொழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பொங்கு தமிழ் பிரகடனத்தின் 25 ஆம் ஆண்டு நிறைவு நாள 17.01.2026 இன்று உணர்வெழுச்சியுடன் யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் நினைவு கூரப்பட்டது.






பல்கலைக்கழக மாணவர்கள், இணைந்து பல்கலைக்கழக வளாகத்திற்குள் உள்ள பொங்குதமிழ் நினைவு தூபி முன் கூடி




நினைவு கூர்ந்திருந்தனர்.

தமிழ் மக்களின் அபிலாசைகளான சுயநிர்ணய உரிமை, மரபு வழித்தாயகம், தமிழ் தேசியம் என்பவை அங்கிகரிக்கப்பட வேண்டும் என்பவை பொங்குதமிழ் பிரகடனமாக வெளியிடப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது .

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மலர்தூவி வணக்கம் செலுத்தப் பட்டது. நினைவுரைகளும் இடம்பெற்றன.





# யாழ்ப்பாண வீதியில் நடந்து ஏமாற்றுகின்றார்; இதை தான் மஹிந்த ராஜபக்சே அவர்களும் யாழ்ப்பாணக் கடற்கரைகளில் நடந்து படம் போட்டார்

17.01.2026

வட்டக்கச்சி விவசாய அரச பண்ணையில் 415 ஏக்கர் நிலப்பரப்பு இன்னமும் இராணுவம் வசம் இருக்கின்றது. வெள்ளாங் குளத்தில் 500 ஏக்கர் விவசாய பண்ணை இராணுவம் வசம் இருக்கின்றது. தேராவிலில் 1,200 ஏக்கர் விவசாய பண்ணை இராணுவம் வசம் இருக்கின்றது. முட்கொம்பனில் 100 ஏக்கர் தென்னம் தோட்டம் இராணுவம் வசம் இருக்கிறது. முழங்காவிலில் 1,800 ஏக்கர் மரமுந்திரிகை தோட்டத்தில் பெரும்பகுதி இன்னமும் இராணுவம் வசம் இருக்கின்றது. சாந்தபுரத்தில் 680 ஏக்கர் விவசாய பண்ணை இன்னமும் இராணுவம் வசம் இருக்கின்றது. ஜெயபுரத்தில் 120 ஏக்கர் விவசாய பண்ணை இன்னமும் இராணுவம் வசம் இருக்கின்றது. மலையாளபுரத்தில் 798 ஏக்கர் விவசாய பண்ணை இன்னமும் இராணுவம் வசம் இருக்கின்றது (ஏக்கர் அளவை தனிப்பட உறுதிப்படுத்த முடியவில்லை). தேறாங்கண்டல் பல நூறு ஏக்கர் விவசாய பண்ணையும் இன்னமும் இராணுவம் ஆக்கிரமித்து இருக்கின்றது.

இது போதாதென்று யாழ்ப்பாணத்தில் 2,500 ஏக்கருக்கு மேற்பட்ட வளமான விவசாய நிலமும் இராணுவம் வசம் இருக்கின்றது.

இந்த ஆக்கிரமிப்புகளை அகற்றி விவசாய பண்ணைகளை விருத்தி செய்தால் வடக்கு மகாணமே இலங்கை தீவின் விவசாய பொருளாதாரத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்திற்கு கணிசமாக பங்களிக்க முடியும். குறிப்பாக இந்த பண்ணைகளில் சேமிப்பு தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தி வடிகால் வெள்ளத்தடுப்பு அணைகளை மேம்படுத்தி உற்பத்தித்திறன் மேம்பாடு, பௌதிக வள மேம்பாடு, நிலத்தடி நீர் முகாமைத்துவம், போன்ற மாற்றங்களை செய்து விவசாய சமூகத்தை வலுவடைய செய்ய முடியும்.

உள்ளூர் விதை உற்பத்தி, சேவைகால பயிற்சிகள், விவசாய தொழில்நுட்ப விரிவாக்கம் போன்ற பல்வேறு விடயாங்க்ளுக்கு மேற்படி பண்ணைகளை பயன்படுத்த முடியும். அதே போன்று சரியான உள்ளூடுகள், இயற்கை உரம் போன்ற அடிப்படை விடயங்களை விவசாயிகளுக்கு உரிய நேரங்களில் இந்த பண்ணைகளை மக்கள் மயப்படுத்துவதன் ஊடக பெற்று கொடுக்க முடியும்.

மறுபுறம் முல்லைத்தீவு மாவட்டத்தில் மட்டும் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான கால்நடைகள் உள்ளன. அதேபோல் மன்னாரில் 140,000 கால்நடைகள், வவுனியாவில் 130,000 கால்நடைகள் உள்ளன. இவ்வாறு தேசிய பால் உற்பத்திக்கு முக்கிய பங்கு வகிக்கக்கூடிய வன்னி பெருநிலப்பரப்பில் உள்ள 370,000 கால்நடைகளுக்கான மேய்ச்சல் நிலங்களை இராணுவம், வன வள திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம் உட்பட ஒற்றையாட்சி கட்டமைப்புகள் ஆக்கிரமித்து இருக்கின்றன.

அதாவது இராணுவ ஆக்கிரமிப்புக்குள் வடக்கின் விவசாய மற்றும் விலங்கு வேளாண்மை சார்ந்த பொருளாதாரத்தை இன்னமும் முழுமையாக முடக்கி வைத்திருக்கின்றார்கள். இவ்வாறு முடக்கப்பட்டு இருக்கும் விவசாய பொருளாதாரத்திற்கு குறைந்த பட்ச தீர்வை பெற்று கொடுக்க இனவாத ஜேவிபி ஆட்சியாளர்கள் தயாரில்லை.
ஆனால் இந்த அட்டூழியங்களை மறைத்து விட்டு அரச பொது நிதியில் அனுரா குமார திசாநாயக்க எனும் பொய்யர் யாழ்ப்பாணத்தில் தை பொங்கல் கொண்டாடி கதை சொல்லுகின்றார்.





தங்களின் அதிகாரத்தை தமிழர்கள் ஏற்று கொண்டு விட்டார்கள் என நடிக்கின்றார்.

யாழ்ப்பாண வீதியில் நடந்து ஏமாற்றுகின்றார். இதை தான் மஹிந்த ராஜபக்சே அவர்களும் செய்தார். யாழ்ப்பாண கடற்கரைகளில் நடந்து படம் போட்டார் . இப்போது அவரின் இனவாத வாரிசு அனுரா குமார திசாநாயக்க என்கின்ற பொய்யரும் செய்கின்றார் - இனமொன்றின் குரல்

# ‘ஒற்றுமைக்காக’ போலி நாடகம்!

**சமூக வைத்தியர் முரளி வல்லிபுரநாதன்**

18.01.2026

மாபெரும் ஏமாற்று வித்தை: நீதிக்கான குரல்கள் புறக்கணிக்கப்படும் நிலையில் “ஒற்றுமைக்காக” ஆடும் போலி நாடகம். ஒரு படம் ஆயிரம் பொய்களை அம்பலப்படுத்தும் என்பதற்கு பிரதீப்பின் இந்தச் சிறந்த கேலிச்சித்திரம் ஒரு சான்றாகுமென எச்சரித்துள்ளார் சமூக வைத்தியர் முரளி வல்லிபுரநாதன்

யாழ்ப்பாணத்தில் நடக்கும் இந்த ஏமாற்று நாடகத்தை உற்றுப் பாருங்கள். ஒருபுறம், அரசாங்கம் மற்றுமொரு அரசியல் கூத்தை அரங்கேற்றிக் கொண்டிருக்கிறது. கலாசாரங்களை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி, காவடி ஆடிக்கொண்டு, “ரட்டம எக்கட” (நாடும் ஒன்றாக) போன்ற வெற்று கோஷங்களை எழுப்புகிறார்கள். ஒரு ஆட்டமும், ஒரு மாலையும் பல தசாப்த கால வலியைத் துடைத்துவிடும் என்று அவர்கள் நினைக்கிறார்கள்.

மறுபுறம், வடக்கின் கொடூரமான உண்மை நிலை நிற்கிறது. மக்கள் இந்தக் கூத்தைப் பார்த்து கைதட்டவில்லை. பல தசாப்தங்களாக அவர்கள் முன்வைக்கும் அதே கோரிக்கைகளையே இப்போதும் ஏந்தியிருக்கிறார்கள் - சர்வதேச சமூகத்தையும் தென்னிலங்கையையும் ஏமாற்றுவதற்காக அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் வேண்டுமென்றே புறக்கணித்த கோரிக்கைகள் இவை.


அரசாங்கம் வேடம் போடும் வேளையில், உண்மையான பிரச்சினைகள் இன்னும் தீர்க்கப்படாமல் உள்ளன:

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி எங்கே? இராணுவத்தின் பிடியிலுள்ள எமது காணிகளை எப்போது விடுவிப்பீர்கள்? அதிகாரப் பகிர்வுடன் கூடிய அரசியல் தீர்வு எங்கே?

இந்த நாடகங்களை நிறுத்துங்கள். வடக்கிலுள்ள தமிழ் மக்களுக்கு உங்கள் ஆட்டங்கள் தேவையில்லை; அவர்களுக்கு கௌரவம் தேவை. “ஒற்றுமை” என்ற வெற்று கோஷங்கள் அவர்களுக்குத் தேவையில்லை் அவர்களுக்கு உறுதியான அரசியல் தீர்வு தேவை.

இந்தக் கோரிக்கைகளுக்குப் பதில் கிடைக்கும் வரை, உங்கள் “ரட்டம எக்கட” என்பது ஒரு கொடூரமான நகைச்சுவையே தவிர வேறில்லை. எமக்குத் தேவை உண்மையான பொறுப்புக்கூறல், மற்றுமொரு அரசியல் கூத்து அல்லமென எச்சரித்துள்ளார் வைத்தியர் முரளி வல்லிபுரநாதன்






www.sangathamil.ca

# தையிட்டி சட்டவிரோத விகாரை விகாரதிபதியை முன் வரிசையில் அமர்த்தி அழகு பார்த்த ஜனாதிபதி

## அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா. சத்திவேல்

18.01.2026

தெற்கிற்கும் வடக்கிற்கும் ஒரே சட்டம் எனக் கூறும் ஜனாதிபதி தற்போதைய விகாரை விடயத்தில் அதனை நிறைவேற்றாதது ஏன்? என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் கேள்வி எழுப்பியுள்ளார்.





அது தொடர்பில் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில்,

தமிழர் திருநாளில் தமிழர் தாயகத்துக்கு வருகை தந்த ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, சிங்கள பௌத்த ஆதிக்க இனவாத நோக்கில் கட்டப்பட்ட சட்டவிரோத விகாரை கட்டடத்தின் பிக்குவை தான் கலந்து கொண்ட கூட்டத்தின் முன் வரிசை ஆசனத்தில் அமர்த்தி அழகு பார்த்தவர்.

இனவாத சட்டவிரோத விகாரை கட்டடத்திற்கு எதிராகவும், இராணுவத்தினரின் தனியார் நிலங்களின் ஆக்கிரமிப்பிற்கு எதிராகவும் போராடுபவர்களை இனவாதிகள் என அடையாளப்படுத்தி தமிழர் தாயக மக்களை அவமானப்படுத்தி உள்ளார்.

இதுதான் தமிழர் திருநாளில் தமிழர்கள் கொடுத்த பரிசா? என கேட்பதோடு இதற்கான எதிர்ப்பினை தமிழ் தேசப்பற்றாளர் உடனடியாக வெளிப்படுத்த வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

தையிட்டி விகாரையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதி என்பது சட்டவிரோத விகாரை கட்டிடத்தை அகற்றி மக்களின் காணிகளை மக்களின் கைகளில் கொடுப்பதாகும். அதுவே தமிழர்களுக்கான நீதியாகவும் அமையும். சட்டம் அனைவருக்கும் சமம்.

தெற்கிற்கும் வடக்கிற்கும் ஒரே சட்டம் எனக் கூறும் ஜனாதிபதி தற்போதைய விகாரை விடயத்தில் அதனை நிறைவேற்றாது நிறைவேற்று அதிகாரத்தை பாவிக்காதிருப்பது ஏன்? சட்டவிரோத விகாரைக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு ஜனாதிபதி தயங்குவதாகவும், இனவாத சிங்கள பௌத்த பேரினவாதத்திற்கு பயந்து நிற்பதாகவும், நாக விகாரை பிக்கு, ஜனாதிபதி அவரை சந்தித்த பின்னர் ஊடகமொன்றிற்கு கருத்து வெளியிட்டுள்ளார்.

இனவாதம் மதவாதத்தின் காலடியில் விழுந்து கிடக்கும் ஒருவர் சொந்த காணிகளை கேட்டு நடக்கும் போராட்டத்தினை இனவாதம் என குறிப்பிடுவதில் என்ன நியாயம் உள்ளது?

தமிழர்களோடு விழா கொண்டாட வந்த ஜனாதிபதி தமிழர்களின் அரசியல் பண்பாட்டு விழாவினை தமது அரசியல் களியாட்ட விழாவாக்கி மகிழ்ந்துள்ளார். தேசிய மக்கள் சக்தி எதிர்வரும் பெப்ரவரி நான்காம் திகதியும் அவர்களின் சுதந்திர தினத்திலே தமிழர் தாயகத்தில் அவர்களின் களியாட்ட விழாவாக்க திட்டமிட்டிருப்பார்கள்.

தமிழ்மக்களின் மண் பல்வேறு வடிவங்களில் ஆக்கிரமிக்கப்பட்டு பறிபோய் கொண்டு இருப்பது போல எமது தேசிய அரசியலும் தேசிய மக்கள் சக்தியின் போலி அரசியல் களியாட்டங்களால் ஆக்கிரமிக்கப்படும் அபாயம் நிலவுகின்றது.

இதற்கும் ஜனாதிபதி எமது மண்ணிலிருந்து எம்மை அவமானப்படுத்தியமைக்கும் முழு எதிர்ப்பினை காட்டவும் எதிர்வரும் சுதந்திர தினத்தினை தமிழர் தேசம் தழுவிய கரிநாளாக்க அரசியல் தலைமைகளும், சிவில் சமூக அமைப்புகளும் மக்களை திரட்டுவதற்கான செயல் திட்டத்தினை முன்னெடுக்க வேண்டும். விடுதலையை மையப்படுத்தியது சமயங்கள். எனவே அனைத்து சமய தலைமைகளும், அவர்கள் சமய மையங்களும் அதற்கான ஒத்துழைப்பை நல்க வேண்டும் எனவும் எனவும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

# வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் மத்தியில் நிலவும் கரிசனைகள் குறித்து ஜனாதிபதியுடன் பேசுவேன்!

## இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் மத்தியூ டக்வேர்த்

18.01.2026

காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தின் செயற்பாடுகள் தொடர்பில் வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் மத்தியில் நிலவும் கரிசனைகள் குறித்து ஜனாதிபதியுடன் நிச்சயமாகக் கலந்துரையாடுவதாக வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்திடம் இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் மத்தியூ டக்வேர்த் உறுதியளித்துள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டிருந்த இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் மத்தியூ டக்வேர்த்துக்கும் வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தின் செயலாளர் ஆ.லீலாதேவி உள்ளிட்ட பிரதிநிதிகள் குழுவினருக்கும் இடையிலான சந்திப்பு கடந்த புதன்கிழமை (14) யாழில் உள்ள ஜெட்விங் ஹோட்டலில் நடைபெற்றது.

இச்சந்திப்பின்போது வலிந்து காணாமலாக்கப்பட்ட தமது உறவுகளுக்கான நீதியும் பொறுப்புக்கூறலும் தொடர்ந்து மறுக்கப்பட்டுவருவது குறித்து அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகரிடம் எடுத்துரைத்த பிரதிநிதிகள், பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்கான உள்ளகப்பொறிமுறை எனக்கூறி நிறுவப்பட்டிருக்கும் காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தின் செயற்திறனற்ற நிலை மற்றும் அக்கட்டமைப்பின் மீதான தமது அவநம்பிக்கை குறித்தும் விளக்கமளித்தனர்.

'நாம் கடந்த காலந்தொட்டு காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் அவசியமில்லை என்றும், அதன்மீது எமக்கு நம்பிக்கை இல்லை என்றும் கூறிவந்திருக்கிறோம். அவ்வாறெனில் மாற்றத்தை ஏற்படுத்துவதாகவும், நீதியை வழங்குவதாகவும் வாக்குறுதியளித்து ஆட்சிபீடமேறிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க எம்மைச் சந்தித்து, இதுபற்றி எமது நிலைப்பாட்டைக் கேட்டறிந்திருக்க வேண்டும். ஆனால் அவர் அதனைச் செய்யவில்லை. மாறாக காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளையே அவர் தன்னிச்சையாக முன்னெடுக்கிறார். அவ்வாறிருக்கையில் முன்னைய ஜனாதிபதிகளிலிருந்து தற்போதைய ஜனாதிபதி வேறுபடுகிறார் எனக் கூறமுடியாது அல்லவா?' என்றும் அவர்கள் உயர்ஸ்தானிகரிடம் கேள்வி எழுப்பினர்.

அதுமாத்திரமன்றி தென்னாபிரிக்காவில் வெற்றிகரமாக இயங்கிய உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை முன்மாதிரியாகக்கொண்டு இங்கும் அவ்வாறானதொரு ஆணைக்குழுவை நிறுவுவது குறித்து அரசாங்கம் ஆராய்ந்து வருவதாக உயர்ஸ்தானிகரிடம் சுட்டிக்காட்டிய அவர்கள், தென்னாபிரிக்கா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளில் இடம்பெற்ற சம்பவங்களை இருவேறுபடுத்திக் காண்பித்து, அப்பொறிமுறை இலங்கைக்குப் பொருத்தமானது அல்ல என்பதே தமது நிலைப்பாடு எனத் தெரிவித்தனர்.

இவற்றை செவிமடுத்த அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் தொடர்பில் பாதிக்கப்பட்ட தரப்பினர் கொண்டிருக்கும் கரிசனைகள் குறித்து தான் ஜனாதிபதியிடம் நிச்சயமாகக் கலந்துரையாடுவதாக வாக்குறுதியளித்தார்.



அத்தோடு நீதி மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்கு இவ்வாறான கட்டமைப்புக்களுக்குப் பதிலாகப் பாதிக்கப்பட்ட தரப்பினர் எத்தகைய கட்டமைப்புக்கள் வேண்டும் என எதிர்பார்க்கின்றனர் எனவும் அவர் வினவினார்.

அதற்குப் பதிலளித்த வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள், தாம் உள்ளகப்பொறிமுறைகள் மீது நம்பிக்கை இழந்திருப்பதாகவும், அவ்வாறு உள்ளகப்பொறிமுறைகள் நிறுவப்படும் பட்சத்தில், அவற்றின் சகல உறுப்பினர்களும் பாதிக்கப்பட்ட தரப்பினரின் அபிப்பிராயங்களைக் கருத்திற்கொண்டே நியமிக்கப்படவேண்டும் எனவும் வலியுறுத்தினர்.

**நாங்கள் ஒரு உன்னத இலட்சியத்திற்காகப் போராடி வருகிறோம். அந்த இலட்சியத்திற்காக உழைப்பதும், வாழ்வதும் எங்களுக்குப் பூரண ஆத்ம நிறைவைத் தருகின்றது.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

# கொடூர மீறல்கள் நிகழ்ந்தன என்ற உண்மை ஐ.நாவின் புதிய அறிக்கை மூலம் நிரூபணம்...! அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து கூட்டாக ஆராயவேண்டும்!

## வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தின் செயலாளர் ஆ. லீலாதேவி

18.01.2026

இதுவரை காலமும் பல்வேறு தரப்பினரால் மறுக்கப்பட்டுவந்த பாலியல் வன்முறைகள் உள்ளிட்ட மீறல்கள் உண்மையிலேயே நிகழ்ந்திருக்கின்றன என்ற உண்மை ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் புதிய அறிக்கை மூலம் நிரூபணமாகியிருப்பதாகச் சுட்டிக்காட்டிய வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தின் செயலாளர் ஆ.லீலாதேவி, இவ்வறிக்கையை அடிப்படையாகக்கொண்டு முன்னெடுக்கவேண்டிய அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பில் சம்பந்தப்பட்ட சகல தரப்பினரும் ஒன்றிணைந்து ஆராயவேண்டும் என வலியுறுத்தினார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின்கீழ் இயங்கிவரும் இலங்கை தொடர்பான பொறுப்புக் கூறல் செயற்திட்டத்தினால் தயாரிக்கப்பட்டுவந்த இலங்கையில் மோதல்களின்போது இடம்பெற்ற பாலியல் வன்முறைகள் தொடர்பான பொறுப்புக்கூறல் பற்றிய 'நாங்கள் அனைத்தையும் இழந்துவிட்டோம் - நீதி கிட்டும் என்ற நம்பிக்கையைக்கூட இழந்துவிட்டோம்' எனும் தலைப்பிலான 30 பக்க விரிவான அறிக்கை கடந்த செவ்வாய்க்கிழமை (13) வெளியிடப்பட்டது.

இலங்கையில் ஆயுதமோதலின்போதும், அதன் பின்னரும் நிகழ்த்தப்பட்ட பாலியல் வன்முறைகள் வெறுமனே தற்செயலாக அங்கொன்றும், இங்கொன்றுமாக இடம்பெற்ற சம்பவங்கள் அல்ல எனவும், மாறாக அவை வேண்டுமென்றே பரந்துபட்ட ரீதியில் நிகழ்த்தப்பட்ட, முறையாகக் கட்டமைக்கப்பட்ட வன்முறைகளின் ஓரங்கமாகும் எனவும் அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதுமாத்திரமன்றி இம்மீறல்கள் தகவல்களைத் திரட்டுவதற்கும், மேலாதிக்கத்தை நிலைநிறுத்துவதற்கும், தனிநபர்கள் மற்றும் சமூகங்களை ஒடுக்குவதற்கும், பரவலான அச்ச மற்றும் அவமான உணர்வை வேரூன்றச் செய்வதற்குமான ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தப்பட்டதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஐ.நாவின் இப்புதிய அறிக்கையைத் தாம் பெரிதும் வரவேற்பதாகவும், உலகளாவிய ரீதியில் பல்வேறு மனித உரிமை மீறல் நெருக்கடிகள் தலைதூக்கியிருக்கும் சூழ்நிலையில், தமது பிரச்சினைகளை ஐ.நா மறந்துவிட்டது எனக் கருதியிருந்த வேளையில் இவ்வறிக்கை வெளியானது தமக்கு மகிழ்ச்சியையும் ஆறுதலையும் அளிப்பதாகவும் வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தின் செயலாளர் ஆ.லீலாதேவி தெரிவித்தார்.

'இலங்கையில் யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் பாலியல் வன்முறைகள் உள்ளிட்ட மிகமோசமான அக்கிரமங்கள் இடம்பெற்றதாக நாம் கூறியபோது, அவ்வாறான சம்பவங்கள் நிகழவில்லை எனப் பலரும் மறுத்துவந்தார்கள். ஆனால் இப்போது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினால் வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கையின் மூலம் நாம் கூறிய அனைத்து விடயங்களும் உண்மை என்பது நிரூபணமாகியிருக்கிறது' என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அதேவேளை இந்த அறிக்கையை அடிப்படையாகக்கொண்டு அடுத்தகட்டமாக எத்தகைய நடவடிக்கைகளை முன்னெடுக்கப்



போகிறோம்? இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றம், சர்வதேச மக்கள் தீர்ப்பாயம், சர்வதேச நீதிமன்றம் போன்ற கட்டமைப்புக்களின் முன்னிலையில் பாரப்படுத்தப்போகிறோமா? அதனை எவ்வாறு செய்வது? என்பன தொடர்பில் ஆராய வேண்டும் எனவும் லீலாதேவி குறிப்பிட்டார்.

இருப்பினும் இந்த ஆராய்வு செயன்முறை குறித்தவொரு தரப்பினருக்குள் மாத்திரம் மட்டுப்படுத்தப்படக்கூடாது என்றும், மாறாக அதில் பாதிக்கப்பட்ட தரப்பினர், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், மதத்தலைவர்கள் என சம்பந்தப்பட்ட சகல தரப்பினரும் உள்வாங்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

# யாழ். செம்மணி மனிதப் புதைகுழி காணப்படும் இடத்தில் நிலத்தோற்றத்தில் எந்த மாற்றத்தையும் செய்யக்கூடாது

## நீதிமன்றம்

20.01.2026

செம்மணி மனித புதைகுழி அகழ்வு நடைபெறும் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்தின் நிலத்தோற்றத்தில் எந்த மாற்றத்தையும் செய்யக்கூடாது என்றும் அவ்வாறு ஏதும் செய்வதாயின் நீதிமன்ற அனுமதி அவசியம் எனவும் மன்றினால் அறிவிக்கப்பட்டுள்ளது.



செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான வழக்கு யாழ்ப்பாண



நீதவான் நீதிமன்றத்தில் நீதிவான் எஸ்.லெனின்குமார் முன்னிலையில் நேற்று எடுத்துக் கொள்ளப்பட்ட நிலையில் கள விஜயம் மேற்கொள்ளப்பட்டது.

குறித்த பகுதியில் ஏற்கனவே இருந்த வீதிக்கு மேலாக அதனை நல்லூர் பிரதேச சபையினர் செப்பனிட்டமை அவதானிக்கப்பட்டது. குறித்த விடயம் சட்டத்தரணிகளால்

நீதிவானின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கிறது.

# வடக்கில் கல்வியில் அரசியல் தலையீடு என குற்றம் சாட்டும் இலங்கை தாய்மொழி ஆசிரியர் சங்கத்தினர்!

20.01.2026

வடமாகாணத்தில் கல்வியில் அரசியல் தலையீடுகள் நிறுத்தப்பட வேண்டும் என இலங்கை தாய்மொழி ஆசிரியர் சங்கத்தினர் வலியுறுத்தியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இன்றைய தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தனர்.

மேலும் தெரிவிக்கையில்,

கல்வி என்பது சுயாதீனமாக இயங்க வேண்டும் ஆனால் வடமாகாணத்தில் கல்வியைப் பொறுத்தவரை அரசியல் தலையீடுகள் காணப்படுகின்றன.

வடமாகாணத்தில் உள்ள அரசியல் உயர் மட்டங்கள் தமது விருப்பத்திற்கு ஏற்ற மாதிரி செயலாளர்கள் மாகாண பணிப்பாளர்களை நியமிக்கின்றனர். இது முற்றாக மாற்றப்பட வேண்டும் .

அத்துடன் கல்வி மாற்ற கொள்கையை நாங்கள் வரவேற்கிறோம் தற்பொழுது அதில் ஒரு சந்தேகம் காணப்படுகின்றது . மாணவர்கள் ஆசிரியர்கள் மத்தியில் ஒரு தெளிவின்மை காணப்படுகின்றது. அதனை அரசாங்கம் சரியான முறையில் புரிய வைக்க வேண்டும் அதன் பின்னர் புதிய கல்வி சீர்திருத்த



கொள்கை கொண்டு வருவது வரவேற்கத்தக்கது என தெரிவித்தனர்.

www.sangathamil.ca

# செம்மணி மூன்றாம் கட்ட அகழ்வுக்கு ஒதுக்கப்பட்ட நிதி திறைசேரிக்கு திரும்பியது

20.01.2026

செம்மணி மனித புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வு பணிகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதி திரும்பி சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

செம்மணி மனித புதைகுழியில் இருந்து இதுவரையில் இரண்டு கட்டங்களாக மேற்கொள்ளப்பட்ட அகழ்வு பணிகளின் போது, 240 மனித என்புக்கூட்டு எச்சங்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் 239 என்புக்கூட்டு எச்சங்கள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் மேலும் எலும்புக்கூடுகள் அப்பகுதிகளில் காணப்படுவதால் மூன்றாம் கட்ட அகழ்வு பணிகளை முன்னெடுக்க வேண்டும் எனவும், அதற்காக 08 வார கால பகுதி தேவை என சட்ட வைத்திய அதிகாரி மன்றில் விண்ணப்பம் செய்ததற்கு அமைவாக, அதற்கான செலவீன பாதீட்டை மன்றில் சமர்ப்பிக்க உத்தரவிட்டப்பட்டது.

அதன் அடிப்படையில் சட்ட வைத்திய அதிகாரியினால் , மூன்றாம் கட்ட அகழ்வு பணிக்கான பாதீடு தயாரிக்கப்பட்டு, மன்றில் சமர்பிக்கப்பட்டதை அடுத்து, அது அங்கீகரிக்கப்பட்டு, நீதி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டதன் பிரகாரம், கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் நிதி விடுவிக்கப்பட்டது.



அதனை தொடர்ந்து மூன்றாம் கட்ட அகழ்வாய்வு பணிகளை முன்னெடுக்க ஆயத்தங்களை செய்ய வேளை, யாழில் நிலவிய சீரற்ற கால நிலைகளால், புதைகுழிக்குள் வெள்ள நீர் தேங்கி நின்றமையால், அகழ்வாய்வு பணிகள் தொடர்ந்து முன்னெடுக்க முடியாத நிலைமை காணப்பட்டது.

அந்நிலையில் கடந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட நிதிகளில் செலவு செய்யப்படாத நிதிகள் திறை சேரிக்கு திரும்பியுள்ளது. அதனால் இவ்வாண்டுக்கு மீண்டும் புதிதாக செலவீன பாதீட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டு, மன்றினால் அது அங்கீகரிக்கப்பட்டு, மீண்டும் நீதி அமைச்சினால் அந்த நிதி மீள ஒதுக்கப்படும் என தெரிவிக் கப்பட்டது.

இதேவேளை செம்மணி புதைகுழி பகுதிக்குள் தற்போதும் வெள்ளம் தேங்கி நிற்பதனால், எதிர்வரும் 09ஆம் திகதி நீதி மன்ற நேரடி கண்காணிப்பில் நல்லூர் பிரதேச சபையினால், வெள்ள நீரை வெளியேற்றும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

அன்றைய தினத்திற்கு பின்னரே மூன்றாம் கட்ட அகழ்வு பணிகள் தொடர்பிலான முடிவுகள் எடுக்கப்படும் என நீதிமன்றம் நேற்றைய தினம் திங்கட்கிழமை அறிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# வீதியில் நடக்கும் ஜனாதிபதிக்கு எங்கள் வீடுகள் கண்களுக்கு தெரியவில்லையா? யாழில் மக்கள் போராட்டம்

20.01.2026

யாழ் மாவட்ட வீட்டுத் திட்டங்களுக்கான கொடுப்பனவுகளை வழங்குமாறு கோரி வட மாகாண ஆளுநர் அலுவலகத்துக்கு முன்பாக இன்றைய தினம் செவ்வாய்க்கிழமை கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.







போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கருத்து தெரிவிக்கையில்,

தற்போதைய ஆளுநரான நா. வேதநாயகன், 2019ஆம் ஆண்டு யாழ் மாவட்ட செயலராக கடமையாற்றிய காலத்தில் அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட வீட்டு திட்டங்களுக்கான கொடுப்பனவுகள் இன்று வரை வழங்கப்படவில்லை.

இதனால் அக்கால பகுதியில் வீட்டு திட்டங்களை பெற்ற பயனாளிகள் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் தமது அன்றாட வாழ்க்கையை நடத்தி வரும் நிலையில் மழை காலங்களில் இருக்க இடம் இல்லாமல் அல்லல் படம் செயற்பாடுகள் வருடங்களாக தொடர்ந்து இடம்பெறுகிறது.

தற்போதைய அரசாங்கம் பாரபட்சமற்ற அரசாங்கம் என கூறி ஆட்சிக்கு வந்த பின்னர் கடந்த ஆட்சியரிடம் பெற்ற வீட்டு திட்டங்களுக்கான கொடுப்பனவுகளை வழங்காமல் தங்களது ஆட்சியில் புதிய வீட்டு திட்டங்களுக்கான கொடுப்பனவை வழங்குகிறார்கள்.

இந்த செயற்பாடு பாதிக்கப்பட்ட எமக்கு மிகவும் மன வேதனையை தருவதோடு தற்போதைய ஆளுநர் கூட இது தொடர்பில் மௌனமாக இருப்பது நமக்கு மிகுந்த மன வருத்தத்தை தருகிறது.

யாழ்ப்பாணம் வந்த ஜனாதிபதி அனுரகுமாரா திசநாயக்க வீதியில் நடந்து திரிகிறார் ஆனால் யாழ் மாவட்டத்தில் வீடுகள் இல்லாமல் அரைகுறை வீடுகளில் தங்கி உள்ளோரை சந்திப்பதற்கு அவருக்கு நேரம் கிடைக்கவில்லை.

ஆகவே எமது பிரச்சனை தொடர்பில் வடமாகண ஆளுநருக்கு மீண்டும் தெரியப்படுத்தியுள்ளோம் எமது பிரச்சினையை விரைந்து தீர்க்க விடியின் எமது போராட்டம் தொடரும் என தெரிவித்தனர்

# வடகிழக்கில் நில ஆக்கிரமிப்பு, மொழி உரிமை மீறலுக்கு தொல்லியல் திணைக்களம் துணைபோகின்றது

## சிரேஸ்ட ஊடகவியலாளரும், ஏறாவூர் பற்று பிரதேச சபை உறுப்பினருமான செ. நிலாந்தன்

21.01.2026

வடகிழக்கில் உள்ள சிறுபான்மை இன மக்களின் நில ஆக்கிரமிப்பு மற்றும் மொழி உரிமை மீறலுக்கு சட்டரீதியாக துணை போகும் திணைக்களமாக தொல்லியல் திணைக்களம் செயற்பட்டு வருகிறது என சிரேஸ்ட ஊடகவியலாளரும் ஏறாவூர் பற்று பிரதேச சபை உறுப்பினருமான செ. நிலாந்தன் தெரிவித்துள்ளார்.

ஏறாவூர் பற்று பிரதேச சபையின் 2026 ஆம் ஆண்டுக்கான முதலாவது சபை அமர்வில் பிரதேச சபையின் அனுமதி பெறப்படாமல் நடப்பட்ட தொல்லியல் திணைக்களத்தின் பெயர் பலகைகளை அகற்றுவது தொடர்பாக கொண்டுவரப்பட்ட பிரேரணையில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொல்லியல் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் மக்கள் மத்தியில் குழப்பத்தையும், முரண்பாடுகளையும் ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது. வடகிழக்கில் உள்ள சிறுபான்மை இன மக்களின் நில ஆக்கிரமிப்பு மற்றும் மொழி உரிமை மீறலுக்கு சட்டரீதியாக துணைபோகும் திணைக்களமாக தொல்லியல் திணைக்களம் செயற்பட்டு வருகிறது.

1987, 15ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் பிரதேச சபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை மீறி பிரதேச சபையின் அனுமதி இன்றி தொல்லியல் திணைக்களம் பெயர்ப் பலகைகளை இட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மாத்திரம் தொல்பொருள் திணைக்களத்தினால் நடப்பட்ட பெயர் பலகைகளுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்தவர்கள், பெயர் பலகைகளை அகற்றிய வர்கள் என்று கூறி 56 பேரை கைது செய்துள்ளனர்.முன்னர் இருந்த எந்த அரசாங்கங்களும் செய்யாத செயற்பாட்டை தேசிய மக்கள் சக்தி (NPP) அரசாங்கம் செய்துள்ளது.

இதைவிட தொல்லியல் திணைக்களத்தின் ஊடாக நடப்பட்ட அனைத்து பெயர் பலகைகளிலும் மொழி உரிமை மீறப்பட்டுள்ளது. இந்த நாட்டின் அரச கரும மொழிகளாக தமிழ், சிங்கள மொழிகள் காணப்படுகிறது, அதேபோல் வடகிழக்கின் நிர்வாக மொழியாக தமிழ் மொழியே காணப்படுகிறது.

இவ்வாறு இருக்கும் நிலையில் வடகிழக்கின் நிர்வாக மொழியான தமிழ் மொழியை முதலாவதாகவும், சிங்கள மொழியை இரண்டாவதாகவும் எழுதி இருக்க வேண்டும். ஆனால் தொல்லியல் திணைக்களத்தின் பெயர் பலகைகளில் மூன்றாவதாகவே தமிழ் மொழி அடையாளப்படுத்தும் பட்டுள்ளது.

தமிழரசுக் கட்சியின் ஆட்சியின் கீழ் இருக்கும் பிரதேச சபைகளின் அதிகாரங்களை மீறி அரசியல் நோக்கங்களுக்காக, பிரதேச சபை சட்டங்களை மீறி தொல்லியல் திணைக்களம் செயற்படுவதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. இதனை



வன்மையாக கண்டிக்கின்றேன்.

தொல்லியல் திணைக்களத்தினால் நடப்பட்ட பெயர் பலகைகள் அகற்றப்பட்டு பிரதேச சபையின் அனுமதி பெற்று, தமிழ் மொழியை முதன்மைப் படுத்தி மீளவும் நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்தார்.

# "பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டம்"

## யாழ். தந்தை செல்வா கலையரங்கில் கலந்துரையாடல்

20.01.2026




பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாப்பதற்கான முன்மொழியப்பட்ட சட்ட வரைபு தொடர்பான திறந்த கலந்துரையாடல் சட்டம் மற்றும் கொள்கைகளுக்கான யாழ்ப்பாணக் கற்கை நிலையத்தின் ஒருங்கிணைப்பில், இன்று 20.01.2026 அன்று தந்தை செல்வா கலையரங்கில் நடைபெற்றது. குறித்த கலந்துரையாடலில் அரசியற் பிரமுகர்கள் சமூக செயற்பாட்டாளர்கள், இளையோர் மற்றும் மகளீர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் என ஏறத்தாழ 100 பேரளவில் பங்குபற்றியிருந்தனர்.

தொடக்க உரையாற்றிய அந் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் சட்டத்தரணி கலாநிதி.க. குருபரன் (யாழ் பல்கலை சட்டத்துறை முன்னாள் தலைவர்) பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவதாக தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் உறுதியளித்திருந்ததைத் சுட்டிக்காட்டி, மேலும் பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குகின்ற விடயமானது என்.பி.பியின் சிங்கள மொழி மூல தேர்தல் விஞ்ஞானபத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை என்னும் விடயத்தினை ஜே.வி.பியின் ஆரம்பகால உறுப்பினர் லயனல் போபகேயின் அண்மைய கட்டுரையில் உள்ள விடயத்தினையும் மேற்கோள்காட்டி, பயங்கரவாத தடைச்சட்டத்தினை நீக்கி புதியதொரு சட்டத்தினைக் கொண்டு வர என்.பி.பி அரசாங்கம் தயக்கத்தோடு முன்வந்திருப்பதனை சுட்டிக்காட்டியிருந்தார்.

தமிழர் தரப்பினுடைய நிலைப்பாடு பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டும் என்பதும் அதற்குப் பதிலீடாக வேறெந்தச் சட்டமும் தேவையானது அல்ல என்பதைக் கோடிட்டுக் காட்டினார். மேலும் தற்போது நிலவுகின்ற தண்டனைச் சட்டக்கோவை, குற்றவியல் நடைமுறைக் கோவை மற்றும் இதர குற்றவியல் சட்டங்களின் ஏற்பாடுகளில் பேருக்குப் பின்னரான சமூக நிலைமை கையாளப்படக் கூடியது, அதற்கென தனித்து பயங்கரவாத தடைச்சட்டம் என்ற பெயரில் ஒரு சட்டம் தேவையில்லையெனக் குறிப்பிட்டார்.

சர்வதேசச் சட்டத்தில் இதுவரை ஏற்கப்பட்ட பயங்கரவாதமென்ற சொற்றொடருக்கான வரைவிலக்கணம் இல்லை என்பதனையும் சுட்டிக்காட்டிய குருபரன் குறித்த சட்டத்திலே பயங்கரவாதத்திற்கான வரைவிலக்கணமானது மிகவும் நெகிழ்வுப்போக்கான நிலையிலே அனைத்தையும், எதையும் உள்வாங்கலாம் என்ற தொனியிலே முன்வைக்கப்பட்டுள்ளது.

ஊரடங்கு உத்தரவுகளைப் பிறப்பித்தல், பொதுமக்கள் ஒன்று கூடக் கூடாதென்ற அறிவித்தலை வழங்கல், கூட்டத்தைக் கூட்டுவதற்குத் தடை விதித்தல் போன்ற அவசரகால தடைச் சட்டத்தின் தற்காலிகக் கட்டளைகளை மேற்கொள்ளும் விடயங்களைக் கூட நிதந்தரச் சட்டமாகக் கொண்டு வருவதற்கு முயற்சிக்கப்படுகின்றதென சுட்டிக்காட்டினார்.

தொடர்ந்து கருத்துரைத்த அவையினர், அரகலய போராட்டத்தின் பயனாக உருவாகிய அரசாங்கம் மீண்டும் ஒரு அரகலய உருவாகுவதனைத் தடுக்கும் விதமாக இந்தச் சட்டத்தினை உருவாக்குவதாகவும், தமிழ் மக்களினுடைய அரசியற் போராட்டத்தினை நீர்த்துப் போகச் செய்ய வேண்டும் என்ற காரணத்தினால் அச்சுறுத்தும் பாணியிலான சட்ட ஏற்பாடுகளைக் கொண்டதாக முன்மொழியப்பட்ட சட்ட வரைபு கொண்டிருப்பதாக, குறித்த சட்ட வரைபினை தமிழ் மக்கள் முற்றுமுழுதாக நிராகரிக்க வேண்டுமெனவும் குறிப்பிட்டு இலங்கைத் தமிழரசுக்கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவரும், கட்சியின் தேர்வு நிலைத் தலைவருமான நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், வேலன் சுவாமிகள், வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் சர்வேஸ்வரன், குரலற்றவர்களின் குரல் மு.கோமகன், கிராமிய உழைப்பாளர் சங்கத் தலைவர் இன்பம், யாழ் பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவர் யசோதரன், சமூக செயற்பாட்டாளர் முரளிதரன் உள்ளிடோர் சமூக அரசியற் செயற்பாட்டாளர் கருத்துத் தெரிவித்தனர்.

# கிவுல் ஓயாத் திட்டத்தை கடுமையாக எதிர்ப்போம்

## வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன்

22.01.2026

தமிழர்கள் மீதான கட்டமைக்கப்பட்ட இனவழிப்பின் வடிவமான கிவுல் ஓயா திட்டத்தைச் செயற்படுத்துவது தொடர்பிலான கலந்துரையாடல் ஒன்று நாளை 23ஆம் திகதி வெள்ளிக்கிழமையன்று நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெறவுள்ளது என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்தார்.


அந்தக் கலந்துரையாடலில் இந்தத் திட்டத்துக்கு எதிராகத் தம்மால் கடுமையான எதிர்ப்பு வெளியிடப்படும் எனவும் அவர் கூறினார்.

நாடாளுமன்றக் கட்டடத்தொகுதியில் நேற்று நடைபெற்ற கமத்தொழில், கால்நடை வளங்கள் காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்கூட்டத்தில் கிவுல் ஓயா நீர்ப்பாசனக் கட்டுமானத் திட்டத்துக்கு எதிராக நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் கடுமையான எதிர்ப்பை வெளியிட்டார்.

இந்நிலையில் நாளை கிவுல் ஓயாத் திட்டம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது எனவும், அந்தக் கலந்துரையாடலில் அந்த விடயம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்குமாறும் அமைச்சர் கே.டீ.லால்காந்த இதன்போது தெரிவித்தார்.

இந்நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் நேற்று கமத்தொழில், கால்நடை வளங்கள் காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் இடம்பெற்ற விடயங்கள் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே இந்த விடயங்களைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் கூறியவை வருமாறு:-




"மகாவலி அபிவிருத்தி அதிகார சபையினால் முன்னெடுக்கப்படவிருக்கின்ற கிவுல் ஓயா நீர்த்தேக்கக் கட்டுமானத் திட்டத்துக்கு 2.5பில்லியன் ரூபா நிதி இந்த வருடத்துக்கான வரவு - செலவுத் திட்டத்தில் அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டதுடன் இந்தக் கிவுல் ஓயாத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு அமைச்சரவை அனுமதியும் பெறப்பட்டுள்ளது.

கிவுல் ஓயா திட்டத்தைச் செயற்படுத்தினால் வவுனியா வடக்கு பிரதேசத்திலுள்ள பூர்வீகத் தமிழ் மக்களின் பல சிறிய நீர்ப்பாசனக்குளங்களும், அவற்றின் கீழான வயல் நிலங்களும், பழந்தமிழ் கிராமங்களும் பறிபோகும் அபாயம் ஏற்படும் என்பதைக் கமத்தொழில், கால்நடை வளங்கள் காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் அமைச்சுசார் ஆலோசனைக்குழுக் கூட்டத்தில் அமைச்சர் லால்காந்தவின் கவனத்துக்குக் கொண்டு வந்தேன்.

குறிப்பாக இராமன்குளம், கொட்டோடைக்குளம், ஒயாமடுக்குளம், வெள்ளான்குளம், பெரியகட்டுக்குளம், பனிக்கல்மடுக்குளம், சன்னமுற்றமடுக்குளம், கம்மாஞ்சிக்குளம், குறிஞ்சாக்குளம், புலிக்குட்டிக்குளம், திரிவைச்சகுளம் முதலான சிறிய நீர்ப்பாசனக்குளங்களும், வெடிவைச்சகல்லு குளத்தின் கீழ் வரும் வயல்காணிகள் பகுதியளவிலும், நாவலர்பாம், கல்லாற்றுக்குளம், ஈச்சன்குளம், கூழாங்குளம் வயற்காணிகளும் வவுனியா வடக்கிலுள்ள பழந்தமிழ் கிராமங்களான காட்டுப்பூவரசங்குளம் கிராமம், காஞ்சூரமோட்டை கிராமம், மருதோடைக் கிராமத்தின் ஒருபகுதி உள்ளிட்ட பகுதிகள் குறித்த நீர்ப்பாசன அணைக்கட்டின் நீரேந்துப்பகுதிகளாக மாறும் அபாயம் ஏற்படும் என்பதை இதன்போது அமைச்சருக்குத் தெரியப்படுத்தினேன்.

இவ்வாறு தமிழ் மக்களுடைய பூர்வீக நிலங்களும், நீர்ப்பாசனக்குளங்களும் அபகரிக்கப்படுவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது என்பதையும் சுட்டிக்காட்டினேன்.

இதன்போது அமைச்சர் கே.டீ.லால்காந்த பதிலளிக்கையில், எதிர்வரும் 23ஆம் திகதி (நாளை) நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் கிவுல் ஓயாத் திட்டம் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது எனவும், அதன்போது இந்த விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடலாம் எனவும் தெரிவித்தார்.

எனவே எதிர்வரும் 23ஆம் திகதி (நாளை) நடைபெறவுள்ள கூட்டத்திலும் கலந்துகொண்டு, கிவுல் ஓயாத் திட்டத்தால் தமிழர்களுக்கு ஏற்படவுள்ள பாதிப்புகள் தொடர்பில் சுட்டிக்காட்டுவதுடன், இந்தத் திட்டத்துக்குக் கடுமையான எதிர்ப்பைத் தெரிவிப்பேன் என தெரிவித்தார்.

# 30 வருடங்களாக யாழ். சுழிபுரத்தில் முகாமிட்டு இருந்த சிறிலங்கா இராணுவம் முகாமில் இருந்து முழுமையாக வெளியேறியது

24.01.2026

யாழ்ப்பாணம் - சுழிபுரம் பகுதியில் கடந்த 30 ஆண்டு காலமாக முகாமிட்டு இருந்த சிறீலங்கா இராணுவத்தினர் நேற்றிரவு அந்த முகாமை விட்டு முழுமையாக வெளியேறியுள்ள சிறீலங்கா இராணுவத்தினர் சங்கானை படை முகாமுக்கு சென்றுள்ளதாக தெரி விக்கப்படுகிறது.

இராணுவத்தினர் அந்த இடத்தை விட்டு வெளியேறுவது குறித்து, கடிதமொன்றை 513வது காலாட்படை பிரிவின் கட்டளை தளபதி சில தினங்களுக்கு முன்னர் சங்கானை பிரதேச செயலாளர் கவிதா உதயகுமாரிடம் கையளித்தார்.

அதேநேரம், பண்டத்தரிப்பு பகுதியில் உள்ள இராணுவ முகாமும் அகற்றப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அந்த பகுதியில் நீண்டகாலமாக முகாமிட்டு குடியிருந்த இராணுவத்தினர் அராலி பகுதியில் உள்ள இராணுவ முகாமிற்கு மாற்றப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பண்டத்தரிப்பு படை முகாமானது 100 அடி நீளத்தை கொண்டதால் அதனை அகற்றுவதற்கு, காலம் தேவை என்பதால் அவர்கள் அங்கிருந்து வெளியேற சற்று தாமதமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.



# வலி. வடக்கில் பாடசாலைக்கு செல்லும் வீதி விடுவிப்பு: பாடசாலை உயர் பாதுகாப்பு வலயத்தினுள்ளே!

## வலி வடக்கு தவிசாளர் சோ. சுகிர்தன்

22.01.2026

வலி. வடக்கு பிரதேசத்தில் சுமார் 2 ஆயிரத்து 500 ஏக்கர் காணிகள் இன்னமும் விடுவிக்கப்படவில்லை. அந்த பகுதி மக்கள் துன்பதுயரங்களுடன் சுமார் 36 வருடங்களாக தமது சொந்த மண்ணில் வாழமுடியாமல் உள்ளனர் எனவே காணிகளை விடுவிக்க வேண்டும் என வலி வடக்கு தவிசாளர் சோ. சுகிர்தன் தெரிவித்துள்ளார்.

வலி.வடக்கு பிரதேசசபை, மயிலிட்டி உப அலுவலகத்திற்குட்பட்ட மயிலிட்டி பொது நூலகத்தின் தேசிய வாசிப்பு மாதத்திற்கான பரிசளிப்பு நிகழ்வும் இறுதி நிகழ்வும் நேற்றைய தினம் புதன்கிழமை குரும்பசிட்டி பொது நோக்கு மண்டபத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட வலி வடக்கு தவிசாளர் சோமசுந்தரம் சுகிர்தன் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

வலி வடக்கு பிரதேசசபைக்குட்பட்ட நான்கு உப அலுவலகங்களுக்கும் ஒவ்வொரு நூலகங்கள் உண்டு. ஏனைய மூன்று நூலகங்கள் அதற்குரிய இடங்களில் சிறப்பாக இயங்கினாலும் மயிலிட்டி உப அலுவலகத்திற்குட்பட்ட நூல் நிலையமானது வசாவிளான் சந்தியில் இன்றளவும் விடுவிக்கப்படாமல் காணப்படுகின்றது.

குறிப்பாக தற்போது 2500 ஏக்கருக்கு மேற்பட்ட நிலப்பரப்பில் அதிக நிலப்பரப்பு மயிலிட்டி உப அலுவலகத்திற்குட்பட்டதாகும். அதிலும் வசாவிளான் வீதியூடாகப் பயணிக்க முடிந்தாலும் வசாவிளான் சந்தியிலுள்ள நூல்நிலைய காணிக்குள் செல்ல முடியாத நிலையுள்ளது.

நாம் பல்வேறு நிலைமைகளை காட்டிக்கொண்டாலும் எங்களுடைய மக்கள் துன்பதுயரங்களுடன் கிட்டத்தட்ட 36 வருடங்களாக தமது சொந்த மண்ணில் வாழமுடியாமல் உள்ளனர்.

2025ம் ஆண்டு “மறுமலர்ச்சிக்காக வாசிப்போம்” எனும் தொனிப்பொருளில் தேசிய வாசிப்பு மாதம் கொண்டாடப்படுகின்றது. எமது பிரதேசத்திலும் தமது சொந்த இடங்களுக்குச் செல்ல வேண்டும், மறுமலர்ச்சி ஏற்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பில் மக்கள் உள்ளனர்.

வசாவிளான் ஸ்ரீ வேலுப்பிள்ளை வித்தியாசாலைக்கு அருகாக செல்லும் வீதி விடுவிக்கப்பட்டாலும் அவர்களது பாடசாலை இது வரை விடுவிக்கப்படவில்லை. தற்போது வசாவிளான் மத்திய கல்லூரிக்குரிய இடத்தில் தற்காலிகமாக இயங்கினாலும் குறித்த மாணவர்கள் வாசிப்பு மாத போட்டிகளில் சிறந்த திறமைகளை வெளிப்படுத்தியுள்ளனர். எமது எதிர்பார்ப்பும் இந்த பாடசாலைகள் மீண்டும் தமது சொந்த இடத்தில் மீளவும் இயங்க வேண்டும் என்பதேயாகும்.

தற்போது பிரதேசசபை செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்காகவும் உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரங்களைப் பறிப்



பதற்காகவும் தென்னிலங்கையினூடாக பிரஜாசக்தி என்ற நிகழ்ச்சி நிரலைக் கொண்டுவந்துள்ளனர்.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் இருப்பினும் தமது கட்சி சார் நபர்களை நியமித்து அவர்கள் மூலம் உள்ளூராட்சி மன்ற செயற்பாடுகளை மேற்கொள்ளலாம் என்ற எண்ணப்பாடு தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

ஆகவே. மக்களாகிய நீங்கள் யாரிடமும் மண்டியிடத் தேவையில்லை நேரடியாக பிரதேசசபையை அணுகி உங்களது பிரச்சினைகளுக்கான தீர்வுகளைப் பெற்றுக்கொள்ளலாம் என தெரிவித்தார்.

# ஊடகவியலாளர் சுகிர்தராஜன் படுகொலை செய்யப்பட்டு இன்றுடன் 20 ஆண்டுகள் நிறைவு!

24.01.2026

திருகோணமலை ஐந்து மாணவர்களின் படுகொலை உண்மைகளை வெளியிட்ட இளம் ஊடகவியலாளர் சுகிர்தராஜன் படுகொலை செய்யப்பட்டு இன்றுடன் 20 (24.01.2006) ஆண்டுகள்!



இன்று ஊடகவியலாளர் சுப்பிரமணியம் சுகிர்தராஜன் சுட்டுக் கொல்லப்பட்டு 20 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. ஐந்து மாணவர்களின் படுகொலை தொடர்பான உண்மைகளை ஆதாரங்களுடன் பதிவு செய்து எழுதி வந்த ஒரு துணிச்சலான ஊடகவியலாளர் அவர். அந்தக் கொலைகள் நடைபெற்ற வெறும் 20 நாட்களுக்குள் அவர் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகியிருந்தார் என்பதே இந்தக் கொலையின் கொடூரத்தை இன்னும் தீவிரமாக வெளிப்படுத்துகிறது எனமக்கள் போராட்ட முன்னணியின் முக்கியஸ்தர் ராஜ்குமார் ராஜீவ்காந்த் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் இன்று (24.01.2026) அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

24.01.2006 எனது வீட்டில் இருந்து சுமார் 200 மீட்டர் தூரத்தில் ஒருவர் சுடப்பட்டிருக்கிறார் என்ற தகவல் தொலைபேசி மூலம் கிடைத்தது. அந்த அழைப்பை எடுத்தவர், என்னை பயிற்சி ஊடகவியலாளராக இணைத்துக் கொண்டிருந்த ஒருவர். தகவலைக் கேட்டவுடனே எந்த யோசனையும் இன்றி அந்த இடத்தை நோக்கி ஓடினேன்.


அங்கு நான் கண்ட காட்சி என் மனதில் இன்னும் அழியாத காயமாகப் பதிந்துள்ளது. சுகிர்தராஜன் இரத்த வெள்ளத்தில் கிடந்தார். அவரது வயிற்றுப் பகுதியில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டிருந்தது. அருகில் சென்று பார்த்தபோது அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்பதை உணர முடிந்தது. இந்தச் சம்பவம் உவர்மலைச் சிறுவர் மைதானத்துக்கு முன்பாக இடம் பெற்றிருந்தது.

அந்த இடத்தில் நிலவிய அழுகுரலும், கலங்கிய முகங்களும் இன்னும் நினைவில் ஒலிக்கின்றன. அவரது மனைவி, உறவினர்கள் கதறி அழுது கொண்டிருந்தார்கள். அவர்களின் துயரம், அந்தக் காலை நேரத்தின் அமைதியை கிழித்து நொறுக்கியது. அந்த ஒரு தருணத்தில் ஒரு குடும்பத்தின் வாழ்க்கையே முற்றாகச் சிதைந்துவிட்டது.

பல சந்தர்ப்பங்களில் அவர் என்னோடு பேசிப் பழகியவர். மிகுந்த தைரியமும், நேர்மையும் கொண்ட ஊடகவியலாளர். பயமின்றி உண்மையை எழுத வேண்டும் என்ற உறுதி



அவரது வார்த்தைகளிலும், செயல்களிலும் தெளிவாகப் பிரதிபலித்தது. அச்சுறுத்தல்கள், அழுத்தங்கள் எதுவும் அவரை மௌனமாக்க முடியவில்லை.



அவர் இறந்த போது அவருக்கு வயது 36 மட்டுமே. ஒரு ஊடகவியலாளராக இன்னும் பல உண்மைகளை வெளிக்கொண்டு வர வேண்டிய காலத்தில் அவரது குரல் நிரந்தரமாக அடக்கப்பட்டது. ஆனால், அவரது மரணம் ஒரு மனிதனின் முடிவாக மட்டும் இல்லை; அது உண்மையை எழுதும் உரிமைக்கு எதிரான ஒரு கொடூரமான எச்சரிக்கையாகவும் இருந்தது.

20 ஆண்டுகள் கடந்தும் சுகிர்தராஜனின் பெயர் மறக்கப்படவில்லை. அவர் எழுதிய உண்மைகளும், அவர் காட்டிய தைரியமும் இன்னும் பலரின் நினைவிலும், மனச்சாட்சியிலும் உயிருடன் இருக்கின்றன. ஒரு ஊடகவியலாளன் உயிர்த் தியாகம் செய்த உண்மை காலம் கடந்தும் கேள்விகளை எழுப்பிக்கொண்டே இருக்கிறது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

**தமிழ் மக்களின் விடுதலைக்கான**
**ஒரு தேசிய மக்கள் படையாக நாங்கள் எங்கள் போரை**
**முன்னெடுத்துச் செல்கின்றோம்.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

# பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு பதிலாகக் கொண்டுவரப்படவுள்ள சட்டத்திற்கு எதிரான பிரேரணை யாழ். வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையில் நிறைவேற்றம்!

24.01.2026





பயங்கரவாதத்தில் இருந்து அரசாங்கத்தை பாதுகாக்கும் சட்டத்திற்கு எதிரான பிரேரணையானது வெள்ளிக்கிழமை (23) யாழ். வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் ஜெசீதனால் சபையில் முன்வைக்கப்பட்டது. இந்நிலையில் அந்த பிரேரணையானது நிறைவேற்றப்பட்டது.

குறித்த பிரேரணையில் தவிசாளர் தனது கருத்தை முன்வைக்கையில்,

பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு பதிலாக தற்போதைய அரசாங்கத்தால் கொண்டுவரப்படவுள்ள புதிய சட்டமானது எமது இனத்திற்கு பாரிய இழப்பினை ஏற்படுத்தவுள்ளது.

2026ஆம் ஆண்டு ஏப்ரல் 22ஆம் திகதி இந்த சட்டமானது பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. இந்த சட்டமானது இதற்கு முன்னர் இருந்த இரண்டு சட்டங்களை விடவும் மிகவும் கொடூரமான சரத்துக்களை கொண்டதாக காணப்படுகின்றது.

தற்போது அரசானது தேர்தல் வாக்குறுதிகளின்போது, தாம் ஆட்சிக்கு வந்ததும் பயங்கரவாத தடை சட்டத்தை முற்றாக நீக்குவதாக தெரிவித்தது. அதனை நிறைவேற்றுவது போல் அந்த சட்டத்தைவிட மிகவும் மோசமான சட்டத்தை கொண்டு வர உள்ளது.

எனவே அந்த சட்டத்தை நிறைவேற்றக்கூடாது என்ற பிரேரணையை நான் இந்த மானிப்பாய் பிரதேச சபையில் கொண்டு வருகிறேன் என்றார்.

குறித்த பிரேரணை தொடர்பாக உறுப்பினர்கள் கருத்து தெரிவிக்க சந்தர்ப்பம் வழங்கப்பட்டபோது தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் அதனை கடுமையாக எதிர்த்தனர். பின்னர் பிரேரணையானது வாக்கெடுப்பிற்கு விடப்பட்டது. இந்நிலையில் தேசிய மக்கள் சக்தியின் ஐந்து உறுப்பினர்களும் பிரேரணை குறித்து நடுநிலை வகித்ததுடன், சபையில் இருந்த ஏனைய அனைத்து உறுப்பினர்களின் சம்மதத்துடன் குறித்த பிரேரணையான நிறைவேற்றப்பட்டது.

# திருகோணமலையில் ஊடகவியலாளர் சுகிர்தராஜனின் 20ஆம் ஆண்டு நினைவேந்தல்

24.01.2026

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் சுப்பிரமணியம் சுகிர்தராஜனின் 20 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு சனிக்கிழமை (24) திருகோணமலை உவர்மலை லோவர் வீதியில் (ஆளுநர் செயலக வீதி) உள்ள உவர்மலை பூங்காவில் மாலை 6.00 மணிக்கு அனுஷ்டிக்கப்பட்டது.

திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் ஊடகவியலாளர்கள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டு சுகிர்தராஜனின் ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும் ஈடுபட்டனர்.

சுகிர்தராஜன் சுடர் ஒளி, உதயன் பத்திரிகைகளில் அரசியல் விடயங்களை எழுதி வந்தார். இந்நிலையில் 24.01.2006 அன்று காலையில் ஆளுநர் செயலகத்திற்கு முன்னால் உள்ள வீதியில் வைத்து துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார்.

2006 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2ஆம் திகதி திருகோணமலை கடற்கரையில் வைத்து ஐந்து மாணவர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை உலகிற்கு வெளிச்சம்போட்டுக் காட்டியிருந்தார்.











# சுதந்திர தினமான பெப்ரவரி 4ஆம் திகதியை கரிநாளாக பிரகடனப்படுத்தி மக்களை திரட்டும் நடவடிக்கையில் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள்

27.01.2026

சுதந்திர தினமான பெப்ரவரி 4 ம் திகதியை கரி நாளாக பிரகடனப்படுத்தி வடக்கு கிழக்கில் போராட்டத்தை நடத்த தீர்மானித்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், அதற்கு பொதுமக்களை அணி திரட்டி வலுச்சேர்க்கும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு நேற்றைய தினம் திங்கட்கிழமை சென்ற மாணவர் ஒன்றிய பிரதிநிதிகள் அங்குள்ள வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கங்கள், பொது அமைப்புகள் மற்றும் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகளை சந்தித்து கலந்துரையாடும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளனர்.

பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய பிரதிநிதிகள் எதிர்வரும் சில தினங்களுக்கு வடக்கு கிழக்கில் உள்ள எட்டு மாவட்டங்களுக்கும் சென்று போராட்டத்திற்கு ஆதரவு திரட்டும் குறித்த கலந்துரையாடலை முன்னெடுக்கவுள்ளனர்.

தமிழர் தேசத்தின் மீது நூற்றாண்டு கடந்தும் சூழ்ந்துள்ள பேரினவாத தீயிலிருந்து தமிழர் தாயகத்தை காத்திடவும், தலைமுறைகள் தாண்டிய இனத்தின் இருப்பிற்காகவும் வடக்கு மாகாணத்தில் கிளிநொச்சி மாவட்டத்திலும் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்திலும் குறித்த போராட்டம் நடைபெறவுள்ளது.



# மனித உரிமை ஆர்வலர் த. முத்துக்குமாரசாமி அவர்களுக்கு வவுனியாவில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர் சங்கம் இறுதி வணக்கம்

27.01.2026

எங்களால் பேச முடியாதபோது எங்கள் குரலை எடுத்துச் சென்றவர் மனித உரிமை போராளி த.முத்துக்குமாரசாமி என்று தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கம் தெரிவித்துள்ளது.

மனித உரிமை ஆர்வலர் த.குமார் என்று அழைக்கப்படும் த. முத்துக்குமாரசாமி அவர்களுக்கான அஞ்சலி நிகழ்வு தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினரால் இன்று நினைவுகூரப்பட்டது.






அதனைத்தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போது அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

146,000க்கும் மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டதற்கும், 30,000க்கும் மேற்பட்டோர் காணாமல் ஆக்கப்பட்டதற்கும் நீதி வேண்டி நாங்கள் இன்றும் அமெரிக்காவையும், ஐரோப்பிய ஒன்றியத்தையும் எதிர்பார்த்து காத்திருக்கிறோம்.

இந்த நீண்ட போராட்டப் பயணத்தில், த. குமார், என்றழைக்கப் படும் தம்பித்துரை முத்துக்குமாரசாமி அவர்களை ஆழ்ந்த நன்றியுடனும், மரியாதையுடனும், துயரத்துடனும் நினைவு கூருகிறோம்.

1948 இல் இலங்கை சுதந்திரம் பெற்றதிலிருந்து தமிழ் அரசியல் முயற்சிகளின் தொடர்ச்சியான தோல்விகளுக்கு மத்தியில் அவர் தமிழ் அரசியல் தலைமைத்துவத்தின் இரண்டாம் தலைமுறையில் ஒரு முக்கிய ஆளுமையாக உருவெடுத்தார்.

முறிந்துபோன வாக்குறுதிகளுக்கும், பாராளுமன்ற அரசியலின் மாயைகளுக்கும் அப்பால், அவர் மனித உரிமைகள், சர்வதேச சட்டம் மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றை தமிழ் மக்களின் போராட்டத்தின் மையத்தில் வைத்தார்.

அம்னெஸ்டி இன்டர்நேஷனலால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு அரசியல் கைதியாகவும், 'மனசாட்சிக்குக் கட்டுப்பட்ட கைதியாகவும்', குமார் துன்பத்தை ஒரு கோட்பாடாக அல்லாமல், ஒரு நேரடி யதார்த்தமாக அனுபவித்தார். அவரது கல்விஅறிவை பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கான நீதிக்காக முழுமையாக அர்ப்பணித்தார்.

வாஷிங்டன் டி.சி. மற்றும் ஜெனீவாவில், த. குமார் தமிழர்களுக்காகப் பேசிய மிகவும் செல்வாக்கு மிக்க மனித உரிமை ஆர்வலர்களில் ஒருவராக இருந்தார்.

அந்த வேதனையை அவர் அமெரிக்க காங்கிரஸ், ஐக்கிய நாடுகள் சபை மற்றும் சர்வதேச மனித உரிமை மன்றங்கள் வரை எடுத்துச் சென்று, தமிழர்கள் அனுபவித்த துயரங்களை உலகிற்கு வெளிப்படுத்தினார்.

1977 ஆம் ஆண்டு நடந்த இனக்கலவரங்களின் போது, கொழும்பில் அமைக்கப்பட்ட அகதி முகாம்களில் தங்கவைக்கப்பட்டிருந்த தமிழர்களை, லங்கா ராணி என்ற பயணக் கப்பல் மூலம் தமிழ் தாயகமான வடகிழக்கிற்குச் செல்ல த. குமார் அவர்கள் முக்கியப் பங்காற்றினார்.

1983 ஆம் ஆண்டு ஜூலை இனக்கலவரங்களின் போது, அவர் அமெரிக்காவின் பாஸ்டன் நகரத்தில் இருந்தபோதும், அகதி முகாம்களில் பணியாற்றிய தன்னார்வலர்களுக்கு வழிகாட்டி, பல தமிழர்கள் பாதுகாப்பாகத் தங்கள் தாயகத்தை அடைய உதவினார்.

அவர் மனித உரிமைகள், சர்வதேச சட்டம் மற்றும் பொறுப்புக்



கூறல் ஆகியவற்றை தமிழ் மக்களின் போராட்டத்தின் மையத்தில் வைத்தார்.

உள்நாட்டு விசாரணைகள் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை வழங்காது; ஒரு சர்வதேச விசாரணை அவசியம் என்றார். இன்றைய வரலாறு அவரது எச்சரிக்கையை உண்மையென நிரூபித்துள்ளது.

சர்வதேச மேற்பார்வையின் கீழ் நடத்தப்படும் ஒரு சுயநிர்ணய வாக்கெடுப்பு மட்டுமே தமிழ் மக்களின் எதிர்காலத்தைத் தீர்மானிப்பதற்கான ஜனநாயக வழி என்று ஆழமாக நம்பினார், மேலும் அதற்காகத் தனது வாழ்நாள் முழுவதும் போராடினார். குரலற்ற மக்களுடன் அவர் உறுதியாக நின்றார்.நாங்கள் பேச முடியாதபோது எங்கள் குரலை எடுத்துச் சென்ற ஒரு மனிதர் என்றனர்.

# 'கறுப்பு ஜனவரி' மட்டக்களப்பில் சுடர் ஏற்றி ஊடகவியலாளர் நீதி கோரி தீப்பந்தப் போராட்டம்

28.01.2026

படுகொலை செய்யப்பட்ட மற்றும் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி கோரி, மட்டக்களப்பில் நேற்று தீப்பந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.





படுகொலை செய்யப்பட்ட மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர்களை நினைவுகூரும் 'கறுப்பு ஜனவரி' மாதத்தை முன்னிட்டு, மட்டக்களப்பு காந்தி பூங்காவிலுள்ள படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் நினைவுத் தூபிக்கு அருகில் இப்போராட்டம் நடைபெற்றது.

மட்டக்களப்பு ஊடக அமையம், மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் மற்றும் கிழக்கிலங்கைச் செய்தியாளர் சங்கம் ஆகியன இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன.

இப்போராட்டம் நடைபெற்ற இடத்தில் காவல்துறையினரும் புலனாய்வுத் துறையினரும் குவிக்கப்பட்டிருந்தனர்.

இதன்போது, "படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதியை வழங்கு", "கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர்கள் எங்கே?", "ஊடக சுதந்திரத்தை உறுதிப்படுத்து" போன்ற பல்வேறு கோஷங்கள் எழுப்பப்பட்டன.



நாட்டின் உள்ளகப் பொறிமுறையில் ஊடகவியலாளர்கள் நம்பிக்கை இழந்துள்ளதன் காரணமாக, சர்வதேச நீதிப் பொறிமுறையின் கீழ் இலங்கையில் படுகொலை செய்யப்பட்ட மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர்கள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் இதன்போது வலியுறுத்தப்பட்டது.

## முக்கிய அறிவித்தல்

**தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.**

sangathamilcanada@gmail.com

**www.sangathamil.ca**

# சுதந்திர நாளுக்கு எதிராக வடக்கு கிழக்கில் நடைபெறவுள்ள கரி நாள் பேரணிக்கு அனைத்து தரப்புக்களும் பங்கேற்று வலுப்படுத்தும் நடவடிக்கையில் யாழ். பல்கலைக்கழகம்

27.01.2026

சுதந்திர தினத்துக்கு எதிராக வடக்கு கிழக்கில் நடைபெறவுள்ள கரி நாள் பேரணிக்கு அனைத்து தரப்புக்களும் பங்கேற்று வலுச் சேர்க்க வேண்டும் என தென்கையிலை ஆதீன முதல்வர் மற்றும் திருகோணமலை மறை மாவட்ட ஆயர் ஆகியோர் அழைப்பு விடுத்தனர்.

இலங்கையின் சுதந்திர தினமான பெப்ரவரி 4 ஆம் திகதியை கரி நாளாக பிரகடனப்படுத்தி வடக்கு கிழக்கில் போராட்டத்தை நடத்த தீர்மானித்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், அதற்கு பொதுமக்களை அணி திரட்டி வலுச் சேர்க்கும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது.

இதனொரு கட்டமாக தென்கையிலை ஆதீன முதல்வர் தவத்திரு அகத்தியர் அடிகளார் மற்றும் திருகோணமலை மறை மாவட்ட ஆயர் நோயல் இம்மானுவேலை யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய பிரதிநிதிகள் இன்று நேரில் சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்பின்னர் கருத்து தெரிவித்த திருகோணமலை மறை





மாவட்ட ஆயர், தமிழ் மக்களின் தேவைகள் பலவாறாக இருந்தாலும் பல வழிகளில் அவை நிராகரிக்கப்படுகின்றன அல்லது பூர்த்தி செய்யப்படாமல் இருக்கின்றன. இதை வலியுறுத்தி நடைபெறும் போராட்டம் வெற்றி பெற அனைவரும் ஆதரவு அளிக்க வேண்டும் - என்றார்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த தென்கையிலை ஆதீனம், 1948 ஆம் ஆண்டு இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்தது. அன்றிலிருந்து தமிழ் மக்களுக்கு சாபக்கேடான நிலையே அமைந்தது. அந்த சுதந்திர தின நாளை கரி நாளாக அனுஷ்டிக்க வருங்கால சந்ததியான பல்கலைக்கழக இளைஞர்கள் முயற்சிகளை முன்னெடுக்கிறார்கள். அந்த முன்னெடுப்புக்கு இலங்கையில் வாழ்கின்றவர்கள் புலம்பெயர் தேசத்தில் வாழ்கின்ற மக்கள் பூரண ஆதரவை வழங்க வேண்டும். இந்தப் பூரண ஆதரவே எமது மக்களின் இருப்பையும் சிதைவினையும் தடுக்கவும் உதவும் - என்றார்.

# யாழ். பண்டத்தரிப்பில் காணியை விட்டு வெளியேறிய சிறீலங்கா இராணுவத்தினர்

28.01.2026

யாழ். பண்டத்தரிப்பு கிராம அலுவலர் பிரிவிலுள்ள பிரதேச சபையின் கொல்களம் அமைந்துள்ள காணியானது 2012 ஆம் ஆண்டு முதல் சிறீலங்கா இராணுவத்தினரின் பயன்பாட்டில் இருந்து வரும் நிலையில் தற்போது அந்த காணியை விட்டு இராணுவத்தினர் வெளியேறியுள்ளனர்.







அங்கிருந்து வெளியேற்றப்பட்ட இராணுவத்தினர் அராலி இராணுவ முகாமுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

குறித்த காடாப்புலம் காணியானது இன்று புதன்கிழமை பிரதேச சண்டிலிப்பாய் செயலாளரிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் சுழிபுரம் பகுதியில் இருந்த இராணுவ முகாமும் அகற்றப்பட்டு அங்கிருந்த இராணுவத்தினர் சங்கானையில் உள்ள இராணுவ முகாமுக்கு மாற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# அரசு கொண்டு வந்துள்ள பயங்கரவாதத்திலிருந்து அரசை காப்பாற்றக்கூடிய இச்சட்டமானது ஒட்டு மொத்தமாக இலங்கை வாழ் மக்களுக்கு பொருத்தமற்றது!

## மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவு சங்க சமாசத்தின் செயலாளர் என்.எம்.ஆலம்

28.01.2026

அரசு கொண்டு வந்துள்ள பயங்கரவாதத்திலிருந்து அரசை காப்பாற்றக்கூடிய இச்சட்டமானது ஒட்டு மொத்தமாக இலங்கை வாழ் மக்களுக்கு பொருத்தமற்றது. பயங்கரவாத தடைச் சட்டத்தை எவ்வாறு நீக்க வேண்டும் என்று நாங்கள் கோரிக்கை விடுத்தோமோ, அதே போன்றுதான் இச் சட்டமும் எந்த திருத்தமும் இன்றி நீக்கப்பட வேண்டும் என மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவு சங்க சமாசத்தின் செயலாளர் என்.எம்.ஆலம் தெரிவித்தார்.

தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின், மன்னார் நேசக்கரம் பிரஜைகள் குழுவின் பெண்கள் அமைப்பு ஏற்பாடு செய்த ஊடக சந்திப்பு இன்று புதன்கிழமை (28) மதியம் மன்னாரில் உள்ள அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதன் போது கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மையில் அரசு கொண்டு வந்துள்ள பயங்கரவாதத்திலிருந்து அரசை காப்பாற்றக்கூடிய சட்டமானது கடந்த காலங்களில் உள்ள அரசு கொண்டு வந்த பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கி விட்டு அதற்கு பதிலாக கொண்டு வரப்பட்டுள்ள புதிய சட்டமாக இதை கூறினாலும், எதிர் வரும் மாதங்களில் குறித்த சட்டத்தை நாடாளுமன்றத்திற்கு கொண்டு வந்து நிறைவேற்ற உள்ளனர்.

இச்சட்டமானது ஒட்டு மொத்தமாக இலங்கை வாழ் மக்களுக்கு பொருத்தமற்றது. பயங்கரவாத தடைச் சட்டத்தை எவ்வாறு நீக்க வேண்டும் என்று நாங்கள் கோரிக்கை விடுத்தோமோ, அதே போன்றுதான் இச் சட்டமும் எத்திருத்தமும் இன்றி நீக்கப்பட வேண்டும்.



இச்சட்டம் கொண்டு வரப்பட கூடாது என்ற கருத்தையும் நாங்கள் முன் வைக்கின்றோம். குறித்த விடயம் தொடர்பாக சிவில் சமூகம் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், தெளி வாக குறித்த சட்டத்திற்கு எதிராக தமது கருத்தை வெளிப்படுத்தி வருகிறார்கள்.

இந்த நிலையில் மீனவர் சமூகம் சார்ந்த நாங்களும் குறித்த விடையம் தொடர்பாக கருத்துக்களை பதிவு செய்கிறோம். போராட்டங்கள் ஊடாகவும், ஊடகங்கள் ஊடாகவும் நாங்கள் பல்வேறு விடையங்களை இந்த அரசுக்கு தெரிவித்து வரு கிறோம்.

கதைப்பதற்கான உரிமையை கூட புதிதாக கொண்டு வரப்படவுள்ள சட்டத்தின் பிரிவு ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே அரசு இச்சட்டத்தை மீளப்பெற்று, முன்பு இருந்த பயங்கரவாத தடைச் சட்டத்தையும் இல்லாது செய்து, நாட்டிற்கு தேவையான பொதுவான பல சட்டங்கள் இருக்கிறது. அந்த சட்டத்தின் ஊடாக செயல்பாடுகளை அரசு முன்னெடுக்க வேண்டும்.

எனவே கொண்டு வரப்படவுள்ள சட்டமானது சாதாரணமாக விவசாயிகள் மீனவர்கள் உள்ளடங்களாக பலருக்கு சுமையை ஏற்படுத்த உள்ளது. பயங்கரவாத தடைச்சட்டம் கூட பல பாதிப்புகளை ஏற்படுத்தி உள்ளது. எனினும் நீதிமன்றம் ஊடாக சில நடவடிக்கைகளை மேற்கொள்ள கூடிய வகையில் அமைந்திருந்தது.

ஆனால் புதிதாக கொண்டு வரப்படவுள்ள சட்டமானது ஜனாதிபதி, ஜனாதிபதியின் செயலாளர், பாதுகாப்பு அமைச்சு ஆகியவற்றிற்கு மாத்திரமே முழுமையான அதிகாரத்தை வழங்குகிறது.

போராட்டம் மற்றும் கருத்து கூறுதல் என்பது ஜனநாயக உரிமை. அந்த உரிமையை இல்லாது செய்கிற இந்த சட்டம் தேவையற்றது.

அச்சட்டம் நீக்கப்பட வேண்டும். என தெரிவித்தார். இதே வேளை மன்னார் நேசக்கரம் பிரஜைகள் குழுவின் போசகர் அன்ரனி சங்கர் மற்றும், வளர்பிறை பெண்கள் அமைப்பின் தலைவி நீற்றா வசந்தி ஆகியோரும் கலந்து கொண்டு கருத்துக்களை தெரிவித்தனர்.

# கிவுல் ஓயா எதிர்ப்பு போராட்டம் எதிர்வரும் 02.02.2026!

28.01.2026





அரசினால் தமிழ் மக்களின் பூர்வீக நிலங்களை ஆக்கிரமித்து நடைமுறைப்படுத்தப்படவுள்ள கிவுல் ஓயா திட்டத்தை நிறுத்தக் கோரல் தொடர்பில் வவுனியா வடக்கினை சேர்ந்த பொது அமைப்புக்களுடன் தமிழ் தேசிய கட்சிகளின் பிரதிநிதிகள் ஒன்றினைந்து நெடுங்கேணியில் செவ்வாய்க்கிழமை (27.01.2026) விசேட கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

இத்திட்டத்தால் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் சவால்கள் தொடர்பாக கலந்துகொண்டவர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

மேலும் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் சவால்கள் ஆபத்துக்களை இல்லாதொழிப்பதற்கான நடவடிக்கையாக வவுனியா வடக்கின் நெடுங்கேணி பிரதேசத்தில் முன்னெடுக்கப்படவுள்ள கவனயீர்ப்பு போராட்டம் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது. வவுனியா வடக்கின் பொது அமைப்புக்களின் வேண்டுகோள், ஆலோசனையின் பிரகாரம் முன்னதாக எதிர்வரும் 30.01.2026 வெள்ளிக்கிழமை மேற்கொள்ளப்படவிருந்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தினை எதிர்வரும் 02.02.2026 திங்கட்கிழமை மேற்கொள்வதாக இணக்கப்பாடு எட்டப்பட்டு தீர்மானம் இறுதி செய்யப்பட்டது.

அதனடிப்படையில் எதிர்வரும் 02ஆம் திகதி திங்கட்கிழமை (02.02.2026) நெடுங்கேணி பேரூந்து நிலையத்திற்கு முன்பாக குறித்த போராட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இக்கூட்டத்தில் வவுனியா வடக்கை சேர்ந்த பல்வேறு பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரசியல்கட்சிகளின் பிரமுகர்கள், ஒன்றிணைந்த தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள், பாராளுமன்ற உறுப்பினர் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# கொக்கட்டிச்சோலைப் படுகொலையின் 39ஆவது ஆண்டு நினைவேந்தல்!

28.01.2026

கிழக்கு மாகாணத்தையே உலுக்கிய படுகொலைகளில் ஒன்றாக கருதப்படும் மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை படுகொலையின் 39ஆவது நினைவேந்தல் நிகழ்வு நினைவுகூரப்பட்டது.

மகிழடித்தீவு சந்தியில் உள்ள படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவுத்தூபியில் குறித்த வணக்க நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது, ஈகச்சுடர் ஏற்றப்பட்டு மலர்வணக்கம் செலுத்தப்பட்டதுடன் உயிர்நீர்த்தவர்களின் ஆத்மசாந்திவேண்டி அக வணக்கமும் செலுத்தப்பட்டது.

28.01.1987 மற்றும் 12.06.1991 ஆகிய காலப்பகுதிகளில் சிறீலங்கா இராணுவம் மற்றும் விசேட அதிரடிப்படையினரால் மகிழடித்தீவு இறால்பண்ணை மற்றும் கொக்கட்டிச்சோலை ஆகிய பகுதிகளில் 239பேர் படுகொலைசெய்யப்பட்டனர்.

குறித்த படுகொலையில், சிறுவர், மகளிர் மற்றும் முதியோர் அடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவர்களை நினைவு கூரும் வண்ணமே, கொக்கட்டிச்சோலை படுகொலை நினைவுத்தூபி 2,000ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது.

1987ஆம் ஆண்டு இதே தினத்தில் 39ஆண்டுகளுக்கு முன்பு கொக்கட்டிச்சோலை இறால் வளர்ப்பு என்று கூறுகின்ற மகிழடித்தீவு, முதலைக்குடா இறால் வளர்ப்ப பண்ணை, படுவான்கரை பெரு நிலத்தில் சிறீலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட படுகொலையில் 157க்கும் அதிகமானவர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள்.

1987ஆம் ஆண்டு என்பது கிழக்கு மாகாணத்தில் இந்த கொக்கட்டிச்சோலை பகுதியில் பெரியளவிலான படுகொலை முன்னெடுக்கப்பட்டது. அதன்பின்னர் இந்திய-இலங்கை ஒப்பந்தங்கள் ஏற்படுத்தப்பட்டு அதன் பின்னர் படுகொலைகள் முள்ளிவாய்க்கால் வரையில் இடம்பெற்றது.

கொக்கட்டிச்சோலை படுகொலையென்பது அன்றைய காலகட்டத்தில் சர்வதேச ரீதியாக பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தியிருந்தது.

இந்தநினைவேந்தலில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஞா.ஸ்ரீநேசன்,முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன், பட்டிப்பளை பிரதேச தவிசாளர், படுகொலை செய்யப்பட்டவர்களின் உறவினரும் கலந்துகொண்டனர்.









# இலங்கை சுதந்திர நாள் தமிழர்களுக்கு கரி நாளாகவே இருந்துவருகின்றது!

## மட்டு. வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத் தலைவி அமலராஜ் அமலநாயகி

29.01.2026

காணாமல் ஆக்கப்பட்ட விடயம் கூட கிடப்பிலே போடப்பட்டிருக்கின்றது நீதி கிடைக்கப் பெறாத சமூகமாக மக்களாக 350 க்கும் மேற்பட்ட தாய்மார்களின் பிள்ளைகளை தேடி இறந்தவர்களாக இருக்கின்றார்கள். இந்த சாட்சியங்கள் தொடர்ச்சியாக அழிக்கப்பட்டு கொண்டிருக்கின்றது.

இந்த நாட்டின் சுதந்திர நாள் தமிழர்களுக்கு கரி நாளாகவே இருந்துவருகின்றது என,மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்க தலைவி அமலராஜ் அமலநாயகி தெரிவித்தார்,

இந்த நிலையில் அன்றைய தினம் அனைத்து தமிழர்களும் ஒன்று சேர்த்து எமது எதிர்ப்பினை தெரிவிக்க முன்வர வேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளி சங்க தலைவி அமலராஜ் அமலநாயகி வேண்டுகோள் விடுத்தார்.

எதிர்வரும் இலங்கையின் சுதந்திர தினத்தினை கரிநாளாக அனுஸ்டிக்குமாறு விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு அமைவாக இன்றைய தினம் இது தொடர்பில் ஆராயும் விசேட கூட்டம் மட்டக்களப்பில் நடைபெற்றது.

யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட வலிந்துகாணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கம் என்பன இணைந்து இந்த கூட்டத்தினை நடாத்தியது.

இந்த கூட்டத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள சிவில் சமூக அமைப்புகள், மனித உரிமை அமைப்புகள், மத தலைவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், ஊடகவியலாளர்கள் என பலர் கலந்துகொண்டனர்.




இதன்போது எதிர்வரும் 04ஆம் திகதி மட்டக்களப்பில் முன்னெடுக்கப்படவுள்ள போராட்டம் தொடர்பிலும் ஏற்பாடுகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டதை தொடர்ந்து பல்கலைக்கழக மாணவர்கள், வலிந்துகாணாமல்ஆக்கப்பட்டஉறவுகள் சங்கத்தினர் நடாத்திய ஊடகவியலாளர் சந்திப்பும் நடைபெற்றது.

## முக்கிய அறிவித்தல்

**தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.**


sangathamilcanada@gmail.com

# திட்டமிட்ட இன அழிப்பின் மூலம் நிலையான அபிவிருத்தி சாத்தியமில்லை

## தமிழர் மரபுரிமைப பேரவையின் இணைத் தலைவர் வண லியோ ஆம்ஸ்ரோங்

29.01.2026

இலங்கைத்தீவில் நிலையான அபிவிருத்தி சமாதானம் சமத்துவம் நல்லிணக்கம் ஏற்பட வேண்டுமாயின் இவ்வாறான திட்டமிட்ட இன அழிப்பினுடாக அதனை ஒருபோதும் அடைய முடியாது என்பதனை அரசிற்கு சுட்டிக்காட்டுகின்றோம் அதற்கு எதிராக தமிழ மக்கள் தொடர்ச்சியாக போராடுவார்கள் என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றோம் என தமிழர் மரபுரிமை பேரவை தெரிவித்துள்ளது.




இது தொடர்பாக தமிழர் மரபுரிமைத் பேரவையின் இணைத் தலைவர் அருட்பணி சின்னத்துரை லியோ ஆம்ஸ்ரோங் அடிகளார் வெளியீட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மாகாவலி அதிகார சபையினால் வெளியிடப்பட்டிருக்கின்ற திட்ட அறிக்கையின் படி கிவுல் ஓயா நீர்த்தேக்கமானது வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரவில் உள்ள தமிழர்களின் புர்வீக கிராமமான வெடிவைத்த கல்லு கிராமத்திற்கு அண்மையாக வட கிழக்கு திசையாக மகாவலி அதிகார சபையினால் அமைக்கப்படவுள்ள மிகப்பாரிய நீர்த்தேக்கமாகும்.

மகாவலி அதிகாரசபை தனது திட்ட அறிக்கையில் வெளிப்படையாகவே இன் நீர்த்தேக்கத்தின் பயனாளிகள் 3203 சிங்கக் குடும்பங்கள் என தெரிவித்துள்ளது. 37 மீற்றர்கள் (121.37 அடிகள்) உயரமான அணையின் மூலம் உருவாக்கப்படவுள்ள இந் நீரத்தேகத்தின் எல்லைகள் தற்பொழுது மகாவலி அதிகார சபை யினால் வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் எல்லைக்கல்லிடப்பட்டு காட்டப்ட்டுள்ளன.

இதன்படி பாரம்பரிய தமிழ் கிராமங்களான வெடிவைத்த கல்லு, ஈச்சங்குளம், கூழாங்குளம், காட்டுப்புஸ்ரீவரசங்குளம் காஞ்சூர மோட்டை போன்ற கிராமங்களின் 400 ஏக்கருக்கு மேற்பட்ட விவசாய மற்றும் குடியிருப்பு நிலங்கள் நீரினுள் மூழ்கும் நிலை காணப்படுகின்றது.

மேலும் 1921இல் வர்த்தமான அறிவித்தல் மூலம் ஒதுக்கு காடாக அறிவிக்கப்பட்ட பெரிய கட்டிக்குளம் ஒதுக்குக்காட்டில் 4000 ஏக்கரும் இந் நீர்த்தேக்கத்தில் அமிழ்ந்து போவதுடன் வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவின் அடையாளப் படுத்தப்பட்ட 47 தொல்லியல் பிரதேசங்களும் கிவுல் ஓயாவினுள் மூழ்கிப்போகவுள்ளது என்பதனை மகாவலி அதிகார சபையின் திட்ட அறிக்னையின் மூலம் அறிந்துகொள்ள முடிகின்றது.

இந் நீர்த்தேக்கத்திற்கு மிக அண்மையாக உள்ள சைவ வழிபாட்டு இடமான வெடுக்குனாறிமலை பிரதேசத்தினை தொல்லியல் இடமெனக்கூறி தமிழ் மக்களின் வழிபாட்டினை தடை செய்யும் தொல்லியல் நிணைக்களம்.

இந்த 47 தொல்லியல் பிரதேசங்களினையும் கிவுல் ஓயாவினுள் நீரினுள் மூழ்கிப்போவதற்கு தனது இசைவினை தெரிவித்துள்ளமை தமிழர் புரீர்வீக நிலங்களில் அமைந்துள்ள இத் தொல்லியல் சின்னங்கள் தமிழர் மரபுரிமை சார்ந்தவையாக அமைந்திருப்பதனாலேயே என சந்தேகிக்க ஏதுவாகின்றது.

இத் திட்டத்தின் மூலம் பயன்பெறவுள்ள 3203 சிங்கள குடம்பங்களும் ஏற்கனவே திட்டமிடப்பட்டு தமிழர் புர்வீக பகுதிகளில் இராணுவ நடவடிக்கை மூலம் துரத்தியடித்து அவர்கள் பாரம்பரியமாக வாழ்ந்த பிரதேசங்களினை வெலிஓயா பிரதேச செயலாளர் பிரிவாக அறிவித்து அங்கு குடியேற்றப்பட்ட சிங்கள மக்களேயாவர்.

இவ்வாறு அபகரிக்கப்பட்ட தமிழ் மக்களின் காணிகள் இன்று வரை அவர்களுக்கு மீளவும் வழங்கப்படாத நிலையில் வாழ்வாதாரத்திற்காக தமது சொந்த நிலத்தினை ஆக்கிரமித்து வைத்திருக்கும் சிங்கள மக்களிடம் நாட்கூலிகளாக வேலை செய்யும் அவல நிலை காணப்படுகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவின் கொக்குத் தொடுவாய் மத்தி, கொக்குதொடுவாய் வடக்கு, கொக்குத்தொடுவாய் தெற்கு. கருநாட்டுக்கேணி ஆகிய கிராம அலுவலர் பிரிவுக்குரிய ஆமையன் குளம், உந்தராயன் குளம், அடையகர்த்தான், படுகாட்டுக் குளம், சாம்பான் குளம் போன்ற 2000 ஏக்கர் வளமான விவசாய நிலங்கள் தமிழ் மக்களிடமிருந்து அபகரிக்கப்பட்டு சிங்கள மக்களிற்கு வழங்கப்பட்டுள்ளது.

துற்போது கிவுல் ஓயா திட்டத்தின் கீழ் இது மேலும் விஸ்தீரிக்கப்பட்டு கொக்குத்தொடுவாய் சூரியநாற்றுப்பகுதியில் தமிழ் மக்களுக்கு மத்திய வகுப்பு திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட 1990 ஏக்கர் காணிகள் கிவுல் ஓயா திட்டத்தில் உள்வாங்கப்பட்டு திட்ட வரைபடம் தயாரிக்கப்பட்டுள்ளது. திட்டமிடப்பட்ட நில அபகரிப்பையும் வடபகுதியின் இனப்பரம்பல் கோலத்தினை மாற்றுவதனை இலக்காக கொண்டு காலத்திற்கு காலம் ஆட்சிபீடமேறும் அரசுகள் காய்நகர்த்தி வருவது வெளிப்படையாகவே அவதானிக்கப்படுகிறது.

இவையெல்லாவற்றினையும் மூடிமறைத்து மீன்பிடித்துறை அமைச்சர் சந்திரசேகரன் அவர்கள் இது தொடர்பாக தமிழ் அரசியல்வாதிகளின் கூற்று பொய் என கூறியிருப்பதை தமிழர் மரபுரிமை பேரவை வன்மையாக கண்டிக்கின்றது. இவரின் கூற்று அநுர அரசின் இரட்டை வேடத்தினை தோலுரித்துக்காட்டியுள்ளது. இவர்கள் வடக்கில் மக்களை அரவணைப்பது போல நாடகமாடி முதுகில் குத்தும் வேலையினை கச்சிதமாக செய்து வருகின்றார்கள்.

இன்றுவரை மகாவலி அதிகார சபையினால் எந்தவொரு வடமாகாண தமிழ் பொதுமகனும் பயனடையாதவகையில் இனவாத இயந்திரமாக்கப்பட்டுள்ள மகாவலலி அபிவிருத்தி அதிகார சபை தமிழ் மக்களின் தொடர்ச்சியான எதிர்ப்பினையும் மீறி தமது திட்டமிட்ட குடியேற்றத்தினை செய்வதற்காக முனைப்புக் காட்டி கண்டிக்கின்றோம் வருவதனை.

வன்மையாக இலங்கைத்தீவில் நிலையான அபிவிருத்தி சமாதானம் சமத்துவம் நல்லிணக்கம் ஏற்பட வேண்டுமாயின் இவ்வாறான திட்டமிட்ட இன அழிப்பினுடாக அதனை ஒருபோதும் அடைய முடியாது என்பதனை அரசிற்கு சுட்டிக்காட்டுகின்றோம் அதற்கு எதிராக தமிழ மக்கள் தொடர்ச்சியாக போராடுவார்கள் என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

# அடக்குமுறைச் சட்டங்களுக்கு எதிராக சிறீலங்கா தலைநகர் கொழும்பில் மக்கள் போராட்டம்!

28.01.2026

சர்ச்சைக்குரிய பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் (PTA) மற்றும் புதிதாக முன்மொழியப்பட்டுள்ள நாட்டின் பாதுகாப்பை உறுதிப் படுத்தும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் (PSTA) ஆகியவற்றை உடனடியாக மீளப் பெறக்கோரி சிறீலங்கா தலைநகர் கொழும்பில் உள்ள நீதி அமைச் சிற்கு முன்பாக இன்று பாரிய கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.







சிவில் அமைப்புகள், பல்வேறு மதங்களைச் சேர்ந்த மதத் தலைவர்கள், மனித உரிமை ஆர்வலர்கள் மற்றும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் குடும்ப உறுப்பினர்கள் எனப் பலரும் ஒன்றிணைந்து முன்னெடுத்த இந்தப் போராட்டம், தற்போதைய தேசிய மக்கள் சக்தி (NPP) அரசாங்கத்திற்கு ஒரு முக்கிய அரசியல் அழுத்தமாக அமைந்தது.




போராட்டத்தின் போது, “அடக்குமுறைச் சட்டங்கள் ஜனநாயகத்தின் எதிரிகள்” என்றும், “மக்களை ஒடுக்கும் எந்தவொரு சட்ட மூலமும் நாட்டிற்குத் தேவையில்லை” என்றும் போராட்டக் காரர்கள் மும்மொழிகளிலும் முழக்கமிட்டனர்.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அருட் தந்தை சக்திவேல், ‘ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் இத்தகைய அடக்குமுறைச் சட்டங்களை நீக்குவதாக NPP அரசாங்கம் வழங்கிய தேர்தல் வாக்குறுதிகளை மறந்து, அவர்களினால் தற்போது கொண்டுவரப்படும் PSTA சட்டமூலமானது பழைய PTA சடடத்தை விடவும் ஆபத்தானது என்று குற்றம் சாட்டினார்.

இந்தக் கவனயீர்ப்பு நிகழ்வில் கத்தோலிக்க மதகுருமார்கள் மற்றும் பௌத்த பிக்குகள் உள்ளிட்ட சமயத் தலைவர்கள் கைகோர்த்து நின்றமை, இந்தச் சட்டங்களுக்கு எதிராக நிலவும் சமூக ஒற்றுமையை வெளிப்படுத்தியது.

போராட்டத்தில் கலந்துகொண்ட பாதிக்கப்பட்ட தரப்பினர் தமது தனிப்பட்ட வலிகளையும் கோரிக்கைகளையும் பதாகைகள் மூலம் வெளிப்படுத்தினர்.

2009ஆம் ஆண்டு மட்டக்குளிப் பகுதியில் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட ‘முகமது ஹக்கிம்’ என்ற இளைஞனின் தாயார், தனது மகனுக்கு என்ன நடந்தது என்ற உண்மையைக் கோரி ஏந்தியிருந்த பதாகை காண்போரை நெகிழச் செய்தது.

கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாக நடைமுறையில் உள்ள PTA சட்டமானது சிறுபான்மையினருக்கும், அரசியல் எதிர்ப்பாளர்களுக்கும் எதிராகப் பயன்படுத்தப்பட்டதைச் சுட்டிக்காட்டிய போராட்டக்காரர்கள், புதிய பெயரில் மீண்டும் ஒரு கருப்புச் சட்டத்தைக் கொண்டுவருவதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது எனத் தெரிவித்தனர்.

நீதி அமைச்சிற்கு முன்னால் திரண்டிருந்த மக்கள், மக்களின் கருத்துச் சுதந்திரத்தையும், அடிப்படை உரிமைகளையும் முடக்கும் இத்தகைய சட்டமுயற்சிகளை அரசாங்கம் உடனடியாகக் கைவிட வேண்டும் என வலியுறுத்தி, ஒருமித்த குரலில் தமது எதிர்ப்பைப் பதிவு செய்தனர்.




# கிரீன்லாந்து விவகாரத்தில் அமெரிக்காவை கடுமையாக எதிர்க்கும் கனடியப் பிரதமர் மார்க் கார்னி

20.01.2026

அமெரிக்க அரசாங்கத்தின் நடவடிக்கைகளை கடுமையாக எதிர்ப்பதாக கனடிய பிரதமர் மார்க் கார்ணி தெரிவித்துள்ளார்.

கிரீன்லாந்து மீதான அமெரிக்க வரிகளை கடுமையாக எதிர்ப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நெருக்டியான தருணத்தில் கிரீன்லாந்துக்கு கனடா ஆதரவாக துணை நிற்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சுவிட்சர்லாந்தின் டாவோஸில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற உலக பொருளாதார மன்றத்தில் (World Economic Forum) அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பொருளாதார அழுத்தம் மற்றும் வரிகளை மூலமாகப் பயன் படுத்துவது குறித்து தெளிவான செய்தி அளித்தாலும், அமெரிக்கா அல்லது அமெரிக்க ஜனாதிபதியை கார்ணி நேரடியாக குறிப்பிடவில்லை.

நடுத்தர சக்திகளான நாடுகளுக்கு தற்போது ஒரு சோதனை நேரிடுகிறது என தெரிவித்துள்ளார்.

அண்மைய காலங்களில், பெரிய சக்திகள் பொருளாதார ஒருங்கிணைப்பை ஆயத மாகப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

வரிகள் மூலமாக அழுத்தம், நிதி அமைப்புகள் மூலம் கட்டுப் பாடு, விநியோக சங்கிலிகளை கட்டுப்படுத்தல் உள்ளிட்ட பல் - வேறு வழிகளில் இடையூறுகள் ஏற்படுத்த முயற்சிக்கப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

கார்ணியின் 17 நிமிட முதன்மை உரை, பிரதமராக பதவி ஏற்றுக்கொண்ட பின் உலக பொருளாதார மன்றத்தில் அவர் வழங்கிய முதல் உரை யாகும்.




நடுத்தர சக்திகளான நாடுகள் எப்படி 21 ஆம் நூற்றாண்டின் பொருளாதார மற்றும் அரசியல் சவால்களை கையாள வேண்டும் என்பதில் அவரது கருத்துக்கள் முக்கியத்துவம் கொண்டதாக இருந்தது.

# சீனாவின் மின்சார வாகனங்களை நிராகரிக்குமாறு ஒன்ராரியோ முதல்வர் டக் ஃபோர்ட் கோரிக்கை!

21.01.2026

சீனாவில் தயாரிக்கப்பட்ட மின்சார வாகனங்களை நிராகரிக்க வேண்டுமனெ ஒன்ராரியோ முதல்வர் டக் ஃபோர்ட் கோரியுள்ளார்.

பிரதமர் மார்க் கார்ணி சமீபத்தில் சீனாவுடன் ஒப்பந்தம் செய்த பின்னர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

இந்த ஒப்பந்தம் ஒன்ராரியோவில் உள்ள வாகனத் துறை மீது தீங்கு விளைவிக்கும் என குறிப்பிட்டுள்ளார். மேலும், கார்ணி முன்கூட்டியே இந்த விடயம் தொடர்பில் ஆலோசிக்கவில்லை என அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

சீனாவில் தயாரிக்கப்பட்ட மின்சார வாகனங்களை நிராகரிக்கவும் இங்கே வாகனங்களை உருவாக்கும் நிறுவனங்களை ஆதரிக்கவும். இது எளிதானது ஃபோர்ட் தெரிவித்தார்.

கனடாவில் உற்பத்தி நிலையம் கொண்ட கார் நிறுவனங்களை மட்டுமே ஆதரிக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

சீன அதிபர் சி ஜின்பிங் மற்றும் கார்ணி இடையே, கனடா சீனாவுக்கு விதிக்கப்பட்ட 100% சுங்கங்களை குறைத்து, ஆண்டு தோறும் 49,000 மின்சார வாகனங்களை இறக்குமதி செய்ய அனுமதிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டது.

அதற்கு பதிலாக, சீனா கானோலா மீதான சுங்க வரிகளை குறைத்தது. சீன மின்சார வாகனங்களை அனுமதிப்பதனால் கனடிய வாகன தொழிற்சாலை பணியாளர்கள் பாதிக்கப்படுவர்



என ஃபோர்ட் குற்றம் சுமத்தியுள்ளார்.

# கனடாவின் ஆயுதப்படைகளில் சேர விண்ணப்பங்கள் அதிகரிப்பு

22.01.2026

பல ஆண்டுகளாக இலக்குகளை எட்ட முடியாமல் இருந்த கனடா ஆயுதப்படைகள் தற்போது ஆட்சேர்ப்பில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை பதிவு செய்துள்ளன.

பணியாளர் பற்றாக்குறை, ஊதிய குறைகள் மற்றும் நீண்ட ஆட்சேர்ப்பு நடைமுறைகள் காரணமாக புதிய உறுப்பினர்களை ஈர்க்க முடியாமல் இருந்த நிலையில், தற்போது விண்ணப்பங்கள் அதிகரித்து வருவது இராணுவத்திற்கு ஒரு முக்கிய திருப்புமுனையாகக் கருதப்படுகிறது.

2025-26 நிதியாண்டில் இதுவரை நிரந்தர படைப்பிரிவுக்கான விண்ணப்பங்கள் கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது சுமார் 13 சதவீதம் உயர்ந்துள்ளன.

இதற்கு முன் ஆண்டில், புதிய ஆட்சேர்ப்புகள் 55 சதவீதம் உயர்ந்ததாகவும், 2025 டிசம்பர் வரை 6,700 பேர் நிரந்தர படைப்பிரிவில் இணைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது கடந்த ஒரு தசாப்தத்தில் பதிவான அதிகபட்ச சேர்க்கை யாகும். அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் அண்மையில் கிரீன்லாந்தை கைப்பற்றுவது குறித்த கருத்துகளையும், ஆர்க்டிக் பகுதியின் தேசிய பாதுகாப்பு முக்கியத்துவத்தையும் வலியுறுத்தியுள்ள நிலையில், இந்த ஆட்சேர்ப்பு உயர்வு கூடுதல் கவனம் பெற்றுள்ளது.

இருப்பினும், கனடாவின் தெற்குப் பக்க அண்டை நாட்டுடனான பதற்றமே இதற்கான நேரடி காரணம் என கூறுவதில் இராணுவம் தயக்கம் காட்டியுள்ளது.



“விண்ணப்பங்கள் அதிகரிப்பதை ஒரு குறிப்பிட்ட சம்பவத்துடன் நேரடியாக இணைப்பது கடினம். கடந்த நான்கு ஆண்டுகளாக உருவாகி வந்த போக்கின் தொடர்ச்சியே இந்த உயர்வு,” என குறிப்பிடப்பட்டுள்ளது.

வெளிவருகின்றது வர்த்தகக் கையேடு

2026 வணிகம்

மேலதிக தொடர்புகளுக்கு: 437.345.4203



“நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது.”

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

# வாகீசன் இராசையாவுக்கு ‘வேல்’ வழங்கிப் பாராட்டிய அமைச்சர் விஜய் தணிகாசலம்!

25.01.2026

கனடாவின் ரொரான்ரோ நகரில் அமைந்துள்ள டூறம் மாநாட்டு மண்டபத்தில் (Durham Convention Centre), ஜனவரி 24-ஆம் திகதி சனிக்கிழமை அன்று “எங்கட பெடியள்” என்ற கருப்பொருளில் மாபெரும் கலை நிகழ்ச்சியொன்று நடைபெற்றது. தேர்ட் ஐ மீடியா புரொடக்சன் (ThirdEye Media Production) நிறுவனத்தால் மிகவும் நேர்த்தியாக ஏற்பாடு செய்யப்பட்ட இந்த “வாகீசன் லைவ் இன் ரொரான்ரோ“ (Vaheesan Live in Toronto) இசைச் சங்கமம், உலகத்தமிழர்களை இசையாலும் உணர்வாலும் ஒன்றிணைக்கும் ஒரு வரலாற்றுப் பாலமாக அமைந்திருந்தது. இக்கலைவிழாவில், “சிலோன் ராப்” (Ceylon Rap) சொல்லிசைக் கலைஞர்களின் பங்களிப்பும் அவர்களின் ஆழமான தமிழ்ப்பற்றும் வெகுவாகப் பாராட்டப்பட்டது.

இவ்விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட ஒன்ராரியோ மாநில சுகாதார இணை அமைச்சரும், ஒன்ராரியோ சட்டமன்ற உறுப்பினருமான விஜய் தணிகாசலம் அவர்கள், சொல்லிசைக் கலைஞர்களை நேரில் பாராட்டி கௌரவித்தார். அமைச்சர் தனது உரையில் இளைஞர்களின் கலைப் பணியை பின்வருமாறு புகழ்ந்துரைத்தார்:

“ஈழ மண்ணிலிருந்து வந்த இந்த இளம் கலைஞர்கள், சொல்லிசை எனும் நவீன கலை வடிவத்தினூடாக எமது செந்தமிழை அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்கின்றனர். எமது வரலாற்றையும் அடையாளத்தையும் உலகுக்கு உரக்கச் சொல்லி, உலகெங்கும் சிதறிக்கிடக்கும் தமிழர்களை ஒன்றிணைக்கும் ஒரு குரலாக இவர்கள் ஒலிக்கின்றனர். சமூக மாற்றத்திற்கும் ஒற்றுமைக்கும் கலை ஒரு வலிமையான ஆயுதம் என்பதை இவர்கள் நிரூபித்துள்ளனர்” எனத் தொரிவித்தார்.




அத்துடன் அமைச்சர் விஜய் தணிகாசலம் ஒவ்வொரு கலைஞரின் தனித்துவத்திற்கும் ஏற்ப பெறுமதிமிக்க நூல்களைத் தனது கைப்படப் பரிசாக வழங்கினார். தமிழர்களின் வீரம், கொடை மற்றும் கல்வி நெறிகளைப் பறைசாற்றும் “புறநானூறு” நூலை அத்விக் உதயகுமாருக்கும், அறம் போதிக்கும் உலகப் பொதுமறையாம் “திருக்குறள்” நூலை திஷோன் விஜயமோக னுக்கும் அவர் வழங்கினார். ஈழத்து சொல்லிசை மன்னன் என்று போற்றப்படும் வாகீசன் இராசையாவுக்கு, முப்பாட்டன் முருகனின் பெருமைகளைச் சந்த ஓசையுடன் பாடும் “திருப் புகழ்” நூல் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வின் மிக முக்கிய சிறப்பம்சமாக, பாடகர் வாகீசனுக்கு ஒரு “வேல்” பரிசாக வழங்கப்பட்டது. “வண்ண மயில் ஏறும்...” பாடலின் மூலம் உலகளாவிய புகழ்பெற்ற வாகீசன், தனது சொல்லிசைப் பாடல்களில் “பார்வதி மகன்” என்றும், எம் இனத்தலைவன் என்றும், போற்றப்படும் முப்பாட்டன் முருகனைத் தொடர்ந்து முன்னிறுத்தி வருவதைச் சுட்டிக்காட்டிய அமைச்சர், வாகீசனை எதிர்காலத்தின் ஒரு சிறந்த தலைமையாகக் கருதுவதாகவும், அதன் அடையாளமாகவே இந்த வேலை அவருக்கு வழங்குவதாகவும் தெரிவித்தார்.

கலை விழாவிற்கு அப்பால், அன்றைய நிகழ்வு சமூக முன்னேற்றத்திற்கும் ஒரு முக்கிய மைல்கல்லாக அமைந்தது. ரொரான்ரோவில் அமையவிருக்கும் தமிழ் சமூக மையத்திற்காக ஒரே இரவில் ஒரு மில்லியன் டொலர்களுக்கும் அதிகமான நிதி திரட்டப்பட்டது. கனடிய மத்திய அரசு, மாநில அரசு மற்றும் மாநகராட்சி ஆகிய மூன்று நிலை அரசாங்கங்களின் நிதியுதவியையும் ஆதரவையும் இந்த மையம் ஏற்கனவே பெற்றுள்ளது.

உலகளாவிய தமிழ்ச் சூழலில், புலம்பெயர் தமிழ் மக்களால் கட்டப்படும் முதலாவது தமிழ் சமூக மையம் இது என்பதால், எமது எதிர்கால சந்ததியினருக்காக ஒரு நிரந்தரமான இடத்தை உருவாக்கித் தரும் வரலாற்றுப் பொறுப்பை ஏற்று தமிழ்ச் சமூகம் தனது பங்களிப்பை வழங்க வேண்டும் என்ற அறைகூவல் விடுக்கப்பட்டது. அரசாங்கங்கள் தமது பங்கைச் செய்துள்ள நிலையில், இந்த மையத்தை முழுமைப்படுத்துவது சமூகத்தின் கடமை என்பதும் இவ்விழாவில் வலியுறுத்தப்பட்டது.

இந்த விழா ரொரான்ரோ வாழ் தமிழ் மக்களிடையே பெரும் எழுச்சியையும், இளம் சொல்லிசை கலைஞர்களுக்கான கௌரவத்தையும் ஒருசேர வழங்கிய ஒரு வரலாற்று நிகழ்வாகப் பதிவாகியுள்ளது.

# பொருட்கள் சேவைகள் வரி கொடுப்பனவை உயர்த்தப்படவுள்ளது

26.01.2026

கனடிய மக்களின் வாழ்க்கைச் செலவுகளை சமாளிக்க உதவும் புதிய நடவடிக்கை தொடர்பில் பிரதமர் மார்க் கார்ணி அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

இதன் ஒரு பகுதியாக பொருட்கள் சேவைகள் வரி கொடுப்பனவு தொகையை உயர்த்துவதாக அறிவித்துள்ளார்.

குளிர்கால இடைவேளைக்குப் பிறகு பாராளுமன்றம் மீண்டும் கூடியுள்ள நிலையில், கனடா பிரதமர் மார்க் கார்ணி இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

கனடா மளிகைப் பொருட்கள் மற்றும் அத்தியாவசிய நன்மை என்ற புதிய திட்டத்தை கார்ணி அறிமுகப்படுத்தினார். மூன்று மாதங்களுக்கு ஒருமுறை வழங்கப்படும் GST தொகை, அடுத்த ஐந்து ஆண்டுகளில் 25 சதவீதம் வரை உயர்த்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனுடன் சேர்த்து, வரும் ஜுன் மாதத்தில் ஒருமுறை 50 சதவீத கூடுதல் தொகை வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசின் கணக்கீட்டின்படி, நான்கு பேர் கொண்ட ஒரு குடும்பம், இந்த உயர்வுகளால் இந்த ஆண்டில் அதிகபட்சமாக 1,890 டொலர் வரை பெற முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது இந்த உதவி ஆண்டுக்கு 1,100 டொலர் மட்டுமே கிடைக்கின்றது. தனிநபர் ஒருவர், இந்த ஆண்டில் 950 டொலர் பெறுவார் இது தற்போது வழங்கப்படும் 540 டொலருடன் ஒப்பிடுகையில் கணிசமான உயர்வாகும் என தெரிவிக்கப்படுகின்றது.

உயர்ந்து வரும் மளிகைப் பொருட்கள் விலை, அத்தியாவசியச் செலவுகள் மற்றும் வாழ்க்கைச் செலவுகளின் அழுத்தத்தை குறைப்பதே இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கம் என அரசு தெரிவித்துள்ளது.



இந்த அறிவிப்பு, குறைந்த மற்றும் நடுத்தர வருமானக் குடம்பங்களுக்கு குறிப்பிடத்தக்க நிவாரணமாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# கனடா மத்திய வங்கியின் அடிப்படை வட்டி விகிதத்தை 2.25 வீதத்தில் மாற்றம் இல்லை!

28.01.2026

கனடா மத்திய வங்கி (Bank of Canada) தனது அடிப்படை வட்டி விகிதத்தை புதன்கிழமை 2.25 சதவீதமாக மாற்றமின்றி வைத்துள்ளதாக அறிவித்துள்ளது.

இது இந்த ஆண்டிற்கான மத்திய வங்கியின் முதல் வட்டி விகித் தீர்மானமாகும்.

அமெரிக்க சுங்க வரி நடவடிக்கைகளால் ஏற்பட்ட அதிர்ச்சியிலிருந்து கனடா பொருளாதாரம் மெதுவாக மீளும் எனவும் மத்திய வங்கி கணித்துள்ளது.

இந்த வட்டி விகிதத்தை நிலைநிறுத்தும் முடிவு எதிர்பார்க்கப்பட்ட ஒன்றாகவே இருந்ததாக பொருளாதார நிபுணர்கள் தெரிவித்தனர்.

கடந்த டிசம்பரில் வட்டி குறைப்பு சுழற்சியை இடைநிறுத்தியதிலிருந்து கனடா பொருளாதாரம் மத்திய வங்கியின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்பவே முன்னேறி வருவதாக மத்திய வங்கி ஆளுநர் டிஃப் மேக்லெம் (Tiff Macklem) கூறினார்.

அதே நேரத்தில், அரசியல், புவியியல் அபாயங்கள் மற்றும் கனடா - அமெரிக்கா-மெக்சிகோ (CUSMA) வர்த்தக ஒப்பந்தத்தின் வரவிருக்கும் மறு ஆய்வு காரணமாக, நிலைமைகள் குறித்து உள்ள நிச்சயமற்றத்தன்மை “அசாதாரணமாக அதிகம்” எனவும் அவர் எச்சரித்தார்.

தற்போதைய சுங்க வரிகள் மற்றும் தொடரும் நிச்சயமற்ற சூழ்நிலைக்கு கனடா பொருளாதாரம் எவ்வாறு தன்னைச் சீரமைத்துக்கொள்ளும் என்பதை மதிப்பிடுவதற்கு இன்னும் நேரம் தேவை என மேக்லெம் தெரிவித்தார்.

மத்திய வங்கியின் ஆளுநர் குழு (Governing Council) தற்போதைய பொருளாதார முன்னறிவிப்புகளின் அடிப்படையில் இந்த வட்டி விகிதம் “சரியான நிலையில் உள்ளது” எனக் கருதுவதாகவும், ஆனால் அடுத்த வட்டி மாற்றம் எப்போது அல்லது



எந்த திசையில் நடைபெறும் என்பதை கணிக்க மிகவும் கடினம் எனவும் அவர் கூறினார்.

இந்த வட்டி விகித முடிவுடன் இணைந்து, கனடா மத்திய வங்கி புதுப் பிக்கப்பட்ட பொருளாதார மற்றும் பணவீக்க முன்னறிவிப்புகளையும் வெளியிட்டுள்ளது.

# கனடாவில் அகதிகள் மற்றும் புகலிடக்கோரிக்கையாளரின் மருத்துவக் கட்டணங்களில் புதிய விதி மாற்றம் மே 01 ஆம் திகதி முதல்...


28.01.2026

கனடாவில், மே மாதம் முதல் அகதிகளுக்கும் புகலிடக்கோரிக்கையாளர்களுக்கும் மருத்துவக் கட்டணம் தொடர்பில் ஒரு புதிய விதி அறிமுகமாக உள்ளது.

மே மாதம் 1 ஆம் திகதி முதல், கனடாவில் வாழும் அகதிகளும் புகலிடக்கோரிக்கையாளர்களும் மருத்துவக் கட்டணங்களில் ஒரு பகுதியை செலுத்தவேண்டியிருக்கும்.

மே மாதம் 1ஆம் திகதி முதல், அகதிகளும் புகலிடக்கோரிக்கையாளர்களும், பல் மருத்துவம், கண் மருத்துவம் மற்றும் பிசியோதெரபி போன்ற சிகிச்சைகளுக்கான கட்டணங்களில் 30 சதவிகிதமும், ஒவ்வொரு மருந்துச்சீட்டுக்கும் 4 டொலர்களும் செலுத்தவேண்டியிருக்கும்.

இந்த விதியால், அகதிகளுக்கும் புகலிடக்கோரிக்கையாளர்களுக்கும் சிகிச்சை கிடைப்பதில் தாமதம் ஏற்படலாம் அல்லது மருத்துவ உதவியே கிடைக்காமல் போகவும் வாய்ப்புள்ளது என விமர்சனங்கள் எழுந்துள்ளன.




www.sangathamil.ca

# தமிழக செய்திகள்



## பரந்தூர் விமான நிலையத்தை சட்டப் போராட்டம் மூலம் தடுப்போம்

போராட்டக் குழுத் தலைவர் ஜி. சுப்பிரமணியன், செயலாளர் எஸ்.டி. கதிரேசன்

15.01.2026



பரந்தூர் புதிய விமான நிலையத் திட்டத்தை சட்டப் போராட்டம் மூலம் தடுப்போம் என்று எதிர்ப்பு போராட்டக் குழு திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக பரந்தூர் புதிய விமான நிலையத் திட்ட எதிர்ப்பு போராட்டக் குழுவின் தலைவர் ஜி. சுப்பிரமணியன், செயலாளர் எஸ்.டி. கதிரேசன் ஆகியோர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது: பரந்தூர் விமான நிலையத் திட்டத்தை எதிர்த்து சாதி, மதம் கடந்து நாம் அனைவரும் காட்டி வரும் ஒற்றுமையே நமது மிகப்பெரிய பலம். இந்த ஒற்றுமையால்தான் ஏகனாபுரம் கிராமத்துக்குள் தமிழக அரசால் இதுவரை ஓர் அடி கூட முன்னேற முடியவில்லை. இது நமது போராட்டத்துக்கு கிடைத்த மாபெரும் வெற்றி.

ஆளும் கட்சியைத் தவிர அனைத்து அரசியல் கட்சிகளும் நமது போராட்டத்துக்கு ஆதரவு அளிப்பது நமக்கு கூடுதல் வலிமை சேர்க்கிறது. மக்களின் சம்மதம் இன்றி இத்திட்டத்தை செயல்படுத்த முடியாது என்பதை அரசு நன்கு உணர்ந்துள்ளது. அதே வேளையில், பாதிக்கப்படும் மக்களை மன உளைச்சலுக்கு உள்ளாக்க அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதற்கு பொதுமக்கள் அஞ்சத் தேவையில்லை. நமது மண்ணைக் காக்க சென்னை உயர் நீதிமன்றத்தில் எதிர்ப்பு போராட்டக் குழு சார்பில் பொதுநல வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

இதில் தமிழகத்தின் மூத்த வழக்கறிஞர் நம் தரப்புக்காக வாதாடுகிறார். இந்த வழக்கு உயர் நீதிமன்றம் முதல் உச்ச நீதிமன்றம் வரை பல்வேறு நிலைகளைக் கடக்க வேண்டியுள்ளது. எனவே, அரசு நினைத்ததை இங்கே எளிதில் நடைமுறைப்படுத்த முடியாது. சட்டப் போராட்டத்தில் நாம் நிச்சயம் வெற்றி பெற்று நமது விவசாய நிலங்களையும், கிராமத்தையும் காப்போம். வழக்கின் அடுத்தடுத்த நகர்வுகள் குறித்து கிராமக் கூட்டங்கள் மூலம் பொதுமக்களுக்குத் தொடர்ந்து தெரிவிக்கப் படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## இராமேசுவரத் தீவையும் மண்டபம் பகுதியையும் இணைக்கும் பாம்பன் பழைய தொடருந்து பாலத்தை அகற்றும் பணிகள் தொடக்கம்!

22.01.2026

பாம்பன் பழைய ரயில் பாலத்தை அகற்றும் பணிகள் தொடங்கின. 4 மாதங்களில் முடிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தின் மண்டபம் நிலப்பரப்பையும், இராமேசுவரம் தீவையும் இணைப்பதில் பாம்பன் ரயில் பாலமும், இந்திரா காந்தி சாலைப் பாலமும் முக்கியப் பங்கு வகிக்கின்றன. 1914இல் பாம்பன் ரயில் பாலம் (செஷர்ஸ் பாலம்) திறக்கப்பட்டு, போக்குவரத்து தொடங்கியது. நாட்டில் கடலின் நடுவே அமைக்கப்பட்ட முதல் பாலம் இதுவாகும்.

இந்தப் பாலத்தில் கப்பல்கள் செல்வதற்காக நடுவில் தண்டவாளங்களுக்கு இடையே தூக்குப் பாலம் அமைக்கப்பட்டிருந்ததே இதன் சிறப்பாகும். இந்தப் பாலம் 1964ஆம் ஆண்டு புயலில் சேதமடைந்து மறுசீரமைப்பு செய்யப்பட்டு, பயன்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டது.

நூற்றாண்டுகளைக் கடந்த இந்தப் பாலத்தில் அடிக்கடி தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டதால், புதிய பாலத்துக்கு 2019 இல் அடிக்கல் நாட்டப்பட்டு, 2020 இல் பணிகள் தொடங்கப்பட்டன.

கடந்த ஆண்டு ஏப்.6ஆம் தேதி பிரதமர் மோடியால் புதிய பாம்பன் ரயில் பாலம் திறந்து வைக்கப்பட்டது.

கப்பல்கள், படகுகள் செல்வதற்காக புதிய ரயில் பாலத்தின் நடுவே உள்ள செங்குத்துத் தூக்குப் பாலம் ஒவ்வொரு முறை தூக்கப்படும்போதும், பழைய ரயில் தூக்குப்பாலமும் திறக்கப்பட வேண்டியதுள்ளது. இதனால், பழைய ரயில் பாலத்தை அகற்ற ரயில்வே நிர்வாகம் முன்வந்தது.

கடந்த ஆகஸ்ட் மாதம் ரயில் விகாஸ் நிகம் லிமிடெட் (ஆர்விஎன்எல்) என்ற ரயில் உட்கட்டமைப்பு திட்டங்களை செயல்படுத்தும் மத்திய அரசின் நிறுவனம், பழைய பாம்பன் பாலத்தை அகற்ற ஒப்பந்தப்புள்ளி கோரி அறிவிப்பு வெளியிட்டது.

அந்த அறிவிப்பில் 2.3 கி.மீ. நீளம் கொண்ட இப்பாலத்தின் நடுவில் உள்ள தூக்குப்பாலம் மற்றும் கர்டர் பாலம், தண்டவாளங்களை ரூ.2.53 கோடியில் அகற்ற ஒப்பந்தம் கோரப்பட்டிருந்தது. இந்நிலையில், ஒப்பந்தப்புள்ளி வழங்கப்பட்டு பழைய பாம்பன் ரயில் பாலத்தை அகற்றும் பணிகள் தொடங்கியுள்ளன. நான்கு மாதங்களுக்குள் பணிகளை முடிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.



**எதிரியால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் எமது மண்ணை முதலில் மீட்டெடுப்பது இன்றைய வரலாற்றின் தேவை. இந்த வரலாற்று நிர்ப்பந்தத்தை நாம் அசட்டை செய்ய முடியாது.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

www.sangathamil.ca

# “கீழடியை கண்டு ஆதிக்க சக்தியினருக்கு அச்சம்”

## மத்திய தொல்லியல் துறை கண்காணிப்பாளர் அமர்நாத் இராமகிருஷ்ணா

22.01.2026

கீழடியை கண்டு ஆதிக்க சக்தியினர் பயப்படுகின்றனர் என மதுரையில் நடந்த கல்லூரிக் கருத்தரங்கில் மத்திய தொல்லியல் துறை கண்காணிப்பாளர் அமர்நாத் இராமகிருஷ்ணா பேசினார்.



மதுரை டோக் பெருமாட்டி மகளிர் கல்லூரியில் சுயமரியாதை இயக்க நூற்றாண்டு விழாவையொட்டி ‘இந்தியாவை வரலாற்று சிதைவுகளிலிருந்து மீட்பது’ குறித்த மாநிலக் கருத்தரங்கம் நடந்தது. வரலாற்றுத்துறை தலைவர் மெர்சி பாக்கியம் வரவேற்றார். கல்லூரி முதல்வர் பியூலா ஜெயஸ்ரீ தலைமை வகித்தார்.

கருத்தரங்கில் மத்திய தொல் லியல் துறை கண்காணிப்பாளர் அமர்நாத் ராமகிருஷ்ணா பேசியதாவது,

சங்க காலத் தமிழர்களின் நகர நாகரிகம் தோன்றியதற்கு ஆதாரங்கள் கீழடியில் கிடைத்துள்ளன. தமிழிலுள்ள தொன்மையான இலக்கியங்களுக்கு ஆதாரங்கள் இல்லை என இதுவரை சொல்லி வந்தனர்.

ஆனால், கீழடியில் இலக்கியங்கள் குறிப்பிடும் சான்றுகளுக்கு தொல்லியல்ரீதியாக ஆதாரங்கள் கிடைத்துள்ளன. ஆதாரங்கள் கிடைத்தும் தமிழ் இலக்கியத்தின் உண்மைத் தன்மையை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றனர்.

இதுவரை கி.மு.3 இருந்து கி.பி.3ஆம் நூற்றாண்டு காலத்தையே சங்க காலம் எனக் குறிப்பிட்டனர். அதைப் பொய்யாக்கும் வகையில் அதற்கும் 500 ஆண்டுகளுக்கு முந்தையது கீழடி நாகரிகம்.

கீழடியில் கிடைத்த தொல்லியல் ஆதாரங்கள் மூலம் கி.மு.8 ஆம் நூற்றாண்டு காலத்திலேயே சங்க காலத் தமிழர்களின் நகர நாகரிகம் இருந்ததற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன.

கி.மு.5 இருந்து கி.மு.8ஆம் நூற்றாண்டு காலத்தில் கீழடி பெரிய நகரமாக வளர்ந்துள்ளது. அதற்குப் பின்பு கி.மு. 1ஆம் நூற்றாண்டில் அங்குள்ள நகர நாகரிகம் அழியத் தொடங்கியதாக காலக் கணிப்பு உள்ளது.

இத்தகைய தொல்லியல் ஆதாரங்களை ஏற்க மறுக்கின்றனர். அறிவியல்பூர்வமாக தொல்லியல் ஆதாரங்கள் உள்ளதால் கீழடி அகழாய்வு அறிக்கையை வெளியிடாமல் மூடி மறைக்கின்றனர். ஆதிக்க சக்தியினர் கீழடியைக் கண்டு பயப்படுகின்றனர். இவ்வாறு பேசினார்.

முன்னாள் அமைச்சர் பொன். முத்துராமலிங்கம், சென்னை ராணி மேரி கல்லூரி வரலாற்றுத் துறைப் பேராசிரியை தேன்மொழி, வழக்கறிஞர் மதிவதனி உள்ளிட்டோர் பேசினர்.

# குமரி முதல் காஷ்மிர் வரை விவசாயிகள் யாத்திரை

## ஐக்கிய விவசாயிகள் சங்கத்தின் மாநில ஒருங்கிணைப்பாளர் பி. ஆர். பாண்டியன்

25.01.2026

விளை பொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதார விலையை நிர்ணயிக்க வேண்டும் உள்ளிட்ட 13 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி பிப். 7 முதல் கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரை விவசாயிகள் யாத்திரை நடைபெற உள்ளதாக ஐக்கிய விவசாயிகள் சங்கத்தின் மாநில ஒருங்கிணைப்பாளர் பி.ஆர். பாண்டியன் கூறினார்.

சங்கத்தின் மண்டல நிர்வாகிகள் ஆலோனைக் கூட்டம் சேலத்தில் நேற்று நடந்தது.அனைத்து விவசாயிகள் சங்கங்களின் ஒருங்கிணைப்புக் குழு பொருளாளர் தங்கராஜ் தலைமை வகித்தார்.

மண்டலத் தலைவர் ஆத்தூர் பெருமாள் வரவேற்றார். தமிழக ஒருங்கிணைப்பாளர் பி.ஆர்.பாண்டியன், இணை ஒருங்கிணைப்பாளர்கள் ராமகவுண்டர், பாலசுப்ரமணியன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

பின்னர், பி.ஆர்.பாண்டியன் செய்தியாளர்களிடம் கூறியதாவது: விளைபொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதார விலையை நிர்ணயம் செய்தல் உள்ளிட்ட 13 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரை 30 விவசாயிகள் பங்கேற்கும் யாத்திரை பிப். 7இல் தொடங்கவுள்ளது.

இதில் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த விவசாய சங்கப் பிரதிநிதிகள் பங்கேற்கின்றனர். யாத்திரையின்போது பல்வேறு மாநிலங்களின் முதல்வர்களை சந்தித்து, கோரிக்கைகளை வலியுறுத்துவோம்.

தமிழகத்தில் விவசாயிகள் மீது பொய் வழக்கு பதிவது, கைது செய்வது போன்ற நடவடிக்கைகள் தீவிரமடைந்துள்ளன. விவசாயிகள் ஒப்புதல் இல்லாமல், சிப்காட் என்ற பெயரில் நிலங்கள் கையகப்படுத்தப்படுகின்றன.

கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு சாதகமாக சட்டத்தை உருவாக்கி, தொழில்புரட்சி என்ற பெயரில் நீர்நிலைகளையும் சேர்த்து விவசாய நிலங்கள் கையகப்படுத்தப்படுகின்றன.

கார்ப்பரேட் எண்ணம் கொண்டவர்கள் அமைச்சரவையில்



இடம் பெற்றுள்ளதால், முதல்வருக்கே தெரியாமல் விவசாயிகளுக்கு எதிரான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவ்வாறு பிஆர்.பாண்டியன் தெரிவித்தார்.

**நாம் எதனை கேட்கிறோம். எதற்காக நாம் போராடி வருகிறோம். நாம் எமது மண்ணில் வரலாற்று ரீதியாக எமக்குச் சொந்தமான நிலத்தில் நாம் பிறந்து வாழ்ந்த எமது தாயகப் பூமியில் நாம் நிம்மதியாக கௌரவமாக, எவரது தலையீடுமின்றிச் சுதந்திரமாக வாழ்வதற்கு விரும்புகின்றோம். நாமும் மனிதர்கள், மனிதர்களுக்கான அடிப்படை உரிமைகளைக் கொண்ட ஒரு மனித சமூகம், தனித்துவமான பண்பாட்டு வாழ்வையும் வரலாற்றையும் கொண்ட ஒரு தனித்துவமான இனத்தைச் சார்ந்த மனிதர்கள் நாம். எம்மை ஒரு மனித சமூகமாக, தனித்துவப் பண்புகளைக் கொண்ட மக்களாக ஏற்குமாறு கேட்கிறோம். எமது அரசியல் வாழ்வை நாமே தீர்மானித்து கொள்ளும் உரிமை எமக்குண்டு. இந்த உரிமையின் அடிப்படையில் நாமே எம்மை ஆளும் வகையில் ஒரு ஆட்சிமுறையை அமைத்து வாழவே நாம் விரும்புகிறோம்.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-


## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது.தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

www.sangathamil.ca

# உலக செய்திகள்

## அவுஸ்திரேலியாவில் 47 இலட்சம் சமூக வலைத்தளக் கணக்குகள் நீக்கம்

16.01.2026

ஆஸ்திரேலியாவில் சமூகவலைதள கணக்குகளை குழந்தைகள் பயன் படுத்த கடந்த மாதம் தடை விதிக்கப்பட்டது. இதை அடுத்து, 16 வயதுக்கு உட்பட்டோரின், 47 இலட்சம் சமூக வலைதள கணக்குகள் நீக்கப்பட்டுள்ளன.



ஆஸ்திரேலியாவில் சமூகவலைதளங்களை குழந்தைகள் பயன்படுத்த கடந்த டிசம்பர் 10இல் தடை விதித்து அந்நாட்டு அரசு உத்தரவிட்டது. இந்த சட்டத்தின் படி 16 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் "பேஸ்புக், இன்ஸ்டாகிராம், கிக், ரெட்டிட், ஸ்னாப்சாட், த்ரெட்ஸ், எக்ஸ், யுடியூப், டிவிட்ச்" போன்ற 10 சமூக வலைதளங்களில் கணக்கு வைத்திருக்க கூடாது.

அதையும் மீறி குழந்தைகளுக்கு கணக்குகள் இருந்தால் சம்மந்தபட்ட நிறுவனங்கள் 300 கோடி ரூபாய் அளவுக்கு அபராதம் செலுத்த நேரிடும் என எச்சரிக்கப்பட்டிருந்தது.

அதே நேரத்தில், "வாட்ஸாப்" மற்றும் "பேஸ்புக் மெசஞ்சர்" போன்றவற்றின் குறுஞ்செய்தி சேவைக்கு குழந்தைகளுக்கு விலக்கு அளிக்கப்பட்டிருந்தது.




குழந்தைகளின் வயதைச் சரிபார்க்க, சமூகவலைதளங்கள் அடையாள ஆவணங்களை கோரலாம், அல்லது கணக்கு வைத்திருப்போர் முகத்திற்கு வயது மதிப்பீட்டுத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அவர்களது வயதை அறியலாம்.

இது தவிர ஒரு கணக்கு எவ்வளவு காலமாக பயன்பாட்டில் உள்ளது என்பதை வைத்தும் வயதை கண்டறிய அனுமதிக்கப் பட்டது. இந்தச் சட்டம் பெற்றோர்கள் மற்றும் குழந்தை பாதுகாப்பு ஆர்வலர்கள் மத்தியில் பரவலான வரவேற்பைப் பெற்றது.

இந்நிலையில் ஆஸ்திரேலியாவில் குழந்தைகளின் கணக்குகள் என அடையாளம் காணப்பட்ட 47 இலட்சம் சமூக வலைதள கணக்குகளை சம்மந்தப்பட்ட நிறுவனங்கள் நீக்கியுள்ளதாக ஆஸ்திரேலிய தகவல் தொடர்பு அமைச்சர் அனிகா வெல்ஸ் நேற்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

## சிறீலங்காவின் புதிய சட்ட வரைவு ஒடுக்குமுறைகளுக்கு இடமளிக்கக்கூடிய தன்மையைக் கொண்டிருக்கிறது

### மனித உரிமைகள் கண்காணிப்பகம்

20.01.2026

அரசாங்கத்தினால் புதிதாக முன்மொழியப்பட்டிருக்கும் பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்ட வரைவில், தற்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாதத்தடைச்சட்டத்தில் இருப்பதையொத்த மிகமோசமாக கூறுகள் உள்ளடக்கியிருப்பதுடன், அது ஒடுக்குமுறைகள் இடம்பெறுவதற்கு வாய்ப்பளிக்கக்கூடிய தன்மையையும் கொண்டிருக்கிறது என மனித உரிமைகள் கண்காணிப்பகம் எச்சரித்துள்ளது.

தற்போது நடைமுறையில் உள்ள 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாதத்தடைச் சட்டத்துக்குப் பதிலாக 'பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டம்' எனும் புதிய சட்டத்தைக் கொண்டுவருவதற்கு அவசியமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதனை இலக்காகக்கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள சட்டவரைவு நீதியமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளப்பக்கத்தில் வெளியிடப்பட்டிருப்பதுடன், அதுபற்றிய கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதிக்கு முன்னர் தமக்கு அனுப்பிவைக்குமாறு நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார அறிவித்துள்ளார்.

இந்நிலையில் பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்ட வரைவு தொடர்பில் தமது கரிசனைகளை வெளிப்படுத்தி மனித உரிமைகள் கண்காணிப்பகத்தினால் வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

பயங்கரவாதத்துக்கு எதிராக அரசாங்கத்தினால் தற்போது முன்மொழியப்பட்டிருக்கும் புதிய வரைவானது, தற்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாதத்தடைச்சட்டத்தில் இருப்பதையொத்த மிகமோசமாக கூறுகளை உள்ளடக்கியிருப்பதுடன், ஒடுக்குமுறைகளுக்கு இடமளிக்கக்கூடிய அச்சுறுத்தலையும் கொண்டிருக்கிறது. இந்த சட்டவரைவு ஐக்கிய நாடுகள் சபையின் பயங்கரவாத எதிர்ப்பு நிபுணர்களால் வரையறுக்கப்பட்டுள்ள நியமங்களுக்கோ அல்லது சர்வதேச மனித உரிமைகள் சார் கடப்பாடுகளுக்கோ அல்லது ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகையைப் பெற்றுக்கொள்வதற்காக ஐரோப்பிய ஒன்றியத்துக்கு அளித்திருக்கும் வாக்குறுதிகளுக்கோ ஏற்புடையவாறு அமையவில்லை.




கடந்த 2017 ஆம் ஆண்டு ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகையைப் பெற்றுக்கொள்வதற்காக ஐரோப்பிய ஒன்றியத்தின் நிபந்தனைக்கு அமைவாக பயங்கரவாதத்தடைச்சட்டத்தை சர்வதேச மனித உரிமைகள் நியமங்களுக்கு அமைவாகப் பதிலீடு செய்வதற்கு இலங்கை இணங்கியது. ஆனாலும் அதன் பின்னரான காலப்பகுதியில் தற்போதுவரை ஆட்சியிலிருந்த அரசாங்கங்கள் அக்கடப்பாட்டை நிறைவேற்றவில்லை. இந்நிலையில் கடந்த 2024 ஆம் ஆண்டு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியினால் வெளியிடப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில் பயங்கரவாதத்தடைச்சட்டம் உள்ளிட்ட ஒடுக்குமுறைச் சட்டங்களை முற்றாக நீக்குவதாக வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்தது. இருப்பினும் தற்போது முன்மொழியப்பட்டிருக்கும் சட்ட வரைவானது இவ்வாக்குறுதிக்கு முரணானதாகவே அமைந்திருக்கின்றது.

மிகமோசமான பயங்கரவாதத்தடைச்சட்டத்தை நீக்குவது தொடர்பான வாக்குறுதியே இன்னமும் நிறைவேற்றப்படாமல் இருக்கையில், இந்தப் புதிய வரைவானது அதிகாரிகளால் முன்னைய மீறல்கள் நிகழ்த்தப்படுவதற்கு இடமளிக்கக்கூடிய சரத்துக்களைக் கொண்டிருக்கிறது. இவ்வாறானதொரு பின்னணியில் பயங்கரவாதத்தடைச்சட்டத்தின் பிரயோகத்தை அரசாங்கம் உடனடியாக இடைநிறுத்துவதுடன், சகல தரப்பினரதும் கருத்துக்களை உள்வாங்கி உரிமைகளுக்கு மதிப்பளிக்கக் கூடிய புதிய வரைபைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் படவேண்டும்.

**தமிழீழம் என்றோ ஒருநாள் உதயமாவது திண்ணம், எமது மக்களாகிய நீங்களும் விடிவு பெறுவது திண்ணம், சமதர்ம சமூகமாக எமது நாடு வளங்கொழிப்பது திண்ணம். இந்த நம்பிக்கையில் ஆன்ம உறுதி தளராது விடுதலைப் பாதையில் வீறுநடை போடுவோம்.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

www.sangathamil.ca

# ஈராக்கை விட்டு முழுமையாக வெறியேறியது அமெரிக்கப் படை!

20.01.2026

ஈராக் இராணுவ தளங்களிலிருந்து அமெரிக்க படைகள் முழுமையாக வெளியேறியுள்ளதாகவும் இந்த வெளியேற்றம் சுமார் 23 ஆண்டுகளுக்குப் பிறகு நடந்துள்ளதாகவும் சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

ஈராக்கின் அல்-அன்பர் மாகாணத்தில் உள்ள அயின் அல் அசாத் (Ain al-Assad) விமானப்படைத் தளத்தில் இருந்த அமெரிக்கப் படைகள் முழுவதும் வெளியேறியுள்ளதை ஈராக் பாதுகாப்பு அமைச்சு உறுதிப்படுத்தியுள்ளது.

இனி, அமெரிக்காவுடனான உறவானது நேரடி இராணுவ தலையீடாக இல்லாமல், இரு தரப்பு பாதுகாப்பு உறவாக மட்டுமே இருக்கும் என ஈராக் மேலும் அறிவித்துள்ளது.

கடந்த 2003இல் சதாம் ஹுசைன் ஆட்சியை வீழ்த்துவதற்காக ஈராக்கை நோக்கி அமெரிக்கா படையெடுத்தது. அப்போது அமெரிக்க படைகள் முகாமிட்டிருந்தது அயின் அல் அசாத் விமானப்படைத் தளத்திலாகும். அங்கு சுமார் 20 ஆண்டுகளுக்கும் மேலாக அமெரிக்க படையினர் இருந்துவந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், தற்போது ஈராக்கிலிருந்து வெளியேறியுள்ள அமெரிகக படைகள் உபகரணங்களையும் ஈராக் படைத்தளத்திலிருந்து அகற்றிவிட்டதாக பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



# சுவிட்ஸர்லாந்து செங்காளன் பாராளுமன்றத்தின் முதல்வராக துரைராஜா ஜெயக்குமார் பதவி ஏற்பு!

20.01.2026

சுவிட்ஸர்லாந்து செங்காளன் பாராளுமன்றத்தின் முதல்வராக சமூகநலன் செயற்பாட்டாளரும் துரைராஜா ஜெயக்குமார் (தமிழீழம், கோண்டாவிலைச் சேர்ந்தவர்) நேற்று (20) தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

ஜெயகுமார் துரைராஜா 38 ஆண்டுகளுக்கு முன்பு இலங்கையிலிருந்து சுவிட்ஸர்லாந்து சென்ற அகதி. இன்று, செங்காளன் நகரின் உயர்ந்த அரசியல் பதவியான நகரமன்றத் தலைவர் (Stadtparlament-Präsident) பதவிக்கு, பசுமை கட்சி சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளார்.

கோண்டாவிலைச் சேர்ந்த துரைராஜா ஆரம்பக் கல்வியை கோண்டாவில் இராமகிருஷ்ணமிஷனிலும், உயர் கல்வியை உரும்பிராய் இந்துக் கல்லூரியிலும் பயின்றுள்ளார்.

செங்காளன் நகர மக்களில் சுமார் 30% பேர் சுவிஸ் குடியுரிமை இல்லாதவர்கள். அவர்களுக்காக அவர் குரல் கொடுக்கிறார். இனப் பாகுபாடு, சமூக புறக்கணிப்பு ஆகியவற்றுக்கு எதிராக போராடுகிறார். அவர் இதை ஒரு சவாலாக பார்க்கிறார். “என் முன்னோடி ஜாக்லின் காசர்-பெக், கிரீன் கட்சியிலிருந்து வந்தவர். அவரின் பாதையில் நடக்க நான் தயாராக இருக்கிறேன்” என்கிறார்.

2011ஆம் ஆண்டு சுவிட்ஸர்லாந்து குடியுரிமை பெற்றார் ஜெயக்குமார் துரைராஜா.

ஒருகாலத்தில் ஆவணமில்லாத அகதியாக செங்காளன் சுவிஸ்க்குச் சென்ற துரைராஜா பத்து ஆண்டுகளுக்கும் மேலாக கிரீன் கட்சி சார்பில் நகரமன்றத்தில் அமர்ந்து வருகிறார்.

இப்போது 56 வயதாகும் இவர், தனது முழு வாழ்க்கையையும் ஒருபோதும் திரும்பிச் செல்ல முடியாத அகதிகளுக்காகவே அர்ப்பணித்துள்ளார்.

ஆவணங்களும் இல்லை, கல்வியும் இல்லை, கைப்பையும் இல்லை. இப்படித்தான் ஜெயகுமார் துரைராஜா 1988ஆம் ஆண்டு, 18 வயதில், சுவிட்சர்லாந்தில் காலடி வைத்துள்ளார்.

பாராளுமன்ற அவையில் ஏனைய கட்சி உறுப்பினர்கள் மற்றும் அவருடம் இணைந்து பயணிக்கும் நண்பர்கள் கலந்து



இந்நிகழ்வினை சிறப்பித்திருந்தனர்.

பாராளுமன்ற அவையில் திருக்குறளை மூன்று தடவைகள் முன்மொழிந்து டச் மொழியிலும் விளக்கினார்.

தமிழர் பண்பாட்டுடன் கூடிய இசையும் அவையரங்கில் வழங்கப்பட்டது. தமிழர் சிற்றுண்டி உணவுகள் விருந்தினர்களுக்கு வழங்கப்பட்டது.

# பீஜிங், டெல்லி, நியூயோர்க் உள்ளிட்ட பல நகரங்கள் ‘அதிக ஆபத்து’ பட்டியலில்!

22.01.2026

பீஜிங், டெல்லி, நியூயோர்க், லொஸ் ஏஞ்சல்ஸ் உள்ளிட்ட நகரங்கள் “அதிக ஆபத்து” பட்டியலில் காணப்படுவதாகவும், உலகின் 100 மிகப் பெரிய நகரங்களில் பல கடுமையான நீர் நெருக்கடி (Water Stress) கொண்ட பகுதிகளில் அமைந்துள்ளதாகவும் புதிய ஆய்வு ஒன்று எச்சரிக்கை விடுத்துள்ளது. இதில் 39 நகரங்கள் மிகவும் அதிக நீர் நெருக்கடி நிலவும் பகுதிகளில் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீர் நெருக்கடி என்பது, குடிநீர் விநியோகம் மற்றும் தொழில் துறைகளுக்காக பயன்படுத்தப்படும் நீரின் அளவு மற்றும் அங்கு கிடைக்கக்கூடிய நீர் வளங்களை மீறிச் செல்லும் நிலையை குறிக்கிறது. காலநிலை மாற்றம், மோசமான நீர் மேலாண்மை மற்றும் நகரமயமாக்கல் ஆகியவை இதற்கான பிரதான காரணங்களாக ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

Watershed Investigations மற்றும் The Guardian இணைந்து மேற்கொண்ட வரைபட ஆய்வின் படி, பீஜிங், டெல்லி, நியூயோர்க், லொஸ் ஏஞ்சல்ஸ், ரியோ டி ஜெனீரோ போன்ற நகரங்கள் மிகக் கடுமையான நீர் நெருக்கடியை எதிர்கொண்டு வருகின்றன. அதேபோல் லண்டன், பாங்கொக், ஜகார்த்தா ஆகிய நகரங்கள் “அதிக நீர் நெருக்கடி” கொண்ட நகரங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

University College London (UCL) விஞ்ஞானிகள் நாசாவின் செயற்கைக்கோள் தரவுகளை ஆய்வு செய்ததில், கடந்த 20 ஆண்டுகளில் சில நகரங்கள் வறண்டு வருவதாகவும், சில நகரங்களில் அதிக ஈரப்பதம் உருவாகி வருவதாகவும் தெரிய வந்துள்ளது.


சென்னை, தெஹ்ரான், செங்சோ போன்ற நகரங்களில் கடும் வறட்சிப் போக்கு காணப்படுகின்றது. டோக்கியோ, லாகோஸ், கம்பாலா ஆகிய நகரங்களில் ஈரப்பதம் அதிகரித்து வருகிறது.

நீண்டகால வறட்சி நிலவும் பகுதிகளில் அமைந்துள்ள பெரு நகரங்களில் சுமார் 1.1 பில்லியன் மக்கள் வசித்து வருகின்றனர். இதற்கு மாறாக, ஈரப்பதம் அதிகரிக்கும் பகுதிகளில் வாழும் மக்கள் தொகை சுமார் 96 மில்லியன் மட்டுமே உள்ளது.

ஈரானின் தலைநகர் தெஹ்ரான், தொடர்ந்து ஆறாவது ஆண்டாக வறட்சியை எதிர்கொண்டு வருவதுடன், குடிமக்களுக்கு நீர் வழங்க முடியாத “டே ஸீரோ” நிலைக்கு நெருங்கி வருவதாக எச்சரிக்கப்படுகிறது. வறட்சி தொடர்ந்தால் நகரம் முழுமையாக வெறுமையாகலாம் என ஈரான் அரசு கடந்த ஆண்டு எச்சரித்திருந்தது. இதற்கு முன்னர் தென்னாபிரிக்காவின் கேப் டவுன் மற்றும் இந்தியாவின் சென்னை நகரங்களும் இதே அபாய நிலையை எதிர்கொண்டுள்ளன.

ஐக்கிய நாடுகள் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட அறிவிப்பில், உலகம் தற்போது ‘நீர் திவாலாக்க நிலை’ (Water Bankruptcy) யில் நுழைந்துவிட்டதாக ஐக்கிய நாடுகள் தெரிவித்துள்ளது.

ஐ.நா. நீர்சூழல் நிறுவனத்தின் பணிப்பாளரான பேராசிரியர் கவெ மடானி, “காலநிலை மாற்றம் மட்டுமல்ல மோசமான நீர் முகாமைத்துவமே இந்த நெருக்கடியின் பிரதான காரணம்” என்று தெரிவித்துள்ளார்.



Overall water-risk scores reflect the aggregate value of water quantity, water quality and regulatory and reputational risks to water supplies. Higher values indicate greater water-related risks. United Nations University Institute for Water, Environment and Health, based on Aqueduct 4.0, CC BY

உலக வங்கி குழுவின் தரவுகளின்படி, கடந்த 20 ஆண்டுகளில் உலகின் நீர் வளம் ஆண்டுக்கு 324 பில்லியன் கன மீற்றர் வீதம் குறைந்து வருகிறது. இது இந்தோனேசியாவின் மக்கள் தொகைக்கு தேவையான நீருக்கு சமமான அளவு எனக் குறிப்பிடப்படுகிறது.

2055 ஆம் ஆண்டுக்குள், இங்கிலாந்தில் பொதுக் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய தினமும் கூடுதலாக 5 பில்லியன் லீற்றர் நீர் தேவைப்படும் என அந்நாட்டு சுற்றுச்சூழல் முகாமை எச்சரித்துள்ளது.

பேராசிரியர் முகம்மது ஷம்சுத்துஹா, “நிலத்தடி நீர் ஒரு மறைந்துள்ள, காலநிலை மாற்றத்துக்கு எதிர்ப்புத் திறன் கொண்ட வளம். ஆனால் சரியான கண்காணிப்பு இல்லாமல் அதை பயன் படுத்துவது ஆபத்தானது” என்று எச்சரிக்கை விடுத்துள்ளார்.


## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

www.sangathamil.ca

# 15 வயதுக்குட்பட்டோர் சமூக வலைத்தளங்கள் பயன்படுத்தத் தடை: பிரான்ஸ் பாராளுமன்றம் ஒப்புதல்

28.01.2026

பிரான்சில் சிறுவரின் மனநலம் மற்றும் உடல்நலனை கருத்தில்கொண்டு 15 வயதுக்குட்பட்டோர் சமூகவலைதளங்களை பயன்படுத்த தடை விதிக்கும் மசோதா அந்நாட்டு பாராளுமன்றத்தில் அறிமுகம் செய்யப்பட்டது. இதற்கு 131 பேர் ஆதரவாகவும், 21 பேர் எதிராகவும் வாக்களித்த நிலையில், மசோதா வெற்றிகரமாக நிறைவேற்றபட்டு கீழவைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

அதிபர் மேக்ரான் வாக்கெடுப்பை வரவேற்றார். சிறுவர் மற்றும் இளம் பருவத்தினரை பாதுகாப்பதற்கான ஒரு முக்கியமான நடவடிக்கை என்றும், இளைஞர் ஆன்லைன் தளங்களால் பாதிக்கப்படவோ அல்லது கையாளப்படவோ கூடாது என்றும் அவர் கூறினார். இந்நிலையில், வரும் செப்டம்பர் மாதத்திற்குள் இந்த சட்டத்தை அமலுக்கு கொண்டு வர வேண்டும் என்று அதிபர் மேக்ரான் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தளபதிவில், பிரான்ஸ் நாட்டு சிறுவரின் மூளைகள் விற்பனைக்கு அல்ல என்றும், கணினி நிரலின் அடிப்படையில் அவர்களுக்கு கட்டளை பிறப்பிக்கப்படுவதை அனுமதிக்க முடியாது எனவும் மேக்ரான் குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டால், ஆஸ்திரேலியாவிற்கு பிறகு சிறார் சமூக ஊடகப் பயன்பாட்டைக் கட்டுப்படுத்தும் 2-வது நாடாக பிரான்ஸ் மாறும். உயர்நிலைப் பள்ளிகளில் மொபைல் போன்களுக்குத் தடை விதிக்கும் மசோதாவும் இந்த




மசோதாவில் அடங்கும்.

# இலங்கையில் போர்க்குற்றவாளிகள் தண்டிக்கப்படும் வரை பொறுப்புக்கூறலுக்கான அழுத்தத்தை சர்வதேச சமூம் மேலும் தீவிரப்படுத்தவேண்டும்!

## மனித உரிமைகள் கண்காணிப்பகம்

15.01.2026

சர்வதேச சட்டத்தின் பிரகாரம் போர்க்குற்றங்கள் மற்றும் மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றங்களில் ஈடுபட்டோரைத் தண்டிக்கவேண்டிய கடப்பாடு சிறீலங்கா அரசாங்கத்துக்கு இருக்கிறது. அக்கடப்பாடு நிறைவற்றப்படும் வரை பொறுப்புக் கூறலுக்கான அழுத்தத்தை மேலும் வலுவாகப் பிரயோகிப்பதற்குரிய நடவடிக்கைகளை சர்வதேச நாடுகளின் அரசாங்கங்கள் முன்னெடுக்கவேண்டும் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.




ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின்கீழ் இயங்கிவரும் இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் செயற்திட்டத்தினால் தயாரிக்கப்பட்டுவந்த இலங்கையில் மோதல்களின் போது இடம்பெற்ற பாலியல் வன்முறைகள் தொடர்பான பொறுப்புக்கூறல் பற்றிய 'நாங்கள் அனைத்தையும் இழந்துவிட்டோம் - நீதி கிட்டும் என்ற நம்பிக்கையைக்கூட இழந்துவிட்டோம்' எனும் தலைப்பிலான 30 பக்க விரிவான அறிக்கை கடந்த செவ்வாய்க்கிழமை (13) வெளியிடப்பட்டது.

இலங்கையில் ஆயுதமோதலின்போதும், அதன் பின்னரும் நிகழ்த்தப்பட்ட பாலியல் வன்முறைகள் வெறுமனே தற்செயலாக அங்கொன்றும், இங்கொன்றுமாக இடம்பெற்ற சம்பவங்கள் அல்ல எனவும், மாறாக அவை வேண்டுமென்றே பரந்துபட்ட ரீதியில் நிகழ்த்தப்பட்ட, முறையாகக் கட்டமைக்கப்பட்ட வன்முறைகளின் ஓரங்கமாகும் எனவும் அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதுமாத்திரமன்றி இம்மீறல்கள் தகவல்களைத் திரட்டுவதற்கும், மேலாதிக்கத்தை நிலைநிறுத்துவதற்கும, தனிநபர்கள் மற்றும் சமூகங்களை ஒடுக்குவதற்கும், பரவலான அச்ச மற்றும் அவமான உணர்வை வேரூன்றச் செய்வதற்குமான ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தப்பட்டதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி இலங்கையில் யுத்தகாலத்தில் இடம்பெற்ற பாலியல் வன்முறைகள் தொடர்பான காத்திரமான இவ்வறிக்கை குறித்து மனித உரிமைகள் கண்காணிப்பகத்தினால் வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

இலங்கையில் யுத்தகாலத்தில் இடம்பெற்ற பாலியல் வன்முறைகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் புதிய அறிக்கையானது, இலங்கையில் நிகழ்ந்த சர்வதேச சட்டங்களுக்கு எதிரான குற்றங்களுக்கான பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்கான போராட்டத்தில் முன்னேற்றகரமானதொரு நகர்வாகும்.

கடந்த 13 ஆம் திகதி வெளியிடப்பட்ட இவ்வறிக்கையில் யுத்தகால பாலியல் வன்முறைகள் வேண்டுமென்றே பரந்துபட்ட ரீதியில் நிகழ்த்தப்பட்ட, முறையாகக் கட்டமைக்கப்பட்ட வன்முறைகளின் ஓரங்கமாகும் எனச் சுட்டிக்காட்டப்பட்டிருப்பதுடன் அவற்றைப் போர்க்குற்றங்களாகவோ அல்லது மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றங்களாகவோ கருதமுடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


இவ்வறிக்கையின் ஊடாகக் கண்டறியப்பட்டிருப்பதன் பிரகாரம் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்டுள்ள குற்றங்கள், அரசாங்கம் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி மற்றும் இழப்பீட்டைப் பெற்றுக்கொடுப்பதற்கும், குற்றவாளிகளைப் பொறுப்புக்கூறச்செய்வதற்கும் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டியதன் அவசியத்தைக் காண்பிக்கின்றன.

அதேவேளை இலக்கிடப்பட்ட தடைகள், குற்றவியல் விசாரணைகள், வழக்குத்தாக்கல் உள்ளிட்ட நடவடிக்கைகள் மூலம் பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதற்கான முயற்சிகளுக்கு சர்வதேச நாடுகளின் அரசாங்கங்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

இலங்கையில் இறுதிக்கட்ட யுத்தத்தின்போது படையினரால் தமிழ்ப்பெண்கள் வன்புணரப்பட்டமை குறித்து நீண்டகாலமாக அறிந்திருந்தாலும், இத்தகைய கட்டமைக்கப்பட்ட பாலியல் வன்முறைகள் அரசாங்கங்களினால் நீண்டகாலமாகப் புறந்தள்ளப்பட்டும், அவற்றுக்குப் பொறுப்பானவர்களைத் தண்டிக்க இயலாமல் அக்குற்றங்கள் நியாயப்படுத்தப்பட்டும் வந்திருப்பதாக ஐ.நாவின் அறிக்கை கூறுகிறது.

இவ்வாறானதொரு பின்னணியில் இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்களுக்கான பொறுப்புக்கூறலை ஊக்குவிப்பதற்குரிய முயற்சிகளை சர்வதேசப் பங்காளிகள் ஆரம்பிக்க வேண்டும்.

இலங்கையில் சர்வதேச சட்டங்களுக்கு எதிராக நிகழ்ந்த குற்றங்கள் தொடர்பான ஆதாரங்களைத் திரட்டுவதற்காக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையினால் 2021 ஆம் ஆண்டில் இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் செயற்திட்டம் நிறுவப்பட்டது. இருப்பினும் இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கும் இடையில் 26 வருடகாலமாக இடம்பெற்ற யுத்தத்தின்போது நிகழ்த்தப்பட்ட சர்வதேசக் குற்றங்கள் தொடர்பில் நம்பகமான விசாரணைகளை முன்னெடுப்பதற்கும், குற்றவாளிகளைத் தண்டிப்பதற்கும் கடந்தகால அரசாங்கங்கள் தவறியிருக்கின்றன.




'நீதியை நிலைநாட்டுவோம்' என்ற வாக்குறுதியுடன் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான அரசாங்கம் கடந்த 2024 ஆம் ஆண்டு ஆட்சிபீடம் ஏறியிருந்தாலும், தற்போது வரை எவ்வித முன்னேற்றமும் அடையப்படவில்லை. இருப்பினும் இவ்வாறான மீறல்களால் பாதிக்கப்பட்டவர்கள் பல்வேறு மருத்துவப் பிரச்சினைகளுக்கும், சமூக ரீதியான தாக்கங்களுக்கும் முகங்கொடுத்துவருகின்றனர்.


இவ்வாறானதொரு பின்னணியில் சிறீலங்கா அரசாங்கமும், அதன் சர்வதேசப் பங்காளிகளும் இணைந்து பாதிக்கப்பட்டோருக்கு அவசியமான மருத்துவ உதவிகள், இடைக்கால நிவாரணம் உள்ளிட்ட உதவிகளை வழங்குவதற்கு ஏற்றவாறான உடனடி செயற்திட்டமொன்றை ஆரம்பிக்கவேண்டும்.

சர்வதேச சட்டத்தின் பிரகாரம் போர்க்குற்றங்கள் மற்றும் மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றங்களில் ஈடுபட்டோரைத் தண்டிக்கவேண்டிய கடப்பாடு சிறீலங்கா அரசாங்கத்துக்கு இருககிறது. அக்கடப்பாடு நிறைவற்றப்படும் வரை பொறுப்புக் கூறலுக்கான அழுத்தத்தை மேலும் வலுவாகப் பிரயோகிப்பதற்குரிய நடவடிக்கைகளை சர்வதேச நாடுகளின் அரசாங்கங்கள் முன்னெடுக்கவேண்டும் என அவ்வறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

**மனிதர்களின் இருப்பைவிட மனிதர்களின் செயற்பாடே போராட்ட வரலாற்றின் சக்கரத்தைச் சுழற்றுகின்றது.**

**-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-**




சங்கத்தமிழ்

ஒவ்வொரு தனி நபரினதும் வளர்ச்சியில் தான்
ஒரு நாட்டின் வளர்சி தங்கி நிற்கின்றது...!

உங்கள் அறிவித்தல்கள் - விளம்பரங்கள்
சங்கத்தமிழ் மின் இதழில் வெளியிட வேண்டுமா?

விளம்பரம் இன்றி வியாபரம் இல்லை
உங்கள்
விளம்பரங்கள்
அறிவித்தல்கள்
துயர்பகிர்வுகள்
விற்பனை
வாடகை
மற்றும்
வரி விளம்பரங்களுக்கும்

437.345.4203

# தர்மமும் உண்மையும் எமது பக்கம் சார்ந்திருக்கின்றது

**–தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் –**



எமது மது தேசிய சுதந்திரப் போராட்டம் இன்று முழு உலகத்தின் கவனத்தையும் ஈர்த்துள்ளது. ஒரு உள்நாட்டு நெருக்கடியாகத் தோன்றிய எமது பிரச்சினை இன்று உலகத்தை ஈர்க்கும் ஒரு சர்வதேச நெருக்கடியாக விஸ்வரூபம் கொண்டுள்ளது. சிங்கள அரசானது எம் முடன் தனித்து நின்று போராடவில்லை. ஏகாதிபத்திய நாசகார சக்திகள் அனைத்தையும் தனக்குப் பக்கபலமாக அணிதி ரட்டி எமது மக்களுக்கு எதிராக ஒரு இன அழிப்பு யுத்தத்தை நடத்தி வருகிறது.

எமது கோரிக்கை என்ன? எமது அரசியல் இலட்சியம் என்ன? என்பதில் நாம் மௌனமாக இருந்துவிடவில்லை. எமது தமிழீழத் தனியரசுப் போராட்டத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை விளக்கிய திட்டம் ஒன்றை நாம் முன்வைத்தோம். நாம் ஒரு தேசிய இனம் என்ற ரீதியிலும், வரலாற்று ரீதியாக அமைந்த எமது பாரம்பரியத் தாயக பூமி எமது சொத்துடமை என்பதாலும். எமது அரசியல் தலைவிதியை நாமே நிர்ணயிக்கும் சுயநிர்ணய உரிமை எமக்குண்டு. இந்த சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலேயே எமது தனியரசுப் போராட்டம் அமைந்திருப்பதால் எமது போராட்டம் நியாயமானது என்பதை விளக்கியிருந்தோம். தேசிய சுயநிர்ணய உரிமைக்கான எமது போராட்டம் நீண்ட வரலாற்றையுடையது. பல வடிவப் போராட்டங்களால் பரிணாமம் பெற்றது. காந்தியப் பாதையில் அமைதிவழிப் பாதையில். மொழிஉரிமை கோரி, சமஉரிமை கோரி. சமஸ்டி கோரி நடைபெற்ற அகிம்சை வடிவப் போராட்டங்கள் அனைத்துமே எதிரியின் இராணுவ ஒடுக்குமுறையால் அடக்கியொடுக்கப்பட்டன. இறுதியில் சுய நிர்ணய உரிமையின் அடிப்படையிலான தனியரசுக் கோரிக்கை பிறந்து, அது புரட்சிகர ஆயுதப் போராட்ட வடிவம் பெற்றது. இப்படியாக தமிழரின் அரசியல் போராட்ட வரலாற்றின் உச்சக்கட்டமாகவே தமிழீழக் கோரிக்கையும் அதனை அடையும் மார்க்கமாக ஆயுதப்போராட்டமும் பரிணமித்தது என்பதை விளக்கியிருந்தோம். தமிழீழ மக்களின் தேசியத்திற்கும். தாயகத்திற்கும். தேசிய சுயநிர்ணய உரிமைக்கும் உத்தரவாதமளிக்கப்படாத எந்த ஒரு தீர்வையும் நாம் அங்கீகரிக்கப் போவதில்லை என்பதே நமது உறுதியான நிலைப்பாடாக இருந்தது. ஆனால், சிங்கள் அரசு எமது நிலைப்பாட்டை ஏற்றுக் கொள்ளவில்லை.

சிங்கள இனவாத ஆட்சியாளர் ஒரு இராணுவத் தீர்வையே விரும்புகிறார்கள் என்பது அவர்களது நடவடிக்கைகளிலிருந்து தெட்டத் தெளிவாகியுள்ளது. எமது தேசிய சுதந்திரப் போராட்டத்தை ஒரு பயங்கரவாதப் பூதமாகத் திரித்துக்காட்டி, சுதந்திரப் போராளிகளை வன்முறைப்பித்தர்களாகச் சித்த ரித்துக் காட்டி, இராணுவரீதியாக எம்மை ஒழித்துக்கட்ட வேண்டும் என்பதே அவர் களது நோக்கம். இந்த இலக்கில் அவர்கள் முழுச்சிங்கள தேசத்தையுமே இராணுவமயமாக்கி வருகிறார்கள். பெரியதொரு இனயுத்தத்திற்கு ஆயத்தங்கள் செய்து வருகிறார்கள்.

தர்மமும், உண்மையும் எமது பக்கம் சார்ந்திருக்கின்றது. அதுவே எமது பலம். அதர்மமும் பொய்மையும் எதிரியின் பக்கம் சார்ந்திருக்கின்றது. அதுவே அவனின் பலவீனம். ஈற்றில் வெற்றி கொள்வது நாம். ஏனெனில் என்றும் அழியாத தர்மம் எமக்குப் பக்கபலமாக இருக்கின்றது.

[திம்புப் பேச்சுவார்த்தையின்போது 1985ஆண்டு செப்டெம்பர் மாதம் வெளியிட்ட அறிக்கையி லிருந்து...]



Lucksme
Gold House
Traditional of Trust & Quality
மின்னும்
பொன் நகை
மிந்தும் புன்னகை
காலத்தை வெல்லும்
கலை நுட்பத்துடன்
மின்னும் பொன் நகையால்
மேலும் ஒளிரும்
உங்கள் புன்னகை
திருமணத்திற்கு தேவையான தாலிக்கொடிகள் குறித்த நேரத்தில் செய்து தரப்படும்
உங்கள் இராசிக்கேற்றபடி அதிஸ்டக்கற்களில் தங்கநகைகள் செய்து தரப்படும்
பழைய தங்க நகைகள் அதி கூடிய விலைக்கு வாங்கப்படும்
416 - 587 - 8000
G9 - 2900 Markham Road, Scarborough ON M1X 1E6




HIGH EFFICIENCY HEATING
& COOLING AIR SOLUTIONS
24h EMERGENCY SERVICES
ALL MAKES & MODEL
★ Furnance ★ Air Conditioner
★ Tankless Water Heater ★ Heat Pump
★ Duct Less ★ Airmax Velocity ★ Air Handlers
★ Boilers ★ Fire Places ★ HRV ★ Attic Insulation
★ Gas Line for BBQ, Stove & Dryer
NORITZ 25
Install Included
LENNOX
WHY UPGRADE TO TANKLESS?
WHY UPGRADE TO TANKLESS
Endless Supply of Water, SAVE UP to Save Up To 40%
25 YEARS WARRANTY
FREE ESTIMATE
Sale & Service
Repair & Installation
S.Kumar @ 416-993-8001
Professional & License Technician
Airehvac70@gmail.com




K
★ திருமணம்
★ பூப்புனித நீராட்டு விழா
★ பிறந்தநாள்
★ பரதநாட்டிய அரங்கேற்றம்
மற்றும் எல்லாவித
வைபவங்களுக்கான தலை, முக
அலங்காரங்கள் உங்கள்
விருப்பத்திற்கேற்ப
சிறந்த முறையில் ...
Kurinchi
Beauty Creations
Bridal ★
Non- Bridal ★
Saree Pleating & ★
Draping
Hair Flowers & ★
Bouquet
and more.
தொடர்புகளுக்கு:
647.918.9742
Kurinchi_Beauty_Creation
Beauty by Salu

# காலமறியா காலமதாய்...?

சீலமுடன் நாம் வாழ்ந்த திருவிடத்தை
பேய்களுக்கு வாழக் கொடுத்துவிட்டு
வழிநடந்தோம்
பொன்விளையும் பூமியதை
வந்த பிசாசுகளின் கையளித்து
சாமி எனக்கதறி சந்தியிலே
நின்றழுதோம்
பல்லாயிரம் வருடம் பரம்பரையாய்
நாமிருந்த
அள்ளக் குறையாத அழகிடத்தை
கோயில்மணி மெல்ல வந்து கண்கள்
மலரவைத்த
வாழ்விடத்தை பாதைகளை
நாங்கள் படித்துயர்ந்த பள்ளிகளை
காதலுடன் எங்கள் கையழைந்த
வயல்வெளியை
தாகத்தை நீரள்ளித் தணித்த
கிணறுகளை
வாகனத்தை விட்டு வளவுகளை
அந்தரித்து ஓடிவந்து உருக
உயிர்காத்த கோயில்களை
கூடிக்குளித்த அம்மன் கோயில்
திருக்குளத்தை
ஆடிவந்து மேனி அணைக்கும்
இளங்காற்றை
வாயெடுத்துப் பாடும் வசந்தக்
குயில்பாட்டை
காய்சிலிர்த்து நின்ற கமுகுகளை
முற்றத்தில் பூச் சொரியும்
மல்லிப்பூமரத்தை
பால் சொரியும் மேய்ச்சல் பசுவை
மெய்வருத்திக் கட்டிய எம் வீட்டை
வளவுக்குள் விழும் நிலவுப் பாலமுதை
பூட்டி எடுக்காத பொக்கிஷத்தை
கைதவற விட்டு விட்டு நாங்கள்
வீதியிலே பெருக்கெடுத்தோம்
பூட்டி எடுக்காத பொத்திஷம்...
கொட்டும் மழையினிலே குளித்தபடி
இடம் பெயர்த்தோம்
ஊர்பிரிந்து எங்கள் உறவுகளை நாம்
பிரிந்து
வேர் பிரிந்து நாங்கள் வீதியிலே
எறியுண்டோம்
போயிருக்க எந்தப் போக்கிடமும் இல்லாது
கண்கலங்க ஊர்பிரிந்தோம்
பால்நிலவற்ற பாளிருட்டில் நாமிருந்த
தாய்நிலத்தைப் பிரிந்து சந்ததிக்கு
வழிசமைத்தோம்
வீட்டைத்துறந்து வீதிகளை நாம் துறந்து
கூட்டைத் துறந்த குருவியென நாம்
பறந்தோம்
பல்லாண்டு காலம் படர்ந்திருந்த
வாழ்வுதறி
செல்வோராய் நாம் தெருவில்
நடந்தோம் காண்
ஐயோ!.. நாம் பட்ட அவலம்
இருக்கிறதே...!
இவ்வையம் எங்கே இதையறியும்
விடுதலைக்குப் போட்ட விதையென்று
புறப்பட்டோம்
தோட்டம் துரவுகளைத்
தொலைத்து விட்டு
தேடிவைத்த தேட்டம் முழுவதையும்
தொலைத்துவிட்டு வெறுங்கையாய்
கண்மணிகள் கலங்கிக் கன்னத்தில்
நீர்விழுத்தச்
செம்மணியில் நின்றோம் சேருமிடம்
தெரியாமல்
நடக்கத் தொடங்கி நடந்தோம்
நடந்தோமே...! தொடக்கமிது
மிச்சம் சோகத்தின் பெரும் சோகம்
இப்போ இலை சொரியத் தொடங்கிறது.
இலுப்பைமரம்
புதிய தளிர்க் கலையுடுத்துநாளை
கன்னிஎழிற் கோலமதாய்
அழகொளிரும் பூக்கும் அதன்பிறகு
காய்க்கும்
பின்பழம் சொரியும்
இப்போ என் படலையிலே உள்ள மரம்
ஆடை அவிழ்த்து உதறி அழகாய்ப்
புதிது உடுக்கும்
கோடைவறுத்தெடுதக்கக் குளிர்விக்கும்
என் முற்றத்தெழுந்த மரம் முறுவலிக்கும்
நான் அந்த அற்புதத்தைக் காண அழியும்
விதியும் என்செய்யும்?
மூக்குத்திப் பூக்கள் மின்னும்
கிளையிருந்து
தூக்கம் கலத்து என்னைத்
தொட்டெழுப்பும் குயிலினத்தின்
மாயக் குரலில் என்ன மந்திரம்தான்
உள்ளதுவோ
தாயாய் எனைக்கழுவி ...தம்பீ...
என மதுரச் சொல்லால் என் காதுச்
சோணையிலே
உரசிச்செல்லும் என்வீட்டுத்
தென்றலுக்காய் ஏங்குகிறேன்
இளனுருவிக்கிடக்கும் என்னை இப்போ
எவர் வந்து தடவியென்ன
என்மேனி ஆறாது
வேண்டும் என் வீட்டு விருட்சம்
அதனடியில் ஆண்டிருந்த அனைத்தும்
அடியேன் பெறவேண்டும்
வண்ணச் சிறகை விரித்து,
வலம் வந்து என் வீட்டு
முற்றத்தில் இறங்கும்
சிறுகுருவிக் குஞ்சே!
என்மடியில் குந்து
உன் சிறகுப் பஞ்சை விரித்து இந்தப்
பாவலனின்
தோள்களிலே வந்தமர்க
எனக்கோர் வரமளித்துச் சிரித்திடுக
எந்தனுக்கு உந்தன் இறகளிப்பாய்
நான் சென்று–ஊர்பார்த்து வந்து
உன்னிடத்தே கையளிப்பேன்
நீர்மேகம் வானில் நின்று பொழிகின்ற
மழைக்காலம் இது
இப்போ என் கவிதை துடித்திருக்கும்
ஆழாத்துயரில் என் அயல் கிடந்து
அந்தரிக்கும்.
புத்தாரை நான் பிறந்த பொன்னூரை
பார்க்காமல் எத்தனை நாள் தனியே
இரவில் அழுதிருப்பேன்
காளியம்மன் கோயில் காண்டாமணிச் சத்தம்
கேளாமல்
என் வாழ்வு கிழிந்தல்லோ கிடக்கிறது
இச்சையுடன் முன்னர் இளமையிலே நான்
திரிந்த
பச்சை வயல்களெல்லாம் பாராமல் – ஐயா
என் மிச்ச நாளெல்லாம் முடிந்திடுமா?
நல்லூரைச் சொல்லத் தொடங்கியதும்
தோள்களெல்லாம்
புல்லரித்துக் கொள்கிறதே
இனி அந்தக் கோயிலதன் வீதியிலே
வெள்ளை மணற்பரப்பில்
வீற்றிருப்பதெக்காலம்?
நாலு மணிக்கடிக்கும் நல்லூரின்
மணிச்சத்தம்
ஆளம் திருநகரை அடியேன்
தொழுவதெப்போ?
வட்டமிட்டு சிட்டுக்குருவி உன்சிறகை –
எனக்களித்து
வட்டமிட எனக்கோர் வரமளிப்பாய்
நான் பறந்து சென்று அந்தச் செம்மணியில்
சிறகை மடித்து இறங்கி
என் தங்கை கிருஷாந்தி எங்கே
புதைந்தாளோ அங்கே ஒரு பிடி மண்
அள்ளிடனும் என் பிரிய சிட்டுக்குருவியே
உனக்குத் தெரியுமா ஒரு செய்தி! கிட்டவா
தலை எனக்குக் கிறுகிறுக்கத் தொடங்கிறது
குஞ்சே என் விழிகள் குளமாகிப் போகிறது
நெஞ்சின் அடிவேரில் நெருப்புப் பிறக்கிறது
ஓராயிரம் மாவீரர் உறங்கும் திருவிடத்தின்
வேர் கிளறி உழுது விட்டார்களாம்
ஐயொ!
எம்மானத்துக்கடையாளமான மறவர்கள்
தூபிகளையும்
இடித்துத் துடைத்து முடித்தாராம்
களமாடி வீழ்ந்த கண்மணிகள் உறங்குகின்ற
நிலமுழுது யாரோ பயிர்செய்து முள்ளாராம்
சிட்டுக் குரவி என தேகம் பதறுகிறது விட்டு
விடுதலையாய் விரிந்த சிறகெனக்குக் கட்டு
வானெழுந்து கண்மணிகள் கல்லறைகள்
நட்ட இடம் மீதினிலே
நான் இருந்து அழவேண்டும்
சொந்தம் பிரிந்து துணை பிரிந்து நாம்
இருந்த
இந்திரனின் ஊரை இழந்துள்ளோம்
இதற்காக அஞ்சி ஒடுங்குவது அழகல்ல
எம் வீட்டுப் பஞ்சுக்கதிரையிலே பகைவன்
படுத்துறங்க விட்டு விட்டு
நாங்கள் வீதியிலே அகதியென கொட்டும்
மழையனிலே குளித்தல் விதியுமல்ல
காலம் அறிந்து களம் அறிந்து
நெஞ்சமதில் மூழும் விடுதலைத் தீ
மூழட்டும்
தமிழ்க் குருதி பொங்கி நரம்புகளில்
பெருகட்டும்
எமையடக்க வந்தவனை எங்கள் வாசலிலே
நாம் புதைப்போம்
முள்ளுக்கும்  எம்மூரில் முன்னேறி வருகின்ற
புல்லுக்கும்
நாங்கள் புலியென்று காட்டுவோம்.


– புதுவை இரத்தினதுரை –




# வரலாறு சொல்லும் பாடம்

## தமிழர் ஏமாற்றப்பட்ட வரலாறு

– தமிழீழக் கல்விக் கழகம் –





வரலாறு சொல்லும் பாடம் – தமிழர் ஏமாற்றப்பட்ட வரலாறு

15.01.2026 சென்ற இதழ் தொடர்ச்சி...

## போர்த்துக்கேயர் கால இலங்கை அரசுகள்

கி.பி. 1505இல், போர்த்துக்கேயர் முதல்முதலில் இலங்கையிற் காலடி எடுத்து வைத்தனர்.




அப்போது இலங்கையில் 3 அரசுகள் இயங்கின.

- யாழ்ப்பாண அரசு
- கோட்டை அரசு
- கண்டி அரசு

இந்த மூன்று அரசுகளிலும், பழைமையானதும், வலுவானது மாகத் திகழ்ந்தது. தமிழரின் அரசான யாழ்ப்பாண அரசுதான். தரை, கடல் வலுவோடு வெளிநாட்டு ஏற்றுமதி, இறக்குமதிகள் செய்த யாழ்ப்பாண அரசு உயர்ந்திருந் தமையை, போர்த்துக் கேயர் மற்றும் ஊரோடிகளின் குறிப்புகளிலே நாம் பார்க்கலாம். சிங்கள வரலாற்று நூல்களும், இலக்கியங்களும் இதே செய் திகளை எமக்குத் தருகின்றன. இந்த மூன்று அரசுகளினதும் இறைமை வீழ்ச்சிக்கு 27 அன்றைய சிங்கள அரசுகளே காரண மாயின என்பது. இன்றைய சிங்கள பௌத்த வெறி ஆட்சியா ளாரினால் விழுங்கப்பட முடியாத, அல்லது விழுங்கத் துடிக் கின்ற கசப்பான உண்மை வரலாறு ஆகம்.




தொன்சுவான் தர்மபாலா

தமிழர்கள் தமது ஆட்சி இறைமையை ஐரோப்பிய நாடுகளிடம் இழந்தாலும் அதற்கான கால்கோளை இட்டது சிங்கள அரசுகள் தான் என்பது. நினைவிலே நிறுத்தப்பட வேண்டிய வரலாற்றின் பதிவுகளாகும். கோட்டை அரசைச் சேர்ந்த மூன்று சிங்கள உடன் பிறந்தார்களுக்குள் ஏற்பட்ட “அரியணை அவா” அந்த அரசைச் சரித்தது. புவனேகபாகு. றைகம் பண்டார. மாயா துன்னை ஆகிய அந்த மூவர்க்குள் ஏற்பட்ட பணிநிலைப் பிணக் குகள் போர்த்துக்கேயரை வலிந்து கோட்டை அரசியலுக்குள் வரவழைத்தன. கி.பி. 1597 இன் பிறகு, கோட்டையரசின் முடி போர்த்துக்கேயருக்குத்தான் என்று அடிமை முறி எழுதிக் கொடுத்துவிட்டு இறந்தவன் புவனேகபாகுவின் மகள் வழிப் பேரனான தொன்சுவான் தர்மபால. இதனால், கோட்டையரசு போர்த்துக்கேயரின் கைகளிலே விழுந்தது.

கோட்டையரசைக் கைப்பற்றும் போர்த்துக்கேயர் முயற்சிக்கு எதிராக, கோட்டைச் சிங்களவர்களுக்குச் சார்பாகப் போர்க் கொடிதூக்கியது முதலாம் சங்கிலிய மன்னனது யாழ்ப்பாணத் தமிழரசு. வேற்று இனமாக இருந்த போதிலும் ஒரு தீவுக்குள்ளே வாழ்ந்த ஒருமைப்பாட்டு உணர்வினால், உதவிவந்த யாழ்ப் பாணத் தமிழரசின் முதுகிலே குத்தியது அன்றைய சிங்கள ஆட்சி வெறியர்கள்தான். தம்மைத்தாமே அடிமைப்படுத்திக் கொண்டது மட்டுமன்றி, சிங்களக் கூலிப்படைகளாகப் போர்த் துக்கேயப்படைகளுக்குத் துணைவந்து, தமிழர்களின் பேரர சான யாழ்ப்பாணத் தமிழரசைப் போர்த்துக்கேயர் வீழ்த்த அவர்கள் பேருதவி புரிந்தனர்.

தமிழர் தாயகமான வடக்குக் கிழக்கிலே விரிந்து பரந்திருந்த யாழ்ப்பாணத் தமிழரசு, அண்டை அரசுகளான கண்டி அரசி னாலோ, கோட்டை அரசினாலோ போரிலே வீழ்த்தப்பட வில்லை. போர்த்துக்கேயரிடந்தான் யாழ்ப்பாணத் தமிழரசு தனது இறைமையை 1619 இல் இழந்தது.

போர்த்துக்கேயரிடமும், தொடர்ந்து வந்த ஒல்லாந்தரிடமும், கண்டி அரசு தனது இறைமையை இழக்கவில்லை. அதன் புவியியற் சூழல் அதனைக் காப்பாற்றி இருந்தாலும், கண்டி ஆட்சிப் பகுதி 1815 இல், இலங்கையின் கரையோரப் பகுதிகளை ஆண்ட ஆங்கிலேயர் கையகம் சென்றது. அந்த வீழ்ச்சிக்கும் சிங்கள மேல் மட்டத்தின் காட்டிக் கொடுப்புக்களே காரண மாயின என்பதை இலங்கையின் பிற்கால வரலாறு தெளிவாகச் சொல்கிறது. கண்டி அரசு ஒரு பௌத்த சிங்கள அரசாக இருந்த போதும், அதனை கி.பி. 1739 முதல் 1815 வரை 76 ஆண்டுக ளாக ஆண்டவர்கள் தமிழ் மன்னர்கள்தான்.[1]



தொன்சுவானின் கையெழுத்து

தொன்சுவானின் பொன்னுருவுக்கு முடி சூட்டுமாறு வேண்டி புவனேகபாகுவால் போர்த்துக்கல் மன்னனுக்கு அப்பொன்னுருவை வைத்து அனுப்பப்பட்ட யானைத்தந்தப் பேழை

அவர்களது வீறான ஆட்சியில் கண்டி அரசைக்கைப்பற்றப் பலதடைவை ஒல்லாந்தராலும், ஆங்கிலேயராலும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும் அவர்கள் கேவலமான தோல்வி களையே எதிர்கொண்டனர். எனினும், அந்தத் தமிழ் அரசர் களது அரண்மனைக்குள்ளேயே பௌத்த சிங்கள வெறி நுழையத் தொடங்கியதானது. இலங்கை வரலாற்றில் துயர் மிகுந்த வரிகளாகும். தனது இனத்திலிருந்தே தனக்குரிய மனைவியரை மன்னன் தேடியதும், சிங்களப் பௌத்த அரசின் மன்னனாக ஒரு தமிழன் எப்படி இருக்க முடியும் என்ற சிங்களப் பெருங்குடிச் சிந்தனையும் கண்டி அரசின் மீளமுடியாத சறுக் கலுக்குக் காரணங்களாயின. முதல் அமைச்சர் பிலிமத்தலாவ முதலிலே சூழ்ச்சி செய்தான். எனினும், தமிழ் மன்னன் கண்ணுச்சாமி என்ற சிறீவிக்கிரமராசசிங்கன் சீறி வந்த ஆங்கிலப் படையைச் சிதறடித்தான். பிறகு, எகலப்பொல சூழ்ச்சி செய்தான். சிங்கள இனவெறியின் தூண்டுதலோடு சிங்கள அமைச்சர்கள், போர்வீரர்களின் கயமை நிறைந்த காட்டிக் கொடுப்போடு தமிழ் மன்னன் வீழ்த்தப்பட்டான். கண்டியரசும் ஆங்கிலேயராற் கையகப்படுத்தப்பட்டது. சிங்கள பௌத்தம் காக் கப்படும் என்ற வாக்குறுதியை ஆங்கிலேயரிடமிருந்து பெற்றுக் கொள்வதில் மட்டும், “காட்டிக்கொடுத்த” சிங்களவர் வெற்றி கொண்ட போதும், காலப்போக்கில் ஆங்கிலேயர் அவர்களைப் பதவிப் பொறுப்புகளிலிருந்து இறக்கியபோதுதான் விழிக்கத் தொடங்கினர். கடைசியாகக் கண்டியரசை ஆண்ட தஞ்சை புதுக் கோட்டை பூலாம்பட்டியைச் சேர்ந்த தமிழ் மன்னன் கண்ணுச் சாமி என்ற சிறீவிக்கிரமராசசிங்கன் ஆங்கிலேயரால் தமிழ் நாட்டின் வேலூருக்குக் கொண்டு சென்று சிறை வைக்கப்பட்டு, 1832 இல், அங்கு இயற்கைச் சாவடைந்தான். பெரும் மதிப் புடன் அங்கு அவனுக்காக நாட்டப்பட்ட நினைவுக்கல்லும், முத்து மண்டபமும், இலங்கை ஆட்சியில் தமிழரின், பெரும் பங்களிப்பை இன்றும் பேசி நிற்கின்றன. 1815 இல் கண்டி அரசு வீழ்ந்த பின்னரும் கூட, 1833 வரை இலங்கைத்தீவிலிருந்த 3 ஆட்சிப் பகுதிகளிலும் தனித்தனியாகவே ஆட்சி நடத்தப்பட்டு வந்தன. இதற்குக் காரணம் இல்லாமல் இல்லை.



கண்டியின் கடைசி மன்னன் கண்ணுச்சாமி மற்றும் அவரது துணைவி வெங்கடரங்கம்மாள்.




தமிழ்நாடு வேலூரில் உள்ள மன்னன் கண்ணுச்சாமியின் கல்லறை

மொழி, இன, பண்பாட்டு வாழ்வியல் முறைகளினால் முற்றிலும் மாறுபட்ட தன்மையைக் கொண்ட,

1. தமிழர்களையும் சிங்களவர்களையும் ஒருசேர ஆள்வதில் உள்ள இடர்பாடு.


2. 1815 இலே கண்டியரசு தமிழ் மன்னனிடமிருந்து கைப்பற்றப் பட்ட போது "கண்டிப்பகுதி தனியாகவே ஆளுகைக்குட்படுத் தப்படும்" என்று ஆங்கிலேயரால் கண்டி மக்களுக்குக் கொடுக் கப்பட்ட வாக்குறுதி.

அதனோடு, கரையோரச் சிங்களவருக்கும். கண்டிச் சிங்கள வருக்கும் இடையே நிலவிவந்த வாழ்வியல் முரண்பாடுகள் ஆங்கிலேயரின் ஆளுகைக்குப் பெரும் நெருக்கடிகளை ஏற் படுத்தின.




எனினும், 1833 இல், கோல்புறூக் கமறன் அரசியற் சீர்திருத் தத்தின்படி, முழு இலங்கையும் ஒரு ஆளுகையின் கீழ்க் கொண்டுவரப்பட்டு மூன்று ஆட்சிப் பகுதிகளும் ஒன்றிணைக் கப்பட்டு 5 நிர்வாக மாகாணங்கள் ஏற்படுத்தப்பட்டன.

அப்போது, தமது பகுதிகளான நுவரகலாவிய (அநுராதபுரம்) தம்மங்கடுவ (பொலநறுவை) பகுதிகளை வடக்கு கிழக்கு மாகாணங்களோடு இணைத்ததை, கண்டிச் சிங்கள மக்கள் கடுமையாக எதிர்த்தனர். இருப்பினும் தமிழர்களுக்கும், சிங் களவர்களுக்கும் உள்ள முரண்பாடுகள், வாழ்வியல் இடர்கள், வேறுபாடுகள் கிளைகோர்ன் குறிப்புகளில் மிகத் தெளிவாகவே வகுத்துக் காட்டப்பட்டன. [02]







தமிழ், சிங்கள மக்களை ஒன்றாக ஆள்வதிலுள்ள இடர்பாடு களைத் தனது பட்டறிவினால் நன்றாக அறிந்த ஆங்கிலேய ஆளுநர் சேர். வில்லியம் கிறேகரி 1873 இல், தமிழர் பகுதிக ளாக அன்றிருந்த, இன்றைய வடக்கு கிழக்கு மாகாணப்பகுதிக ளுடன் 1833 இல் இணைக்கப்பட்டிருந்த இன்றைய சிங்களப் பகுதிகளான நுவரகலவெவ (அநுராதபுரம்) தம்மன்கடுவ (பொலநறுவ) பகுதிகளை மீண்டும் வேறாக்கி, புதிதாக வடமேல் மாகாணம் எனத் தனி மாகாணத்தை ஆக்கினார். விந்தனைப் பகுதி கிழக்கு மாகாணத்திலிருந்து பிரிக்கப்பட்டு, புதிதாக உரு வக்கப்பட்ட ஊவாமாகாணத்துடன் இணைக்கப்பட்டது. 40 ஆண்டுகளுக்குள் சிங்களப் பகுதிகள் மீண்டும் வேறாக்கப்பட்டு, தமிழ்ப் பகுதிகளை மட்டும் கொண்ட வடக்கு, கிழக்கு மாகா ணங்கள் உருவாக்கப்பட்டன.

1871 இல் நடத்தப்பட்ட இலங்கையின் குடித்தொகைக் கணக் கெடுப்புப் பட்டியல் வடக்கு. கிழக்கு மாகாணங்கள் முழுமை யான தமிழர் பகுதிகளே என்பதை மெய்ப்பிக்கின்றன. 1833 இல் நடைமுறைக்கு வந்த கோல்புறூக் அரசியல் திட்டம் 1931 வரை சிறு சிறு திருத்தங்களோடு நிலவியது. கோல்புறூக் கினால் நிறுவப்பட்ட சட்டசபையே காலஓட்டத்தில் பல்வேறு சீர் திருத்தங்களின் ஊடாக, மெல்ல மெல்ல சட்டசபை, அரசாங்கச் சபை என்ற நிலைகளில் வடிவெடுத்து, தமிழர்களின் தூக்குக் கயிறான இலங்கைப் பாராளுமன்றமாக மாறியது என்பது வரலாறு.

பல்லாயிரக் கணக்கான மைல் தொலைவில் இருந்துகொண்டு குறைந்த ஆளணியோடு இலங்கைத்தீவு முழுவதையும் ஆளுகை செய்ய வேண்டுமென்பதை மட்டுமே அன்று, ஆங்கி லேயர் கருத்தில் எடுத்துக் கொண்டதால் இலங்கையில் நீண்ட பண்பாட்டுப் பின்னணியோடு வாழ்ந்த தமிழ் மக்களின் இருப் பினை உறுதி செய்யும் அவர்களது அவாவினை ஆங்கிலேயர் புரிந்து கொள்ளவில்லை புரிந்து கொள்ள முயற்சிக்கவும் இல்லை. மேலோட்டமான பார்வையோடு ஆங்கிலேயரால் வகுக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்ட ஆளுகைத்திட்டங்கள், சிங்கள தமிழ் இனங்களின் இடையேயான வெடிப்பையும் ஐயங்களையும்

## கோல்புறூக் அரசியற் சீர்திருத்தம் சட்டசபைக் கட்டமைப்பு

| ஆண்டு | மொத்த உறுப்பினர் | அலுவல் சார் உறுப்பினர்கள் | அலுவல் சாரா உறுப்பினர்கள் | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | ஐரோப்பியர் | பறங்கியர் | தமிழர் | சிங்களவர் | முஸ்லிம் |
| 1833 இல் | 15 | 09 | 03 | 01 | 01 | 01 | |
| 1889 இல் | 17 | 09 | 03 | 01 | 01 | 02* | 01 |

*கண்டி கரையோர சிங்களவர்களுக்கு ஒவ்வொரு உறுப் பினர்கள்

இனவாரிப் பிரதிநிதித்துவத்தை அறிமுகப்படுத்திய கோல்புறூக் அரசியற் சட்டத்திற்குச் சட்ட மூலங்களைக் கொண்டுவரும் உரிமையில்லாத போதும் தமிழர் சிங்களவர் வலு 1:1 என இருந்தது. 1889 இல், இந்நிலை மாறி சிங்களவர் தமிழர் உறுப்புரிமை 2:1 என ஆனது.








இதைத் தொடர்ந்து வந்த குறூமக்கலம் அரசியற் சீர்திரு த்தம் 1910 இல் நடைமுறைக்கு வந்தது. ஆளுநரால் நியமனம் செய் யப்படும் உறுப்பினர் அறுவர். இதன்படி சிங்களவர் தமிழர் உறுப்புரிமை 3:2 என இருந்தது. எனினும், படித்த இலங் கையருக்கான தெரிவுத் தேர்தலில் சேர். பொன். இராமநாதன் வெற்றியீட்டியமையால் சிங்களவர் தமிழர் உறுப்புரிமை 3:3 எனச் சமநிலைப்பட்டது. தேர்தலில் வாக்களிக்கும் உரிமை அன்று எல்லா இலங்கை யருக்கும் வழங்கப்படவில்லை. கல்வி அறிவுடையோரும் செல்வம் மிகுந்தோரும் மட்டுமே வாக் களிக்கும் உரிமை பெற்றிருந்தனர். கல்வி அறிவைப் பொறுத்த வரை தமிழர்கள் சிங்களவர்களை விஞ்சி நின்ற காரணத்தால் பெரும்பான்மைச் சிங்களவரை இத்தேர்தலில் வெற்றி கொள் ளக்கூடிய வாய்ப்பு ஒரு தமிழருக்கு அமைந்தது. அதுமட்டு மன்றி, அன்று கண்டிச் சிங்களவர்கள் கரையோரச் சிங்களவர் களின் வெற்றியை விரும்பாததால் இராமநாதனுக்கு வாக் களித்து அவர் வெற்றி பெற உதவினர். [03]

1916 ஆம் ஆண்டு நடந்த தேர்தலிலும் டீ.எஸ். ஜெயவர்த்தனா என்னும் சிங்களவருடன் போட்டியிட்டு சேர்.பொன். இராம நாதன் இரண்டாம் முறையும்




இராமநாதன் வெற்றிக்காக தேர்தல்பரப்புரையில் ஈடுபட்டிருக்கும் சிங்களமக்கள். ஜே. ஆரின் பெரியதகப்பன் விக்டர் ஜெயவர்த்தனா இராமநாதனுக்கு அருகில் அமர்ந்திருக்கின்றார்

வெற்றி காண முடிந்தது. 1915 இல், சிங்கள முஸ்லிம் கலவரம் ஏற்பட்டு பல முஸ்லிம்கள் உடல், உடைமை வழியாகப்பாதிக்கப் பட்ட போது. பிரித்தானிய அரசு தனது இரும்புக் கைகளால் அக்கலவரத்தை அடக்கி, சிங்களவர் பலரைச் சுட்டுக்கொன்று, பலரைச் சிறைக்குள்ளே தள்ளியது. அவ்வகையிற் சிறைப்பட்ட வர்களில் முதன்மையானவர் இலங்கையின் முதலாவது பிரதமராகப் பிற்காலத்திலே தெரிவு செய்யப்பட்ட டீ. எஸ். சேன நாயக்கா ஆவார். தேசிய ஒற்றுமை வேண்டும் என்பதில் பிடிவாதமாக இருந்த சேர். பொன். இராமநாதன் இங்கிலாந்து வரை சென்று சிறைப்பட்ட சிங்களத் தலைவர்களுக்காக வாதாடி அவர்களை விடுவித்தார். இந்த நன்றிக் கடனுக்காக டி.எஸ் சேனநாயக்காஉட்பட தலைவர்கள்: இங்கிலாந்தில் இருந்து கொழும்புத் துறைமுகத்தில் வந்து இறங்கிய இராமநாதனைத் தேரில் குதிரை வண்டியில் ஏற்றி, அங்கிருந்து அவரது வீடுவரை வடம்பிடித்து இழுத்துச் சென்றுதம் நன்றியுணர் வினைத்தெரிவித்துக் கொண்டனர்.



சேர் பொன் இராமநாதனை குதிரை வண்டியில் ஏற்றி இழுத்துச் சென்ற சிங்களத் தலைவர்கள்.
(டீ.எஸ். சேனநாயக்க, எப்.ஆர். சேனநாயக்கா, ஈ.டபிள்யூ. பெரேரா, பாரன்.ஜெயதிலக, ஏ.இ. குணசிங்க. ஆகியோரும் அவர்களில் அடங்குவர்.

இதே டீ.எஸ்.சேனநாயக்காதான் பிற்காலத்தில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களின் சிற்பியாகி, தமிழ் மக்களின் தாயக நிலம் விழுங்கப்பட முதலடி எடுத்துக் கொடுத்தவர்.

1921 இல் இருந்து 1924 வரை நடைமுறையில் இருந்தது மானிங் அரசியற் சீர்திருத்தம். இதில், அலுவல் சாரா உறுப்பினர் தொகை 23ஆகக் கூட்டப்பட்டது. நியமன, இனவாரி, பிரதேச வாரி. உறுப்புரிமைகளை ஒரேநேரத்தில் இவ் அரசியற் சீர் திருத்தம் அறிமுகப்படுத்தியது. இந்தப் பிரதேசவாரிப் பிரதிநிதித் துவமே பிற்காலத்தில் தேர்தல் மாவட்டங்களும் தேர்தல் தொகுதிகளும் உருவாகக் காரணமாயிற்று.

மனிங் செய்த இவ் அரசியற் சீர்திருத்தத்தினால் அதுவரை சட்டசபையில் ஓரளவு சமபிரதிநிதித்துவத்தைக் கொண்டிருந்த தமிழருக்குப் பெருந்தீங்கு விளைந்தது. சிங்களவருக்கு 13 பிரதி நிதித்துவத்தை அள்ளி வழங்கிய அச்சீர் திருத்தம் தமிழருக்கு 3ஐ மட்டுமே விட்டுவைத்தது. 1920ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்த இனக்கூறுபாடு (இனவிகிதாசாரம்) பேணப்பட



சிங்களத்தலைவர்கள் சேர் பொன் இராமநாதனை குதிரைவண்டியிலேற்றி கொழும்பு நகரவீதியில் இழுத்துச் செல்லும் காட்சி.

வேண்டும் எனவும், குறைந்தது சிங்களவர் தொகையின் 2/3 பங்காவது தமிழர் பிரதிநிதித்துவம் அமைய வேண்டுமெனவும் தமிழர்கள் வற்புறுத்தினர்.

மேல்மாகாணத்தில் பரவலாக வாழும் தமிழ் மக்களைப் பிரதி நிதித்துவம் செய்ய, அம்மாகாணத்தில் ஒரு தமிழ்ப் பிரதிநிதித் துவம் வழங்க வேண்டுமெனவும் தமிழர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இந்த நேரத்திலேதான் சிங்களவர் தமிழருக்குச் செய்த முதலா வது நம்பிக்கை மோசடி நிகழ்ந்தது. 1919 டிசம்பர் 14 இல் உரு வான இலங்கைத் தேசிய காங்கிரஸ் அமைப்பின் முதல் தலைவராக விளங்கியவர் சேர். பொன். அருணாசலம் அவர்கள். மானிங் அரசியற் சீர்திருத்தத்தின் மூலம் தமிழர் களின் பிரதிநிதித்துவம் குறைக்கப்படுவதை இலங்கைத் தேசிய காங்கிரசிலிருந்த சிங்களத் தலைவர்கள் கண்டு கொள்ள வில்லை.



சேர் பொன் அருணாசலம்



சேர் ஜேம்ஸ் பீரிஸ்

## தமிழர்களை ஏமாற்றிய முதல் உடன்படிக்கை [1918]

இலங்கைத் தேசிய காங்கிரஸ் தொடங்கப்படுவதற்கு முன் னரேயே 1918இல், தமிழ்-சிங்களத்தலைவர்கள் ஓர் உடன்படிக் கையைச் செய்திருந்தனர்.

சட்டசபையில் தமிழர் பிரதிநிதித்துவத்தின் விகிதாசாரம் குறை யாமற் காக்கப்படும் என்றும், மேல்மாகாணத்தில் ஒரு தமிழ்ப் பிரதிநிதித்துவம் வழங்கப்படவும் தாம் தொழிற்படுவோம் என் றும் இலங்கைத் தேசியசங்கத்தின் சார்பில் ஜேம்ஸ் பீரிசும், இலங்கைச் சீர்திருத்தக் கழகத்தின் சார்பில் ஈ.ஜே. சமரவிக் கிரமாவும் தமிழர் தரப்பைப் (யாழ்ப்பாணச் சங்கத்தை) பிரதி நிதித்துவப் படுத்தியிருந்த சேர். பொன். அருணாசலத்திற்கு எழுத்து மூல உறுதியை வழங்கியிருந்தனர். ஆனால், 1921 இல் தமிழ்ப் பிரதிநிதித்துவம் தலைகீழ் வீழ்ச்சியைக் கண்ட போது, அதனைக் கண்டும் காணதவராகி, தமது வாக்குறுதி யைச் சிங்களத் தலைவர்கள் காற்றிலே பறக்கவிட்டனர். தேர்த லிலும் மேல்மாகாணத்தில் சிங்கள வேட்பாளரையே நிறுத் தினர்.

இதனாற்றான் சேர். பொன். அருணாசலம் 1922 இல், இலங் கைத் தேசிய காங்கிரசிலிருந்து விலகி, தமிழர் மகாசபையை அமைத்துக் கொண்டார். தமிழர் நலன்களைப் பாதுகாக்க, தமக் கென ஒரு சபையை நிறுவவேண்டிய தேவையை உணர்ந் ததன் விளைவே இது. *

கண்டிச் சிங்களவர்கள்கூட கரையோரச்சிங்களவர் தம்மைக் காட்டிக் கொடுத்து விட்டதாகவே கருதினர். மானிங் சீர்திருத்தத் தின்படி தங்களது பிரதிநிதித்துவம் கரைந்து போனதால், அவர் களும் தேசிய காங்கிரசிலிருந்து விலகினர். கண்டி மாகாணங் களுக்கு உள்ளூர் ஆளுகையுடன் கூடிய தனியான சுயாட்சி யைக் கண்டிச் சிங்களவர் கோரினர்.

அந்நிலையில், அவர்களோடு ஒத்துழைத்து அவ்வகைக் கோரிக்கையை எழுப்பாத வரலாற்றுத்தவறை தமிழ்த் தலை வர்கள் அன்று செய்தது வருத்தத்திற்குரிய உண்மையாகும்.[04]

தமிழர்களும் கண்டிச் சிங்களவர்களும் விலகியபின் இலங் கைத்தேசிய காங்கிரஸ் கரையோரச் சிங்களவர்களின் நலன் பேணும் கரையோரச் சிங்கள மகாசபையாகவே இயங்கியது.



சீ.ஈ. கொரியா



சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி



விக்டர். கொரியா

1924 இல் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டு, 1931 டொன மூர் அரசியல் சட்டம் இயற்றப்பட்ட காலம் வரை, மானிங் டிவன் ஸயர் அரசியற் சீர்திருத்தம் உயிரோடு இருந்தது. தமிழர்கள் சிங்களத்தலைவர்களால் ஏமாற்றப்படுகின்ற 2ஆவது நிகழ்வு இக்காலத்திலேதான் அரங்கேறியது.

## தமிழர்களை ஏமாற்றிய இரண்டாவது உடன்படிக்கை [1925]

1925 யூன் 28 இல், யாழ்ப்பாணத்தில் சேர். வைத்திலிங்கம் துரைச்சாமியின் வீட்டில் (வீட்டின் பெயர் மகேந்திரகிரி) வட்ட மேசை மாநாடு ஒன்று நிகழ்ந்தது. தமிழர் மகாசபைக்கும் இலங்கைத் தேசிய காங்கிரசிற்கும் இடையே சிங்கள. தமிழ் உடன்படிக்கை என்னும் உடன்படிக்கையும் கைச்சாத்திடப் பட்டது. இவ் உடன்படிக்கையே “மகேந்திரகிரி உடன்படிக்கை” எனப்படுகிறது.

01. வடக்கு கிழக்குப் பிரதேசத்தில் முழுமையாகவும், மேல் மாகாணத்தில் சிங்களவர்களுக்கு வழங்கப்படும் உறுப்புரிமை யின் 2/3 பங்கும் தமிழர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

02. இலங்கைத் தேசிய காங்கிரஸ் முன்வைக்கும் அனைத்து யோசனைகளையும் பரிசீலிக்க ஒரு குழு நியமிக்கப்பட வேண்டும்.

ஆனால், இந்த உடன்படிக்கை நடைமுறைப்படுத்தப்படவே இல்லை. இலங்கைத் தேசிய காங்கிரஸ் உடன்படிக்கையைச் செயற்படுத்த முன்வராது காலம் கடத்தியதைக் கண்டித்து, இலங்கைத்தேசிய காங்கிரஸ் குழுவிற்குத் தலைமைதாங்கி யாழ்ப்பாணம் வந்து உடன்படிக்கை செய்து கொண்ட சீ. இ. கொரியாவின் தம்பி, விக்ரர் கொரியா காலியில் நடைபெற்ற இலங்கைத்தேசிய காங்கிரஸ் மாநாட்டில் கடுமையாகச் சாடிப் பேசினார்.

“தேசிய காங்கிரஸ் தலைவர்களை நம்பமுடியாது. சிங்களத் தலைவர்களின் சொல் செல்லாக்காசு போன்றது என்று தமி ழர்கள் கருதுகிறார்கள். அதன் கருத்தை வலியுறுத்துவதுபோல நடக்கப் போகிறீர்களா?” என்று இலங்கைத் தேசிய காங்கிரஸ் மாநாட்டில் கேள்வி எழுப்பினார்.

மானிங் சீர்திருத்ததில் இலங்கைத்தமிழர்களின் கோரிக்கை நிறைவேற்றப்படவே இல்லை. சிங்களப் பிரதிநிதித்துவத்தின் 2/3 பங்காவது தமிழர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை சிங்களத்தலைமையின் பேரினவாதப் போக்கினால் கருகிப் போயிற்று. இலங்கைத்தேசிய காங்கிரஸ் கரையோரச் சிங்களவர் காங்கிரஸ் என்பதை மெய்ப்பித்தது.

## டொனமூர் அரசியல்திட்டமும் சிங்களக்குடியேற்றத் தோற்றுவாயும்



டீ.எஸ். சேனநாயக்கா



டொனமூர்

அதையடுத்து 1931 இல் வந்த டொனமூர் அரசியற்றிட்டம் 1947 வரை நிலைத்தது. பெரும்பான்மைச் சிங்கள மக்களின் பிரதி நிதித்துவத்தைப் பெருமளவில் வீங்கச் செய்து, இனமுரண் பாடுகளைக் கூர்மைப் படுத்தியதில் இந்த அரசியல் சட்டத்திற்குப் பெரும் பங்குண்டு. தமிழர்கள் தனிவழி அரசியலை நாடிச் செல்ல இதுவுமொரு காரணமாயிற்று. பிரதேசவாரிப் பிரதி நிதித்துவம் தமிழர்களின் உறுப்புரிமையை அரசாங்க சபையில் வெகுவாகக் குறைத்ததால் சிறுபான்மையினராக இருந்த தமிழர் இரண்டாம் தரத்திற்குத் தள்ளப்பட்டனர். இச் சட்டத்தின் கீழ் 1936 ஆம் ஆண்டில் இரண்டாவதாக அமைந்த அமைச் சரவை, தமிழரின் உறுப்புரிமையின் வலுவற்ற நிலையை வாய்ப்பாகக் கருதி, தமிழ்ப் பகுதிகளிற் சிங்களக் குடியேற் றங்களை அமைக்கும் திட்டங்களைத் தீட்டியது. அந்த அமைச் சரவையில் காணி வேளாண் அமைச்சராக இருந்த டீ.எஸ். சேனநாயக்கா, தமிழரின் பாரம்பரிய நிலமான கந்தளாய், பாவற்குளம் பகுதிகளில் வேளாண் துறைவளர்ச்சியென்னும் போர்வையில் சிங்களக் குடியேற்றங்களுக்கு கால்கோள் இட் டார். இதனால், 1921ஆம் ஆண்டு குடிசனமதிப்பீட்டில் கிழக்கு மாகாணத்தில் 0.5 வீதமாக இருந்த சிங்களவர் குடித்தொகை அடுத்து எடுக்கப்பட்ட மதிப்பீட்டில் 4.0 வீதமாகியது. டொனமூர் அரசியல் திட்டத்தின் கீழ் 1936இல் அமைந்த தனிச்சிங்கள அமைச்சரவை தனது பேரினவாதப் போக்கைக் காட்டத் தவற வில்லை.


## அரசாங்கச் சபையில் இனவாதமும் தமிழ்க்காங்கிரசின் தோற்றமும்

1943இல், ஆங்கில மொழிக்கு மாற்றாக சிங்களம் மட்டும் ஆட்சி மொழியாக வேண்டுமென்று ஜே.ஆர்.ஜெயவர்த்தனா அரசாங் கச் சபையிலே தீர்மானம் கொண்டுவந்தார். ஆனால், விவாதத் தின் போது ஆங்கிலத்திற்கு மாற்றாக தமிழ், சிங்களம் இரண் டுமே ஆட்சிமொழியாகவும் கல்வி மொழியாகவும் இருக்க வேண்டுமென்ற திருத்தம் மட்டக்களப்பு உறுப்பினர் வீ. நல்லை யாவால் முன்மொழியப்பட்டு, எஸ்.டபிள்யூ.ஆர்.டீ. பண்டார நாயக்காவினால் வழி மொழியப்பட்டு நிறைவேற்றப்பட்டது. (ஆனால், இலங்கையின் சுதந்திரத்தின் பின் சிங்களம் மட்டும் சட்டத்தை 1956ஆம் ஆண்டில் பண்டார நாயக்காவே கொண்டு வந்து நிறைவேற்றினார்.) 1944 டிசம்பரில், சோல்பரி தலைமை யில் இலங்கை வந்த உசாவற்குழு 1945 ஏப்ரல் மாதம் வரை, இலங்கையின் பல்வேறு சமூகத்தைச் சேர்ந்தவர்களினதும் கருத்தைக் கேட்டறிந்தது.

1936இல் இருந்து 1942வரை ஆட்சியிருந்த தனிச்சிங்கள அமைச்சரவையின் செயற்பாடுகளால், பெரும் பின்னடை வுகளை எதிர்கொண்ட இலங்கைத் தமிழர்கள் இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியில் ஒன்று சேர்ந்து 50இற்கு 50எனும் கோரிக்கையை சோல்பரியின் முன்னே வைத்தனர். பெரும் பான்மைச் சிங்களவருக்கு 50வீத உறுப்புரிமையும். ஏனைய சிறுபான்மையோர்களுக்கு (இந்தியத் தமிழர், முஸ்லீம்கள் உட்பட) 50வீத உறுப்புரிமையும் கொடுக்கப்பட வேண்டுமென் பதே 50இற்கு 50 கோரிக்கையின் நிலைப்பாடாகும். அன்றைய காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஜி.ஜி.பொன்னம்பலம் இக் கோரிக்கையை முன்வைத்து வாதாடினார். எனினும், இலங் கைத்தீவில் சிங்கள, தமிழ்மக்களின் வரலாற்றுப் பின்ன ணியைச் சரிவர உணர்ந்து கொள்ளாத சோல்பரி குழுவினர். பேரினவாதச் சிங்களவருக்குக் கட்டற்ற உரிமைகளை வாரி வழங்கும் அடிப்படைகளின் மீது தமது அரசியற்றிட்டத்தை வகுத்துச் சென்றனர். பிற்காலத்தில் இனப்பிரச்சினை கூர்மை யடைந்து பெரும் மோதல்கள் ஏற்பட்டு இரத்த ஆறு ஓடத் தொடங்கியபோதுதான். தான் செய்த தவறுகளை சோல்பரி அவர்கள் உணர்ந்து, காலங்கடந்த பின்னர் வருத்தம் தெரி வித்தார்.



வீ. நல்லையா




ஜே.ஆர்



ஜீ.ஜீ



பண்டாரநாயக்கா




# தனிச் சிங்கள அமைச்சரவை

**C.W.W. கன்னங்கரா, W.A.சில்வா, C.கொரயா, கொத்தலாவலை, S.W.R.D.பண்டாரநாயக்கா, D.S.சேனநாயக்கா, பாரன் ஜெயதிலகா ஆகியோர் அவைத்தலைவர் வைத்திலிங்கள் துரைச்சாமியுடன்**

### சோல்பரியின் காலந்தவறிய வருத்தம்

பீ.எச்.பாமர் எழுதிய "சிலோன் ஏ டிவைடட் நேசன்" என்ற நூலுக்கு முகவுரை எழுதியபோது அதில், சோல்பரி இப்படிக் குறிப்பிடுகிறார்.




"இந்தியா, பாகிஸ்தான், மலாயா, நைஜீரியா, போன்ற நாடுகளுக்கான அரசியற்றிட்டங்களிற் செய்தது போல, சிறுபான்மையினரின் உரிமையை உறுதிசெய்யும் வலிய காப்பீடுகளை இந்த (இலங்கை) அரசியற்றிட்டத்திற்குப் பரிந்துரை செய்யாமல் விட்டது பெரும்பிழையென்று இப்போது நான் நினைக்கின்றேன். இந்த இரண்டு (சிங்களவர், தமிழர்) சமுதாயங்களுக்கிடையிற் காலங்காலமாக நிலவும் முரண்பாடுகள் பற்றிய மேலெழுந்த வாரியான புரிதலே எமது ஆணைக்குழுவிற்கு அப்போது இருந்தது. சிறுபான்மையினரின் மனநிறைவும், நலனும் இலங்கைத் தீவின் ஒட்டுமொத்த நலனுக்குத் தேவையானது என்பது அரசாங்கத்திற்கு நன்கு தெரியுமென்றே, ஆணைக்குழு அன்று திருப்திப்பட்டுக் கொண்டது. ஆணைக்குழுவின் குறிப்பின்படி அவ்வகையில் இல்லையெனில், எந்தவொரு காப்பீடும் நீண்ட காலத்துக்கு நிலைக்க முடியாது. அண்மைய ஆண்டுகள் ஆணைக்குழுவின் இந்த அவதானிப்பு முழுதாகச் சரியெனவே காட்டுகிறது"

டீ.எஸ் சேனநாயக்கா உயிரோடு இருந்திருந்தால் 1958இல், நிகழ்ந்த அதிர்ச்சியூட்டும் நிகழ்வுகளும், அதனைத் தொடர்ந்த பரபரப்புகளும் நிச்சயம் நிகழ்ந்திருக்க முடியாதெனத்தான் நம்புவதாகச் சோல்பரி கூறுகிறார். 1945இல் டீ.எஸ் சேனநாயக்கா பிரித்தானிய அரசுக்கு அரசியற்றிட்டத்தைப் பரிந்துரைத்துப் பேசும்போது "நாட்டின் நலனுக்குத் தமிழர்கள் முக்கியமானவர்கள்" என்று கூறியதை சோல்பரி அப்படியே நம்பி ஏமாந்தாரென்பதை அவரது முகவுரை வெளிப்படையாகக் காட்டுகிறது. டீ.எஸ்.சேனநாயக்கா டொனமூர் அரசியற்றிட்டத்தின் கீழான சட்டசபையிற் கிடைத்த தனிச்சிங்கள அமைச்சரவை வாய்ப்பைப் பயன்படுத்தி, தமிழர் நிலங்களை விழுங்கத் திட்டங்களைத் தீட்டிக்கொண்டிருந்த அதேவேளை, பிரித்தானியாவின் கண்களிலே ஒருமைப்பாடு கொண்ட இலங்கையைக் கட்டியெழுப்பத் துடிக்கும் தூய்மையாளராகத் தம்மைக் காட்டிக்கொள்ளவுந் தவறவில்லை. பிற்காலத்தில் 1986ஆம் ஆண்டு பெப்ரவரி 28ஆம் நாளன்று, 94.000 இந்தியத் தமிழர்களுக்குக் குடியுரிமை வழங்கும் சட்டமூலத்தின்மீது பேசும்போது கலவானைத்தொகுதி உறுப்பினர் சரத் முத்துவெட்டுவேகம "டீ.எஸ். சேனநாயக்கா உயிரோடு இருந்திருந்தால் மாக்கியவல்லிக்கு அரசியற் பாடம் கற்றுக் கொடுத்திருப்பார்." என்று கூறுமளவிற்கு அக்காலத்தில் அரசியற் சதுரங்கக்காய்களை டீ.எஸ். சேனநாயக்கா உருட்டினார்.

### *அடிக்குறிப்புக்களின் விளக்கம்*

01 கண்டி ஆட்சிப்பகுதியைக் கடைசியாக ஆண்ட நான்கு மன்னர்களும் தமிழ் மன்னர்கள். 1709 முதல் 1739 வரை ஆட்சி நடத்திய சிங்கள மன்னன் வீரநரேந்திரசிங்கனின் சிறிய தாயார், மனைவி ஆகியோர் தமிழகத்துப் பெண்கள். வீரநரேந்திர சிங்கனுக்குப்பின், அவனது ஆட்சி அவன் மனைவியின் உடன் பிறந்தவனாகிய விசயராசசிங்கனிடம் சென்றது.

தமிழகத்தைச்சேர்ந்த நாயக்க மரபினனான விசயராசசிங்கன் 1739 - 1747 வரை ஆட்சி நடத்தினான் அதன் பின், 1747-1782 வரை, விசயராசசிங்கனின் மனைவியின் உடன்பிறந்தானாகிய கீர்த்தி சிறி ராசசிங்கன் ஆட்சிநடத்தினான். அதன்பின் 1782-1798 வரை, கீர்த்தி சிறி ராசசிங்கனின் தம்பி இராசாதி ராசசிங்கன் ஆட்சி நடத்தினான். அவனுக்குப் பின் 1798-1815 வரை, இராசாதி ராசசிங்கனின் மனைவியின் உடன் பிறந்தானாகிய சிறிவிக்கிரமராசசிங்கன் ஆட்சி நடத்தினான். இவனே கண்டியின் கடைசி மன்னன்.

02 இலங்கையின் முதல் ஆங்கிலேய ஆளுநர் பிரடரிக்நோத் அவர்களின் செயலாளராக இருந்தவர் பேராசிரியர் யூ. கிளெக்கோர்ன். அவர் 1 799 யூன் 1ஆம் நாள் இலங்கைத்தீவு பற்றி எழுதிய குறிப்பிலிருந்து..........

"இலங்கைத்தீவானது மிகப் பழங்காலந்தொட்டே இரு வெவ்வேறு நாட்டினர்களால், வெவ்வேறு பகுதிகளாக உரிமை கொண்டாடப்பட்டது. இத்தீவின் நடுப்பகுதியும், தெற்குப்பகுதியும், வளவை ஆற்றிலிருந்து சிலாபம் வரையுமுள்ள மேற்குப் பகுதியும் சிங்கள நாட்டினத்தால் ஆட்சி செய்யப்பட்ட பகுதிகளாகும்.

இத்தீவின் வடக்கு, கிழக்கு நிலப்பகுதிகள் தமிழரால் ஆட்சி செய்யப்பட்ட பகுதிகளாகும். இந்த இரு நாட்டினங்களும் சமயத்தாலும், மொழியாலும், வாழ்க்கைப் பண்பாலும் முற்றிலும் வேறுபட்டவை (கிளெக்கோர்ண் ஸ்கொட்லாந்தைச் சேர்ந்தவர்)

03 இலங்கைத் தீவு முழுவதையும் 1815 இல் கைப்பற்றிய ஆங்கிலேயர், மூன்று ஆட்சிப்பகுதிகளாக நீண்ட காலமாக இருந்த யாழ்ப்பாணம், கண்டி, கோட்டை (கொழும்பு) ஆட்சிப் பகுதிகளை 1833 இல் ஒன்றிணைத்து ஒரே ஆளுகையின் கீழ் கொண்டு வந்தனர்.

ஒன்றிணைப்புக்குமுன் 1827 இல் மேற்கொள்ளப்பட்ட குடிசன மதிப்பீட்டின்படி கிழக்கு மாகாணத்தில் 74.68% தமிழர்களும், 24.78% முஸ்லிம்களுமாக 99.4% தமிழ் பேசும் மக்கள் வாழ்ந்தனர். ஆக 0.5% சிங்கள மக்களே கிழக்கில் அக்காலத்தில் வாழ்ந்தனர்.



பாமரின் நூலுக்குச் சோல்பரி எழுதிய முன்னுரை

1833 இல் வடக்கு, கிழக்கு மாகாணங்களுடன் பல சிங்களப் பகுதிகள் ஒன்றிணைக்கப்பட்டு மாகாண ஆளுகை மேற்கொள் ளப்பட்ட போதிலும், வெவ்வேறு மொழி, கலை, பண்பாடுகளைக் கொண்ட தமிழ் - சிங்கள மக்களை ஒன்றாக வைத்து ஆளுகையை மேற்கொள்வதிலுள்ள சிக்கல்களை நன்குணர்ந்த ஆளுநர் சேர் வில்லியம் கிரேகரி அவர்கள் தமிழ்ப் பகுதிகளுடன் ஒன்றிணைக்கப்பட்ட சிங்களப் பகுதிகளை வேறாக்கி 1873 இல் புதிய மாகாணங்களை உருவாக்கினார். இன்றைய வடக்கு, கிழக்கு மாகாணங்கள் சேர் வில்லியம் கிரேகரி அவர்களினால் 1873 இல் தமிழர் பகுதிகள் என அடையாளங் காணப்பட்டன.

தமிழர் பகுதி என அவரால் அடையாளங் காட்டப்பட்ட பின் அடுத்த குடிசன மதிப்பீடு 1881 இல் மேற்கொள்ளப்பட்டது.

1881 இல் மேற்கொள்ளப்பட்ட குடிசன மதிப்பீட்டின்படி 59.11% தமிழர்களும், 33.71% முஸ்லிம்களுமாக 92.82% தமிழ் பேசும் மக்கள் கிழக்கு மாகாணத்தில் வாழ்ந்தனர். சிங்கள மக்கள் வீதம் 4.66% ஆகவும் ஏனையோரின் வீதம் 2.52% ஆகவும் இருந்தது.

டொனமூர் அரசியற் திட்டத்தின் கீழ் 10 அமைச்சுத்துறைகளில் ஐரோப்பியரிடமிருந்த மூன்று துறைகள் தவிர, ஏனைய துறை களுக்கான ஆளுகை சிங்களர் கைகளுக்கு மாறியது. அதன் பின் 1946 இல் எடுக்கப்பட்ட குடிசன மதிப்பீட்டின்படி தமிழர் 48.74% ஆகக் குறைந்தது. சிங்களவர் 9.87% ஆகக் கூடியது.

சோல்பரி அரசியல் திட்டத்தின் கீழ் சிங்களவரிடம் இலங்கையின் ஆளுகைப் பொறுப்பு முழுமையாகக் கைமாறியதன் பின், திட்டமிட்டுத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வந்த சிங்களக் குடியேற்றங்களினால் கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்கள் குடித்தொகை 41.93% ஆகக் குறைய, சிங்கள மக்கள் குடித்தொகை 24.92% ஆக உயர்ந்தது.

சிங்கள இனத்தவரிடம் ஆளுகைப் பொறுப்புக் கிடைப்பதற்கு முன்னர் 1921 இல், கிழக்கு மாகாணத்தில் 4.53% இருந்த சிங்களக் குடித்தொகை 60 ஆண்டு சிங்கள ஆளுகையில் 1981 இல் 24.92% ஆக (20%) உயர்ந்திருந்தபோது தமிழர் குடித்தொகை 14%ஆல் குறைந்தது.

1981 இற்குப் பின் நாடு முழுவதும் குடித்தொகைக் கணக்கெடுப்பு முறையாக மேற்கொள்ளப்படவில்லை. கிழக்கு மாகாணத்திலும் வடமாகாண எல்லைப்புறங்களிலும் பெருமளவு சிங்களக்குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டதுடன், அரசுப் படையினராலும் சிங்களக் குண்டர்களினாலும் பெருமளவு தமிழ் மக்கள் அச்சுறுத்தப்பட்டு தமது நிலங்களிலிருந்து விரட்டியடிக்கப்பட்டனர். 10 இலட்சத்திற்கும் கூடுதலான மக்கள் அருகிலுள்ள தமிழகத்திற்கும், மேலை நாடுகளுக்கும் புலம்பெயர்ந்து சென்று புகலிடம் தேடியுள்ளனர்.

இந்த நிலை தொடருமானால் விரைவில் இலங்கைத்தீவில் தமிழினம் முற்றாக அழித்தொழிக்கப்படும் நிலை ஏற்படும் என அஞ்சப்படுகிறது.

94 ஆண்டு கால (1827-1921) ஆங்கிலேயர் ஆட்சியில் 4% மட்டும் உயர்ந்த சிங்களக்குடித்தொகை 50 ஆண்டு காலச் சிங்கள ஆட்சியில் (1931-1981) 20.5% உயர்ந்திருப்பதையும் தமிழர் குடித்தொகை 14% ஆகக் குறைந்திருப்பதையும் 12 ஆம் பக்கத்திலுள்ள கிழக்கு மாகாணக் குடித்தொகைப் பட்டியல் தெள்ளத் தெளிவுபடுத்துகிறது.


04 **1911 தேர்தல் முடிவு**

மொத்த வாக்காளர் - 2957
வாக்களித்தவர்கள் - 2626
பொன். இராமநாதன் - 1645
மார்க்கஸ் பெர்னான்டோ - 981
கூடுதல் வாக்குகள் - 664


**1916 தேர்தல் முடிவு**
மொத்த வாக்காளர் - 3013
வாக்களித்தவர்கள் - 1752
பொன்.இராமநாதன் - 1704
டீ. எஸ். ஜெயவர்த்தனா - 48
கூடுதல் வாக்குகள் - 1656

- தமிழர் ஏமாற்றப்பட்ட வரலாறு தொடரும்....

# ஈழத்தமிழர்களை அடிமைப்படுத்தி
# 78 வது ஆண்டு
# பெப். 04. 1948 – பெப். 04.2026




ஆதி கால குடியிருப்புகள்




ஐரோப்பியர் வருகையின்
போது இருந்த அரசுகளும்
தமிழர் பிரதேசங்களும்








ஐரோப்பியர்
ஈழத்தீவுக்கு
வருகை தந்தபோது
தமிழர் செறிவாக
வாழ்ந்த விரதேசம்

## தமிழ் வன்னிமைகள்


1. பெரும் காற்றுப்பற்று
2. முசலிப்பற்று
3. மேற்குமுலை
4. சின்னச் செட்டிகுளம்
5. நடுச் செட்டிகுளம்
6. கிழக்கு முலை தெற்கு
7. கிழக்கு முலை வடக்கு
8. மேல் பற்று வடக்கு
9. மேல் பற்று கிழக்கு
10. மேல் பற்று தெற்கு
11. பனங்காமம்
12. உடையாவூர் (உடையார்கட்டு)
13. துனுக்காய்
14. கரைச்சி
15. புதுக்குடியிருப்பு
16. முள்ளியவளை
17. கரிக்கட்டு முலை வடக்கு
18. கரிக்கட்டு முலை தெற்கு
19. மகாவன்னி
20. திருகோணமலை
21. கொட்டியாரம்
22. கட்டுக்குளம்
23. மட்டக்களப்பு
24. மண்முனை
25. பழுகாமம்
26. போரதீவு
27. பாணமை
28. யாலா
29. புத்தளம்




ஆங்கிலேயர் தமிழர் தாயகத்தை 1833 இல் சிறீலங்காவுடன் இணைப்பதற்கு முன் இருந்த மாகாண அமைப்பு




ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் மாகாணப் பிரிவினை என்ற பெயரில் தமிழர் தாயகம் சிதைக்கப்பட்டபின் 1889 இல் இருந்த மாகாண அமைப்பு.




1889 ஆம் ஆண்டின் பின் தமிழர் நிலம் சிங்களக் குடியேற்றம்





# தமிழின அழிப்பு நினைவுப் பகிர்வு

# திருமலை நடராஜன் படுகொலை 04.02.1957



திருமலைத் தியாகி
நடராஜன்



திருகோணமலையில் பெப்ரவரி 4-ந் திகதி நடைபெற்ற துப்பாக்கி சம்பவத்தின் போது திரு. நடராஜன் என்பவர் தமிழ் மொழியின் உரிமையைப் பாதுகாப்பதற்காக உயிர் நீத்து வீரத் தியாகிகளின் வரிசையில் இடம் பெற்றார். மற்றும் பலர் துப்பாக்கித்துண்டுகளுக்கும், ரவைகளுக்கும் இலக்காகி காயமும், படுகாயமுற்றனர். இரத்தம் சிந்திய அத்தகைய வீரர்களில் சிலரை மேலே படத்தில் காண்க.



# உருத்திரபுரம் கூழாவடிச்சந்திப் படுகொலை 11.02.1996

கோயில் இக்கிராமத்திற்குச் சிறப்பைக் கொடுக்கின்றது. உருத்திரபுரம் வடக்கு, உருத்திரபுரம் மற்றும் சிவநகர்ப் பிரதேச மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு உருத்திரபுரம் வடக்கு கூழாவடிச் சந்தியில் சந்தை, வாசிகசாலை, கூட்டுறவுச்சங்கம் கமநல நிலையம், விளையாட்டுக்கழகம், கடைகள் என்பன அமைந்துள்ளன.

04.02.1992 அன்று சிறீலங்காவின் நாற்பத்து நான்காவது சுதந்திரநாள். தமிழர்கள் வாழும் பகுதியான வடக்குக் கிழக்குத் தவிர்ந்த ஏனைய இடங்களில் சுதந்திரநாளாக கொண்டாட்டங்கள் வெகுவிமரிசையாகக் கொண்டாடப்பட்டன. முற்பகல் 11:00 மணியளவில் விமானப்படையின் இரண்டு “பொம்பர்” விமானங்கள் உருத்திரபுரம் பகுதியை ஐந்து நிமிடங்களாக வட்டமிட்டன. அப்போது கூழாவடிப் பகுதியில் மக்கள் சந்தையில் அதிகளவில் கூடிநின்றனர். இவ் விமானங்களின் இரைச்சலினால் மக்கள் செய்வதறியாது அங்குமிங்கும் ஓடினர். சந்தியில் நின்ற பாரிய கூழாமரத்தின் கீழும், சந்தியிலுள்ள மதகின் கீழும் பாதுகாப்புத் தேடி ஒளிந்துகொண்டனர். இந்த நேரத்தில் குண்டுவீச்சு விமானங்கள் நான்கு குண்டகளை அப்பகுதி மீது அடுத்தடுத்து வீசின. அதில் ஒரு குண்டு வெடிக்கவில்லை ஏனைய குண்டுகள் மதகின் அருகில் வீழ்ந்து வெடித்தன.

இச்சம்பவத்தின் போது மதகினுள் பாதுகாப்புக்காகத் தஞ்சம் புகுந்திருந்த பொதுமக்கள் பதினொரு பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். இவர்களில் பெரும்பாலானோரின் உடல்கள் சிதைந்த நிலையிற்

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் ஈமச் சடங்குகள் மறுநாள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பொதும் “பொம்பர்” விமானங்கள் இந்தப் பகுதியல் குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டன.

உயிரிழந்தவர்களின் நினைவாக இப்பிரதேச மக்களாலும், பொது அமைப்புக்களினாலும் கூழாவடிச் சந்தியில் 2002 ஆம் ஆண்டு நினைவாலயம் திறக்கப்பட்டுள்ளது.

உருத்திரபுரத்தைச் சேர்ந்த டாக்டர் கே.வி.கே. திருலோகமூர்த்தி அகில இலங்கை சமாதான நீதவான், திடீர் மரண விசாரணை அதிகாரி சம்பவம் பற்றி தெரிவிக்கையில்.

“திடீர் மரண விசாரனை அதிகாரியாகவும், வைத்தியராகவும் உள்ள நான் 1991 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கிளிநொச்சி உருத்திரபுரம் கூழாவடிச்சந்தியில் தனியார் மருத்துவ மனையையும். அத்தோடு எனது அலுவலகத்தையும் நடத்தி வந்தேன். 1992 பெப்ரவரி மாதம் நான்காம் திகதியும் வழமை போல எனது வைத்தியசாலையைத் திறந்து நடத்திக்கொண்டிருந்தேன். அன்றைய நாள் சிறீலங்கா சுதந்திரம் அடைந்த நாள் என்பதால், பாடசாலை, அரச திணைக்களகங்கள் எல்லாவற்றிற்கும் விடுமுறை நாள். கூழாவடிச் சந்தியில் தான் சந்தையும் இருக்கின்றது. நேரம் நண்பகல் 11:00 மணியிருக்கும் சந்தையில் நிறையச் சனக்கூட்டமாக இருந்தது. அதுமட்டுமல்லாமல் பாடசாலை விடுமுறை என்பதால், பாடசாலை மாணவர்கள் அங்கு நின்று விளையாடிக்கொண்டும் நின்றார்கள். அந்த நேரம் சிறீலங்கா விமானப் படையினருடைய பொம்பர் விமானங்கள்



குள்ள எல்லோரையும் எனக்கு நன்றாகத் தெரியும் சிலர் பாலத்துக்குக் கீழ் ஓடினார்கள் டொக்ரர் வாங்க என்று சொல்லி என்னையும் கூப்பிட்டவர்கள் தான் நான் துவிச்சக்கர வண்டியிலே சிவநகர்ப் பக்கமாக ஓடி விட்டேன். இரண்டாவது குண்டு பாலத்துக்குள்ள விழுந்து வெடிச்சதால சம்பவ இடத்திலேயே ஒன்பது பேரும் உயிரிழந்தார்கள, இருவருக்கு காயம் ஏற்பட்டது. காயமடைந்த இருவருக்கும் நான் தான் மருந்து கட்டிவிட்டேன்.”

04.02.1992 அன்று உருத்திரபுரம் கூழாவடிச்சந்திப் படுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்:

1. நாகலிங்கம் தயாபரன் (மாணவன் - 14)
2. கணபதிப்பிள்ளை ஜெயலிங்கம் (மாணவன் - 08)
3. பாலசிங்கம் ஜெயதீஸ்வரன் -38)
6. கோபாலசிங்கம் ஜெயகோபால் (வியாபாரம் - 20)
7. பேனாட்சோ தயாபரன் (மாணவன் - 12)
8. சுந்தரலிங்கம் சந்திரகுமார் (மாணவன் - 16)
9. விநாயகமூர்த்தி கருணாகரன் (தொழிலாளி - 29)

காயமடைந்தவர்களின் விபரம்

1. கணபதிப்பிள்ளை இராசன் (மாணவன் - 16)
2. கணேசன் தவநேசன் (மாணவான் - 18)

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெற முடியவில்லை

# குமரபுரம் படுகொலை 11.02.1996

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் குமர புரம் என்ற இந்தக் கிராமம் இருக்கின்றது. திருகோணமலை மாவட்டத்தில் பாரதிபுரத்திற்கும் கிளிவெட்டிக்கும் இடையிலுள்ள இக்கிராமத்திலிருந்த குடும்பங்கள் பெரும்பாலும் விவசாயத்தை தொழிலாக கொண்டவர்களாவார்கள்.





குமரபுர கிராமத்தின் எல்லைகள் பின்வருமாறு:-
கிழக்கு: பிரசித்தி பெற்ற நீர்ப்பாசனத் திட்டமாகிய அல்லைக் குளம்
வடக்கு: இக்கிராமத்தின் வடக்கு எல்லையிலிருந்து இரண்டு கிலோ மீற்றர் தூரத்தில் ஒரு இராணுவ முகாம் இருக்கின்றது.
மேற்கு: மேற்கு எல்லையில் ஒரு சிறிய விளையாட்டு மைதானமும் பாற்பண்ணையும் இருக்கின்றது.
தெற்கு: இக்கிராமத்தின் தெற்கு எல்லை கிளிவெட்டித் துறை முகமாகும்.

இது ஒரு விவசாய தமிழ்க் கிராமம் ஆகையால் இங்கு பெரு மளவிலான ஓலைக்குடிசைகளும் ஆங்காங்கே சில கல் வீடுகளும் காணப்படுகின்றன. மூதூர் நகரத்திலிருந்து வெரு கல்முகத்துவாரம் வரை நீண்டுசெல்லும் பிரதான வீதி இக் கிராமத்தின் ஊடாகவே ஊடறுத்துச் செல்லுகிறது.

இங்கு பல இன மக்கள் வாழ்கின்ற போதிலும் அவர்களுக் கிடையிலான இன உறவுகள் பாதிப்படைந்திருக்கவில்லை. 1995ம் ஆண்டிற்குப் பின்னர் இராணுவக் கெடுபிடிகள் அதிகரித்திருந்ததன் காரணமாக மக்கள் இராணுவத்தினருக்கு அஞ்சி வாழும் நிலையேற்பட்டது. இவ்வாறான ஒரு இராணுவக் கெடுபிடியின் விளைவாகத்தான் 11.02.1996 அன்று இந்தப் படுகொலை சம்பவம் இடம்பெற்றது.

அன்று மாலை 4 மணியளவில் வெடிச்சத்தங்கள் கேட்டன. மக்கள் பயத்தால் இக்கிராமத்தின் கிழக்கு எல்லையான அல லைக்குளத்திற்கு அருகே நெடுக உயர்ந்து அடர்த்தியாக வளர்ந் திருந்த கிளிக்கண்ணா மரக்கூடலுக்குள் ஒளிந்து கொண்டார கள் வேறு சிலர் வீட்டிலேயே இருந்தார்கள். அவ்வாறு வீட்டில் இருந்தவர்களில் அழகுதுரை என்பவரது வீட்டில் எட்டுப் பேர் இருந்தார்கள். அந்த எட்டுப் பேரும் இராணுவத்தால் வீட்டுக் குள்ளேயே சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார்கள்.

இந்த ஊர்த் தலைவர் தமது சாட்சியத்தில் தன்னுடைய வீட்டில் தன்னுடன் கதைத்துக்கொண்டிருந்த இராசேந்திரம் கருணா கரன் என்பவர் தன் கண் முன்னாலேயே சூடுபட்டு இரத்த வெள் ளத்தில் இறந்து கிடந்ததைத் தான் பார்த்ததாகச் சொன்னார். இந்த இராணுவத்தினரின் அடாவடித்தனமான சூட்டில் தொழி லாளியான நாகராசா என்பவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி ஒரு கண்ணை முழுமையாக இழந்தார். மறுகண்ணில் பார்வைக் குறைபாட்டோடு இன்றும் அவர் வாழ்ந்து கொண டிருக்கின்றார்.

இந்தப் படுகொலைச் சம்பவத்தின்போது தனது எட்டு வயதுச் சகோதரனான அன்ரனி ஜோசெப் என்ற சிறுவனை வீதிவழி யாக கிளிவெட்டிக்கு சைக்கிளிற் கூட்டிக்கொண்டு சென்ற அருமைத்துரை தனலட்சுமி கீதா என்ற பதினாறு வயதுப் பாடசாலை மாணவி துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டு கடை ஒன்றுக்குள் தனது தம்பியுடன் தங்கியிருந்தபோது சிறீலங்கா இராணுவத்தினரால் வெளியே இழுத்துச் செல்லப்பட்டு ஒரு பாற்பண்ணைக் கட்டடத்துக்குள் வைத்து பல இராணுவச் சிப்பாய்களினால் பாலியல்வல்லுறவிற்கு உள்ளாக்கப்பட்டார். கடைசியில் கோப்ரல் குமார் என்ற இராணுவச் சிப்பாய் அவரைத்தானே சுட்டுக்கொன்றதாக நீதிமன்றத்தில் ஒத்துக் கொண்டார். ஏன் சுட்டுக்கொன்றாய் எனக் கேட்கப்பட்டபோது அந்தச் சிறுமி பல இராணுவச் சிப்பாய்களால் பாலியல் வல்லுற விற்குள்ளாக்கப்பட்ட போது உடம்பு முழுவதும் கசுகாயங் களுக்கு உள்ளாகியிருந்தாள். அவள் அணிந்திருந்த ஆடைகள் பல துண்டுகளாகக் கிழித்து வீசப்பட்டிருந்தன. அவள் உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்தாள் அவளின் பரிதாபகர மான நிலையைப் பார்த்தே சுட்டேன் என்றான்.

இந்தப் படுகொலையின்போது எல்லாமாக இருபத்தாறு தமிழர் கள் ஆண், பெண் என்ற வேறுபாடின்றியும் முதியவர், குழந் தைகள் என்ற வேறுபாடின்றியும் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். இருபத்திரண்டு பேர் சுட்டுப் படுகாயப்படுத்தப்பட்டார்கள். இறந்த எல்லோருடைய மரண அத்தாட்சிப் பத்திரங்கள் துப்பாக்கிச் சூட்டு காயங்களினாலும் நீண்ட நேரம் உரிய சிகிச்சை அளிக் கப்படாது கவனிப்பாரற்று விடப்பட்டமையாலும் ஏற்பட்ட மரணங்களென எழுதப்பட்டிருந்தன. அப்போது மூதூர் நீதி மன்ற நீதிபதியாகக் கடமையாற்றிய பொன்னையா சுவர்ணராச் இம்மரணங்களை அத்தாச்சிப்படுத்தியுள்ளார்.



இந்த படுகொலை தொடர்பாக ஒன்பது படையினர் கைது செய்யப் பட்டார்கள். பத்து ஆண்டுகளாக இந்தக்கொலை தொடர்பான வழக்கு திருகோணமலை நீதிமன்றில் நிலுவையிலுள்ளது. இந்த வழக்குடன் சம்பந்தப்பட்ட சான்றுப் பொருட்களும் தடை யப் பொருட்களும் மூதூர் நீதவான் நீதிமன் றத்தினால் கொழும்பு அரசாங்க பகுப்பாய்வுக் கூடத்திற்கு அனுப்பிவைக் கப்பட்டன. ஆனால், அவையாவும் 2005ம் ஆண்டு ஏற்பட்ட விபத்தின் போது எரிக்கப்பட்டுவிட்டன. இந்நிலையில் இந்த வழக்கின் அடுத்த கட்ட நகர்வு என்ன என்பதே நீதித்துறை வட்டாரத்தில் எழுப்பப்படும் கேள்வியாகும். 11.02.1996 அன்று குமரபுரம் இனப்படுகொலையில் கொல்லப் பட்டோர் விபரம்:

01. இராமஜெயம்பிள்ளை காமலேஸ்வரன் (வயது 14 - மாணவன்)
02. இராசேந்திரம் கருணாகரன்
03. கனகராசா சபாபதிராசா (வயது 16 - கமம்)
04. கிட்டினர் கோவிந்தன்
05. பாக்கியராசா வசந்தினி
06. தங்கவேல் கலாதேவி (வயது 11 - மாணவி)
07. ஆனந்தன் அன்னம்மா (வயது 28)
08. அமிர்தலிங்கம் ரஜனிக்காந்
09. அழகுதுரை பரமேஸ்வரி (வயது 27)
10. அருமைத்துரை வள்ளிப்பிள்ளை
11. அருமைத்துரை தனலெட்சுமி (வயது 16 - மாணவி)
12. அருணாசலம் கமலாதேவி
13. அருணாசலம் தங்கவேல்
14. சோமு அன்னலட்சுமி
15. செல்லத்துரை பாக்கியராசா (வயது 26 - தொழிலாளி)
16. சுந்தரலிங்கம் பிரபாகரன் (வயது 13)
17. சுந்தரலிங்கம் சுபாசினி (வயது 04 - மாணவன்)
18. சுப்பிரமணியம் பாக்கியம்
19. சுப்பையா சேதுராசா (வயது 72 – தொழிலாளி)
20. சிவக்கொழுந்து சின்னத்துரை (வயது 58 - கமம்)
21. சிவபாக்கியம் பிரசாந்தினி
22. சண்முகநாதன் நிதாகரன் (வயது 11 - மாணவன்)
23. வடிவேல் நடராசா (வயது 27 - தொழிலாளி)
24. விநாயகமூர்த்தி சுதாகரன் (வயது 13 - மாணவன்)

காயமடைந்தோர் விபரம்:

01. இராசதுரை சாத்தியப்பிரியா (வயது 24 - சுயதொழில்)
02. இராசதுரை சின்னவன்
03. நாகராசா கிருபைராணி (வயது 35 - வீட்டுப்பணி)
04. நாகராசா சுதாகரன்
05. குலேந்திரன் தவமணிதேவி (வயது 24 - வீட்டுப்பணி)
06. கிட்ணன் (வயது 04)
07. கணபதிப்பிள்ளை நிரோஜன் (வயது 04 - குழந்தை)
08. கணபதிப்பிள்ளை குகதாசன் (வயது 12 - சிறுவன்)
09. கணபதிப்பிள்ளை குமுதினி
10. பாக்கியராசா (வயது 35)
11. பழனிவேல் யோகராணி
12. தம்பிப்பிள்ளை சிற்றம்பலம்
13. திருப்பதி மஞ்சுளா (வயது 12 - சிறுமி)
14. மாரிமுத்து செல்லாச்சியார்
15. மகேஸ்வரன் குவேந்தினி (வயது 06— சிறுமி)
16. மகேஸ்வரன் வனஜா
17. அழகுதுரை சர்மி (வயது 12 - சிறுமி)
18. அரசரட்ணம் நாகராஜா
19. மோசஸ் அன்ரனி யோசப் (வயது 02 - குழந்தை)
20. சித்திரவேல் வேல்நாயகம்
21. சிற்றம்பலம் கோணேஸ்வரன்
22. ராஜா இன்பமலர் (வயது 24)

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.

**ஒரு விடுதலை இயக்கத்துக்குப் பின்னால் மக்கள் அணிதிரண்டு, அந்த இயக்கத்தின் இலட்சியத்தில் பற்றுக்கொண்டு போராட்டத்தில் பங்கு கொள்ளும் பொழுதுதான் விடுதலை சாத்தியமாகிறது.**

–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–

# தம்பலகாமம் – பாரதிபுரம் படுகொலை – 01.02.1998

சிறீலங்கா சுதந்திரமடைந்த நாளில் இருந்து, தமிழ்மக்கள் எதிர் கொண்ட, அவர்களை உலுக்கியெடுத்தபடுகொலைகள் ஏராளம். அதிலும் கிழக்கு மாகாணம்படுகொலைகளின் கள மாகவே இருந்தது. காரணம் சிறீலங்கா அரசினால் மேற்கொள் ளப்பட்ட திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களும் அத்து மீறிய குடியேற்றங்களும் கிழக்கு மாகாணத்தை வசப்படுத்த முற்பட்டமைதான். தமிழர் பிரதேசங்களில் படுகொலைகளை நிகழ்த்தி விரட்டியடிப்பதன் மூலம் சிங்களமயமாக்கலைச் செய்வதை உத்தியாகக்கொண்டிருந்தனர். நில அபகரிப் பிற்காக, கிராமப்படுகொலைகள் சத்தமின்றி நடந்தேறின. பாலம்போட்டாறு, ஜெயபுர ஆனதும்ம முதலிக்குளம் மொற வெவ ஆனதும் இப்படித்தான். இதன் தொடர்ச்சியாக, தம்பல காமம் வடக்கில் குடியேற்றப்பட்ட சிங்களவர்கள் தமது எல்லை களை விரிவு படுத்தும் பொருட்டு தம்பலகாமத்தின் ஏனைய பகுதிகளை நோக்கித் தாக்குதல்களை ஆரம்பித்தனர். அதில்தான், 01.02.1998 அன்று பாரதிபுரத்தில் நடந் தேறியது அந்தக் கோரச்சம்பவம்.





சகோதரர்கள்

பெயர் : அ. சுரேந்திரன்
பிறப்பு : 08-03-1984
வயது : 13 மாணவன்
விலாசம் : புதுக்குடியிருப்பு, தம்பலகமம்.

பெயர் : அ. கஜேந்திரன்
பிறப்பு : 24-03-1980
வயது : 17 மாணவன்
விலாசம் : புதுக்குடியிருப்பு, தம்பலகமம்.

பெயர் : நா. பவளநாதன்
பிறப்பு : 04-09-1968
வயது : 29
விலாசம் : இல. 256/22, தில்லைநகர் வீதி, திருகோணமலை.

பெயர் : சு. தியாகரன்
பிறப்பு : 20-09-1975
வயது : 23
விலாசம் : இல. 748, பொற்கேணி, தம்பலகமம்.

பெயர் : மு. ஜனகன்
பிறப்பு : 03-06-1980
வயது : 18
விலாசம் : புதுக்குடியிருப்பு, தம்பலகமம்.

பெயர் : கு. சிவராஜன்
பிறப்பு : 16-12-197[illegible]
வயது : 2[illegible]
விலாசம் : புதுக்குடியிருப்பு, தம்பலகமம்.

பெயர் : ஆ. சேகர்
பிறப்பு : 14-06-1966
வயது : 32
விலாசம் : இல. 740, பொற்கேணி, தம்பலகமம்.

பெயர் : பொ. கனகசபை
பிறப்பு : 23-06-1951
வயது : 47
விலாசம் : இல. 740, பொற்கேணி, தம்பலகமம்.

பொதுவாக, எல்லைக் கிராமங்களில் நடக்கும் படுகொலைகள், தாக்குதல்களை சிங்கள-தமிழ் மக்களிடையேயான இனக் கலவரம் என வரையறைப்படுத்தி, சிறீலங்கா அரசு அதைக் கண்டு கொள்வதேயில்லை. இது சிங்களத் தாக்குதலாளிக ளுக்கு வாய்ப்பாக இருந்தது மட்டுமன்றி, அரசின் ஊக்கு விப்பாகக்கூட அமைந்தது. ஆனால் தம்பலகாமத்தில் நடந்த படுகொலையில் காடையர்களுடன் காவல்துறையும் சேர்ந்து கொண்டது தான் மிகப்பெரிய அவலம்.

தம்பலகாமம், திருகோணமலை மாவட்டத்தில், விவசாயக் கிரா மங்களைக் கொண்ட பிரதேசம். திருகோணமலை நகரத்தி லிருந்து பன்னிரண்டுமைல் தொலைவில் அமைந்துள்ளது. சம்பந்தரால் பாடல் பெற்ற தலமான திருக்கோணேசரத்துடன் தொடர்புடைய ஆதிகோணேசுரர் ஆலயத்தைக் கொண்ட மைந்த சிறப்புப் பெற்றது. பாரதிபுரம், தம்பலகாமத்தின் பசுமை யான கிராமங்களில் ஒன்று. கந்தளாய்க்குளத்தின் நீரப்பாசனத் தால் விவசாயத்தில் தன்னிறைவைக் கொண்டிருந்த வளமான கிராமம். இதன் காரணமாகவே சிங்களவர்களின் இலக்காக மாறியது.

1990களின் பிற்பகுதியில் தம்பலகாம உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இருந்த அத்தனை தமிழ்க்கிராமங்களும் இனத்தாக் குதலுக்கு உள்ளாகின. மனிதாபிமானமற்ற தாக்குதல்களால் அப்பிரதேசம் ஒட்டுமொத்தமான, பாரிய இடப்பெயர் வைச் சந்தித்தது. பெருமளவு மக்கள் வடபுலம் நோக்கி ஓடிவந்தனர். எஞ்சியோர் அகதி முகாம்களிலும், உறவினர் வீடுகளிலும் தஞ்சமடைந்தனர். கிராமத்து மண்ணையே தமது சீவனோ பாயத்திற்காக நம்பியிருந்த மக்களால் சிலகாலங்கள் கூட நீடிக்க முடியவில்லை. பசி, பஞ்சம், வறுமை வாட்டியெடுக்கத் தொடங் கியதால் உயிரைப் பணயம் வைத்து தமது சொந்த இடங்க ளுக்குச் திரும்பவும் செல்லத் தொடங்கினர். இனவாத அட்ட காசங்கள்சற்றே தணிந்திருந்ததால், சிங்களவர்களால் பறிக் கப்பட்ட கிராமங்கள் போக, மீதி இடங்களில் தமது இருப் பிடங்களை அமைத்துக்கொண்டனர்.

அவ்வாறு மீளக்குடியமர்ந்த கிராமங்களான புதுக்குடியிருப்பு, பொற்கேணி, பாரதிபுரம் போன்றவற்றை இலக்கு வைத்துப் பேரினவாதிகள் மீண்டும் தாக்கத்தொடங்கினர். அதன் உச்சக்கட்டமாக, தமிழர்களை அச்சமுறுத்தும் நோக்கில் ஒரு கோரப்படுகொலையை பாரதிபுரத்தில் நிகழ்த்தி முடித்தது சிறீலங்கா காவல்துறை.

01-02-1998 அன்று காலை, மெது வாக இருள் அகன்று கொண்டிருந்த வைகறை நேரத்தில் துயிலெழுந்த கிராமம் தனக்கான அன்றைய பணி களுக்காக தயாராகிக்கொண் டிருந்தது. ஏறக்குறைய 5.00 மணிக்கும் 6.00 மணிக்கும் இடைப்பட்ட அந்த விடியல் பொழுதில், காவல்துறை நிலையத்தி லிருந்த காவல்துறையினரும் ஊர் காவல் படையினரும், அப்பகுதிகளில் வயல் வெளிக்கும், பணிக்கும் சென்று கொண்டிருந்தவர்களை விசாரணை எனக் கூட்டிச் சென்று காவலரனின் முன்னால் நிற்கவைத்தனர். காரணம் ஏதுமின்றி இழுத்துச் செல்லப்பட்ட அப்பாவிகள் நிதானிக்கும் முன்பு, சுற்றி நின்று சுட்டுத் தள்ளினர். மொத்தமாக எட்டு உடல்கள், சில கணங்களில் பிணமாகச் சரிந்தன. தொடர்ந்து நாலா பக்கமும் இலக்கின்றிச் சுட்டதில் பதி னேழு பேர் படுகாயமடைந்தனர். உயி ரிழந்த எட்டுப்பேரில், நான்கு பேர் பள் ளிப்படிப்பை முடிக் காத மாணவர் கள். அவர்களில் இருவர் பதின்ம வயதில் இருந்த சகோதரர்கள்.



சுட்டுக்கொன்ற பின்னும் கொலை வெறி அடங்காத காவல் துறை, பிண ங்களை உதைத்தும் குத்தியும் உருக் குலைத்தது. உயிரிழந்த ஆறுமுகன் சேகர் என்பவரின் ஆண் உறுப்பை வெட்டி அவரது வாய்க்குள் திணித்து விட்டுச் சென்றது.

அதிகாலை வேளையில் நடந்த கோரக் கொலையால் தமபலகாமம் மீண்டும் ஒருமுறை கதிகலங்கியது. பிணமாகப் பிள்ளையைப் பார்த்த பெற் றோர், தந்தையைப் பார்த்த குழந்தைகளின் கதறல், அந்த வை கறைப் பொழுதை அதிரவைத்தது. அவர்களின் கண்ணீரில் அந்தக் கிராமமேநனைந்தது. அடுத்து என்ன நடக்கப்போகின்றதோ என்ற அச்சத்தில் பலர் உறைந்து போயிருந்தனர். அன்று விழுந்த பேரிடியால், மீண்டும் தமது கிராமத்தை விட்டு இடம் பெயரத்தொடங் கினார்கள்.

வழமையாக இத்தகைய தாக்குதல்களை இனவாதம் என முடிச்சிடும் சிறீலங்கா அரசு, இம்முறை காவல்துறையின் அடாவடி நேரடியான சாட்சியங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டதால், கண்துடைப்பாக ஒருவிசாரணையை மேற்கொண்டது. விசாரணையில் பத்துக்கும் மேற்பட்ட காவல்துறையினரும் ஊர்காவல் படையினரும் சம்பந்தப்பட்டிருப்பதாக நிறுவப்பட் டபோதும், இதுவரை அந்தக் குற்ற அறிக்கை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுமில்லை, குற்றவாளிகள் தண்டிக்கப் படவுமில்லை.

பாரதிபுரம் 01.02.1998 அன்றைய சம்பவத்தில் அநியாயமாகக் கொல்லப்பட்ட அப்பாவிகள் விபரம்

01. அமிர்தலிங்கம் சுரேந்திரன் (மாணவன் - 14)
02. அமிர்தலிங்கம் கஜேந்திரன் (தொழிலாளி - 18)
03. முருகேசு ஜனகன் (மாணவன் - 17)
04. நாதன் பவளநாதன் (தொழிலாளி - 45)
05. சுப்பிரமணியம் திவாகரன் (-)
06. குணரத்தினம் சிவராஜன் (-)
07. ஆறுமுகம் சேகர் (கமம் )
08. பொன்னம்பலம் கனகசபை (கமம்)

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விரபங்களையும் பெறமுடியவில்லை

# கிளிநொச்சியில் உள்ள ஐ.நா. வளாகங்கள் மீது சிறீலங்கா விமானப்படை தாக்குதல் – 05.02.2008

செவ்வாய்க்கிழமை மாலை (05.02.2008) அன்று சிறீலங்கா விமானப்படை (SLAF) கிளிநொச்சி நகரத்தின் புறநகர்ப் பகுதியில் குண்டுவீசி, கந்தசாமி கோயிலுக்கு அருகிலுள்ள யுனிசெஃப் அலுவலகத்திலிருந்து 300 மீட்டர் தொலைவில் பொது மக்கள் குடியிருப்புகள் உள்ள ஐ.நா. வளாகப் பகுதியின் மீது வான்வழி குண்டுகளை வீசியதில் இரண்டு பொதுமக்கள் கொல்லப்பட்டனர் மற்றும் இரண்டு பேர் காயமடைந்தனர். இந்தத் தாக்குதலில் UNDP மற்றும் UNHCR ஊழியர்கள் பயன்படுத்தும் ஒரு விடுதி சேதமடைந்தது.





பிற்பகல் 3:30 முதல் 3:45 வரை இரண்டு சிறீலங்கா விமானப்படை (SLAF) கிளிநொச்சி நகரத்தின் புற நகர்ப் பகுதியில குண்டுவீச்சு விமானங்கள் ஆறு குண்டுகள் வீசினர்.

கனேசபுரம் கிளிநொச்சியைச் சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தந்தையான சுவாமிநாதன் கோகுலநாதன் (48) மற்றும் முல்லைத்தீவு ஆயங்குளம் பகுதியைச் சேர்ந்த சின்னராஜா (43) ஆகிய இரு பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

படுகாயமடைந்த இரு பொதுமக்கள் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு, கிளிநொச்சி கனேசபுரத்தைச் சேர்ந்த 34 வயதான பசுபதி உமாராஜா மற்றும் கிளிநொச்சி கனேசபுரத்தைச் சேர்ந்த சண்முகராஜா குணராஜா, 32 என அடையாளம் காணப்பட்டனர்.

குறிப்பு:- இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.






# ‘பாதுகாப்பு வலயம்’ மீது 5,000 க்கும் மேற்பட்ட குண்டுத் தாகுதல்கள் – 02.02.2009

சிறீலங்கா இராணுவம் (SLA) திங்கட்கிழமை முழுவதும் அனைத்து திசைகளிலிருந்தும் பொதுமக்கள் அகதிகள் முகாம்கள் மீது பீரங்கி குண்டுகளை வீசியது. கண்மூடித்தனமான சரமாரி தாக்குதலில் குறைந்தது நூறு பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கலாம் அல்லது ஊனமுற்றிருக்கலாம். முழு மக்களும் நாள் முழுவதும் பதுங்கு குழிகளுக்குள் இருக்க வேண்டிய கட்டாயத்தில் இருப்பதால் உயிரிழப்புகள் கணக்கிட முடியாதவை என்று தமிழ்நெட் நிருபர் தெரிவித்துள்ளார். “பாதுகாப்பு வலயத்திற்குள் இதுவரை சிறீலங்கா இராணுவம் நடத்திய மிக மோசமான நாள் திங்கட்கிழமை.”





5,000 க்கும் மேற்பட்ட பீரங்கி குண்டுகள் மற்றும் மல்டி பீப்பாய் ராக்கெட் லாஞ்சர் (MBRL) ராக்கெட்டுகள் இலங்கை இராணுவத்தால் வீசப்பட்டுள்ளன.

புதுக்குடியிருப்பு (PTK) மற்றும் உடையார்கட்டு ஆகிய இரண்டு மருத்துவமனைகளும் திங்கட்கிழமையும் ஷெல் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளன.

தெய்வீபுரம், வள்ளிபுனம், சுதந்திரபுரம், உடையார்கட்டு, புதக்குடியிருப்பு ஆகிய இடங்களில் ஆயிரக்கணக்கான எறிகணைகள் தாக்கியுள்ளன.

# புதுக்குடியிருப்பு மருத்துவமனை மீது சிறீலங்கா இராணுவத்தினர் நடத்திய எறிகணைத் தாக்குதலில் 9 பொது மக்கள் பலி – 02.02.2009

புதுக்குடியிருப்பு (PTK) மருத்துவமனையில் ஞாயிற்றுக்கிழமை இரவு சிறீலங்கா இராணுவத்தினர் நடத்திய எறிகணைத் தாக்குதலில் நோயாளிகள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் உட்பட ஒன்பது பொதுமக்கள் கொல்லப்பட்டனர். 15க்கும் மேற்பட்ட பொதுமக்கள் காயமடைந்தனர். மருத்துவமனை மீதான கண்மூடித்தனமான தாக்குதல் மருத்துவமனையில் உள்ள நூற்றுக்கணக்கான காயமடைந்த பொதுமக்களிடையே பீதியையும் பதற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது. பொதுமக்கள் மருத்துவ வசதியின் மீது எறிகணைத் தாக்குதல் நடத்த வேண்டாம் என்று மருத்துவ அதிகாரிகள் பலமுறை அழைப்பு விடுத்த போதிலும், சமீபத்திய நாட்களில் மருத்துவமனை மீது இரண்டு முறை எறிகணைத் தாக்குதல் நடத்தப்பட்டதால் அதிர்ச்சியடைந்ததாக ICRC வெளியிட்ட பொது அறிக்கைக்கு சில மணி நேரங்களுக்குள் இந்த எறிகணைத் தாக்குதல் நடந்துள்ளது.







“இலங்கையின் குழப்பமான போர் மண்டலத்தில் உள்ள ஒரு மருத்துவமனையை மூன்று பீரங்கித் தாக்குதல்கள் நடத்தி, அதன் குழந்தைகள் பிரிவு மற்றும் அதன் பெண்கள் பிரிவைத் தாக்கி ஒன்பது நோயாளிகளைக் கொன்றன,” என்று ICRC-ஐ மேற்கோள் காட்டி அசோசியேட்டட் பிரஸ் அறிக்கை தெரிவித்துள்ளது.

முன்னதாக, வன்னி பாதுகாப்புப் படைத் தலைமையகத்தின் சிறீலங்கா இராணுவத் தளபதி, முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபருக்கு மருத்துவமனையை பாதுகாப்பு மண்டலத்திற்கு மாற்றுமாறு அறிவுறுத்தியிருந்தார், அதிகாரிகளுக்கு இறுதி எச்சரிக்கை விடுத்தார். இருப்பினும், தாக்குதல்கள் தொடர்ந்ததால், ICRC மற்றும் UN அதிகாரிகள் PTK-யில் உள்ள மருத்துவமனையில் தஞ்சம் அடைய வேண்டியிருந்தது.

நான்காவது ஜெனீவா மாநாட்டின் பிரிவு 18, காயமடைந்தவர்கள் மற்றும் நோய்வாய்ப்பட்டவர்கள், பலவீனமானவர்கள் மற்றும் மகப்பேறு வழக்குகளுக்கு சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யப்பட்ட சிவில் மருத்துவமனைகள் எந்த சூழ்நிலையிலும் தாக்குதலுக்கு உள்ளாகக்கூடாது, ஆனால் மோதலில் ஈடுபட்டுள்ள தரப்பினரால் எப்போதும் மதிக்கப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டும் என்று கூறுகிறது.

இலங்கை (சிலோன்) முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது ஜெனீவா உடன்படிக்கைகளில் கையொப்பமிட்டுள்ளது, மேலும் 1949 ஆம் ஆண்டின் நான்காவது ஜெனீவா உடன்படிக்கையை, 23.02.1959 அன்று அதனுடன் இணைத்துக் கொண்டு அங்கீகரித்தது.

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.

# உடையார்கட்டு மருத்துவமனை மீது சிறீலங்கா இராணுவம் தாக்குதல்; ஒருவர் பலி – 02.02.2009

திங்கட்கிழமை மீண்டும் வன்னியில் உள்ள இரண்டு மருத்துவமனைகள் மீதும் சிறீலங்கா இராணுவம் பீரங்கி குண்டுகளை வீசியது. உடையார்கட்டு தற்காலிக மருத்துவமனையில் (கிளிநொச்சி மருத்துவமனை) காயமடைந்த நோயாளியை கவனித்துக் கொண்டிருந்த ஒரு செவிலியர் மருத்துவமனை மீது 3 குண்டுகள் விழுந்ததில் கொல்லப்பட்டார். புதுக்குடியிருப்பு (PTK) அருகே நிறுத்தப்பட்டுள்ள ICRC/SLRC ஊழியர்கள் உட்பட 10 பொதுமக்கள் காயமடைந்ததாக பொதுமக்கள் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. மருத்துவமனை அதிகாரிகளால் விவரங்களைச் சரிபார்க்க முடியவில்லை.





சாலைகள் மற்றும் மருத்துவமனைகளைச் சுற்றியுள்ள பகுதிகள் தொடர்ச்சியான பீரங்கித் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளதால் காயமடைந்தவர்களை மருத்துவமனைகளுக்கு யாராலும் கொண்டு செல்ல முடியவில்லை.

# சிறீலங்கா இராணுவத்தினர் குறுகிய தூர மோட்டார் குண்டுகளைப் பயன்படுத்தியும் மற்றும் துப்பாக்கிச் சூடுத் தாக்குதலில் பொதுமக்கள் படுகொலை – 05.02.2009

சுதந்திரபுரம் மற்றும் இருட்டுமடு பொதுமக்கள் அகதிகள் முகாம்களில் நாள் முழுவதும் பதுங்கு குழிகளில் இருந்து மக்கள் வெளியே வர அனுமதிக்காத வகையில் சிறீலங்கா இராணுவம் வியாழக்கிழமை ஷெல் தாக்குதல் நடத்தியது. மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்ட பதினாறு பொது மக்களின் உடல்களில் இரண்டு துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் இருந்ததாக மருத்துவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. பாதுகாப்பு வலயத்திற்குள் 6,000 க்கும் மேற்பட்ட குண்டுகள் வெடித்ததாக தமிழ்நெட் நிருபர் தெரிவித்தார். செய்தி வெளியாகும் போது கேட்கும் ஷெல் தாக்குதல்களுக்கு மத்தியில். சுந்தந்திரபுரம் மற்றும் இருட்டுமடு மீது ஷெல்களை வீச சிறீலங்கா இராணுவம் பல குறுகிய மற்றும் நடுத்தர தூர மோட்டார் குண்டுகளை பயன்படுத்தியுள்ளது.



கடற்கரைப் பகுதியிலிருந்து காலை 11:30 மணி வரை சுத்தந்திரபுரம் மருத்துவமனை அருகே தோட்டாக்கள் வந்தன.

சுத்தந்திரபுரம் மற்றும் இருட்டுமடுவின் பல இடங்களில் கவனிக்கப்படாத சடலங்கள் கிடந்ததாக பொதுமக்கள் தெரிவித்தனர்.

புதன்கிழமை பாதுகாப்பு வலயத்திற்குள் ஷெல் தாக்குதல்களிலும், புதுக்குடியிருப்பு (PTK) இல் ICRC மற்றும் UN ஊழியர்கள் தப்பி ஓட வேண்டிய கட்டாயத்திலும் 50 க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டனர். புதன்கிழமை மட்டும் சுமார் 100 பொதுமக்கள் காயமடைந்தனர்.

மருத்துவமனை பீரங்கித் தாக்குதலுக்கு உள்ளானதால், புதன்கிழமை PTK மருத்துவமனையில் இருந்த பெரும்பாலான நோயாளிகள் வேறு இடத்திற்கு மாற்றப்பட்டனர், மேலும் மருத்துவமனை மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் பீரங்கித் தாக்குதல்களும் நடத்தப்பட்டன. கொழும்பில் உள்ள ஒரு ஐ.நா. அதிகாரி செய்தியாளர்களிடம் கூறுகையில், மருத்துவமனை மீதான தாக்குதலில் கொத்து குண்டுகள் பயன்படுத்தப்பட்டதாக கூறினார்.

புதன்கிழமை சிறீலங்கா இராணுவத்தின் பீரங்கித் தாக்குதலுக்கு உள்ளான புதுக்குடியிருப்பு மருத்துவ மனையில் நோயாளிகள் கொல்லப்பட்டனர், சிறீலங்கா பாதுகாப்புச் செயலாளர் கோத்தபய ராஜபக்ஷ PTK மருத்துவ மனையை பாதுகாப்பு மண்டலத்திற்கு மாற்ற உத்தரவிட்டதால், அதை ஒரு முறையான இராணுவ இலக்காகக் கருதுவதாகக் கூறியதைத் தொடர்ந்து.

# பொன்னம்பலம் மருத்துவமனை மீது சிறீலங்கா விமானப்படையின் குண்டுவீச்சுத் தாக்குதலில் 61 நோயாளிகள் பலி – 07.02.2009

புதுக்குடியிருப்பில் உள்ள பொன்னம்பலம் நினைவு மருத்துவமனை மீது சிறீலங்கா விமானப்படை குண்டுவீச்சு நடத்தியதில் ஏராளமானோர் கொல்லப்பட்டனர் மற்றும் பலர் காயமடைந்தனர் என்று PTK-வில் இருந்து பெறப்பட்ட ஆரம்ப அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இதற்கிடையில், சிறீலங்கா இராணுவம் மருத்துவமனை மீது கண்மூடித்தனமான பீரங்கித் தாக்குதலை நடத்தியது, உயிர் பிழைத்த நோயாளிகளை மீட்பதை முற்றிலுமாக முடக்கியது. விமானத் தாக்குதலில் 61 நோயாளிகள் கொல்லப்பட்டனர். பாதுகாப்பு வலயத்திற்கு வெளியே உள்ள மருத்துவமனைகள் முறையான இலக்குகள் என்று சிறீலங்கா பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய கூறியதைத் தொடர்ந்து, பாதுகாப்பு மண்டலத்திற்கு உள்ளேயும் வெளியேயும் உள்ள மருத்துவ வசதிகளைத் தாக்க வேண்டாம் என்று போரிடும் தரப்பினரை அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் ஹிலாரி கிளிண்டன் மற்றும் பிரிட்டிஷ் வெளியுறவுச் செயலாளர் டேவிட் மிலிபாண்ட் வலியுறுத்தியதைத் தொடர்ந்து இந்த குண்டுவீச்சு நடந்துள்ளது.



பொன்னம்பலம் நினைவு மருத்துவமனை என்பது 1996 ஆம் ஆண்டு செயல்படத் தொடங்கிய ஒரு நவீன அரசு சாரா மருத்துவ வசதி ஆகும். போர் ஆண்டுகளில் யாழ்ப்பாண மாவட்டத்தில் அர்ப்பணிப்புடன் பணியாற்றியதற்காக நன்கு அறியப்பட்ட டாக்டர் பொன்னம்பலம் நினைவாக இது பெயரிடப்பட்டது.

CFA காலத்தில் பல வெளிநாட்டு நிபுணர்களும் புலம்பெயர் மருத்துவர்கள் மருத்துவமனையை நவீன வசதியாக மேம்படுத்துவதில் தீவிரமாக ஈடுபட்டிருந்தனர்.

“மருத்துவ சேவையின் நிலையான நிறுவனங்கள் மற்றும் நடமாடும் மருத்துவ பிரிவுகள் எந்த சூழ்நிலையிலும் தாக்கப்படக்கூடாது, ஆனால் எல்லா நேரங்களிலும் மோதலில் ஈடுபட்டுள்ள தரப்பினரால் மதிக்கப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டும்” என்று முதல் ஜெனீவா மாநாடு கூறுகிறது.

நான்காவது ஜெனீவா மாநாட்டின் பிரிவு 18, காயமடைந்தவர்கள் மற்றும் நோயாளிகள், பலவீனமானவர்கள் மற்றும் மகப்பேறு வழக்குகளுக்கு சிகிச்சை அளிக்க ஒழுங்கமைக்கப்பட்ட சிவில் மருத்துவமனைகள் எந்த சூழ்நிலையிலும் தாக்குதலுக்கு உள்ளாகக்கூடாது, ஆனால் எல்லா நேரங்களிலும் மோதலில் ஈடுபட்டுள்ள தரப்பினரால் மதிக்கப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டும் என்று கூறுகிறது.

இலங்கை (சிலோன்) முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது ஜெனீவா உடன்படிக்கைகளில் கையொப்பமிட்டுள்ளது, மேலும் 1949 ஆம் ஆண்டின் நான்காவது ஜெனீவா உடன்படிக்கையை, 23.02.1959 அன்று அதனுடன் இணைத்துக் கொண்டு அங்கீகரித்தது.

# 'பாதுகாப்பு வலயம்' மீது சிறீலங்கா இராணுவத்தின் தாக்குதலில் 80 பொதுமக்கள் கொல்லப்பட்டனர் – 08.01.2009



சிறீலங்கா இராணுவம் (SLA) "பாதுகாப்பு வலயம்" மீது கண்மூடித்தனமான பீரங்கித் தாக்குதல்களைத் தொடர்ந்தது. இதில் 80 க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டனர் மற்றும் 200 பேர் காயமடைந்தனர். பெரும்பாலான உயிரிழப்புகள் சாலைகளில் பதிவாகியுள்ளன. சிறீலங்கா இராணுவத்தால் சுடப்பட்ட ஒவ்வொரு ஷெல்லும் பொதுமக்கள் அடர்த்தியான மக்கள் வசிக்கும் பகுதியில் வெடித்துச் சிதறியது. மேலும் மக்கள் பதுங்கு குழிகளுக்குள் இருக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இருப்பினும், சுதந்திரபுரத்திற்கு அருகில் உள்ள சிறீலங்கா இராணுவத்தின் கைகளில் சிக்கிவிடுவார்கள் என்று மக்கள் அஞ்சியதால், அவர்கள் ஷெல் தாக்குதலுக்கு மத்தியில் ஆயிரக்கணக்கானோர் தமிழீழ விடுதலைப் புலிகளின் எல்லைக்குள் தப்பிச் சென்று கொண்டிருந்தனர். வழியில் இறப்புகள் மற்றும் காயங்களை எதிர்கொண்டதாக வன்னியில் உள்ள தமிழ்நெட் நிருபர் தெரிவித்தார். நேரில் கண்ட சாட்சிகளின் அறிக்கைகளின்படி, சுதந்திரபுரம் மற்றும் தெய்வபுரம் இடையேயான பரந்தன் புதுக்குடியிருப்பு சாலையில் 2.5 கி.மீ நீளமுள்ள பகுதியில் குழந்தைகள் மற்றும் பெண்கள் உட்பட 40 பொதுமக்களின் சடலங்கள் காணப்பட்டன.



தற்காலிக மருத்துவமனைக்கு முன்னால் உள்ள மரங்களுக்கு அடியில் சிகிச்சை பெற்று வரும் காயமடைந்த பொதுமக்கள். சிறீலங்காப் படைகளால் மருத்துவ வசதிகள் குறிவைக்கப்படுவதால், தற்காலிக மருத்துவமனை அமைந்துள்ள இடத்தின் பெயரைக் குறிப்பிடுவதை தமிழ்நெட் தவிர்க்கிறது.

வாகீசன் சாலையில் 1.5 கி.மீ நீளத்தில் மேலும் 20 உடல்கள் காணப்பட்டன. வல்லிபுனத்தில் குறைந்தது 20 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

சுத்தந்திரபுரத்தில் இருந்து ஆயிரக்கணக்கானோர் தப்பி ஓடினர், அங்கு சிறீலங்கா இராணுவத்தின் மோட்டார் மற்றும் பீரங்கித் தாக்குதல்கள் பொதுமக்களை குறிவைத்தன.

வல்லிபுவானில் ஒரு பதுங்கு குழிக்குள் ஒரு ஷெல் வெடித்தது. பதுங்கு குழிக்குள் 3 பேர் கொல்லப்பட்டனர் மற்றும் 4 பேர் காயமடைந்தனர். பதுங்கு குழிக்குள் புதைக்கப்பட்ட பாதிக்கப்பட்டவர்கள் இடைவிடாத ஷெல் தாக்குதலுக்கு மத்தியில் மீட்கப்பட்டனர்.

காயமடைந்தவர்களை தற்காலிக மருத்துவமனைகளுக்கு கொண்டு வர 7 மணி நேரத்திற்கும் மேலாகிறது.

ஞாயிற்றுக்கிழமை 500 க்கும் மேற்பட்ட வீடுகள் மற்றும் குடிசைகள் சேதமடைந்தன.

# பத்திரிகையாளர் சத்தியமூர்த்தி பாதுகாப்பு வலயத்திற்குள் சிறீலங்கா படையின் தாக்குதலில் பலி – 14.01.2009

ஈழத்தில் உள்ள தமிழர்களாலும், புலம்பெயர் தமிழர்களாலும் நன்கு அறியப்பட்டவரும் மிகவும் மதிக்கப்படுவருமான புனியமூர்த்தி சத்தியமூர்த்தி, வியாழக்கிழமை வன்னியில் உள்ள முல்லைத்தீவு மாவட்டத்தில் சிறீலங்கா அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட "பாதுகாப்பு வலயத்தில்" உள்ள தேவிபுரத்தில் சிறீலங்கா இராணுவத்தின் (SLA) பீரங்கித் தாக்குதலில் பலத்த காயமடைந்து, சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். சம்பவத்திற்குப் பிறகு அவரைப் பராமரித்த உறவினர்களின் கூற்றுப்படி, சரியான மருத்துவ உதவி இல்லாததே அவரது மரணத்திற்குக் காரணம்.

யாழ்ப்பாணத் தீவுகளில் உள்ள மண்டைத்தீவைச் சேர்ந்த பெற்றோருக்குப் பிறந்த சத்தியமூர்த்தி, பின்னர் யாழ்ப்பாணத்தில் வசித்து வந்தார், அங்கு அவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தனது படிப்பைத் தொடர்ந்தார்.

1990களின் முற்பகுதியில் ஊடகத் துறையில் நுழைந்த அவர், "வெளிச்சம்" பத்திரிகை உள்ளிட்ட ஊடகங்களில் சிறுகதைகள், கவிதைகள் மற்றும் கட்டுரைகளை எழுதுவதோடு மட்டுமல்லாமல், "புலிகளின் குரல்" (புலிகளின் குரல்) இல் பங்களிக்கத் தொடங்கினார்.

1990களின் பிற்பகுதியில் அவர் ஒரு தீவிர அரசியல் ஆய்வாளராக வளர்ந்தார், மேலும் இராணுவ விவகாரங்கள் குறித்தும் செய்தி வெளியிட்டார்.

"ஈழநாதம்" நாளிதழில் இராணுவக் கட்டுரையை எழுதினார்.

இடைவிடாத அலைகள் -3 இராணுவப் பணிகளில் தமிழீழ விடுதலைப் புலிகளால் மீண்டும் கைப்பற்றப்பட்ட பிரதேசங்கள் குறித்த அவரது எழுத்துக்கள் அவரது பாணி மற்றும் அறிக்கையிடலின் துல்லியத்தை பிரதிபலிக்கின்றன.

வன்னியை தளமாகக் கொண்ட மீடியா ஹவுஸின் பத்திரிகையாளராக, 2003 முதல் ஐபிசி, டிடிஎன், யூரோ தொலைக்காட்சி போன்ற சில புலம்பெயர்ந்த ஊடகங்களுக்கு அவர் வழக்கமான புதுப்பிப்புகளை வழங்கினார், மேலும் வடக்கு கிழக்கில் வளர்ந்து வரும் நிலைமை குறித்த அவரது அரசியல் பகுப்பாய்வு, புலம்பெயர்ந்த தமிழர்களிடையே அவருக்கு மிகுந்த மரியாதையைப் பெற்றது.

தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் அவர் ஒரு முதிர்ந்த பத்திரிகையாளர் பாணியை வெளிப்படுத்தினார், மேலும் பார்வையாளர்களுக்கு அவரைப் பிடிக்கும் வகையில் எதிர் கருத்துக்களுக்கு பதிலளித்தார். இது தொடர்ந்து முன்னேறி வரும் ஊடக தொழில்நுட்பத்தின் நுணுக்கங்களை ஒருங்கிணைக்கும் கூர்மையான அறிவைக் கொண்ட ஒரு பத்திரிகையாளராக சத்தியமூர்த்தியின் நற்பெயரைத் தூண்டியது.

"சத்தியமூர்த்தி" (சத்திய வெளிப்பாடு) என்ற அவரது பெயருக்கு உண்மையாக, அவரது ஊடகக் கல்லூரிகளின் கூற்றுப்படி, வெளிவரும் நிகழ்வுகளை வெளிப்படையாகவும் வெளிப்படையாகவும் விவரித்ததற்காக அறியப்பட்டார்.

சத்தியமூர்த்தியின் உடல் தற்காலிக முகாம்களில் ஒன்றில் வைக்கப்பட்டது, சரியான சவப்பெட்டி இல்லாததால்



சேலையால் மூடப்பட்டிருந்தது.

"சத்தியமூர்த்தி பத்திரிகைக்கு அவர் அளித்த பங்களிப்புக்காகவும், எதிர்காலத்திற்காக இளம் பத்திரிகையாளர்களைத் தயார்படுத்துவதில் அவர் தீவிரமாக பங்கேற்றதற்காகவும் ஈழத் தமிழர்களால் நினைவுகூரப்படுவார்" என்று வன்னியைச் சேர்ந்த ஒரு இளம் பத்திரிகையாளர் கூறினார்.

**இழப்புகளுக்கு அஞ்சினால் யுத்தம் நடாத்த முடியாது;**
**இழப்புகளை வளர்ச்சியின் ஊன்றுகோலாகக் கருத வேண்டும்.**

–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–

# முல்லைத்தீவில் சிறீலங்கா இராணுவத் தாக்குதலில் 150 க்கும் மேற்பட்ட பொதுமக்கள் படுகொலை – 13.02.2009





முல்லைத்தீவு மாவட்டத்தில் இலங்கை இராணுவம் (SLA) நடத்திய ஷெல் தாக்குதலில் வியாழக்கிழமை மட்டும் 150க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டதாகவும், முந்தைய இரண்டு நாட்களில் சுமார் 90 பேர் கொல்லப்பட்டதாகவும் அறிப்படுகிறது. கொழும்பினால் ஒருதலைப்பட்சமாக அறிவிக்கப்பட்ட புதிய “பாதுகாப்பு வலயத்திற்கு” பொதுமக்கள் பெருமளவில் வெளியேற வேண்டிய கட்டாயத்தில் உள்ள இரண்டு சாலைகளின் ஓரங்களில் பெரும்பாலான உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன. தேவிபுரத்திலிருந்து புதக்குடியிருப்பு வரையிலான சாலையோரங்களில் இறந்த உடல்கள் கிடந்தன, மேலும் தப்பியோடிய பொதுமக்கள் கடுமையான ஷெல் தாக்குதலுக்கு மத்தியில் சாலையோரத்தில் தங்கள் இறந்தவர்களை அடக்கம் செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது என்று வன்னியிலிருந்து வரும் ஆரம்ப தகவல்கள் தெரிவிக்கின்றன. கொழும்பினால் அறிவிக்கப்பட்ட புதிய “பாதுகாப்பு வலயம்” என்பது முல்லைத்தீவுக்கு வடக்கே உள்ள குளம் மற்றும் கடல் கடற்கரையோரத்தில் உள்ள ஒரு சிறிய நிலப்பரப்பில் 300,000 பொதுமக்களை ஒன்று திரட்டுவதற்கான ஒரு கூடுமிடமாகும்.

காயமடைந்தவர்களில் நூற்றுக்கணக்கானோர் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தனர். காயமடைந்தவர்களில் பலர் முதலுதவிக்குப் பிறகு கைவிடப்பட்டுள்ளனர், ஏனெனில் அவர்களை அழைத்துச் செல்ல முடியவில்லை.

சிறீலங்கா விமானப்படை (SLAF) கண்காணிப்பு விமானம் அந்தப் பகுதியின் மீது வட்டமிட்டுக் கொண்டிருந்தபோது, தப்பியோடிய பொதுமக்கள் மீது சிறீலங்கா விமானப்படை வேண்டுமென்றே ஷெல் தாக்குதல் நடத்தியது, தப்பியோடிய பொதுமக்கள் மீது பீரங்கித் தாக்குதல்களை நடத்துவதற்கு சிறீலங்கா இராணுவத்திற்கு ஒருங்கிணைப்புகளை வழங்கியது என்று இரானைப்பாலையில் உள்ள IDP ஆர்வலர்கள் தமிழ்நெட்டிடம் தெரிவித்தனர்.

ஆயிரக்கணக்கான ஷெல்கள் வீசப்பட்டன. இரவு முழுவதும் ஷெல் தாக்குதல் தொடர்ந்ததால், முழு வன்னிப் பகுதியிலிருந்தும் அனைத்து வாகனங்களும் குறுகிய சாலைகளில் வரிசையாக நின்றன, நகர முடியவில்லை. மோட்டார் சைக்கிள்களில் தப்பிச் சென்றவர்கள் கூட 2 கி.மீ. கடந்து இரண்டு மணி நேரம் ஆனது என்று கூறினர். வெள்ளிக்கிழமை காலை வரை உயிரிழப்புகள் குறித்த விவரங்களை யாராலும் சேகரிக்க முடியவில்லை.

சுத்தந்திரபுரம் மற்றும் பிற பகுதிகளில் இருந்து நகர முடியாத பல பொதுமக்கள் இருந்தனர், ஏனெனில் அவர்கள் கடுமையான ஷெல் தாக்குதலின் காரணமாக பதுங்கு குழிகளுக்குள் இருக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

தேவிபுரத்தில் பல பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

கடற்கரையோரத்தில் ஒரு புதிய பகுதி “பாதுகாப்பு வலயம்” என வரையறுக்கப்பட்டுள்ளதாக வானொலி செய்தி ஒளிபரப்புகள் மூலம் அறிந்த பொதுமக்கள் தப்பி ஓடிக்கொண்டிருந்தனர். இருப்பினும், பொதுமக்கள் தப்பி ஓடிக்கொண்டிருந்தபோது அவர்களை குறிவைத்து நடத்தப்பட்ட பீரங்கித் தாக்குதல் நடத்தினர்.

புதன்கிழமை, 60க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். செவ்வாய்க்கிழமை மட்டுமே உயிரிழப்புகள் குறைவாக இருந்தன, சுமார் 30 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். தமிழ்நெட் நிருபர் புதன்கிழமை அவர் தங்கியிருந்த இடத்தில் பீரங்கித் தாக்குதலில் குழந்தைகள் உட்பட பல பொதுமக்கள் இறந்ததைக் கண்டார்.

காயமடைந்த 50க்கும் மேற்பட்டோர் வல்லிபுனம் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர், அவர்களில் 15 பேர் அனுமதிக்கப்பட்ட உடனேயே இறந்தனர்.

செவ்வாய்க்கிழமை வல்லிபுனத்தில் உள்ள ஆச்சித்தோட்டத்தில் 8 பேர் கொல்லப்பட்டனர்.














**சுதந்திரப் பசியில் உறுதிபூண்ட மக்களை சோற்றுப் பசி தீண்டிவிடப் போவதில்லை.**

**–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–**

# வன்னிப் பகுதியில் சிறீலங்கா இராணுவத்தினரின் எறிகணை தாக்குதலில் பொதுமக்கள் படுகொலை – 14.02.2009

வெள்ளிக்கிழமை இரவு இலங்கை இராணுவத்தின் பீரங்கித் தாக்குதலில் தேவவிபுரம் மற்றும் வல்லிபுனத்தில் பொதுமக்கள் கொல்லப்பட்டனர், புதுக்குடியிருப்பை அடைந்த மக்கள் தெரிவித்தனர். இதற்கிடையில், சனிக் கிழமை காலை இரணைப்பாலையில் பதினைந்து பொதுமக்கள் கொல்லப்பட்டதாகவும், ஒரு முதியோர் இல்லம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதி பீரங்கித் தாக் குதலுக்கு உள்ளானதாகவும், நான்கு முதியோர் கொல்லப் பட்டதாகவும், சுமார் 50 பேர் காயமடைந்ததாகவும் மாதாளன் மருத்துவமனையின் மருத்துவ ஊழியர்கள் தெரிவித்தனர்.









வெள்ளிக்கிழமை புதுக்குடியிருப்பில் இலங்கை விமானப் படை நடத்திய கொத்து குண்டுவெடிப்பில் பயன்படுத்திய பாராசூட்டின் எச்சங்கள். நான்குக்கும் மேற்பட்ட இடங்கள் SLAF ஆல் தாக்கப்பட்டன, அவை தீயை ஏற்படுத்தும் கொத்து மற்றும் குண்டுகளை அதிகளவில் பயன்படுத் துகின்றன.



**எமது துன்ப வரலாற்றை நாமே பதிய வேண்டும்.**
**நீத்தார் நினைவுச் சின்னங்களை உரிய முறையில்**
**உங்கள் கிராமங்களில் கட்டியெழுப்பும் பொறுப்பு**
**தமிழ் மக்களாகிய எம்முடையது மாத்திரமே.**



## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com


21 ஆம் ஆண்டு
வீரவணக்கம்
07.02.2005
மாமனிதர்
சந்திரநேரு அரியநாயகம்
மட்டு - அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர்
லெப்.கேணல் கௌசல்யன்
( இளையதம்பி லிங்கராசா )
மேஜர் செந்தமிழன்
( தம்பிராசா கந்தசாமி )
மேஜர் புகழன்
( சிவலிங்கம் சுரேஸ் )
2ம் லெப்.விதிமாறன்
( சிவபாதம் மதன் )




# இலங்கையில் ஆதி இரும்புக்காலமும் பெருங்கற் பண்பாடும் பகுதி 3

### பெருங்கற் பண்பாடும் தமிழ்மொழியின் பரவலும்

இலங்கைக்கு தென்னிந்தியாவிலிருந்து பெருங்கற் பண்பாட்டு அம்சங்களும், நீர்ப்பாசன விவசாயமும் பரவியபோது அவற்றுடன் தமிழ் மொழியின் பரவலும் இன்றியமையாத, கட்டாயமான அங்கமாக இருந்தது. தமிழ்மொழி இலங்கைக்குப் பரவியது பற்றிய பேராசிரியர் இந்திரபாலாவின் கணிப்பீடு கவனிக்க வேண்டியது: "When the urn burial practices of Adichanallur were carried over to Pomparippu and when the technology of the iron tools and BRW spread from the port of Korkai to Mātota, when the cist burial practices of the Vaigai Valley spread to the north-central plains of Sri Lanka watered by the YanOya, when those engaged in pearl fishery and chank fishery in the Palk Strait and the Gulf of Mannar frequented the Pamban coast and the Puttalam coast, one cannot imagine the Tamil language not being associated with these or being part of this cultural movement" - Prof. K. Indrapala, 2006: Page 114.

"ஆதிச்சநல்லூரின் தாழி அடக்க நடைமுறைகள் (இலங்கையின்) பொம்பரிப்பிற்குக் கொண்டுவரப்பட்ட போது - இரும்புக் கருவிகளினதும், கறுப்பு-சிவப்பு மட்பாண்டங்களினதும் தொழில்நுட்பம் கொற்கையிலிருந்து மாதோட்டத்திற்குப் பரவிய போது - வைகை நதித் தாழ்நிலங்களின் கல்லறைப் புதையல் பண்புகள் யன்ஓயா நதி பாயும் இலங்கையின் வடமத்திய சமவெளிகளை வந்தடைந்தபோது - பாக்குநீரிணையிலும், மன்னார்க்குடாவிலும் முத்துக் குளிப்போரும், சங்கெடுப்போரும் பாம்பன் கரைக்கும், புத்தளம் கரைக்கும் அடிக்கடி வந்திறங்கியபோது - இக்கலாசாரப் பரவலோடு - இப்பண்பாட்டு இயக்க அசைவோடு - தமிழ் மொழியும் இவற்றோடு இணைந்து இங்கே வந்திருக்கும் என்பதை மறுக்க இயலாது."

பெருங்கற் பண்பாட்டுடன் தென்னிந்தியாவிலிருந்து இலங்கையை வந்தடைந்த மற்றொரு முக்கியமான அம்சம் குளங்களுடன் கூடிய நீர்ப்பாசன விவசாயம். மூலத்திராவிட மொழி, அடிப்படையில் ஒரு விவசாய மொழி. விவசாயத்தின் நாடளாவிய பரவல் அதன் துணை அங்கங்களில் ஒன்றான தமிழ் மொழியின் பரவலுக்கும் வழி வகுத்தது.

விவசாயத்தின் பரவலோடு ஒரு விவசாய மொழி அறிமுகமாகி, இரண்டும் இணைந்து பரவுவது ஒரு புதிய கண்டுபிடிப்பு அல்ல. பீட்டர் பெல்வுட், கொலின் றென்புறூ (Bellwood, P. 2002; Renfrew, C. 1987) போன்ற தொல்லியலாளர்களும், லூக்கா ஸவல்லி-ஸ்போர்ஸா, ரூமாஸ் கிவிசில்ட் (Cavalli-Sforza 1996, 2002; Kivisild, T. 2002) ஆகிய மரபணுவியலாளர்களும் இற்றைக்கு இருபது ஆண்டுகளுக்கு முன்னரே இதைக் கூறிச் சென்றிருக்கிறார்கள். இவற்றில் மிக முக்கியமான ஆய்வு 'இந்தியாவில் மொழியினதும், விவசாயத்தினதும் பரவல்' (The Genetics of Language and Farming Spread in India) என்ற மரபணுவியல் ஆய்வாகும் (Kivisild et al. 2002).

வட இந்தியாவில் பேசப்படும் பல மொழிகளில் உணவுப் பொருட்களின் பெயர்களும், விவசாய உபகரணங்களுக்கான பல பெயர்களும் திராவிட அடித்தளத்தைக் கொண்டிருக்கின்றன. "வட இந்திய மொழிகளில் இடம்பெறும் உணவுப் பயிர்களின் பெயர்கள், விவசாய நீர்ப்பாசன நடைமுறைகளுக்கான பல சொற்பதங்கள் திராவிட மொழிகளிலிருந்தே பெறப்பட்டிருக்கின்றன" என 1984 இன் பிரித்தானியக் கலைக்களஞ்சியம் (Encyclopaedia Britannica, 1984) குறிப்பிட்டிருப்பதும் இங்கே கவனிக்கத்தக்கது.

இலங்கையில் பேசப்படும் சிங்கள மொழியில் விவசாயம் சம்பந்தமான பல சொற்கள் தமிழ் மொழியிலிருந்தே பெறப்பட்டுள்ளன. உதாரணமாக: அருவி, அரிவாள், அணை, அணைக்கட்டு, ஆறு, வாவி (வேவா), ஓடை (எல), ஓயா (ஓயா), குளம் (குளம), கட்டு, கடவை, கரை, மடு, முனை, மறிச்சுக்கட்டு, தேக்கம், திட்டி, பிட்டி, வரம்பு, புழைக்குடைவு, குடைவு (குடாயிவ்), ஆழி (எல), ஓடை-ஆழி (யோடி-எல), கணவாய் (கணவாயி), கலிங்குல் (கலிங்குல), பறவாய் (பெற்றாவ), தடைக்கல் (துடகல), பிறவழி (பிற்றாவன), வாய்க்கால் (வாக்கட), மண்ணு (அமுன), செரிவாய் (சொறாவ அல்லது கொறாவ) ஆகியன தமிழ்ச் சொற்களிலிருந்து நேரடியான சிங்களச் சொற்கள் பெறப்பட்டிருப்பதற்கான உதாரணங்கள்.

### வடஇந்திய அசோகப் பிராமி எழுத்துகளின் தோற்ற காலம்

பொ.யு.மு. நான்காம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கிரேக்க அரசன் செலியுகஸ் நிக்கரோரின் தூதுவரான மெகஸ்தெனிஸ் பாடலிபுரத்தில் சந்திரகுப்த மௌரிய மன்னனின் அரச சபையை




கீழடி அகழ்வில் கண்டெடுத்த கி.மு. 600 ஆம் ஆண்டிற்குரிய பானை ஓட்டுத் தமிழ்ப் பிராமிப் பதிவு : 'சா(த்)தன் எசிறி கதிரன் இலபு'. இதன் காலம் கதிரியக்கக்கரிம ஆய்வின் மூலம் கணிக்கப்பட்டிருக்கிறது.

Image Source - The Times of India, June 12, 2021

அடைந்த காலத்தில் "இந்தியாவில் (வட இந்தியாவில்) எழுத்துப் பதிவுகளோ நூல்களோ இருக்கவில்லை" எனக் கூறியிருக்கிறார். இதிலிருந்து அவர் அங்கிருந்த காலத்தில் அரச சபையில் ஓர் எழுத்துமுறை இருக்கவில்லை என ஊகிக்க முடிகிறது (Stoneman, R. 2019: 129-176; Roller, D.W. 2016).



'தயா குடை' என்ற தமிழ்-பிராமி வாசகம்

Image Source - S.U.Deraniyagala

வடஇந்தியப் பிராமி அல்லது அசோகப் பிராமி எழுத்து வடிவம், எந்தவிதமான தவறுகளும் இல்லாமல் முழுமையாக வளர்ச்சியடைந்த நிலையில் - படிப்படியாகப் பரிணாம வளர்ச்சி அடைந்திருக்கிறது என்பதைக் காட்டக்கூடிய தனித்தனி எழுத்துகள், எழுதப்பட்ட பரிசோதனை எழுத்துகளினதோ, சொற்களினதோ பதிவுகள் காணப்படாது முழுமையடைந்த நிலையில் - பொறிக்கப்பட்டிருக்கிறது. இதிலிருந்து இந்த எழுத்து வடிவம் இன்னொரு பிராந்தியத்திலிருந்து அங்கே வந்தடைந்திருப்பதே சாத்தியமாகிறது.



பரமன்கிராயில் கண்டெடுத்த 'வேளான்' என்னும் தமிழ்ப் பிராமிப் பதிவைக் கொண்ட கலவோடு

Image Source - Dr P. Pushparatnam

அசோகன் காலப் பிராமிக் கல்வெட்டுகளில் 40 வகையான எழுத்து வடிவங்கள் பயன்படுத்தப்பட்ட போது, தமிழகப் பிராமிக் கல்வெட்டுகளில் 26 வகையான எழுத்துகள் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. குறைவான எழுத்துகள் கொண்ட அமைப்பே மூலமாக இருப்பது வழக்கம். மேலும், அசோகப் பிராமியில் கூட்டெழுத்து முக்கிய அம்சமாகக் காணப்படுகிறது. ஆனால் தமிழகக் கல்வெட்டுகளில் இக்கூட்டெழுத்துகள் காணப்படவில்லை. இவற்றை நோக்குமிடத்து தமிழகத்திலிருந்தே இந்த எழுத்து வடிவம் வட இந்தியா சென்று பிராகிருத மொழிக்கேற்றவாறு மேலதிக எழுத்து வடிவங்களும், கூட்டெழுத்துகளும் உருவாக்கப்பட்டதாகத் தெரிகிறது.

ஆனால் மொழியியலாளர் ஐராவதம் மகாதேவன் அவரது 'Early Tamil Epigraphy' என்ற நூலில் கி.மு. இரண்டாம் நூற்றாண்டளவில்தான் தமிழ்ப் பிராமி ஆரம்பமானது என்றும், அது அசோகப் பிராமியிலிருந்து பெறப்பட்டது என்றும் தனது கருத்தை முன்வைத்திருந்தார் (Mahadevan>,I. 2003: 173).

பிராமி எழுத்துப் பொறித்த மட்பாண்டங்கள் தென்னிந்தியாவில் - குறிப்பாகத் தமிழகத்திலும், இலங்கையிலும் மட்டுமே காணப்படுகின்றன. வட இந்தியாவில் மட்பாண்டங்களில் பிராமி எழுத்துப் பொறிக்கும் மரபு இருந்திருக்குமானால் அங்கு மேற்கொள்ளப்பட்ட ஓர் அகழாய்விலாவது பிராமி எழுத்துப் பொறித்த மட்பாண்டங்கள் கிடைத்திருக்கும். அவ்வாறு கிடைக்காத நிலையில் எப்படித் தமிழகத்தில் கிடைத்த மட்பாண்ட எழுத்துகளை வடஇந்தியாவில் இருந்து வந்தன என்பதற்கு ஆதாரமாகக் காட்ட முடியும்? மேலும், தமிழகம் - இலங்கையில் காணப்படும் மட்பாண்டப் பொறிப்புகள் சாதாரண மக்களாலும், குயவர்களாலும், வர்த்தகர்களாலும் தமக்குச் சொந்தமான மட்பாண்டங்களில் பொறிக்கப்பட்டவை. சாதாரண மக்களே தமிழ்ப் பிராமியை எழுதுவதில் கல்வியறிவு பெற்றிருந்தார்கள் என்பது கவனிக்கத்தக்கது.

இன்றைய ஆய்வுகளின்படி கி.மு. ஏழாம் நூற்றாண்டிலிருந்து தமிழ்ப்-பிராமி எழுத்துப் பொறித்த மட்பாண்டங்கள் கீழடி, அழகன்குளம், பொருந்தல், கொடுமணல், அநுராதபுரம் ஆகிய இடங்களிலிருந்து பெறப்பட்டிருக்கின்றன. இவற்றில் இந்த எழுத்து வடிவங்களின் படிமுறை வளர்ச்சியைக் காணமுடிகிறது. எழுத்து வடிவங்கள் சீராக்கப்பட்ட பின்னரே கல்வெட்டுகளில் தமிழ்ப்பிராமி வாசகங்கள் பொறிக்கப்பட்டிருக்கின்றன.

### தமிழ்ப்பிராமி எழுத்துகளின் தோற்றமும் பரவலும்

இன்றைய அறிவியல் ரீதியான ஆதாரங்களின்படி கி.மு. ஏழாம் நூற்றாண்டளவில் தமிழ்ப்பிராமி எழுத்து வடிவம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அதன் ஆரம்பகால எழுத்து வடிவங்கள் மட்கலன்களின் ஓடுகளில் காணக்கிடைக்கின்றன. ஆரம்ப நூற்றாண்டுகளில் புதிய எழுத்துகள் உருவாக்கப்பட்டுச் சேர்க்கப்பட்டிருக்கலாம். அதன் முதிர்ந்த நிலையில் 26 எழுத்துப் பதிவுகள் காணப்படுகின்றன. இதன் பிரகாரம் தமிழ் எழுத்து வடிவங்கள் கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் அசோகப் பிராமியிலிருந்து

உருவாக்கப்பட்டன என்ற கோட்பாடு (Mahadevan. I. 2003: 173) ஆதார வலிமையற்றுப் போகிறது.

கி.மு. நான்காம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் அதன் இரண்டாவது கட்டத்தில், இந்த தமிழ் எழுத்து வடிவம் வட இந்திய மௌரிய அரசர்களின் அரசவையை அடைந்திருக்கிறது. தமிழ் மொழியிலுள்ள 26 எழுத்துகளில் அவர்களின் பேச்சு மொழியான பிராகிருதத்தை எழுதுவதற்கேற்ப தமிழ் மொழி உச்சரிப்பிற்குரிய 'ள', 'ழ', 'ற', 'ன' ஆகிய எழுத்துகள் கைவிடப்பட்டு, ஒலிப் பிரமாண வகையில் தமிழில் உள்ள மிகுதி எழுத்துகள் ஏற்கப்பட்டு, பிராகிருத மொழிக்குரிய மேலதிக எழுத்துகள் உருவாக்கப்பட்டன. இது இன்றைய சான்றுகள் தரும் அறிவியல் ரீதியான ஓர் அனுமானமாகும். பொ.யு.மு. மூன்றாம் நூற் றாண்டின் பின் இந்த இரு எழுத்து வழக்குகளும் இந்தியாவில் உபயோகத்திலிருந்து வந்திருக்கின்றன.

## வன்னிப் பகுதியில் தமிழ்ப்பிராமி எழுத்துகள்

வன்னிப்பகுதியில் பல இடங்களில் தமிழ்ப்பிராமி எழுத்துப் பதிவுகள் மட்பாண்ட ஓடுகளிலும் கல்வெட்டுகளிலும் காணப்படுகின்றன. அவற்றில் சில உதாரணங்கள் இவை.


### பூநகரி மட்பாண்ட ஓட்டுப் பதிவு

இங்கே கூறப்படும் மட்பாண்ட ஓடு ஒரு முக்கியமான ஓடாகும். பரமன்கிராயில் கிடைத்த இந்தச் சாசனம் பூநகரிப் பிராந்திய வரலாற்றாய்வில் முக்கியமானதொரு சான்றாதாரமாகக் கொள்ளத் தக்கது. இதன் முதல் இரு எழுத்துகளையும் தெளிவாக 'வேளா' என வாசிக்க முடிகிறது. இதன் சாசனப் பிரதியை ஆதாரமாகக் கொண்டு வாசித்த ஐராவதம் மகாதேவன் மூன்றாவது எழுத்தான தமிழுக்குரிய 'ன' எழுத்து தலைகீழாகப் பதியப்பட்டிருப்பதாகக் கூறி, இச்சாசனத்தை 'வேளான்' என வாசித்திருக்கிறார் (மகாதேவன், ஐ. 1990).

இச்சாசனத்தில் இடம்பெறும் வேளான் என்ற பதம் வேள், வேளிர் எனப்படும் குறுநில மன்னர்களைக் குறிப்பிடும் பதமாகக் கருதப்படுகிறது. தமிழ்நாட்டுப் பிராமிச் சாசனங்களில் வேள் என வரும் பெயர்களை வாசித்த அறிஞர் பலரும் அப்பெயர்கள் சங்ககாலத்திலே சிறப்புற்றிருந்த வேள், வேளிர் எனப்பட்ட குறுநில மன்னர்களையே குறிப்பனவென்பர். இலங்கையிலும் வேள் அல்லது வேளிர் என்ற பெயர் கொண்ட பிராமிச் சாசனங்களை சங்ககாலத்தைப் போல இலங்கையிலும் வேளிர் என்ற சிற்றரசர்கள் இருந்திருப்பதற்கான ஆதாரங்களாகக் கொள்ள முடியும் (Sitrampalam, S.K. 1980: 360-377).



கல்வெட்டு இல. 357 : டமேட வணிஜ க(ப)தி விஸாஹ செனி-கமே
வீட்டுடமையாளர் தமிழ் வணிகர் விசாகனின் (வீட்டுப்) படிக்கட்டு




கல்வெட்டு இல. 356 : டமேட வணிஜ க(ப)தி விஸாஹ லெனை
வீட்டுடமையாளர் தமிழ் வணிகர் விசாகனின் குகை

இச்சாசனம் பற்றி தமிழ்நாட்டுச் சாசனவியலாளரான ஐராவதம் மகாதேவன் 01-07-1990 தேதியிட்ட தினமணி பத்திரிகையில் வெளியிட்ட கருத்து வருமாறு:

"தமிழ் மொழியிலும் தமிழ்ப் பிராமி எழுத்துகளிலும் ஆன இச்சாசனம் கி.மு. 3 அல்லது 2 ஆம் நூற்றாண்டுகளைச் சேர்ந்ததென்று எழுத்தமைதியில் இருந்து கூற முடியும். வேளான் என்ற பெயர் சங்ககால வேள், வேளிர் ஆகிய குறுநில மன்னர்களையும், பிற்காலச் சோழர் காலத்தைய (மூவேந்தர்) வேளன் என்ற பெயரையும் ஒத்திருப்பதால் இலங்கை யாழ்ப்பாணப் பகுதியில் சங்ககாலத்திலேயே தமிழ் வேளிர் அல்லது வேளார் குடியிருந்தனர் எனக் கொள்ளலாம்" (மகாதேவன், ஐ. 1990).

இப்பகுதியில் ஏற்கனவே எடுத்துக்கூறியது போல, தமிழ் நாட்டில் தமிழ்ப்பிராமி எழுத்துகளின் வடிவமைப்பையும், எழுத்தமைதியையும் கொண்டு ஆதிச்சநல்லூர், அழகன்குளம், கொடுமணல், பொருந்தல் ஆகிய இடங்களில் கண்டெடுத்த தமிழ்ப் பிராமிச் சாசனங்கள் கி.மு. 300 ஆம் நூற்றாண்டிற்கு உரியவையாக முதலில் கணிக்கப்பட்டன. ஆனால் அறிவியல் ரீதியான கதிரியக்கக் காலக் கணிப்புகள் இச்சாசனங்களின் காலத்தை கி.மு. 600-500 ஆம் ஆண்டுக் காலத்திற்கு எடுத்துச் செல்கின்றன. பூநகரிச் சாசனங்களும் இவ்வகையான கதிரியக்கக் காலக் கணிப்புகளுக்கு உட்படுத்தப்படும் போது, கி.மு. 300 ஆம் ஆண்டிற்கும் முற்பட்ட காலங்களைத் தரலாம். இச்சந்தர்ப்பத்தில் அநுராதபுரத்தில் கண்டெடுத்த தமிழ்ப் பிராமிச் சாசனம் கி.மு. 700-500 ஆண்டைக் கொடுத்திருப்பது குறிப் பிடத்தக்கது.




**கி.மு.300 – கி.பி.300 ஆண்டுகளுக்கிடையிலான கல்வெட்டுகளில் காணப்படும் தமிழ் உறவினர் பெயர்கள்**

Image Source - கலாநிதி ப. புஷ்பரட்ணம்

### நெடுங்கேணிக் கல்வெட்டு

நெடுங்கேணி நொச்சியடி ஐயனார் கோயில் வளாகத்தில் இருக் கும் தமிழ்ப் பிராமிக் கல்வெட்டு இது. நொச்சியடி ஐயனார் ஆல யம் வவுனியா புளியங்குளத்திலிருந்து நெடுங்கேணி செல்லும் பிரதான வீதியில் நெடுங்கேணிப்பிரிவு ஆரம்பிக்கும் எல்லையி லிருந்து 300 மீற்றர் தொலைவில் அமைந்துள்ளது. அங்கே பல மலைக் குன்றுகள் இருக்கின்றன. அதில் ஒரு குன்றின்மேல் எழுத்துப்பொறிப்புகள் காணப்படுகின்றன. இவை சிதை வடைந்த நிலையில் காணப்படுகின்றன. அண்மைக்காலத்தில் பேராசிரியர் பத்மநாதன் இம்மலைக் குன்றிலிருக்கும் எழுத் துகளை வாசிப்பது தொடர்பான ஆய்வில் ஈடுபட்டிருந்தார். இந்த ஆய்வின் முடிவில் இவ்வெழுத்துகள் கி.மு. மூன்றாம் நூற் றாண்டு முதல் கி.பி. இரண்டாம் நூற்றாண்டுகளுக்கும் இடைப்பட்டகால தமிழ்ப்பிராமி எழுத்துகள் எனக் கூறியதுடன் அந்தப் பதிவில் "வேள் நாகன் மகன் வேள் கண்ணன்" எனத் தமிழ்ப்பிராமி எழுத்துகளில் பொழியப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட் டினார். இதன் மூலம் இப்பிரதேசத்தில் நாக வம்சத்தைச் சேர்ந் தவர்கள் அக்காலத்தில் வாழ்ந்தார்கள் என நம்பப்படுகிறது (அ. மயூரன், 2015).

### பெரிய புளியங்குளத்து வணிகர் விசாகன்

வடஇலங்கை வவுனியாவில் பாவற்குளம் பகுதியிலுள்ள ஒரு சிறிய நகரம் பெரிய புளியங்குளம். இப்பாறைப் பிரதேசத்தில் இலங்கையின் 37 ஆரம்பகால பிராமிக் கல்வெட்டுகளைப் படியெடுத்து, வாசித்து, ஒழுங்காக இலக்கமிட்டு, (இலக்கம் 338 முதல் 375 வரை) அவற்றை 1970 ஆம் ஆண்டில் பேராசிரியர் பரணவிதான 'இலங்கைக் கல்வெட்டுகள் – பகுதி 1' (Inscriptions of Ceylon - Volume I) என்ற நூலில் பிரசுரித்திருந்தார்.

இவற்றில் இரண்டு கல்வெட்டுகளில் அவ்விடத்திலிருந்த ஒரு குகையின் உரிமையாளரான 'விசாக' என்ற பெயர் கொண்ட தமிழ் வணிகரைப் பற்றிய குறிப்புக் காணப்படுகிறது.

### கல்வெட்டுகளில் காணப்படும் உறவினர் பெயர்கள்

இலங்கையில் பெரிய புளியங்குளத்திலும், மறு பகுதிகளிலும் காணப்படும் பிராமிக் கல்வெட்டுகளில் கி.மு. 300க்கும் கி.பி. 300க்கும் இடைப்பட்ட காலப்பகுதிகளில் மருமகன், மருமான், மறுமான், பெருமகன், பருமகன், பருமகள் ஆகிய தமிழ்மொழி உறவுப்பெயர்கள் பொறித்த கல்வெட்டுகள் காணப்படுகின்றன.



நெடுங்கேணி நொச்சியடி ஐயனார் கோயில் வளாகத்திலுள்ள பாறையில் பதிக்கப்பட்டிருக்கும் தமிழ்ப்பிராமி எழுத்துப் பதிவில் 'வேள்நாகன் மகன் வேள் கண்ணன்' என இரு சிற்றரசர்களின் பெயர்கள் காணப்படுகின்றன

Image Source - அ. மயூரன்

## முடிவுரை

இதுவரை கூறப்பட்ட விவரங்கள் வன்னிப் பகுதியிலும், இலங்கையின் பெருநிலப் பகுதிகளிலும் வரலாற்றுக் காலத்துக்கு முன்னர் வாழ்ந்த மக்கள் பற்றி தொல்லியல் ரீதியாக நாம் அறிந்துகொள்ளக்கூடிய தகவல்களாகும். இவ்விடங்களில் காணப்படும் பெருங்கற் கலாசாரச் சின்னங்கள் இங்கே திராவிட மக்களின் செறிவான பெருங்கற் பண்பாட்டுக் குடியிருப்புகள் கி.மு. ஆயிரம் ஆண்டுக்காலப் பகுதியிலிருந்தே இருந்தமைக்கான உறுதியான ஆதாரங்களாகும். அக்காலத்தில் தமிழ் மொழியே இப்பெருங்கற் பண்பாட்டைப் பேணியவர்களின் பேச்சுமொழியாக இருந்திருக்கிறது. கி.மு. ஏழாம் நூற்றாண்டு அநுராதபுரத்தில் தமிழ் மொழியின் எழுத்துப் பதிவுகள் இருந்தமை அதற்கு ஆகக்குறைந்து 300 ஆண்டுகள் முன்பிருந்தே தமிழ் ஒரு பேச்சுமொழியாக இருந்திருக்கலாம் என உய்த்துணரச் செய்கிறது.

நன்றி: சிவ. தியாகராஜா – எழுநா முகநூல்

விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஓர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் வணிகத்திற்கு நீங்கள் செய்றும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும். அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது. இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படி கற்கள்.
விளம்பரம் என்பது உங்கள் வணிகத்தின் ஒரு முதலீடு
தொடர்புகளுக்கு 437.345.4203

# பின்தள்ளப்பட்ட உக்ரைன் அமைதித் திட்டம்: ஈரான், வெனிசுலா. கிரீன்லாந் நெருக்கடி காரணமா?

ஐங்கரன் விக்கினேஸ்வரா

25.01.2026

கடந்த நான்கு ஆண்டுகளாக உலகச் செய்திகளில், உக்ரைன் போர்ச் செய்திகளே முதன்மை பெற்றிருந்தன. ஆனால் கடந்த சில வாரங்களாக உலகின் பார்வை உக்ரைனில் இருந்து ஈரானில் ஆட்சி மாற்றம் பற்றியும், வெனிசுலாவில் பொம்மை அரசை நிறுவ அமெரிக்க முயல்வது குறித்தும் பல தகவல்கள் வெளியாகியுள்ளன. மேலும் கிரீன்லாந்தை அமெரிக்கா கைப்பற்றுமா என்ற சந்தேகம் பற்றிய தகவல்களே தற்போது அதிகம் வெளியாகியுள்ளன.

இதனாலேயே ஈரான், வெனிசுவேலா விவகாரங்களால் உக்ரைன் மீதான அவதானம் குறைந்துள்ளதை காணலாம். அதே வேளை அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து போன்ற நாடுகளுடன் ரஷ்யா மதிக்கப்பட்டு, சமமாக ஒருவருக்கொருவர், சரியான மரியாதையுடன் இணைந்து பணியாற்ற தயார் என்று விளாடிமிர் புட்டின் தெரிவித்துள்ளார்.

மேற்கத்திய தலைவர்கள் ரஷ்யாவை ஏமாற்றிவிட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார். மேற்கத்திய நாடுகள் ரஷ்யாவை மரியாதையுடன் நடத்தினால் வருங்காலங்களில் ரஷ்யா யுத்தம் நோக்கி நகராது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ரஷ்யா உண்மையிலேயே ஐரோப்பாவைத் தாக்கப் போகிறதா? இது முட்டாள்தனமான ஊகம் என்று அவர் மேலும் கூறியுள்ளார். மேற்குலக நாடுகள் ஒரு எதிரியின் பிம்பத்தை உருவாக்கி ரஷ்யாவை எதிரியாக்குகிறார்கள். ரஷ்ய அதிபரின் வருடாந்த செய்தியாளர் சந்திப்பில், பிபிசியின் மாஸ்கோ ஆசிரியர் ஸ்டீவ் ரோசன்பெர்க்கிடம் விளாடிமிர் புட்டின் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவிற்கும் அதன் மக்களுக்கும் நீங்கள் என்ன எதிர்காலத்தைத் திட்டமிடுகிறீர்கள்? புதிய சிறப்பு இராணுவ நடவடிக்கைகள் இருக்குமா? என கேள்வி எழுப்பினார். அதற்கு புட்டின் ஒரு நீண்ட பதிலுடன், ரஷ்யாவின் வரலாற்று அரசியல் அமைப்பை பேணிப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு உள்ளது என்றார்.

ரஷ்யத் தலைவர் மேலும் கூறுகையில், மேற்கத்திய தலைவர்களை மோசமான தந்திரங்கள் மிக்கவர்கள் என்று குற்றம் சாட்டியுள்ளார். மேலும் நேட்டோ உறுப்பு நாடுகள் ரஷ்யாவுடன் மோதலுக்குத் தயாராகி வருவதாக அறிக்கைகள் மூலம் இதைத் தொடர்கின்றன என்றும் புட்டின் தெரிவித்துள்ளார். அத்துடன் போலி செய்தி என்ற பிரச்சினையை சுட்டிக்காட்டி, பிபிசிக்கு எதிரான டொனால்ட் டிரம்பின் வழக்கைக் குறிப்பிட்டார்.

## நேட்டோ கிழக்கு நோக்கிய விரிவாக்கம்:

நேட்டோவின் கிழக்கு ஐரோப்பா நோக்கிய விரிவாக்கத்தின் மூலம் ரஷ்யாவை முன்பு ஏமாற்றியது போல், தற்போது எங்களை ஏமாற்ற முடியாது என்றும் அவர் தெரிவித்தார். ரஷ்யாவை மரியாதையுடன் நடத்தினால் உக்ரைனுக்குப் பிறகு இனி போர்கள் இருக்காது என்றும், ஐரோப்பிய நாடுகளைத் தாக்க மாஸ்கோ திட்டமிட்டுள்ளதாகக் கூறுவது முட்டாள்தனம் என்றும் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டின் கூறியுள்ளார்.

கிட்டத்தட்ட நான்கரை மணி நேரம் நீடித்த தொலைக்காட்சி நேரலை நிகழ்வில், பிபிசியின் ஸ்டீவ் ரோசன்பெர்க், புதிய சிறப்பு இராணுவ நடவடிக்கைகள் இருக்குமா என்று அவரிடம் கேட்டார்.

நீங்கள் எங்களை மரியாதையுடன் நடத்தினால் எந்த நடவடிக்கைகளும் இருக்காது. நாங்கள் எப்போதும் உங்கள் நலன்களை மதிக்க முயற்சித்ததைப் போலவே எங்கள் நலன்களையும் நீங்கள் மதித்து நடந்தால், பிரச்சனை இல்லை என்று தெரிவித்தார்.

## ஐரோப்பா போருக்கு விரும்புகிறதா ?

ரஷ்யா ஒருபோதும் ஐரோப்பிய நாடுகளுடன் போருக்குச் செல்லத் திட்டமிடவில்லை. ஆனால் ஐரோப்பா விரும்பினால் இப்போதே ரஷ்யா தயாராக இருப்பதாக அவர் கூறினார். இந்த சமீபத்திய கருத்துடன் அவரது முன்னைய கருத்துக்கள் ஒத்துப் போகின்றன.

1990 ஆம் ஆண்டு சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்கு முன்னர் அப்போதைய சோவியத் தலைவர் மிகைல் கோர்பச்சேவுக்கு மேற்கத்திய நாடுகள் அளித்ததாகக் கூறப்படும் வாக்குறுதியை நேட்டோ மீறியுள்ளதாக புட்டின் நீண்ட காலமாக குற்றம் சாட்டி வருகிறார்.

நேட்டோவின் கிழக்கு நோக்கிய விரிவாக்கத்தின் மூலம் ரஷ்யாவை ஏமாற்றியது. இந்த மாநாட்டில் ரஷ்யா முழுவதிலுமிருந்து பத்திரிகையாளர்களிடமிருந்து பல கேள்விகள் கேட்கப்பட்டன.

இந்த ஊடக மாநாட்டில் கிரிமியா உட்பட உக்ரைனின் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளை உள்ளடக்கிய ரஷ்யாவின் ஒரு பெரிய வரைபடத்தின் முன் புட்டின் அமர்ந்திருந்தார். இந்த மாநாட்டில் மூன்று மில்லியனுக்கும் அதிகமான கேள்விகள் சமர்ப்பிக்கப்பட்டதாக ரஷ்ய அரசு தொலைக்காட்சி கூறியது.



**மாஸ்கோவை நோக்கி ஐரோப்பா போரை தொடுத்தால் ரஷ்யா தயார் என புட்டின் தெரிவித்துள்ளார். அதேவேளை உக்ரைனில் போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான அமைதித் திட்டம் குறித்து, டிரம்ப்பின் தூதர்களுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார்.**

**உக்ரைன் அமைதித் திட்டத்தை இறுதி செய்வதற்கான அமெரிக்கா தலைமையிலான முயற்சிகளை ஐரோப்பிய தலைவர்கள் குறைமதிப்பிற்கு உட்படுத்துகின்றனர் என்று ரஷ்யா தெரிவித்துள்ளது.**

ஐரோப்பா எங்களுடன் சண்டையிட விரும்பினால், நாங்கள் இப்போதே தயாராக இருக்கிறோம் என்று புட்டின் கூறினார். ஐரோப்பாவுடன் போருக்குச் செல்ல ரஷ்யா ஒருபோதும் இல்லை என்று புட்டின் தெரிவித்தார். நாங்கள் ஐரோப்பாவுடன் சண்டையிடப் போவதில்லை. இதை நான் நூறு முறை கூறியுள்ளேன். ஆனால் ஐரோப்பா ஒரு போரை விரும்பி அதைத் தொடங்கினால், நாங்கள் இப்போதே தயாராக இருக்கிறோம் என்றும் அவர் கூறியுள்ளார்.

## உக்ரைன் அமைதித் திட்டம்:

உக்ரைன் அமைதித் திட்டம் குறித்த ரஷ்யா-அமெரிக்கா பேச்சுவார்த்தைகள் ஆக்கபூர்வமானவை. ஆனால் பிரதேச சமரசம் இன்னும் எட்டப்படவில்லை என்று ரஷ்யா தெரிவித்துள்ளது.

ரஷ்ய ஜனாதிபதி புட்டினுக்கும், அமெரிக்க தூதர் ஸ்டீவ் விட்காஃப்பிற்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் ஆக்கபூர்வமானவை. ஆனால் இன்னும் செய்ய வேண்டியவை அதிகம் என்று அவர் கூறியுள்ளார்.

வெளியுறவு கொள்கை ஆலோசகர் யூரி உஷாகோவ், உக்ரைனால் பிராந்திய சலுகைகள் தொடர்பாக எந்த சமரசமும் எட்டப்படவில்லை என்றும் கூறியுள்ளார்.

அதேவேளை ஐரோப்பாவின் சமாதான ஒப்பந்த கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளத்தக்கவை அல்ல என்று புட்டின் முன்னதாக கூறினார்.

இதற்கிடையில், உக்ரைன் ஜனாதிபதி விலோடிமிர் ஜெலென்ஸ்கி, அமைதித் திட்டத்தில் சில விஷயங்கள் இன்னும் உருவாக்கப்பட வேண்டும் என்றும், ஆனால் இப்போது எப்போதும் இல்லாத அளவுக்கு, இந்தப் போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான வாய்ப்பு உள்ளது என்றும் கூறியுள்ளார்.

## உக்ரைன் அமைதித் திட்டம்:

கடந்த ஆண்டு இறுதியில் டிரம்ப் அரசால் முன்மொழியப்பட்ட அமைதித் திட்டம் போரை நிறுத்துவதுடன், உக்ரைன் அமெரிக்காவிடமிருந்து பாதுகாப்பு உத்தரவாதங்களைப் பெறும். மேலும் உக்ரைன் அல்லது அதன் அண்டை நாடுகளுக்கு எதிராக இனி ரஷ்யா எந்த ஆக்கிரமிப்பையும் எடுக்காது. மேலும் ஐரோப்பாவை நோக்கி ஆக்கிரமிப்பு இல்லாத கொள்கையை மாஸ்கோ அதன் அரசியல் சட்டத்தில் இணைக்கும் என்றும் கூறப்பட்டுள்ளது.

மேலும் இரு தரப்பிலிருந்தும் பொதுமக்கள் மற்றும் போர்க் கைதிகள் பரிமாறிக் கொள்ளப்படுவார்கள். போரிடும் இரு தரப்புக்கும் பொது மன்னிப்பு வழங்கப்படும். அத்துடன் கருங்கடல் வழியாக தானியங்களை கொண்டு செல்ல டினிப்ரோ நதியைப் பயன்படுத்துவதைத் தடுக்கும் முயற்சிகளை மாஸ்கோ நிறுத்தும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனாலும் சர்ச்சைக்குரிய பிராந்தியங்களான ரஷ்யாவால் இணைக்கப்பட்ட கிரிமியா, லுஹான்ஸ்க் மற்றும் டொனெட்ஸ்க் பகுதிகள், வளமான டான்பாஸை உருவாக்கும் கெர்சன் மற்றும் சபோரிஷியா உள்ளிட்ட கிழக்கு உக்ரைனின் சில பகுதிகளை ரஷ்யாவிடம் ஒப்படைக்க இந்த அமைதி திட்டம் முன்மொழிந்தது.

இந்த திட்டம் மூலம் உக்ரைனை 600,000 க்கும் உட்பட்ட இராணுவ வீரர்களுக்கு மட்டுப்படுத்தியது. மேலும் கீவ் அரசு அதன் அரசியலமைப்பில் நேட்டோவில் சேராது என்பதை உறுதிப்படுத்த வேண்டும் என்றும் கோரியது.

இருப்பினும் ரஷ்யா கைப்பற்றிய பிரதேசத்தை விட்டுக் கொடுப்பது தொடர்பான சர்ச்சைக்குரிய பிரச்சினைகள் இன்னும் முடிவுக்கு வரவில்லை. கனிம வளம் மிக்க டொனெட்ஸ்க், கெர்சன், லுஹான்ஸ்க் மற்றும் சபோரிஷியா மாகாணங்களை ரஷ்யாவுடன் இணைப்பது தொடர்பாக பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது.



என்னவாயினும் புட்டின் போரின் மூலம் அதிகபட்ச இலக்குகளை நோக்கி அடைந்து வருகிறார். அத்துடன் 2022 முதல் தனது கோரிக்கைகளில் உறுதியாக உள்ளார். கைப்பற்றிய ஐந்து பிரதேசங்களையும் முழுமையாக உரிமை கோரியும் உள்ளார்.

# பெப்ரவரி 4: கரிநாள்
# தமிழர் உரிமை மறுக்கப்பட்ட சிறீலங்கா சுதந்திர நாள்!

– நவீனன் –

30.01.2026




1948 பெப்ரவரி 4இல் ஆங்கிலேயர் இலங்கைக்கு சுதந்திரம் அளித்துச் சென்ற நாள். ஆனால், அந்த நாளை சிங்கள தேசம் தனக்கு மட்டுமே சுதந்திர நாளாக்கி, தமிழ் இனத்தை அடிப் படுத்தி, அதை தமிழருக்கான கரிநாள் ஆக்கியது. காலங்கால மாக இது தொடர்கின்றது. அடக்கு முறைகளின் ஒரு கட்டமாக 1956 தனிச் சிங்களச் சட்டத்தை அரசு பிரகடனப்படுத்தியது.

சிங்களம் அரச மொழியானதால் பல தமிழ் அரச உத்தியோகத் தர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டனர். இந்த அநீதிகள் அரங் கேறிய அதேநேரம், தலைநகர் கொழும்பில் தமிழர்கள் மீது இன அழிப்பு கட்டவிழ்த்து விடப்பட்டு தமிழர்கள் முதுகில் சிங்கள ஶ்ரீ சூடுவைக்கப்பட்து. பச்சைக் குழந்தைகள், வயோதிபர்கள் என்ற வித்தியாசம் இன்றி, கொதிக்கும் தார்ப் பீப்பாய்க்கள், தோசைக்கல் என்பவற்றில் அவர்கள் போடப்பட்டனர்.

தமிழர்கள் உரிமைக்காக குரல் கொடுக்கும் போதெல்லாம் இன அழிப்பு என்னும் பயங்கரத்தை மேற்கொண்டு தமிழர்கள் உணர்வு அழிக்கப்பட்டது. மேற்படி எல்லாத் தடைகளையும் தாண்டி, மக்களின் பேராதரவுடன் மேற்கொள்ளப்பட்ட தாயக விடுதலைப் போராட்டம் கூட 2009 மே 18 இல் இதே முள்ளி வாய்க்காலில் மௌனிக்கச் செய்யப்பட்டது.

இதனாலேயே பெப்ரவரி 4 ஆம் திகதி இலங்கையின் சுதந்திர தினத்தை முன்னிட்டு, ஈழத்தமிழர்கள் மற்றும் தமிழ் அமைப் புகளால் அந்த நாள் கரிநாளாக (Black Day) அனுஷ்டிக்கப் படுகிறது. 1948 இல் பிரித்தானியரிடமிருந்து சுதந்திரம் பெற் றாலும், தங்களுக்கு உண்மையான சுதந்திரம் கிடைக்க வில்லை என்றும், உரிமை மறுக்கப்பட்டு அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டதாகவும் கருதி, இலங்கை சுதந்திர தினத்தை தமிழர்கள் துக்க நாளாகவும், கறுப்பு தினமாகவும் எதிர்ப்பை வெளிப்படுத்துகின்றனர்.

இலங்கை சுதந்திரம் அடைந்தாலும், அது தமிழர் உரி மைகளை நிலைநாட்டவில்லை என்ற அடிப்படையில், ஈழத் தமிழர்கள் மத்தியில் இது ஒரு கறுப்பு நாளாகவே பார்க்கப் படுகிறது. ஆண்டுதோறும், குறிப்பாக புலம்பெயர் தமிழர்கள் மற்றும் வடக்கு-கிழக்கில் உள்ள தமிழர்கள் இந்த தினத்தில் போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் மற்றும் ஊர்வலங்களை நடத்தி, கறுப்புக்கொடி ஏந்தி தங்களின் துயரத்தை வெளிப் படுத்துகின்றனர்.

தமிழர்களின் நில அபகரிப்பு, அரசியல் உரிமைகள் பறிப்பு, மற்றும் இனப்பிரச்சினை தீர்க்கப்படாத நிலை போன்றவற்றால், இந்த நாள் ஒரு போராட்ட தினமாகவே கருதப்படுகிறது. இதனா லேயே சிறீலங்காவின் சுதந்திர தினம் தமிழர்களுக்கு கரி நாளாக தாயகம் எங்கும் அனுஷ்டிக்கப்படுகிறது.

சிங்களவர்களின் சுதந்திர தினத்திற்கு எதிராக பாரிய எதிர்ப்பு போராட்டங்களும், பேரணிகளும் தமிழர் தாயகம் எங்கும் காலங்காலமாக முன்னெடுக்கப் பட்டுவந்துள்ளது.

தமிழர்கள் வரலாற்றில் கறைபடிந்த வடுக்களைப் பதிவாக்கிக் கொண்ட இனக் கலவரங்களையும், இனப்படுகொலைகளை யும் உருவாக்கிய சிங்கள அரசுகளின் சுதந்திர தினத்தை தமிழ் மக்கள் கரிநாளாக அனுஸ்டிக்கின்றனர்.

சிறீலங்காவின் சுதந்திரதினம் என்பது சிங்களவர்களிற்கானது என்று ஆக்கப்பட்டபோது நாட்டின் சுதந்திர தினம் சிறுபான் மைத் தமிழ் மக்களிற்கு வேதனைக்குரிய நாளாகிப் போனது. சுதந்திர தினத்தைப் புறக்கணிப்பதே ஒரேவழி என்று தமிழ் மக்கள் நீண்ட காலமாகவே முடிவு செய்து கடைப்பிடிக் கின்றனர்.

தமிழர்க்கான சுதந்திரத்தை தர மறுத்துவிட்டு சுதந்திரதினத் தைக் கொண்டாடுங்கள் என்றால் அது எந்த வகையில் நியாய மாக இருக்க முடியும்? பிரித்தானிய காலணியாதிக்கத்தில் இருந்து விடுவிக்கப்பட்ட பெப்ரவரி நான்காம் தினமே முன் னைய இலங்கையின் (Ceylon ) சுதந்திர தினமாக அனுஷ்டிக் கப்பட்டது யாவரும் அறிந்ததே.

## தமிழர் இரண்டாம் தர பிரஜைகளா?

ஆயினும் இன்றைய சிறீலங்காவில் (Sri Lanka) சிங்களவர் களுக்கு சுதந்திரம் கிடைத்த பல வருடங்கள் ஆகினாலும், சிறு பான்மையின தமிழர் இரண்டாம் தர பிரஜைகளாக அல்லது ஏதிலிகளாக வாழும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர் என்பதே வரலாற்று உண்மையாகும்.

இந்தியாவின் சுதந்திரத்திற்கான தேசிய எழுச்சி பிரித்தானிய காலணியாதிக்கவாதிகளுக்கு எதிராக அகிம்சை வழியிலும், ஆயுதப் போராட்ட வடிவத்திலும் பரந்துபட்ட மக்களை இணைத்து நடாத்தப்பட்ட போராட்டமாகும். இந்தியாவின் போராட்டத்தின் பக்க விளைவுகள் இலங்கையிலும் பிரதிபலித் ததாய் இருந்தது என்பதே சாட்சியமாகும்.

ஆங்கிலேயர்களின் பிரித்தானிய நவ காலணித்துவ சுரண்டல் முறமைக்கு தம்மை மாற்றிக் கொண்டு இந்தியாவை விட்டு வெளியேறும் போது இலங்கையையும் விட்டு வெளியேறினர். உண்மையில் இலங்கை தனது சுதந்திரத்திற்காக இந்தியா அளவிற்கு போராடவில்லை. இலங்கையின் சுதந்திரத்திற்காக தமிழ் மக்களின் பங்களிப்பும் தியாகங்களும் அளப்பரியதாகும்.

பிரித்தானியரிடம் இருந்து 1948 பெப்ரவரி நான்கில் கிடைத்த இலங்கையின் சுதந்திரம் தமக்கான சுதந்திரம் என்று தமிழர் களால் உணரப்படாமல் தள்ளிப்போனமைக்கான முக்கிய காரணமாக ஆட்சியாளர்களின் விரோத இனத்துவேசம் அமைகின்றது.

பிரித்தானியர் சுதந்திரத்தை வழங்கும் போது இலங்கையின் அனைத்து இனத்தவர்களுக்குமே வழங்கினராயினும் துர திர்ஸ்டவசமாக இலங்கையின் சுதந்திரம் பௌத்த சிங்களவர் களுக்காக போனது காலத்துயரமே. இந்நிலைமையானது நாட் டின் சுதந்திரம் என்பது இலங்கையில் வாழும் ஒரு பகுதியின ருக்கு என்றாயிற்று.

பிரித்தானியர் இலங்கைக்கு வழங்கிய சுதந்திரத்தை தமதாக் கியவர்கள் நாடும் தங்களுடையது, ஆட்சியும் தமக்கானது என்று முடிவு செய்து, அதை நிலை நிறுத்தப் பல்வேறு நடவடிக் கைகளை சிங்கள அரசுகள் மேற்கொண்டது. அதன் ஒரு அம்ச மாக தமிழர்கள் இரண்டாந்தரப் பிரஜைகளாக ஆக்கப்பட் டதுடன், தமிழர்களைக் காலத்திற்குக் காலம் வஞ்சித்துத் தண்டிக்க வேண்டும் எனவும் பேரினவாதிகளால் அடிமைப் படுத்தப்பட்டனர்.

இலங்கை சுதந்திரத்திற்கு பின்னரான இலங்கையின் வட கிழக்கு, மலையகம் வாழும் சிறுபான்மையின தமிழ் மக்கள் இரண்டாம் தர பிரஜைகளாக வாழும் நிலைக்கு தள்ளப்பட்டுள் ளோம் என்ற உணர்வலைகளுக்கு சிங்கள அரசுகளால் உள்ளாக்கப் பட்டனர்.

## தமிழீழ அரசின் நிர்வாகத் திறமை :

இதுவே இன்று வரை சுதந்திர தினம் சிறுபான்மை வட கிழக்கு, மலையக தமிழ் மக்களால் கொண்டாடப்படாமல் இருப்பதற்கு முக்கிய காரணமாக உள்ளது. ஆண்டாண்டு காலமாக சிங்கள அரசால் ஒடுக்கப்பட்ட சிறுபான்மையின தமிழ் மக்கள் தமது சம உரிமைகளை கோரி அகிம்சை, ஆயுதப்போராட்டம் என்று பல்வேறு வழிகளில் போராடி வந்தனர்.

தமிழ் மக்களின் போராட்டத்தின் நியாயத்தன்மையை புரிந்து கொள்ளாத இலங்கை ஆளும் வர்க்கம் இவர்களின் போராட் டத்தை கொச்சைப்படுத்தி ஆயுத ரீதியில் ஒடுக்க முற்பட்டதன் விளைவு தமிழீழ ஆயுதப் போராட்டமாக வீரியம் அடைந்து, இருபது ஆண்டு காலம் தமிழீழ அரசின் நிர்வாகத் திறமையை முழு உலகிற்கே புலப்பட்டது.

சிறீலங்காவின் சுதந்திரம் என்பது தமிழரை ஒடுக்கும் ஒரு அரசின் கொண்டாட்டத்தினமே ஒழிய சிறுபான்மையின தமி ழரின் கொண்டாட்டத்தினம் அல்ல என்ற உணர்வலைகளை மேலும் மேலும் அதிகரிக்க செய்தமை சிங்கள அரசின் கொடூர ஆட்சியே காரணமாகும்.

## சிங்கள அரச ஒடுக்குமுறை :

இதனாலேயே சிறீலங்காவின் சுதந்திர நாள் தமிழர் தாயகம் எங்கும் நீண்ட காலமாக பகிஷ்கரிக்கப்படும் ஒரு தினமாகவும் பரிணாமம் அடைந்துள்ளது. சிறிலங்காவில் தமிழர் உரிமை மறுக்கப்படும் சிறுபான்மையினர் என்ற உணர்வலை இன் னமும் தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

சிறீலங்காவின் சுதந்திர தினம் தமிழர்களுக்கு கரிநாளாக தாயகம் எங்கும் அனுஷ்டிக்கப்படுகிறது. சிங்களவர்களின் சுதந்திர தினத்திற்கு எதிராக பாரிய எதிர்ப்பு போராட்டங்களும், பேரணிகளும் தமிழர் தாயகம் எங்கும் காலங்காலமாக முன் னெடுக்கப் பட்டுவந்துள்ளது.

போர் மௌனித்த 2009 முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் பின் னரும், சிங்கள பேரினவாத அரசின் திட்டமிடப்பட்ட இன அழிப்பு நடவடிக்கைகள் இன்னமும் தொடர்கின்றது. ஆங்கி லேயரிடம் இருந்து இலங்கை சுதந்திரம் அடைந்திருந்தாலும் தமிழ் மக்களாக்கு இன்னமும் சுதந்திரம் கிடைக்கவில்லை என் பதற்கு சிறீலங்கா அரசின் இனத்துவேச ஆட்சியே காரணி யாகின்றது.

## தொடரும் சிங்கள குடியேற்றங்கள் :

இதேவேளை தமிழர் பகுதிகளில் தமிழருக்கு அனுமதிவழாங் காமல் சிங்கள குடியேற்றங்களுக்கு அனுமதி வழங்கு கிறார்கள். தமது உரிமைகளுக்காக போராடும் மக்கள் கைது செய்யப்பட்டு கொடூரமாக அச்சுறுத்தப்படுகிறார்கள். இவ்வாறு தமிழர் தாயக்கதில் தமிழ் மக்களின் இருப்பு தற்போது கேள்விக் குறியாகியுள்ள நிலையில் சிறீலங்காவின் சுதந்திர நாளை தமிழ் மக்கள் கரிநாளாக பிரகடனப்படுத்தி, தமது எதிர்ப்பை சிங்கள அரசுக்கும் தெரிவிப்பதுடன் சர்வதேசத்துக்கு தமிழ் மக்களின் உண்மை நிலையை உரத்துக்கூறி வருகின்றனர்.

தமிழர்கள் தமது உரிமைகளை விடடுக்கொடுக்காமல், தமது இருப்பை உறுதி செய்வதற்கு தாயக மண்ணில் தொடர்ந்து போராட வேண்டிய சூழ்நிலைக்கு சிங்கள அரசு தள்ளியுள்ளது. அந்த வகையில் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி, தமிழ் கட்சி பேதங்களை கடந்து சகல தரப்பினரின் ஒத்துழைப் புடன் சிங்கள அரசிற்கு எதிர்ப்பை காட்ட வேண்டும்.

## தமிழ் மக்களின் வரலாற்றுக் கடமை:

கடந்த பல ஆண்டுகளாக சுதந்திர தினத்தை வெற்றி விழாவாக சிங்களவர்கள் நாங்கள் கொண்டாடுகிறோம், நீங்களும் தேசி யக் கொடியைத் தூக்கிப்பிடிக்க வேண்டும் என்றால் இனமானம் உள்ள எந்தத் தமிழனும் செய்யப் போவது இல்லை.

தமிழ் இனத்தை அழித்துவிட்டு அந்த அழிப்பை, சிங்கள அர சுகள் வெற்றித் திருநாளாகக் கொண்டாட, அதற்கு சிங்கக் கொடி யைத் தூக்கிப்பிடிப்பது என்பது எவ்வகையிலும் சாத்தியமாற் றதாகும்.

தமிழர் தாயகம் எங்கும் பெப்ரவரி 4 ஆம் திகதி, சிங்கள தேசத் தின் சுதந்திர தினத்தை புறக்கணித்து தமிழ் மக்கள் எழுச்சி பயணத்தில் ஒன்றுகூட வேண்டிய வரலாற்றுக் கடமை அனை வருக்கும் உள்ளது.

# பெப். 04.2026 [Feb.04.2026]

## தமிழீழத்தின் கரிநாள், சிறீலங்காவின் சுதந்திர நாள்

## SRI LANKA'S INDEPENDENCE DAY, A BLACK DAY FOR THAMILEELAM


சிறீலங்கா சிங்கள அரசின் இனப்படுகொலை மற்றும் அடக்குமுறையின் 78 ஆண்டுகளைக் குறிக்கும், ஈழத்தமிழர் தேசத்திற்கு இந்த நாள் ஒரு கருப்பு நாளாகும்.

The day was a black day for the Eelam Thamil Nation that marked 78 years of Genocide & Oppression at the hands of the Sri Lankan Sinhala State.



**தமிழீழ மண்ணில் சிங்கள ஆக்கிரமிப்பு படைகள் இருக்கும் வரை எமது தாய் நிலம் சுடுகாடு...**

**இலங்கைத்தீவின்
வடக்கு, கிழக்கு பகுதி
தமிழர்களின் மரபு வழித் தாயகம்.
தமிழ் மக்கள் பூர்வகுடித் தேசிய இனம்.
தமிழ் மக்களுக்கு
சுயநிர்ணய உரிமை உண்டு.**



# தமிழ் இனத்தின் துன்பியலை வெளிப்படுத்தும் போர்க்களத்தின் பேனாக்கள்!

இ.சு.முரளிதரன்

24.01.2025

தொன்மப் போர்மரபும் காவிய இதிகாசப் புனைவுப் போர்களும் கூட அறத்தின் சாய்மானத்தோடு நிகழ்ந்ததில்லை. அவ்வாறிருக்கையில் ஈழத்தில் நிகழ்ந்த போரில் அறமீறல்கள் எவ்வாறு அமைந்திருக்குமென்பது கற்பனைக்கும் அற்பாற்பட்டது.



பேரவலமொன்றை எதிர்கொண்டு, மீண்டெழ முடியாத துயரில் தவிக்கின்ற இனமொன்று "நாளை விடியுமென்று" போலிப் பிடிமானத்தோடும், கையறு நிலையோடு வாழ்ந்து வருகின்றது. அதிகாரத்தை எதிர்ப்பதாக, அரசியற் களத்தின் கோமாளிக் கூத்துத் தொடரும் நிலையில், சர்வதேசத்தின் மௌனம் அதிகாரத் திற்குப் பக்கபலமாகவே அமைந்துள்ளது. காலந்தின்ற நாள் களில், போர்க்களத்தில் பேனா முனைகளின் புரட்சி குறித்த பதிவாக, ஐங்கரன் விக்கினேஸ்வரா இந்நூலைக் கையளிக் கின்றார்.

போரிலக்கிய உருவாக்கம், சகோதர யுத்தம், நூலகலமெரிப்பு, நிலஅபகரிப்பு, புலம்பெயர்வு, காணாமற் போதல், சித்திரவதைகள், பதுங்குகுழி வாழ்வு, குண்டுவீச்சு, பௌத்த ஆதிக்கம், மொழி அதிகாரம், சோதனைச் சாவடி, வண்புணர்வு, கைதுகள், பரணி பாடுதல், பண்பாட்டு வரைபடச் சிதைப்பு, ஆயுதக்கலாசரம், வன்மப்பரவலாக்கம். என எண்ணற்ற விடயங்களுக்குள்ளே சிக்குப் பிதுங்கி வெளியேறிய இனத்தின் ஒட்டுமொத்தமான துன்பியலை வெளிப்படுத்த போர்க்களத்தின் பேனாக்கள் முனைகிறது.

போராளிகளின் புனிதத்தைக் காவு கொடுக்காத வகையில், புரட்சியின் நெடுஞ்சாலையை விட்டுப் புறம் போகாமல் பயணிக்கின்றார். ஒவ்வொரு படைப்பாளியையும், நாம் சமகால விமர்சனப் பார்வையில் நோக்குவோம். அதாவது நடப்புக் காலத்தில் எவ்வகை நோக்கு நிலை மேலோங்கியுள்ளதோ, அதே வகையான தரிசனத்தில் அளந்துவிட முனைவோம். இதனால் காலத்திற்குக் காலம் மாறுபட்ட படைப்பாளிகள் கொண்டாடப்படுவது உண்டு. எனினும் தன் இனத்திற்காக, மனித வர்க்கத்தின் எழுச்சிக்காக இலக்கியம் படைத்தவர்களை அடுத்து வரும் காலம், ஏதோவொரு வகையில் புறந்தள்ளாமல் கொண்டாடும்.

அத்தகைய படைப்பாளிகளை ஐங்கரன் விக்கினேஸ்வரா இந்நூலில் இனங்காட்டுகின்றார்.

சிவ.ஆருரன், கி.பி.அரவிந்தன், அகிலன் திருச்செல்வம், க.வே.பாலகுமார், நா.யோகேந்திரநாதன், மகாலிங்கம் பத்மநாதன், பண்டிதர் வீ. பரந்தாமன் போன்றோர் ஈழப் போராட்டத்திற்கு நல்கிய இலக்கிய பங்களிப்பினைக் குறித்து சிலாகித்துள்ளார். ஊடகவியலாளர்களான மேரி கொல்வின், ஃபிரான்ஸிஸ் ஹறிசன் ஆகியோரின் மனிதாபிமானமும், துணிகரமிக்க செயற்பாடுகளை விதந்தோதுகின்றார். பெண் போராளிகளின் படைப்புகள், கறுப்பு ஜூலை, செம்மணி என்பன குறித்த ஆவணப் பதிவுகள் பற்றி துல்லியமான தகவல்களை வெளிப்படுத்தும் நூல்களை சிறப்பாக நுணுகி நோக்கியுள்ளார்.

"இளம் எழுத்தாளனையும் வரலாறு ஓர் நாள் விடுதலை செய்யும் எனும் நம்பிக்கைகளுடன்" என நிறைவு செய்வதும், அந்த நம்பிக்கை மெய்யாகிப் போவதும் நெகிழ்வினைத் தருகின்றது. மேரி கொல்வின் இறுதிக் கட்டப் போர்க்காலத்தில் எதிர்கொண்ட அனுபவங்களையும், சிரியா மற்றும் கிழக்கு தீமோரில் நிகழ்த்திய துணிகரச் செயற்பாடுகளையும் மெய்சிலிர்க்க எழுதிச் செல்லும் பாங்கு வியக்க வைக்கிறது.

ஈழப்போராட்டத்திற்குச் சேறு பூசுகின்ற நச்சுநிரற்படைப்புகளைத் துளியும் விரும்பாதவர் ஐங்கரன் விக்கினேஸ்வரா என்பதனையும் இந்நூல் இனங்காட்டுகின்றது. ஈழப்போராளிகள் மீதான பற்றுதலையும், அவர்களின் செயற்பாடுகளுக்கான மதிப்பினையும் கட்டுரைகளின் வழியே செவ்வனே உணர்த்தியுள்ளார்.

இந்நூல் மாற்றுக் கருத்துகளையும், அகலித்த விவாதத்தினையும் இலக்கிய உலகில் உண்டாக்குமென நம்புகிறேன். அலுப்பூட்டத வகையிலும், பிறரைத் தொந்தரவு செய்யும் வகையிலும் அமைகின்ற நூலே ஆரோக்கியமானது. அத்தயை பண்புகளோடு காணப்படும் "போர்க்களத்தின் பேனாக்கள்" பாராட்டுதலுக்கு உரியது.








-சாம்பவி -

# இன்னும் உள்ளே இருட்டு

படிக்கிறதுக்கெண்டு புத்தகத்தை விரிச்சு ஒரு மணித்தியாலத்திற்கு மேலாயிட்டுது. விரல்கள் பக்கங்களைப் புரட்ட, கண்கள் தான் வரிகளை தடவிச்சுதே தவிர, பாடம் என்ர மனதில பதியவே இல்லை. அந்த இரவின்ர அமைதி எனக்குள்ள என்னவோ செய்திச்சுது. தூரத்தில ஏதோ இரையிற சத்தம். முன்னறையில அப்பாவோடு கதைச்சுக் கொண்டிருந்த அம்மா கத்தினா.

“பிள்ளை லயிற்றை நூர்”

அம்மான்ர குரல் ஓமிறதுக்கு முதலே பாய்ஞ்சோடி லயிற்ற நூர்த்தன். அது ஒரு வாகனமாயிருக்க வேணும். சத்தம் நல்லாக் கிட்ட வந்திட்டுது. எனக்குள்ள இடிஇடிச்சமாதிரி இருந்திச்சுது. கால் கடகடவென்று நடுங்கத் தொடங்கிற்றுது. தொண்டையில இருந்து நெஞ்சுமட்டும் பயம் இறுகி, மூச்சே நிண்டு போகும் போல இருந்திச்சுது. வாகனம் எங்கட கேற்றிலதான் நிக்குதோ? நினைக்கவே உள்மனம், “ஐயோ“ என்று அலறிச்சுது. என்னால நிக்கேலாமல் போச்சுது. கால் சோர அப்படியே சுவரில சாய்ஞ்சபடி குந்திற்றன்.

“முருகா! அம்மாளாச்சி பிள்ளையாரே”

வாய்விட்டுப் புலம்பியபடி நெஞ்சைப் பிடித்துக்கொண்டு அப்படியே இருந்தன். சத்தம் எங்கடை வீட்டைக் கடந்து அப்படியே கரைச்சு போச்சு. நான் இன்னும் அப்படியே இருந்தன். லயிற் போடப் பயமாய் இருந்தது. போன சத்தம் திரும்பி வந்தா? சில வேளை அது எங்கட வீட்டுக்கு முன்னால நிண்டால்.......? கடவுளே! அம்மா மெதுவாகக் கூப்பிட்டா.

“பிள்ள இனி லயிற்றப் போட்டுட்டுப் படி”

எழும்பி லமிற்றைப் போட்டன். ஆனா அந்த வெளிச்சத்துக்க இருக்கவே விசராய் இருந்துச்சு. ஒண்டுக்குப் பின்னால ஒண்டாய் நடந்ததுகளை நினைக்க, நெஞ்சு அடைச்சு அழுகைதான் முட்டியது. அதை அப்படியே முண்டி விழுங்கினன். இதயம் புண்ணாய் வலிச்சுது. நாளைய பொழுதை நினைக்கவே தேகம் புல்லரிக்குது. ஒவ்வொரு நாளும் அவங்கட பொயின்ரைக் கடக்கேக்க, அந்த ஓட்டைகளுக்கால தெரியிற துவக்கை நீட்டின முகங்கள் படிக்கேக்க, படுக்கேக்க, நினைக்கேக்க எல்லாம் சுத்திச் சுத்திவந்து வெருட்டிக்கொண்டே இருந்திச்சு.

சீ! எப்படி இருந்தனாங்கள்? மேலால பொம்மர் அடிக்கஅடிக்க பங்கருக்க விளக்கைக் கொழுத்தி வைச்சுக்கூட, ரெஸ்றுக்குப் படிச்சனாங்கள். ஜாம் போத்தல் விளக்கில கூட கண்ணைக் கூசிக்கூசி படிச்சு ரெஸ்ற் எழுதினனாங்கள். அப்பஎல்லாம் கஸ்ரமாய் இருந்திச்சே தவிர. ஏதோ நிம்மதியாயிருந்திச்சு. இப்ப லயிற், சினிமாப்படம் இதுவரையும் கிடைக்காமல் இருந்த எவ்வளவோ சாமான்கள், வசதிகள் எல்லாம் இருக்கு. எண்டாலும் ஒண்டுமே இல்லாதமாதிரி வெறுமை... விரக்தி! ச்சீ...! இது என்ன வாழ்க்கை எண்டமாதிரி. ஏனிப்பிடி? எப்ப நிம்மதிவரும்? அல்லாட்டி வராமலே விட்டிடுமோ? சீச்சீ எப்பிடியாவது வரத்தானே வேணும். வரும். அது வருமட்டும் இருப்பமோ, சாவமோ எண்டுதான் தெரியேல்ல.

படிக்காமல் சும்மா புத்தகத்தை விரிச்சு வைச்சுக்கொண்டு, எத்தின மணித்தியாலம் இருக்கிறது? எல்லாத்தையும் அப்படியே மூடி வைச்சுட்டு மேசையில முகத்தை வச்சுப் படுத்தன். நாளைக்கென்ன செய்யிறது? பள்ளிக்குப் போறதா? போகாம நிக்கிறதா? நிண்டா அம்மா ஏனெண்டு கேப்பாவே? கேட்டா என்ன சொல்லுறது? அம்மா, அம்மாவே? பயந்த மனிசி. அவாட்டை இந்தக்கதையைச் சொன்னா, வீட்டு முத்தத்துக்கே இறங்கவிட மாட்டா. அப்பாட்டைச் சொன்னா என்ன சொல்லுவார்? அவரும் இந்த விசயமெண்டாப் பயந்துதான் போவார். இரண்டு பேருமே சேர்ந்து அகிலாவ அவவின்ர வீட்டுக்காரர் பள்ளிக்கூடத்தால மறிச்சமாதிரி என்னையும் மறிச்சிட்டா? என்ர மனம் ‘திக்’ கெண்டது. ‘ஐயோ’ கடவுளே! இவ்வளவு நாளும் கஸ்ரப்பட்டுப் படிச்சு இனி விடுகிறதெண்டா. என்ர உயிர் போனாலும் மாட்டன். உந்த நாயளுக்குப் பயந்து. நான் வீட்டுக்க இருக்கிறதா? எப்பிடித்தான் நான் என்னைத் தேற்றினாலும் நினைக்கப் பயம் பயமாதான் கிடக்குது. அவன்... அந்த மீசை இல்லாத ரெளடி எந்நேரமும் வெறிகாரன்ர கண்மாதிரி அரை மயக்கத்திலதான் நிப்பான். எந்த நாளும் நாங்கள் போய்வர, பாத்துப்பாத்து பல்லைக் காட்டுறாங்கள். நாக்கை நீட்டுறவங்கள். தனியப்போற பயத்தில, அஞ்சாறுபேர் சேர்ந்துதான் போறனாங்கள். எங்கட ஐடென்ரிக்காட்டில பேர்களைப் பார்த்திட்டு அதைப் பாடமாக்கிக் கூப்பிடுவாங்கள். அண்டைக்கு அவன்,

“கவுரி... கவுரி... ஏ... கவுரி”

எண்டு என்ர பேரைச்சொல்லிக் கூப்பிட்ட ஆத்திரத்தில. எனக்கு என்ன செய்யிறதெண்டே தெரியேல்ல. சட்டெண்டு திரும்பி ஒருக்கா முழுசிப் பார்த்தன். அந்த மூதேவி நிண்டு சிரிக்குது. அவனைச் சுத்தி இன்னும் ரண்டு, மூண்டு சனியனுகள்.

“சவங்களைப் பாத்தாலே பத்து நாளைக்குச் சாப்பிடேலாது. அங்கயிருந்து இங்க வந்திருக்குதுகள் பல்லுக்காட்ட”




மனதுக்குள்ள கறுவிக்கொண்டே வேகமாக சைக்கிள மிதிச்சன். வீட்டில வந்துதான் மூச்சு விட்டன். அம்மா வாசலில நிண்டா. என்னக் கண்டவுடன அவான்ர முகத்தில ஒரு நிம்மதி, சின்னச்சிரிப்போட.

“வா பிள்ள, நீ வர அரைநிமிசம் சுணங்கினாலே உயிர் போகுது. எந்தநேரமும் மடிக்குள்ள நெருப்பைக் கட்டினபடி”

எனத் தனக்குள்ள கூறியவாறு உள்ளுக்குப் போனா. நான் பேசாம அறைக்குள்ள போனன். அம்மாட்ட இந்த விசயங்களைச் சொல்லயில்ல.

எனக்குச் சாப்பாடு தந்தபடி அம்மா சொன்ன விசயம், தொண்டைக்குள்ளால சாப்பாட்டை இறங்கவிடாமப் பண்ணிப்போட்டுது. அடுத்த ஒழுங்கையில ஒரு வீட்டில நாலு பொம்பிளைப் பிள்ளயள், ஒரு பொடியன், மூத்ததுகள் இரண்டும் கொழும்பில. மூண்டாவது பிள்ள உங்க ரவுணுக்கதான், ஒரு பள்ளிக்சுடத்துல படிக்குது. பிள்ள பள்ளிக்குப் போய்வரேக்க ஊர்ப்பொடியள் இரண்டு பேர் பின்னாலும், முன்னாலும் சுத்துறவங்கள். ஒருநாள் அந்தப் பிள்ளயை ஆக்களில்லாத நேரம் ஒழுங்கேக்க வைச்சு, கத்தக்கத்த கடத்திக் கொண்டு போட்டாங்கள். பிள்ளயின்ர தம்பிக்காரன் அழுதுகொண்டு பக்கத்தில இருக்கிற காம்பில சொல்லப் போனவன், திரும்பி வரவேயில்ல. வயது போன தாயும் தேப்பனும் சாப்பாடு தண்ணி இல்லாமல், அழுதழுதே சாகப் போகுதுகள். சொல்லிக் கொண்டே போன அம்மான்ர கண் கலங்கிப் போனது. நான் சாப்பிடாமலே எழும்ப. அம்மா என்னப்பாத்து ஒண்டுமே கதைக்காம நிண்டா. அவவைப் பாக்க எனக்கு பாவமாக் கிடந்தது.

என்னோட படிச்ச வானதி குடும்பத்தோட வன்னியில இருக்கிறாள். அங்க வாழ்க்கை கஸ்ரமெண்டாலும் பிரச்சனையில்லையாம். கடிதம் போட்டிருந்தாள். எனக்கு எங்கட குடும்பம் இடம் பெயர்ந்து பட்டபாடுதான் நினைவுக்கு வந்திச்சுது. ஒக்டோபர் 30 வலிகாமமே இடம் பெயர்ந்த போது கையில எடுத்த சாமான்களோடு, அடிமேலடி வைச்சு செம்மணி கடக்கப்பட்டபாடு. றோட்டுக்கரையில ஈர நிலத்தில குடும்பமே குறண்டிக் கொண்டு படுத்தெழும்பிய நாட்கள். ஒரு இறாத்தல் பாணுக்குப் பல மணித்தியாலம் கியூவில நிண்டு காஞ்சது. எல்லாமே இப்ப ஒரு கனவுபோல இருக்கு. பிறகு வன்னிக்குச் சனமெல்லாம் போகவெளிக்கிட, கிளாலிக்கரை மட்டும் வந்திட்டும். வன்னிக்குப் போகமுடியாமல் திரும்பி வலிகாமத்துக்கே நடந்தபோது பயமிருந்ததுதான். ஆனால் அப்பா.

“அவங்கள் முந்திமாதிரி இல்ல. சனத்த நல்லா அனுசரிச்சுப் போகப் பழகிட்டினம். ஒரு பிரச்சனையும் இல்ல”

என்று சொன்னபோது. எனக்குள்ளேயும் எங்கட ஊர், வீடு, பள்ளிக்கூடம் என்பன ஒரு ஏக்கத்தையே ஏற்படுத்தியது.

இப்ப அந்த ஏக்கமெல்லாம் திசை மாறீட்டுது. எல்லாம் இருந்தும், ஒண்டுமே இல்லாத மாதிரி உணர்வுதான் வருகுது. நேற்று அந்த மூதேவியன் என்னக்கேட்ட கேள்வி... ஐயோ! அதை நினைக்கவே உயிர் நிண்டுபோகும் போல இருக்குது. என்ன





ஒரு துணிச்சல்?

சுற்றுமுற்றும் பார்த்தபடி, மெதுவா எனக்குக் கிட்ட வந்தான் அவன். வழக்கமாய் நான் போய் வாற நேரங்களில நிக்கிறவன் தான். அண்டைக்குப் பேர் சொல்லிக் கூப்பிட்டானே........ அவன்தான்... அவனேதான்.

"ஏ கவுரி... நான் உன்ன விரும்புறன். நீ என்னக் கலியாணம் கட்டுவியா? நாளைக்கு வந்து முடிவு சொல்லு என்ன...?"

வழிய வழியச் சிரிச்சபடி, காதுக்குள் வந்து அவன் மெதுவாகக் கேட்டவிதம், அடிச்சுக் கொல்ல வேணும் போல ஆத்திரம் வந்தது. என்ன செய்ய? ஒண்டும் செய்ய ஏலாது. கைகால் பதற, தலையைக் குனிஞ்சுகொண்டு நிண்டன்.

என்ர இதயம் துடிக்கேல்ல. துள்ளிச்சுது. தொண்டைக்குள்ள ஏதோ இறுக்கமா அடைச்சுக் கொண்டு உள்ளேயும் போகாமல், வெளியேயும் வராமல் மூச்சே நிண்டு போகும்போல இருந்திச்சுது. சைக்கிள் கான்ரில பிடிச்ச கை கடகடவென்டு நடுங்க, இன்னும் இறுக்கிப் பிடிச்சன். ஆத்திரமும் அழுகையும் பொங்கிக் கொண்டு வந்தாலும், எதுவுமே செய்ய முடியாத என்ர ஆற்றாமையை நினைக்க, 'ஐயோ!' எண்டு கத்தவேணும் போல் இருந்திச்சுது. அவன் என்னையே பாத்துக்கொண்டு நிண்டான். நிமிந்து ஒருக்காப் பாத்தன். என்ர நெஞ்சில எரியிற நெருப்பெல்லாம் கண்ணில தெரிய, ஒரேஒரு கணம்தான் சைக்கிள உருட்டிக்கொண்டு நடந்தன்.

இனி நாளைக்கு என்ன செய்யிறது? பள்ளிக்கூடம் போறதா? விடுறதா? பாதைமாறிப் போறதா? எப்படியும் இன்னொரு பொயின்ற் கடக்கத்தானே வேணும்.

எனக்குள்ள யோசிச்சு ஒரு முடிவோட அப்பாட்டைப் போனன்.

"அப்பா இனி ஒவ்வொரு நாளும் என்னப் பள்ளிக்கூடம் கொண்டுபோய் விட்டு, கூட்டிக் வரவேணும்." கொண்டு சொல்லிவிட்டு அம்மாவைப் பார்த்தேன். அப்பா திகைப்போட என்னைப் பார்த்தார். கையில எடுத்த சோத்தை அப்படியே கோப்பையில போட்டார். அப்பாவுக்குக் கறிவிட்டுக் அம்மா கொண்டிருந்த திடுக்கிட்டவராய்...

"ஏன் பிள்ள? ஏதேனும் பிரச்சனையே?"

பதட்டமாய்க் கேட்டா. நான் தலையை ஆட்டினன்.

"சீச்சீ அப்பிடி ஒண்டும் இல்ல. தனியப்போக ஒருமாதிரிக் கிடக்கு. மற்றப் பிள்ளயன் யாரையும் கூட்டிக்கொண்டுதான் வருகினம்." அப்பா என்னத் திருப்திப் படுத்தியவராய்ச் சொன்னார்.

"ஓம் பிள்ள நானும் ஒவ்வீசுக்கு அதாலதானே போய்வாறனான். இனி உன்னோட வாறன். ஏதேனும் பிரச்சனையெண்டால் சொல்லு. பயப்படாதை."

**அம்மாவோட ஒண்டிக்கொண்டு படுக்க ஏதோ நிம்மதியா இருந்த மாதிரி ஒரு உணர்வு. எல்லாத்தையும் அம்மாட்டச் சொல்லி அழ வேணும்போல இருந்திச்சுது. வேண்டாம். அவவும் நிம்மதியில்லாம என்னப்போல துடிக்க வேண்டாம்.**

என்னை ஆழமாப் பார்த்தபடி சாப்பிடத் தொடங்கினார்.

அப்பாவுக்குச் சந்தேகமாக்கும். வலு துணிச்சல்காரி எனப் பெயர் எடுத்த நான் இப்பிடிக் கேட்டதுதான் காரணம்.

"சீச்சீ அப்பிடி யொண்டும் இல்லையப்பா. நாளைக்கு ஏன் வீண் சோலியை எண்டுதான் பார்க்கிறன்."

மிகச் சாதாரணமாச் சொல்லிக் கொண்டு நான் அறைக்குப் போட்டன். எண்டாலும், அவைக்கு விளங்கியிருக்கும் எண்டு எனக்குத் தெரியும்.

எப்பிடியோ? அம்மா அப்பாவுக்கு பயம் ஏற்படுத்தாம பிரச்சனைக்குத் தீர்வு கண்டுவிட்ட பெருமை கொஞ்சம்கூட இல்ல.

நாளைக்கு அவன் என்ன செய்வான்? அப்பாவைக் கண்டு அவன் என்ன பயப்பிடவா போறான்? ஏதோ எனக்கொரு மனஆறுதல். அவ்வளவுதான். அப்பாவோட போகேக்க தனியக் கதைக்கச் சந்தர்ப்பம் இல்ல. ஆனா அவன் கோபத்தில அப்பாவுக்கு ஏதும் செய்தா...? ஐயோ! என்னால அப்பாவுக்கு... கடவுளே! அப்பிடி ஒண்டும் நடக்கக்கூடாது. மனசுக்குள்ள வேண்டியபடி பின் கதவைத் திறந்து வெளியிலே இறங்கினன்.

வானத்தில் நிலவு தேய்ஞ்சு போய் இருந்தது. யாரோ அள்ளிக் கொட்டின மாதிரி நட்சத்திரங்கள். கிணத்தடி மல்லிகைப்பூ விரியற வாசத்தோட பனிக்குளிர் காத்து, சில் எண்டிச்சுது. கையைக் கட்டிக்கொண்டு கிணத்துக் கட்டில குந்தினன். எவ்வளவு இனிமையான சூழல். இதுக்கும் மனதுக்கும் கொஞ்சம் கூட சம்பந்தமே இல்லாமல் இருக்கிறத நினைச்சால், வேதனை தான் மிச்சம். கிணத்துக்குப் பக்கத்தில உள்ள கொய்யாக்குக் கீழே கிடந்த ஏதோ. என்ர காலில தட்டுப்பட்டிச்சுது. மெதுவா நிமிர்த்திப் பார்த்தன். ஒரு சைக்கிள் பார் பகுதியும் இதைச் சுத்தித்தான் அட முந்தி ரேடியோ கேட்டனாங்கள். வெரித்தாஸ், பி.பி.சி.. புலிகளின் குரல். தம்பிதான் இதைச் செய்தவன். பொழுதுபட்டாக் காணும். சுத்தத் தொடங்குவான். கை உளைய உளையச் சுத்துவான். இடைக்கிடை விட்டா ரேடியோ விக்கி விக்கிப் பாடும்.

தம்பி இப்ப எங்க இருப்பான்?

என்ன செய்வான்? எங்கள நினைப்பானோ? கட்டாயம் நினைப்பான். அவனுக்குத்தான் எங்களில எவ்வளவு பாசம். ஒருநாள் ரியூசனுக்குப் போனவன், பிறகு வரவேயில்ல. ஒரு கடிதம்தான் வந்திச்சுது. எப்பிடி அவனால எங்களப் பிரிய முடிஞ்சுதோ தெரியேல்ல. அப்ப எனக்குக்கூட அவனில கோபம்தான் வந்தது. இப்ப நினைக்க எனக்கே வெட்கம இருக்கு.

எழும்பிவந்து கதவைச் சாத்தினன். லயிற்றை நூத்திட்டு, பழைய யாம்போத்தல் விளக்கை அம்மா கொழுத்திக் கொண்டிருந்தா. இப்ப அதுதான் விடிவிளக்கு.
"படன் பிள்ள. விடிய பள்ளிக் கூடம் போக வேணுமல்லோ"

"ஓமம்மா"

என்றபடி அம்மாவுக்குப் பக்கத்தில படுத்தன். அம்மாவோட ஒண்டிக்கொண்டு படுக்க ஏதோ நிம்மதியா இருந்த மாதிரி ஒரு உணர்வு. எல்லாத்தையும் அம்மாட்டச் சொல்லி அழவேணும் போல வேண்டாம். இருந்திச்சுது. அவவும் நிம்மதியில்லாம என்னப் போல துடிக்க வேண்டாம்.

அம்மா என்ன நினைச்சாவோ தெரியேல்ல. மெதுவா என்ர தலையைக் கோதிவிட்டா. நாங்க எதுவுமே கதைக்கேல்ல. அந்த மௌனம் ஒருத்தருக்கொருத்தர் ஆதரவா இருக்கிற உணர்வைத் தந்தது. அதுதான் இப்ப இருக்கிற ஒரேயொரு திருப்தி. நாளைக்கு எண்டது எங்களுக்கு இருட்டாத்தான் இருக்குது.

\- களத்தில் 10.02.1995

# யாழ்ப்பாணத்தில் பொங்கிய அனுர: தேசிய மக்கள் சக்தியின் வியூகம் என்ன?

25.01.2026



யாழ்ப்பாணத்துக்கு வந்த அனுர குமார காலால் நடந்தார் கைக ளால் உணவை எடுத்தார் வாயால் சாப்பிட்டார்கண்களால் பார்த்தார்வாயால் சிரித்தார்… என்று சமூக வலைத்தளங்களில் அரசியல் விமர்சனப் பதிவுகள் உலாவுகின்றன. ஏன் இந்தப் பதிவுகள் என்றால், ஜனாதிபதியின் ஒவ்வொரு அசைவையும் அசாதாரணமானதாக, அபூர்வமானதாக, எளிமையானதாகச் சித்திரித்து, அவருடைய ஊடகப்பிரிவு குறிப்பாக டிஜிட்டல் புரொமோஷன் அணி கவர்ச்சியான காணொளிகளாக கவர்ச்சியான காணொளிகளாக வெளியிட்டு வருகிறது. ரிக்ரொக் தலைமுறையின் ஒருபகுதி அதனை ஆர்வத்தோடும் எதிர்பார்ப்போடும் பார்க்கின்றது. அனுர பலாலியில் நடந்ததால் அவருக்குப் பிறஷர் குறைந்ததோ இல்லையோ, தமிழ் அரசியற் பரப்பில் ஓர் பகுதியினருக்குப் பிறஷர் ஏறுகிறது.

அனுரவை கதாநாயகராக கட்டமைக்கும் காணொளிகள் அரசாங்கத்தின் திட்டமிட்ட பிரச்சார விளம்பரங்கள்தான். எல்லாரும் செய்வதைத்தான் அனுரவும் செய்கிறார். ஆனால் அவருடைய ஊடகப் பிரச்சார அணி அதனை ஒரு செயற்கரிய செயலாக சித்திரிக்கின்றது. அதைத்தான் மேற்கண்டவாறு தமிழ் தேசிய ஆர்வலர்கள் விமர்சிக்கிறார்கள். தமிழ்த் தேசிய தரப்புகள் குறிப்பாக மேற்கண்ட பதிவுகளைப் போடுபவர்களும் உட்பட பெரும்பாலானவர்கள், ஒருவர் மற்றவரை அல்லது ஒரு கட்சி மற்றக் கட்சியை வில்லன் ஆக்கி, துரோகி ஆக்கி ஒருவர் மற்றவர் மீது மலத்தை அள்ளி வீசும்போது. இரண்டு தரப்பிலும் மலம் படுகிறது. இரண்டு தரப்புமே நாறுகின்றன. இதனால் தமிழ்த் தேசியப் பரப்பில் யாருமே கதாநாயகராக எழ முடியவில்லை. இந்த வெற்றிடத்திற்குள் அனுர ஒரு கதாநாயகராக இறக்கப்படுகிறார். தமிழ்த் திரை நாயகர்களின் எழுச்சியான பாடல்களின் பின்னணியில் அவர் நாயக நடை போடுகிறார். இது தமிழ்த் தேசியக் கட்சிகள் விட்ட வெற்றிடத்தை அரசாங்கம் திட்டமிட்டு நிரப்பும் ஒரு பிரச்சார உத்தி.

ஆனால் இது தனிய ஒரு பிரச்சார உத்தி மட்டுமல்ல, அதைவிட ஆழமான ஆபத்தான ஓர் அரசியல் வியூகம் அங்கே உண்டு. அனுர கடந்த வாரம், யாழ்ப்பாணத்தில் வைத்து பின்வருமாறு கூறினார் “முன்னர் வடமாகாணத்துக்கு தனி ஆட்சி தேவை என்று வடமகாண மக்கள் கூறினார்கள்.. ஆனால் முதன் முதலாக யாழ் மக்கள் இன்று எங்களுடைய ஆட்சியை தங்களுடைய ஆட்சி என்று நம்புகிறார்கள்.. அவர் பயன்படுத்திய சொற்களுக்கு அரசியல் பரிமாணம் உண்டு என்று எடுத்துக் கொண்டால், அவர் தமிழ் மக்களின் போராட்டத்தை வடக்குக்குள் மட்டும் சுருக்குகிறார். அது வடக்கின் பிரச்சினை என்று காட்டப் பார்க்கிறார். கிழக்கில் அந்தப் பிரச்சினை இல்லை என்றும் அங்கே பொருள் கொள்ளலாம்.

அவர் மட்டுமல்ல கோத்தபாய ராஜபக்சவும் இனப்பிரச்சினையை வடக்குக்கு மட்டுமான பிரச்சினையாக, ஒரு பொருளாதாரப் பிரச்சினையாகச் சுருக்கப் பார்த்தார். இது ஒரு தெளிவான நிகழ்ச்சி நிரல். கிழக்கில் பிரச்சினை இல்லை என்று காட்டுவது. அல்லது வடக்கை மட்டும் ஃபோக்கஸ் பண்ணுவதன்மூலம் வடக்கையும் கிழக்கையும் தெளிவாகப் பிரிப்பது.

இங்கு மேலும் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய ஒரு விடயம் உண்டு. ஒரு ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட பின் குறுகிய காலகட்டத்துள் வடக்கிற்கு அதிகம் வருகை தந்தவர் அனுரதான். அதுமட்டுமல்ல, அவருடைய வருகைகளின்போது அவரை நோக்கித் திட்டமிட்டு மக்கள் குவிக்கப்படுகிறார்கள். அது தானாகத் திரண்ட கூட்டம் என்று அவருடைய ஊடகப்பிரிவு சொல்லலாம். ஆனால் அரச பேருந்துகள் அதற்குப் பயன்படுத்தப் படுகின்றன என்பது பொங்கல் விழாவின்போது அவதானிக்கப் பட்டது. ஆனால் இதேயளவு கவனக்குவிப்பு கிழக்கை நோக்கி இல்லை. வடக்கோடு ஒப்பிடுகையில் கிழக்கில் “செல்பி அரசியல்” பெரிய அளவில் இல்லை.

கடந்த வாரம் பொங்கல் விழாவில் அனுர பின்வருமாறும் பேசினார்… “பார்க்காத பழகாத எங்களை நம்பினீர்கள். உங்களை நாங்கள் கைவிட மாட்டோம்” இது கடந்த நாடாளுமன்ற தேர்தலில் தேசிய மக்கள் சக்தி பெற்ற வெற்றியை அவர்களே எதிர்பார்க்கவில்லை என்பதைக் காட்டுகிறது. அது எதிர்பாராமல் கிடைத்த வெற்றி. ஆனால் உள்ளூராட்சி சபைகளில் அவர்கள் எதிர்பார்த்த வெற்றி கிடைக்கவில்லை. தமிழரசுக் கட்சி குறிப்பாக சுமந்திரன் கடுமையாக உழைத்து தேசிய மக்கள் சக்தியின் வெற்றியின் பருமனைக் குறைத்தார். ஆனால் மாகாண சபையில் மீண்டும் தன் மேலாண்மையை நிலைநாட்ட வேண்டும் என்று தேசிய மக்கள் சக்தி கருதுகின்றது. அதை நோக்கி அவர்கள் ஏற்கனவே உழைக்கத் தொடங்கி விட்டார்கள்.

ஜனாதிபதியும் அமைச்சர்களும் வடக்கை நோக்கி அதிகமாக வருவது அந்த நோக்கத்தோடுதான். ஜனாதிபதியை தமிழ் மக்கள் மத்தியில் ஒரு கதாநாயகனாகக் கட்டியெழுப்புவதும் அந்த நோக்கத்தோடுதான். தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு இடையே காணப்படும் பிடுங்குப்பாடு அரசாங்கத்துக்கு அனுகூலமானது. தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு இடையில் காணப் படும் முரண்பாடுகளையும் குறிப்பாக தமிழரசுக் கட்சிக்குள் காணப்படும் குழு மோதல்களையும் சுட்டிக்காட்டி அமைச்சர் சந்திரசேகரன் அண்மைக் காலங்களில் பேசி வருகிறார். அதற்கு சிவஞானம் பதில் சொல்லுகிறார். சிவஞானத்தின் பதில் ஒலிவாங்கிகளுக்கு முன்னுக்கு கூறப்படுவதாக இருக்கக் கூடாது. அது செயலில் காட்டப்பட வேண்டும்.

அடுத்த மாகாண சபைத் தேர்தலை ஆகக்கூடிய விரைவில் வைப்பதை இந்தியா விடும்புகிறது என்பது எல்லாருக்கும் தெரிகிறது. எனவே மாகாண சபைத் தேர்தலில் தன்னுடைய வெற்றியை உறுதிப்படுத்துவதற்காக அரசாங்கம் கடுமையாக உழைக்கின்றது. ஏற்கனவே கிராம மட்டங்களில் அவர்கள் உருவாக்கி வரும் “பிரஜா சக்தி” என்ற கட்டமைப்புக்கு அவர்கள் வறுமை ஒழிப்பு என்ற கவர்ச்சியான நிறத்தைப் பூசலாம். ஆனால் நடைமுறையில் அது பிரதேச சபைகளுக்குச் சமாந்தரமானது. பிரதேச அதிகாரங்களைக் கவரும் நோக்கிலானது. அதைவிட முக்கியமாக அரச கட்டமைப்பு ஒன்றுக்கூடாக, அரச வளங்களைப் பயன்படுத்தி ஆளுங்கட்சியின் அடிமட்ட வலையமைப்பைப் பலப்படுத்தும் கட்சி அரசியல் உள் நோக்கம் அங்கே உண்டு என்று சந்தேகிக்கப் படுகிறது. அதுதொடர்பாக அண்மையில் நல்லூர், திவ்வியஜீவன சங்க மண்டபத்தில் நடந்த கருத்தரங்கில் ஐங்கரநேசசன் பேசினார், பிரஜா சக்திக்கு எதிராகத்தான் நீதிமன்றம் செல்லப்போவதாக சுமந்திரன் கூறியிருக்கிறார்.

அதாவது தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அடுத்த மாகாண சபையை இலக்கு வைத்து இயங்குகின்றது. ஆனால் வடக்கை அவர்கள் குறிவைப்பது அதற்காக மட்டும் அல்ல. அது அதைவிட ஆழமானது. வடக்கை வென்றெடுத்தால், கிழக்கு தானாக விழுந்துவிடும் என்று அவர்கள் நம்புகிறார்கள். வடக்குத்தான் பிரச்சனை. எனவே அங்கே அடிக்க வேண்டும். அங்கே வெல்ல வேண்டும். என்று அவர்கள் திட்டமிடுகிறார்கள்.

இது ஒருவிதத்தில் முதலாம் கட்ட ஈழப்போரின் போது ஜெயவர்த்தன வகுத்த வியூகத்தின் மறுவளமான வடிவம் ஆகம். ஜெயவர்த்தனாவின் தளபதியாக இருந்த சிறில் ரணதூங்க ஒரு நேர்காணலில் கூறியதுபோல, வடக்குக் கிழக்கு இணைப்பைத் துண்டித்து விட்டால், அதாவது வடக்கையும் கிழக்கையும் இணைக்கும் பிரதேசத்தை குடியேற்றங்களின் மூலம் துண் டித்து விட்டால், தாயகக் கோட்பாடு புவியியல் ரீதியாக சிதைக்கப்படும். அடுத்ததாக கிழக்கை படை நடவடிக்கைகள், திட்ட மிட்ட அரச குடியேற்றங்கள் மூலமும் தமிழ் – முஸ்லீம் முரண்பாடுகளை, வடக்குக் – கிழக்கு முரண்பாடுகளை ஊக்குவிப்பதன் மூலமும் தோற்கடித்து விட்டால், தாயகம் நடைமுறையில் பல வீனமடைந்துவிடும். கிழக்கை வென்றெடுத்தால், வடக்கு மட்டும் தாயகமாக நின்று பிடிக்காது என்று ஜெயவர்த்தன கணக்குப் போட்டார்.

இப்பொழுது தேசிய மக்கள் சக்தியானது அந்த வியூகத்தின் அடுத்த கட்டத்தைப் பரிசோதிக்கின்றதா? வடக்கை வீழ்த்தினால், கிழக்கு தானாக விழுந்துவிடும் என்று அவர்கள் நம்புகிறார்கள். ஏற்கனவே ஒரு வழக்கின்மூலம் வடக்கையும் கிழக்கையும் சட்டரீதியாகப் பிரித்தது ஜேவிபி என்பதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். எனவே வடக்கு-கிழக்கு அதாவது தாயகத்தைத் துண்டாடும் வியூகம் இதில் உண்டு. இந்த வியூகத்தை எதிர்கொள்ள வேண்டும். பிரஜா சக்திக்கு எதிராக வழக்குப் போடுவதால் மட்டும் இந்த வியூகத்தைத் தோற்கடித்து விட முடியாது. பலமான தமிழ்த் தேசியப் பதில் வியூகம் ஒன்று வேண்டும்.

நன்றி: நிலாந்தன்



# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமும் அநுரவின் நடைப்பயணமும்

– அரசியல் ஆய்வாளர் ஜோதிலிங்கம்–

27.01.2026

அனைத்துலக உயிரோடை தமிழ் வானொலி மற்றும் இலக்கு மின்னிதழ் நேயர்களுக்கு வணக்கம். இன்றைய “தாயக களம்” நிகழ்ச்சியில் அரசியல் ஆய்வாளர் ஜோதிலிங்கம் அவர்கள் கலந்து கொண்டு சமகால அரசியல் நிலவரங்கள் குறித்து கருத்துபகிர்கிறார்.

**கேள்வி : புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் அடிப்படை நோக்கம் என்ன?**

**பதில் :** பொதுவாக சட்டங்கள் மக்களுக்காக உருவாக் கப்படு கின்றன என்று கூறப்படுகிறது. ஆனால் நடை முறையில் பல சட்டங்கள் அரசின் அதிகாரத்தை பாதுகாக்கும் நோக்கில் உரு வாக்கப்படுகின்றன. புதிய பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமும் அந்த வகையிலேயே அரசை பாதுகாக்கும் சட்டமாகத் தோன்றுகிறது.

1979ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட பயங்கரவாத தடைச் சட்டம் தமிழர்களின் அரசியல் போராட்டத்தை அடக்குவதற்காக உருவாக்கப்பட்டது. அந்தச் சட்டம் பல தசாப்தங்கள் நடைமுறை யில் இருந்து தமிழ் மக்களை கடுமையாக பாதித்தது. ஆயுதப் போராட்டம் அடக்கப்பட்டாலும், தமிழர்களின் அரசியல் பிரச் சினை தீரவில்லை. அந்த அரசியல் பிரச்சினை மீண்டும் எழுச்சி பெறக்கூடும் என்ற அச்சமே புதிய சட்டத்தின் அடிப்படை காரண மாக உள்ளது.

**கேள்வி : இந்தச் சட்டத்தின் பிரதான இலக்கு யார்?**

**பதில் :** இந்த சட்டத்தின் பிரதான இலக்கு தமிழ் மக்களும், அவர் களின் அரசியல் செயற்பாடுகளுமே என்று கூறலாம். தமிழர் களின் அரசியல் உரிமைப் போராட்டத்தை கட்டுப்படுத்துவதற் காகவே இந்த சட்டம் உருவாக் கப்படுகின்றது.

அரசு வெளிப்படையாக இதை ஒப்புக்கொள்ளவில்லை என் றாலும், சட்டத்தின் உள்ளடக்கம் தமிழர்களின் அரசியல் செயற் பாடுகளை கட்டுப்படுத்தும் வகையில் வடிவ மைக்கப்பட்டுள் ளதாக தெரிகிறது.

மேலும், ஐரோப்பிய ஒன்றியத்தின் GSP+ சலுகையைத் தொடரப் பெறுவதற்காக பழைய பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்க வேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டது. அந்த நிபந் தனையை பூர்த்தி செய்ததாக காட்டுவதற்காகவே புதிய சட்டம் கொண்டு வரப்படுகிறது.

**கேள்வி : இந்த சட்டத்தில் உள்ள ஆபத்தான அம்சங்கள் என்ன?**

**பதில் :** இந்த சட்டத்தில் “பயங்கரவாதம்” என்ற சொல்லுக்கு மிக விரிவான விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. தடைசெய்யப்பட்ட இயக்கங்களின் அரசியல் நோக்கங்களை ஆதரிக்கும் கருத் துக்களை வெளியிட்டால் கூட அதுபயங் கரவாதமாகக் கருதப் படக்கூடிய சூழல் உருவாகிறது.

ஒரு அரசியல் கருத்தை வெளிப்படுத்துவது கூட குற்றமாக மாறக் கூடிய நிலை ஏற்படுகிறது. போராட்டம் நடத்தினாலும் பயங்கர வாதமாக வரையறுக்க முடியும்.

மேலும், காணிகளை தடை செய்யப்பட்ட பகுதிகளாக அறி விக்கும் அதிகாரம் அரசுக்கு வழங்கப்பட்டுள்ளது. விசாரணை அதிகாரம் போலீசுக்கு மட்டுமின்றி இராணுவத்துக்கும் வழங்கப்பட்டுள்ளது. விசாரணை இல்லாமல் இரண்டு மாதங்கள் வரை கைது செய்து வைத்திருக்க முடியும்.

இந்த அம்சங்கள் அனைத்தும் இந்த சட்டம் பழைய பயங் கரவாத தடைச் சட்டத்தை விடவும் கடுமையா னதாகமாறக் கூடும் என்பதைக் காட்டுகின்றன.

**கேள்வி : இந்த சட்டம் ஏன் அரசியல் ரீதியாக முக்கிய மானது?**

**பதில் :** இந்த சட்டம் அரசியல் ரீதியாக மிகவும் முக்கியமானது. ஏனெனில் இது அரசின் அதிகாரத்தை மேலும் வலுப்படுத்தும் ஒரு கருவியாக மாறும். பாராளுமன்றத்தில் பெரும்பான்மை உள்ள அரசுக்கு இந்த சட்டத்தை நிறைவேற்றுவது சாத்திய மானதாக உள்ளது. ஆனால் தமிழ் மக்களின் சம்மதம் இல் லாமல் சட்டம் கொண்டு வரப்படுமானால், அது அரசியல் ரீதியாக பெரும் நெருக்கடியை உருவாக்கும். தமிழ் அரசியல் கட்சிகள் ஒருங்கிணைந்து எதிர்ப்பு தெரிவித்தால், அரசுக்கு அரசியல் அழுத்தம் ஏற்படும். அதேநேரத்தில் மக்கள் மத்தியில் உரு வாகும் அரசியல் எழுச்சி அரசுக்கு பெரும் சவாலாக மாறும்.

**கேள்வி : தமிழர்கள் எவ்வாறு இந்த சட்டத்தை எதிர்க்க முடியும்?**

**பதில் :** தமிழர்கள் பல்வேறு அரசியல், சமூக மற்றும் சர்வதேச களங்களில் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்.

அரசு அதிகமாக அச்சப்படுவது உலகளாவிய அரசியல் போராட் டத்தையே. முள்ளிவாய்க்கால் நினைவு நிகழ்வுகள், மாணவர் போராட்டங்கள் போன்றவை சர்வதேச கவனத்தை ஈர்த்தன. அதேபோல், தமிழ் மக்களின் அரசியல் போராட்டம் சர்வதேச அளவில் வலுப்பெற்றால், அது அரசுக்கு பெரும் அழுத்தத்தை ஏற்படுத்தும். பாராளுமன்ற அரசியல், மக்கள் இயக்கம், சர்வ தேச ஆதரவு ஆகிய மூன்றையும் ஒருங்கிணைத்தால்தான் இந்த சட்டத்திற்கு எதிரான உண்மையான போராட்டம் உரு வாகும்.

**கேள்வி : ஜனாதிபதி வடமாகாணத்தில் சுதந்திரமாக நடை பயணம் செய்தது என்ன அர்த்தம்?**

**பதில் :** ஜனாதிபதி எந்தவித பெரிய பாதுகாப்பும் இல்லாமல் வட மாகாணத்தில் நடைபயணம் செய்தது முக்கியமான அரசியல் செய்தியாக மாறியது. ஒரு நாட்டின் தலைவன் எந்தவித அச் சுறுத்தலும் இல்லாமல் வடக்கில் சுதந்திரமாக நடக்க முடிந்தால், அரசை பாதுகாக்கும் பெயரில் கடுமையான பயங்கரவாத சட்டம் ஏன் தேவை என்ற கேள்வி எழுகிறது. இது தமிழ் இளைஞர்கள் மத்தியில் உருவான நியாயமான சந்தேகம். பாதுகாப்பு அச் சுறுத்தல் இல்லாத சூழலில் கடுமையான சட்டம் தேவைப்படுமா என்ற கேள்வி அரசின் நோக்கத்தை வெளிப்படுத்துகிறது.

**கேள்வி : வடக்கு – கிழக்கு மக்களை அரசாங்கம் ஈர்க்க முயற் சிப்பது பற்றி உங்கள் கருத்து?**

**பதில் :** அரசாங்கம் வடக்கு-கிழக்கு மக்களை தங்கள் பக்கம் ஈர்க்க மிகவும் திட்டமிட்ட முறையில் செயல்படுகிறது. சமூக நிகழ்வுகள், அரசியல் நடவடிக்கைகள், வளர்ச்சி திட்டங்கள் போன்றவற்றின் மூலம் மக்கள் ஆதரவைப் பெறமுயற்சிக்கிறது.

அதே நேரத்தில் தமிழ் தேசிய கட்சிகள் மீது மக்கள் மத்தியில் அதிருப்தி உருவாகியுள்ளது. ஒருங்கிணைந்த அரசியல் இல் லாமை, கொள்கை தெளிவின்மை, மக்கள் பிரச்சினைகளில் போதிய கவனம் இல்லாமை போன்ற காரணங்களால்சிலர் புதிய அரசியல் இயக்கங்களை நோக்கி நகர்கின்றனர். இது தமிழ் அரசியலின் மிகப்பெரிய சவாலாகும்.

**கேள்வி : கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தமிழ்நாடு சென்றது அரசியல் ரீதியாக எவ்வளவு முக்கியம்?**

**பதில் :** தமிழ்நாடு மற்றும் இந்திய அரசியல் தொடர்புகளை வலுப்படுத்துவது இலங்கைத் தமிழர் அரசியலுக்கு மிகவும் முக் கியமானது. இந்தியாவின் நிலைப்பாடு இல்லாமல் இலங்கை அரசியல் மாற்றங்களை ஏற்படுத்த முடியாது. தமிழ்நாட்டின் ஆதரவு இல்லாமல் இலங்கைத் தமிழர் பிரச்சினையை சர்வ தேச அளவில் முன்னெடுக்க முடியாது.

அந்த வகையில் இந்தப் பயணம் வரவேற்கத்தக்கது. ஆனால் வெளிநாட்டு ஆதரவை மட்டுமே நம்புவது போதாது. தாயகத்தில் மக்களை ஒருங்கிணைக்கும் அரசியல் இயக்கம் உருவாக வேண்டும்.

தாயகத்தில் அரசியல் எழுச்சி இல்லாமல் வெளி நாட்டு முயற் சிகள் மட்டும் பெரிய மாற்றத்தை உருவாக்க முடியாது.

**கேள்வி : தமிழ் அரசியலின் எதிர்கால பாதை என்ன?**

**பதில் :** தமிழ் அரசியல் தற்போது ஒரு முக்கிய திருப்பு முனையில் உள்ளது. ஒருங்கிணைந்த அரசியல் இல்லாமல், மக்கள் ஆதரவு இல்லாமல் எந்த அரசியல் இயக்கமும் வெற்றி பெற முடியாது.

தமிழ் தேசிய கட்சிகள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். மக்கள் பிரச்சினைகளை மையமாக வைத்து அரசியல் செயல் பட வேண்டும். அதே நேரத்தில் சர்வதேச அரசியல், இந்திய அரசியல், மக்கள் இயக்கம் ஆகிய மூன்றையும் இணைத்த ஒரு அரசியல்பாதை உருவாக்கப்பட வேண்டும். அப்படியானால் தான் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் பாதுகாக்கப்பட முடியும்.

**கேள்வி : முடிவாக நீங்கள் சொல்ல விரும்புவது என்ன?**

**பதில் :** புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் அரசியல் ரீதியாக தமிழ் மக்களை இலக்காகக் கொண்ட ஒரு சட்ட மாகவேபார்க்கப் படுகிறது. இதனை எதிர்கொள்ள தமிழர்கள் அரசியல், சமூக மற்றும் சர்வதேச அளவில் ஒருங்கிணைந்த போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும்.

தமிழ் அரசியல் சக்திகள் ஒன்றிணைந்து மக்களிடையே நம்பிக்கையை உருவாக்க வேண்டும். தாயகத்தில் அரசியல் எழுச்சி உருவாகும்போதுதான் வெளிநாட்டு ஆதரவும் பயனளிக் கும். அதுவே தமிழ் அரசியலின் எதிர் காலத்திற்கு மிக முக்கிய மான பாதையாகும்.

நன்றி: இலக்கு மின்னிதழ்




# சிரியாவில் குர்தியப் படைகளின் பின்னடைவு: தன்னாட்சி உரிமையை இழக்கும் குர்திஷ் மக்கள்!

– ஐங்கரன் விக்கினேஸ்வரா –

20.01.2026

சிரியாவில் 2024 டிசம்பரில் பஷர் அல்-அசாத் ஆட்சி வீழ்ந்ததைத் தொடர்ந்து, சிரியாவில் ஒரு புதிய இடைக்கால அரசாங்கம் அமைந்தது. இருப்பினும், வடகிழக்கு சிரியாவில் ஆதிக்கம் செலுத்தும் குர்துக்கள் தலைமையிலான சிரிய ஜனநாயகப் படைகள் (SDF) அலப்போ நகருக்குள் தொடர்ந்தும் சில முக்கிய பகுதிகளைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர்.






கடந்த சில வாரங்களாக சிரியாவின் அலப்போ (Aleppo) நகரில் நிலவி வந்த கடுமையான போர்ச்சூழல், ஒரு முக்கிய திருப்பத்தை அடைந்துள்ளது. இவ்வருட ஜனவரி 6 முதல் அலப்போ நகருக்குள் நடந்த மோதல்கள் முடிவுக்கு வந்துள்ளன. அலப்போ நகரம் தற்போது முழுமையாக சிரிய இடைக்கால அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளது.

முன்னர் அலப்போவின் ஷேக் மக்சூத், அஷ்ரஃபியா ஆகிய இரண்டு பிரதேசங்கள் குர்திஷ் படைகளின் வசம் செயல்பட்டு வந்தன. புதிய சிரிய அரசுக்கும், குர்திஷ் படைகளுக்கும் இடையே படைகளை ஒருங்கிணைப்பது தொடர்பான ஒப்பந்தங்கள் தோல்வியடைந்த நிலையில், கடந்த ஜனவரி ஆரம்பத்தில் பலத்த மீண்டும் சண்டை வெடித்தது.

இதன் விளைவாக சிரிய அரசாங்கப் படைகள் குர்திஷ் கட்டுப்பாட்டில் இருந்த ஷேக் மக்சூத் மற்றும் அஷ்ரஃபியே பகுதிகளை முழுமையாகக் கைப்பற்றியுள்ளன. இதன் மூலம், ஒட்டுமொத்த அலப்போ நகரமும் இப்போது மத்திய அரசாங்கத்தின் முழுக் கட்டுப்பாட்டில் உள்ளது.

கடும் தாக்குதலைத் தொடர்ந்து, குர்திஷ் படைகள் இப்பகுதிகளில் இருந்து வெளியேற ஒப்புக்கொண்டுள்ளன. தற்போது குர்திஷ் போராளிகள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் பாதுகாப்பான வழித்தடங்கள் வழியாக வடகிழக்கு சிரியாவில் உள்ள அவர்கள் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு (Qamishli மற்றும் Hasakah நோக்கி) பேருந்துகள் மூலம் வெளியேற்றப்பட்டனர்.

இதேவேளை துருக்கியில் குர்திஷ் SDF படைகள் பயங்கரவாத அமைப்பாகவே கருதப்படுகிறது. இந்த மோதலில் துருக்கி நேரடியாகத் தரைவழியாக ஈடுபடாவிட்டாலும், குர்திஷ் படைகளுக்கு எதிரான இந்த நடவடிக்கையை துருக்கி ஆதரிப்பதாகவே தெரிகிறது. சில அறிக்கைகளின்படி, துருக்கியின் ட்ரோன்கள் சிரிய அரசுப் படைகளுக்கு உதவியாக இருந்திருக்கலாம் எனவும் கூறப்படுகிறது.

அசாத் ஆட்சிக்குப் பிந்தைய சிரியாவில், புதிய அரசாங்கம் தனது அதிகாரத்தை நாடு முழுவதும் நிலைநிறுத்த முயற்சிப்பதன் ஒரு பகுதியாகவே இது பார்க்கப்படுகிறது. இது புதிய அரசுக்கும் குர்திஷ் படைகளுக்கும் இடையிலான உறவில் பெரும் விரிசலை ஏற்படுத்தியுள்ளது.

இந்த ஒரு வார சண்டையில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். பலர் அஃப்ரின் மற்றும் பிற பகுதிகளுக்குத் தப்பிச் சென்றுள்ளனர். இரு தரப்பிலும் கணிசமான உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன. குறிப்பாக ஷேக் மக்சூத் பகுதியில் நடந்த சண்டையில் பொதுமக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தற்போது அலப்போவில் குர்திஷ் படைகளின் ஆதிக்கம் முடிவுக்கு வந்துள்ளது. நகரம் முழுவதும் சிரிய மத்திய அரசின் கொடியின் கீழ் வந்துள்ளது. ஆனால், இது வடகிழக்கு சிரியாவில் உள்ள குர்திஷ் நிர்வாகத்திற்கும், டமஸ்கஸ்ஸில் உள்ள மத்திய அரசுக்கும் இடையே ஒரு புதிய விரிசலைத் தொடக்கி வைத்துள்ளது.

## தாயகம் இல்லாத குர்திஷ் மக்கள் :



மத்திய கிழக்கில் பாரம்பரியமாகவே வாழ்ந்து வரும் இனமான குர்திஷ் மக்கள் (Kurdish) தென்கிழக்கு துருக்கி, வட கிழக்கு சிரியா, வட ஈராக், வடமேற்கு ஈரான், தென்மேற்கு ஆர்மேனியா ஆகிய பகுதிகளில் அதிகம் வாழ்கின்றனர்.

ஆயினும் தாயகம் இல்லாத மிகப்பெரிய இனக்குழுவான குர்திஷ் மக்கள் துருக்கியிலும், சிரியாவிலும் பிற இடங்களிலும் நீண்டகாலமாக துன்புறுத்தலை எதிர்கொண்டுள்ளனர்.


ஐந்து நாடுகளில் சிதறி வாழும் குர்திஷ் மக்களின், பேரியாக ஐந்து நாடுகளிலுமே அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டு, ஒடுக்கப்பட்ட இனமாக கருதப்படுகின்றனர். இதன் விளைவாக விடுதலை போராட்டத்திற்கும் தள்ளப்பட்டார்கள்.

## 5,000 ISIS உறுப்பினர் விடுதலை:

வடகிழக்கு சிரியாவில் குர்திஷ் கட்டுப்பாட்டின்கீழ் இருந்த ராக்கா (Raqqa) நகரை சிரியாவின் அரச படையினர் கைப்பற்றியதன் பின்னர், சிறைகளில் அடைக்கப்பட்டிருந்த ISIS இயக்கத்தின் சுமார் ஐயாயிரம் உறுப்பினர்களை சிரிய அதிபர் ஜுலானியின் உத்தரவின் பேரில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு பெரும் தொகையான ISIS இயக்கத்தினர் சிறைகளிலிருந்து விடுவிக்கப்பட்டதன் காரணமாக அவ்வியக்கம் மீண்டும் பலம்பெறும் என்று நம்பப்படுகிறது.

முன்னாள் HDS இயக்க தலைவரான இன்றைய சிரியாவின் அதிபர் ஜுலானி அவர்கள், ஆரம்பகாலங்களில் ISIS இயக்கத்தின் இரண்டாவது தளபதியாக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.




## அலப்போ அரசு வசம்:

சிரிய நாட்டு அரச படையினர் அலப்போ நகரை கைப்பற்றியதன் மூலம் அமெரிக்க ஆதரவு பெற்ற குர்திஷ் SDF படைகள் தற்போது பின்வாங்கி உள்ளனர். அமெரிக்கா தனது நலனுக்காக மாத்திரம் மற்றவர்களை பயன்படுத்துவது வழமை. ஜுலானியின் புதிய உறவு கிடைத்ததன் காரணமாக நீண்டகால உறவு இருந்துவந்த குர்திஷ் மக்களை அமெரிக்கா கைவிட்டுள்ளது.

அதாவது தனக்கு தேவைப்படும் போது பயன்படுத்துவதும், தேவை முடிந்தால் கைவிடுவதும் அமெரிக்கா நீண்ட காலங்

www.sangathamil.ca






**சிரியாவில் அமெரிக்க ஆதரவுடன் இருந்த குர்தியப் படைகளுக்கு பாரிய பின்னடைவு ஏற்பட்டுள்ளது. சிரிய அதிபர் ஜூலானியின் புதிய உறவு அமெரிக்க அரசுக்கு கிடைத்ததன் காரணமாக, நீண்டகால உறவு இருந்துவந்த குர்திஷ் மக்களை அமெரிக்கா கைவிட்டுள்ளது. அமெரிக்கா தனது நலனுக்காக மாத்திரம் மற்றவர்களை பயன்படுத்துவது வழமை. அதாவது தனக்கு தேவைப்படும் போது பயன்படுத்துவதும், தேவை முடிந்தால் கைவிடுவதும் அமெரிக்கா நீண்ட காலங்ககளாக கடைப்பிடித்து வரும் கொள்கை என்பதனை இப்போதுதான் குர்திஷ் மக்கள் உணர்ந்திருப்பார்கள்**



களாக கடைப்பிடித்து வரும் கொள்கை என்பதனை இப்போது தான் குர்திஷ் மக்கள் உணர்ந்திருப்பார்கள்.

இதேவேளை சிரியாவின் முக்கிய எண்ணெய் மற்றும் எரிவாயு வயல்களை குர்திஷ் தன்னாட்சி அரசிடம் இருந்து கைப்பற்றியுள்ளது. கடந்த ஜனவரி 18, 2026 நிலவரப்படி, சிரிய இராணுவம் அல்-ஓமர் மற்றும் தனக் எண்ணெய் வயல்களையும், கோனோகோ எரிவாயு வசதியையும் கைப்பற்றியுள்ளது. இதன் மூலம் வளங்கள் நிறைந்த இந்த டெய்ர் எஸ்-சோர் மற்றும் ரக்காவின் பகுதிகளில் பல ஆண்டுகளாக குர்திஷ் கட்டுப்பாட்டை முடிவுக்குக் கொண்டு வந்துள்ளது.

இந்த மிகப்பெரிய மாற்றம் டமாஸ்கஸ் மற்றும் குர்திஷ் தலைமைக்கு இடையே இராணுவ புரிந்துணர்வு ஒப்பந்தத்தை பின்பற்றுகிறது. இந்த ஒப்பந்தம் ஒரு விரிவான போர்நிறுத்தத்தையும் குர்திஷ் SDF படைகளை தேசிய இராணுவத்தில் முழுமையாக ஒருங்கிணைப்பதற்கான ஒரு திட்டத்தையும் நிறுவுகிறது.

## எண்ணெய் வளம் சிரிய அரசு வசம் :



சமீபத்தில் சிரிய அரசு கையகப்படுத்தப்படுவதற்கு முன்பு, குர்திஷ் படைகள் வசம் சிரியாவின் எண்ணெய் மற்றும் எரிவாயு வயல்களில் சுமார் 70% முதல் 80% வரை கட்டுப்பாட்டில் இருந்தது.

எண்ணெய் வயல்களில் இருந்து கிடைக்கும் வருவாயை தேசிய திட்டங்களுக்கு பதிலாக, தங்கள் தன்னாட்சி நிர்வாகம் மற்றும் இராணுவ நடவடிக்கைகளுக்கு நிதியளிக்க குர்திஷ் SDF பயன்படுத்தியது. அத்துடன் அதிக அளவு எண்ணெய் ஈராக்கின் குர்திஸ்தான் பிராந்தியத்திற்கு எல்லையைத் தாண்டி கடத்தப்பட்டது அல்லது இடைத்தரகர்கள் மூலம் விற்கப்பட்டது. இந்த “நிழல் பொருளாதாரம்” என்பது செல்வம் சிரிய பொதுமக்களுக்கு பயனளிக்கவில்லை என தற்போது சிரிய அரசு குற்றஞ் சாட்டியுள்ளது.

அத்துடன் குர்திஷ் SDF படைகள் அசாத்தை எதிர்ப்பதாகக் கூறினாலும், அவரது மின் உற்பத்தி நிலையங்களை இயக்குவதற்கு திரைக்குப் பின்னால் அவருக்கு எண்ணெயை விற்றது. இதற்கிடையில், நாட்டின் பிற பகுதிகள் கடுமையான எரிபொருள் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டன.

டெய்ர் எஸ்-சோர் போன்ற பகுதிகளில், உள்ளூர் பழங்குடியினர் குர்திஷ் SDF படைகளை திருட்டு கும்பல் என்று குற்றம் சாட்டினர். தங்கள் நிலத்திலிருந்து வளங்கள் குர்திஷ் தலைமையிலான திட்டங்களுக்கு பயனளிக்க எடுக்கப்பட்டதாகவும், அதே நேரத்தில் அவர்களின் சொந்த நகரங்கள் மோசமான வறுமையில் இருப்பதாகவும் கூறினர்.

இந்த முக்கிய வயல்களை சிரிய அரசு அதிகாரத்திற்கு மீட் டெடுத்ததன் மூலம், ஒட்டு மொத்தமாக சிரியர்கள் பொருளாதார மீட்சி மற்றும் தேசிய ஒற்றுமைக்கு சில படிகள் நெருக்கமாக நகர்ந்து, அதன் அனைத்து குடிமக்களுக்கும் நாட்டின் இயற்கை செல்வத்தை விடுவிப்பதற்கான நீண்ட கால நம்பிக்கையை அளிக்கிறது என்று தற்போதய சிரிய அரசு தெரிவித்துள்ளது.






# ஈகையர் திருமலை நடராசன்

**04.02.1957 அன்று**
**தமிழீழம் – திருகோணமலையின் மணிக்கூட்டு கோபுரத்தில் ஏற்றப்பட்டிருந்த சிறீலங்கா சிங்கக்கொடியை சிங்கள இராணுவத்தின் எச்சரிக்கையை மீறி சிங்கக் கொடியை அறுத்து வீழ்திய போது சிங்கள பௌத்த இனவாத இராணுவத்தால் சுடப்பட்டு வீரச்சாவு**

## 69ஆம் ஆண்டு

# வீரவணக்கம்







நிலையுடன் பெயர்: தியாகி திருமலை நடராசன்
நிலையான பெயர்: திருமலை நடராசன்
வீரப்பிறப்பு:
நிலையான முகவரி: திருகோணமலை
நிகழ்வு: 04.02.1957 அன்று திருமலையின் மணிக்கூட்டு கோபுரத்தில் ஏற்றப்பட்டிருந்த சிறீலங்கா சிங்கக்கொடியை சிங்கள இராணுவத்தின் எச்சரிக்கையை மீறி சிங்கக் கொடியை அறுத்து வீழ்திய போது சிங்கள பௌத்த இனவாத இராணுவத்தால் சுடப்பட்டு வீரச்சாவு

# இலத்திரனியல் போரில் ஈரான்:

# ஈரானில் முடக்கப்பட்ட எலோன் மஸ்க்கின் ஷ்டார்லிங்க் சேவை

– ஐங்கரன் விக்கினேஸ்வரா –

21.01.2026

47 ஆண்டுகால ஈரான் குடியரசு வரலாற்றிலேயே மிக முக்கிய மான ஒரு ஆட்சி கவிழும் போராட்டத்தை அண்மையில் எதிர் கொண்டது. ஈரானில் கடுமையான உள்நாட்டுக் கலவரங்களை ஒடுக்க, அந்நாட்டு அரசு இணைய சேவையை முழுமையாக முடக்கியது.




ஈரானில் இராணுவ ஆட்சி, அமெரிக்க பொம்மையாட்சி, ஜன நாயக ஆட்சி ஆகிய மூன்று முடிவுகளில் எதுவும் சாத்திய மாகலாம் என்ற நிலையும் இருந்தது. ஈரானில் பொருளாதாரச் சரிவு மற்றும் உணவுப் பொருட்களின் விண்ணைத் தொடும் விலை உயர்வுக்கு எதிராக 2025 டிசம்பர் 28 அன்று தொடங் கிய மக்கள் கொந்தளிப்பு, 'ஜனவரி புரட்சி' அல்லது '14 நாள் எழுச்சி' என்ற பெயரில் ஒரு முழுமையான அரசியல் மாற்றத்திற் கான போராட்டமாக பரிணமித்தது.

190க்கும் மேற்பட்ட நகரங்களில் பரவிய இந்தப் போராட்டங்கள், வெறும் ஆர்ப்பாட்டங்கள் மட்டுமல்ல என்பதும், அவை 1979 இல் உருவான ஆன்மீக அதிகார அமைப்பை வேரோடு பிடுங்கி எறிய முயன்ற தருணம் என்றும் மத்திய கிழக்கு ஆய்வாளர்கள் எச்சரிக்கை விடுத்தனர்.

ஈரானுக்குள் இஸ்ரேலின் மொஸாட் உளவாளிகள் ஊடுருவி யிருந்தனர் என்றும், அவர்கள் ஸ்டார்லிங்க் செயற்கைக்கோள் உதவியுடன் முக்கிய தகவல்களை வெளியில் கசிய விட்டிருக் கின்றனர் என்றும் ஈரான் அரசு தெரிவித்தது. இதனையடுத்து ஸ்டார்லிங்க் இணைய சேவையை பயன்படுத்த சட்டப்படி தடை விதிக்கப்பட்டது. இதனையும் மீறி பயன்படுத்தினால் இரு ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்படும் என ஈரான் அரசு அறிவித்தது.



## இணையச் சேவை முடக்கம்:

ஈரானில் அரசுக்கு எதிரான போராட்டங்கள் தீவிரமடைந்த வேளையில், அங்கு முடக்கப்பட்டுள்ள இணையச் சேவையை மீண்டும் வழங்குவதற்காக எலோன் மஸ்கின் தொழில்நுட்ப உதவியை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் நாடினார்.

ஈரானின் பல்வேறு நகரங்களில் அரசுக்கு எதிரான போராட் டங்கள் வெடித்தன. இதனை ஒடுக்கவும், போராட்டங்கள் குறித்த தகவல்கள் சர்வதேச ஊடகங்களுக்குக் கசிவதைத் தவிர்க்கவும் ஈரானிய அரசாங்கம் நாடு முழுவதும் இணையச் சேவையைத் துண்டித்தது.

இதனால் போராட்டக்காரர்கள் வெளியுலகத்துடன் தொடர்பு கொள்ள முடியாமல் பெரும் நெருக்கடிக்கு உள்ளாகினர். இந்தச் சிக்கலைத் தீர்ப்பது குறித்து டெஸ்லா மற்றும் ஸ்பேஸ்-எக்ஸ் (SpaceX) நிறுவனங்களின் தலைமை நிர்வாகி எலோன் மஸ்க் உடன் பேச்சுவார்த்தை ஜனாதிபதி டிரம்ப் நடத்தினார்.

எலோன் மஸ்க்கின் "ஸ்டார்லிங்க்" செயற்கைக்கோள் இணை யச் சேவை (Starlink Satellite Internet) மூலம் ஈரானில் இணை யத்தை மீண்டும் கொண்டு வர முயற்சி செய்யப் பட்டது.

ஏற்கனவே உக்ரைன் போன்ற போர்ச் சூழல் நிலவும் பகுதி களில் ஸ்டார்லிங்க் இணையம் வெற்றிகரமாகச் செயல்பட்டுள்ள நிலையில், ஈரானில் இந்த முயற்சி எடுக்கப்படுவது உலக அர சியல் மற்றும் தொழில் நுட்பத் துறையில் முக்கியமான முன் னேற்றமாகப் பார்க்கப்பட்டது.




கலவர காலத்தில் ஈரான் அரசாங்கம் ஒரு வீதம் என்ற மிகக் குறைந்த அளவிலான இணையத் தொடர்பை மட்டும் பயன் படுத்த வேண்டும் என்று தெரிவித்தது. இதற்குப் போட்டியாக எலோன் மஸ்க் தனது "ஸ்டார்லிங்க்" சேவையை ஈரானில் இல வசமாகச் செயல்படுத்த முயன்றார். முன்பை விட இம்முறை ஈரான் தொழில்நுட்ப ரீதியாகத் தன்னைத் தயார்படுத்தி அதனை இயக்க முடி யாமல் செய்தது.

## தடுக்கப்பட்ட ஸ்டார்லிங்க்:

உலகளாவிய நாடுகளில் "ஸ்டார்லிங்க்" (Starlink) இணை யத்தை யாராலும் தடுக்க முடியாது என்ற பிம்பத்தை ஈரான் உடைத்துள்ளது. ஸ்டார்லிங்க் மூலம் அனுப்பப்படும் தரவுகள் (Data Packets) ஈரானின் பல பகுதிகளில் எண்பது வீதம் வரை தடுத்து நிறுத்தப்பட்டுள்ளதை இணைய பாதுகாப்பு வல் லுநர்கள் உறுதி செய்தனர்.

மேலும் ஈரான் தனது வான்வெளியில் சுமார் 5,000 கி.மீ சுற் றளவிற்குப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய அதிநவீன Military-Grade Jammers களை பயன்படுத்தியதாகத் தகவல்கள் தெரிவிக் கின்றன. இது வெறும் சிக்னல் தடங்கல் மட்டுமல்ல, செயற் கைக் கோள்கள் மற்றும் தரைத்தள முனையங்க ளுக்கு இடையிலான அதிர்வெண்களை (Frequencies) முற்றிலுமாக மறைக்கும் ஒரு இலத்திரனியல் தடுப்பு போர்வை (Electronic Shield)

> **ஈரானிய உள்நாட்டுப் பொறியாளர்களின் திறமையின் மூலம், எலோன் மஸ்க்கின் ஸ்டார்லிங்க் சேவை முடக்கப்பட்டது. எத்தகைய செயற்கைக்கோள் தொழில் நுட்பத்தையும் முடக்கும் ஆற்றல் ஈரானியர்களுக்கு உண்டு என கூறப்படுகிறது. ஈரான் ஸ்டார்லிங்க் சிக்னல்களைத் தடுக்க சக்திவாய்ந்த ஜாமர்களைப் பயன்படுத்தியதுடன், இது செயற்கைக் கோள்களுடன் இணைவதைத் தடுத்தது**

என்று வர்ணிக்கப் படுகிறது.

ஈரானில் எலான் மஸ்க்கின் ஸ்டார்லிங்க் சேவை அரசின் இணைய முடக்கங்களுக்கு மத்தியில் போராட்டக்காரர்களுக்கு உதவும் வகையில் செயல்படுத்தப்பட்டாலும், ஈரான் அரசு இராணுவ தர ஜாமர்களைப் பயன்படுத்தி அதைத் தடுத்தது.

ஆனாலும் தீவிர கலவர நேரத்தில் சில பகுதிகளில் சேவை துண்டு துண்டாகக் கிடைத்தது. மேலும் ஸ்டார்லிங்க் கட்ட ணங்களை நீக்கியுள்ளதாகவும் செய்திகள் தெரிவித்தன. ஈரா னிய அரசாங்கத்திற்கு சவாலாக இருந்துடன், ஸ்டார்லிங்க் பயன்பாட்டை சட்டவிரோதமாக்கி, அதனை முடக்க இராணுவ தர ஜாமிங் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தியது.

இணைய முடக்கத்தின்போது, ஸ்டார்லிங்க் போராட்டக்காரர் களுக்கு வெளி உலகத்துடன் இணைவதற்கான முக்கிய வழி யாக மாறியது. அத்துடன் SpaceX நிறுவனம் ஈரானில் ஸ்டார்லிங்க் சந்தா கட்டணங்களை நீக்கியது. டெஹ்ரானில் ஸ்டார்லிங்க் உபகரணங்கள் தடை செய்யப்பட் டிருந்தாலும், சுமார் 50,000 சாதனங்கள் கடத் தப்பட்டு பயன்படுத்தப்பட்டன.

இதேவேளை ஈரான் அரசு Kill Switch ஜாமிங் மூலம் Elon Musk-ன் Starlink இணையத்தை முடக்கியது. போராட்டங்களை ஒடுக்க இரா ணுவ தரத்திலான தொழில்நுட்பம் பயன் படுத் தியது. எலான் மஸ்கின் ஸ்டார்லிங்க் இணை யச் சேவை யைத் துண்டிக்கும் வகையில் "கில் ஸ்விட்ச்" களை பயன்படுத் துவதாக தகவல் வெளியாகியுள்ளது.

## ஈரான் பொறியாளர் திறமை:

இந்தத் தடுப்பு நடவடிக்கைக்குப் பின்னால் ரஷ்யா அல்லது சீனா வின் தொழில்நுட்ப உதவி இருக்கலாம் என்று மேற்குலக நாடுகள் சந்தேகிக்கின்றனர்.

உண்மையில் இது ஈரானிய உள்நாட்டுப் பொறியாளர்களின் திறமையின் மூலம் உருவாக்கப்பட்டது. எத்தகைய செயற்கைக் கோள் தொழில் நுட்பத்தையும் முடக்கும் ஆற்றல் ஈரானியர் களுக்கு உண்டு என கூறப்படுகிறது.

ஈரான் ஸ்டார்லிங்க் சிக்னல்களைத் தடுக்க சக்திவாய்ந்த ஜாமர் களைப் பயன்படுத்தியதுடன், இது செயற்கைக்கோள்களுடன் இணைவதைத் தடுத்தது. ஈரான் அரசாங்கம் ஸ்டார்லிங்க் டிஷ்களைத் தேடிப் பிடித்து பறிமுதல் செய்ததுடன், குறிப்பாக போராட்டங்கள் நடந்த பகுதிகளில் கண்காணிப்பைத் தீவிரப் படுத்தியது.

தற்போது ஈரானில் சேவை முற்றிலுமாக முடக்கப்படவில்லை. சில பகுதிகளில் இணைப்பு துண்டிக்கப்பட்டாலும், "பேட்ச்" ஆக (Patchy) கிடைக்கிறது.

ஈரானிய அரசு ஸ்டார்லிங்கின் சிக்னல்களைத் தடுத்து, அதை முடக்க முயற்சிக்கும்போது, ளுயஉநலஒ கட்டணங்களை நீக்கி உதவுவதால், இது அரசாங்கத்திற்கு பெரும் சவாலாக இன்ன மும் உள்ளது.

தற்போது ஈரானில் கலவரம் அடக்கப்பட்டாலும், இணையச் சேவை மீண்டும் கிடைப்பது ஈரானியப் போராட்டக்காரர்களின் குரலை உலகிற்கு உரக்கச் சொல்ல உதவும் என்று நம்பப்படு கிறது. ஜனநாயக உரிமைகளை வலுப்படுத்தவும் உதவும் என எதிர்பார்க்கப்படுவதாக மேற்குலக ஊடகங்கள் தெரிவித் துள்ளன.



# ஈரானில் ஆட்சி மாற்றம்? அமெரிக்க இராணுவத் தலையீடு: முரண்பட்ட உறவில் அரபுலகு!

– ஐங்கரன் விக்கினேஸ்வரா –

15.01.2026



**1979 இல் தொடங்கிய கொமேனியின் ஆன்மீக ஆட்சிமுறை இன்று அதன் இறுதி மூச்சுக்காகப் போராடிக் கொண்டிருக்கும் நிலையில் உள்ளது. 2026 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் ஈரானிய மக்களின் விதியை மட்டுமல்ல, ஒட்டுமொத்த மத்திய கிழக்கு மற்றும் ஆசிய – பசிபிக் பிராந்தியத்தின் அதிகாரச் சமநிலையை அடுத்த சில தசாப்தங்களுக்கு மாற்றி எழுதப் போகும் சூழல் உருவாகியுள்ளது**

ஹோர்முஸ் நீரிணை முதல் காஸ்பியன் கடல் வரை பரந்து விரிந்திருக்கும் ஈரானின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நிலப்பரப்பானது, உலக வல்லரசுகள் ஒவ்வொன்றும் தங்களுக்குச் சாதகமான ஒரு அரசை அங்கு உருவாக்க வரலாற்று ரீதியில் முனைந்துள்ளன.

1979 இல் தொடங்கிய கொமேனியின் ஆன்மீக ஆட்சிமுறை இன்று அதன் இறுதி மூச்சுக்காகப் போராடிக் கொண்டிருக்கும் நிலையில் உள்ளது. 2026 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் ஈரானிய மக்களின் விதியை மட்டுமல்ல, ஒட்டுமொத்த மத்திய கிழக்கு மற்றும் ஆசிய - பசிபிக் பிராந்தியத்தின் அதிகாரச் சமநிலையை அடுத்த சில தசாப்தங்களுக்கு மாற்றி எழுதப் போகும் சூழல் உருவாகியுள்ளது.

ஈரான் இஸ்லாமியக் குடியரசு என்று பெயரிடப்பட்டிருக்கும் ஈரான், இன்று அதன் 47 ஆண்டுகால குடியரசு வரலாற்றிலேயே மிக முக்கியமான ஒரு ஆட்சி கவிழும் போராட்டத்தை எதிர்கொண்டுள்ளது. ஈரானில் தற்போது நிலவி வரும் கடுமையான உள்நாட்டுக் கலவரங்களை ஒடுக்க, அந்நாட்டு அரசு இணைய சேவையை முழுமையாக முடக்கியுள்ளது.

ஈரானில் இராணுவ ஆட்சி, அமெரிக்க பொம்மையாட்சி, ஜனநாயக ஆட்சி ஆகிய மூன்று முடிவுகளில் எதுவும் சாத்தியமாகலாம் என்ற நிலையில் தான் உள்ளது. ஈரானில் பொருளாதாரச் சரிவு மற்றும் உணவுப் பொருட்களின் விண்ணைத் தொடும் விலை உயர்வுக்கு எதிராகத் 2025 டிசம்பர் 28 அன்று தொடங்கிய மக்கள் கொந்தளிப்பு, 'ஜனவரி புரட்சி' அல்லது '14 நாள் எழுச்சி' என்ற பெயரில் ஒரு முழுமையான அரசியல் மாற்றத்திற்கான போராட்டமாக தற்போது பரிணமித்திருக்கிறது.

## '14 நாள் எழுச்சி' தொடருமா ?

190க்கும் மேற்பட்ட நகரங்களில் பரவியுள்ள இந்தப் போராட்டங்கள், வெறும் ஆர்ப்பாட்டங்கள் மட்டுமல்ல என்பதும், அவை 1979 இல் உருவான விலாயதுல் ஃபகீஹ் ஆன்மீக அதிகார அமைப்பை வேரோடு பிடுங்கி எறியும் தருணம் என்றும் மத்திய கிழக்கு ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.

தற்போது ஈரானின் 31 மாகாணங்களும் போராட்டக் களமாக மாறியுள்ளன. மனித உரிமைகள் அமைப்பான (HRANA) வின் தரவுகளின்படி, கடந்த இரண்டு வாரங்களில் மட்டும் 3500 இற்கும் மேற்பட்ட போராட்டக்காரர்கள் கொல்லப்பட்டுள்ளனர் மற்றும் 10,000 க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர். இருப்பினும், நாட்டின் முக்கிய மருத்துவமனைகளிலிருந்து கசிந்துள்ள தகவல்கள் உயிரிழப்புகளின் எண்ணிக்கை 4000 ஐத் தாண்டியிருக்கக் கூடும் என்ற அச்சத்தை ஏற்படுத்தியுள்ளன.

ஆனாலும் ஆட்சியைத் தக்கவைக்க ஈரான் அரசாங்கம் தற்போது ஒரு வீதம் என்ற மிகக் குறைந்த அளவிலான இணையத் தொடர்பை மட்டுமே அனுமதித்து, ஒட்டுமொத்த நாட்டையும் ஒரு இடைய இருட்டறையில் வைத்துள்ளது. ஆனால் இந்த அடக்கு முறையையும் மீறி பாதுகாப்புப் படையினரிடையே ஏற்பட்டுள்ள சோர்வும், சில இடங்களில் வீரர்கள் போராட்டக்காரர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்த மறுத்து பின்வாங்குவதும், ஆட்சியின் அஸ்திவாரம் வெகுவாகப் பலவீனமடைந்துள்ளதைக் காட்டுகிறது.

இந்த 2026ஆம் ஆண்டு மக்கள் புரட்சி வெற்றி பெறுவதற்கான சாத்தியப்பாடுகள் அதிகமென அரசியல் ஆய்வாளர்கள் கருதுவதற்கான மிக முக்கிய காரணமாக அதன் புவிசார் அரசியல் சூழல் பார்க்கப்படுகிறது.

## 2025 ஜூனில் இஸ்ரேலின் 12 நாள் போர்:

கடந்த 2025 ஜூன் மாதம் நடந்த 12 நாள் போரின் போது, இஸ்ரேல் மற்றும் அமெரிக்காவின் வான்வழித் தாக்குதல்களால் ஈரானின் அணுசக்தி தளங்கள் மற்றும் ஏவுகணை தற்காப்பு அமைப்புகள் பெருமளவில் சிதைக்கப்பட்டன. இது ஈரானின் பிராந்திய செல்வாக்கை பாரிய அளவில் முடக்கியுள்ளது. குறிப்பாக, ஈரானின் நீண்டகாலத் தூண்களாக இருந்த ஹிஸ்புல்லா மற்றும் ஹமாஸ் அமைப்புக்கள் மிகவுமே பலவீனமடைந்துள்ள நிலையில், சிரியாவிலும் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளதால், ஈரானின் எதிர்ப்பின் வீரியம் மிகவுமே மட்டுப்படுத்தப்பட்டுள்ளதென்பதே யதார்த்த நிலையாகும்.

பொருளாதார ரீதியாகப் பார்க்கும் போது ஈரான் இன்று மிகவும் பலவீனமான ஒரு நிலையிலேயே காணப்படுகிறது. 2026 ஜனவரி தொடக்கத்தில், ஈரானின் முக்கிய பொருளாதாரக் கூட்டணியான வெனிசுலாவின் அதிபர் நிக்கோலஸ் மதுரோ அமெரிக்காவால் சிறைபிடிக்கப்பட்டதும், ஈரானின் நிழல் கப்பற்படையின் எண்ணெய் விநியோக நடவடிக்கைகள் முடக்கப்பட்டதும் நாட்டின் வருமானத்தைக் கிட்டத்தட்ட அடியோடு நிறுத்தியுள்ளதெனலாம்.

ஈரானிய ரியால் நாணயம் படுபயங்கரமான வீழ்ச்சியை சந்தித்துள்ளது. வங்கிப் பணப் பரிமாற்றங்களும் முடங்கியுள்ளதால், நடுத்தர வர்க்கம் முதல் பெரிய வணிகர்கள் வரை அனைவரும் இன்று வீதிக்கு வந்துள்ளனர். வரலாற்றில் ஓர் ஆட்சி கவிழ்வதற்குத் தேவையான அனைத்துக் காரணிகளும் ஒரே புள்ளியில் இணைந்துள்ள ஒரு நிலையாகவே இந்நிலை காணப்படுவதாக அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

## டிரம்ப் கடுமையான எச்சரிக்கை:

மறுபக்கத்தில் டொனால்ட் டிரம்ப்பின் கடுமையான எச்சரிக்கைகள் ஈரானிய இராணுவத்திற்கு ஒரு பெரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளன. போராட்டக்காரர்கள் மீது கடும் வன்முறையைப் பிரயோகித்தால், ஈரானின் முக்கிய மையங்கள் மீது வான்வழித் தாக்குதல் நடத்தப்படும் என அமெரிக்கா அறிவித்துள்ளது.

அதே வேளையில், ஈரானின் ஆன்மீக தலைவர் அயதுல்லா அலி கொமேனி நிலைமை மோசமானால் ரஷ்யாவிற்குத் தப்பிச் செல்ல ஒரு ரகசியத் திட்டத்தைத் தயாரித்துள்ளதாகவும் சில உளவுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ரஷ்யாவும தற்போது தனது சொந்தப் பிரச்சனைகளில் உள்ளது. ஈரானுக்கு இந்தத் தடவை வெளிநாடுகளிலிருந்து எந்தப் பெரிய உதவியும் கிடைப்பதற்கான வாய்ப்பு மிகவும் குறைவு.

ஈரானின் தற்போதைய நிலையானது இன்றோ நாளையோ வெடிக்கக் காத்திருக்கும் ஓர் எரிமலையை ஒத்திருக்கிறது. பழைய மதவாத ஆட்சிக்கு இனி எதிர்காலம் இல்லை என்பதும், எதிர் காலத்தில் ஒரு புதிய ஈரானிய அரசு உருவாக வாய்ப்பு உள்ளது.

அமெரிக்காவின் பாதுகாப்பு அமைச்சு, ஈரானியப் போராட்டக்காரர்களின் அடுத்தகட்ட நகர்வுகள், ஒட்டுமொத்த மத்திய கிழக்கின் புவிசார் அரசியல் வரைபடத்தையே மாற்றியமைக்கப் போகின்றனவா என்ற கேள்வி இப்போது சர்வதேச அரசியல் வட்டாரத்தில் முக்கியமான கேள்வியாக மாறியுள்ளது.

## புதிய உலக ஒழுங்கின் மாற்றம் ?

ஈரான் என்பது வெறும் உள்நாட்டு அரசியல் கொந்தளிப்பால் தத்தளித்துக் கொண்டிருக்கும் ஒரு போராட்டக் களம் மாத்திரமல்ல. அது இருபத்தியோராம் நூற்றாண்டின் புதிய உலக ஒழுங்கைத் தீர்மானிக்கப் போகும் ஒரு புவிசார் அரசியல் காய்நகர்த்தல் இடம்பெறும் ஒரு சதுரங்கப் பலகை என்று சொல்வதே பொருத்தம்.

ஒருபுறம், ஈரானின் எதிர்ப்பின் அச்சு முழுமையாக சிதைந்து போயிருப்பது இஸ்ரேல் மற்றும் அமெரிக்காவின் பிராந்திய ஆதிக்கத்திற்கு வழிவகுத்துள்ள நிலையில், மறுபுறம் சீனாவின் எரிசக்தி பாதுகாப்பும் ரஷ்யாவின் மத்திய ஆசிய செல்வாக்கும் ஈரானின் நிலைத்தன்மையிலேயே தொங்கிக் கொண்டிருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

## ஈரானும் அரபு நாடுகளும்:

ஈரானை தாக்குவதற்காக அமெரிக்காவுக்கும், இஸ்ரேலுக்கும் உங்களது இராணுவ தளங்களை வழங்குவதனை தவிர்க்குமாறு ஈரான் தனது அருகில் உள்ள அரபு நாடுகளுக்கு வேண்டுகோள் விடுத்திருந்தது.

ஈரானின் இந்த வேண்டுகோளினை அரபு ஐக்கிய எமிரேட்சை தவிர ஏனைய அனைத்து அரபு நாடுகளும் ஏற்றுக்கொண்டதுடன், ஈரானை தாக்குவதற்கு தங்களது நாட்டு தளங்களை பாவிக்கக் கூடாதென்று அமெரிக்காவினை வேண்டியதாக அறிய முடிகின்றது.

ஆனால் இது புவி அரசியல் என்பதனால், இதற்குள் ஏதாவது மறைமுக இரகசியங்கள் உள்ளதா என்பது பற்றி நாட்கள் சென்றபின்புதான் அறியமுடியும். அதாவது தங்களது தளங்களை பாவிக்ககூடாதென்று வெளிப்படையாக அறிவித்துவிட்டு மறைமுகமாக அமெரிக்காவுக்கு ஏதாவது ஆதரவு வழங்கப்படுமா

என்பது பற்றி இப்போது கூற முடியாது.





### சவுதி அரேபியாவின் முடிவு:

ஈரான் மற்றும் அமெரிக்கா இடையே பதற்றம் அதிகரித்து வரும் நிலையில், சவுதி அரேபியா மிக முக்கியமான ஒரு நிலைப் பாட்டை எடுத்துள்ளது.

ஈரான் மீது அமெரிக்கா இராணுவத் தாக்குதல் நடத்த தனது வான்பரப்பையோ (Airspace) அல்லது தனது நாட்டில் உள்ள இராணுவத் தளங்களையோ அமெரிக்கா பயன்படுத்த சவுதி அரேபியா அனுமதி அளிக்காது என்று அதிகாரப்பூர்வமாகத் தெரிவித்துள்ளது.

அமைதி முயற்சிகளை மேற்கொள்ளவும், இந்த பிராந்தியத்தில் போர்ச் சூழல் உருவாவதைத் தவிர்க்கவும், பதற்றத்தைக் குறைக்கவும் சவுதி அரேபியா இந்த முடிவை எடுத்துள்ளது என்று கூறியுள்ளது.


நீண்ட காலமாக ஈரானுடன் நல்உறவு இல்லாமல் இருக்கும் நிலையில், ஈரான் மீதான எந்தவொரு இராணுவ நடவடிக் கையிலும் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள சவுதி விரும்ப வில்லை. தூதரக ரீதியான பேச்சுவார்த்தை மூலமே தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் சவுதி அரசு உறுதியாக உள்ளது.

மத்திய கிழக்கில் தனது நாட்டின் பாதுகாப்பையும் நிலைத்தன் மையையும் உறுதி செய்ய சவுதி இந்தத் தீர்க்கமான முடிவை எடுத்துள்ளதாகத் தெரிகிறதது.

சவுதி அரேபியா, ஓமன் மற்றும் கத்தார் ஆகிய நாடுகள் ஈரான் மீது தாக்குதல் நடத்த வேண்டாம் என்று வெள்ளை மாளி கையை ரகசியமாக வலியுறுத்தி வருவதாகவும் கூறப்படுகிறது.

இதேவேளை முக்கிய அரபு ஊடகமான ‘Al Arabiya News’ சவுதி அரேபியா தனது இறையாண்மையைப் பாதுகாக்கவும், பிராந் திய அமைதிக்காகவும் அமெரிக்காவிற்கு வான்பரப்பு அனு மதியை மறுத்துள்ளதாகத் தெரிவித்துள்ளது என்று தெரிவித் துள்ளது.

மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள அமெரிக்கப் படைத் தளங் களின் பயன்பாடு குறித்து நிலவும் கட்டுப்பாடுகளை இந்தச் செய் திகள் விளக்குகின்றன. மேலும் ஈரானிய புரட்சி படைகளின் தளபதி, எதிரிகள் செய்யும் கணக்குகளில் எந்த தவறுக்கும் தீர்மானமாக பதிலளிக்க நமது படைகள் தயாராக உள்ளன. டிரம்ப் மற்றும் நெதன்யாகு நமது இளைஞர்கள் மற்றும் நமது பாதுகாப்பு படைகளின் கொலையாளிகள் மற்றும் அவர்களின் குற்றங்களுக்கு நாம் சரியான நேரத்தில் பதிலளிப்போம் என்றும் சூளுரைத்துள்ளார்.




**ஒரு புனித யாத்திரையில் அவர்கள் போனார்கள். கண்ணீர் வடித்து நிற்கும் எமது மக்களுக்கு ஒரு புதிய வாழ்வு பிறக்கும் என்ற அசையாத நம்பிக்கையில்; அந்தத் தியாகப் பயணத்தைத் தொடர்ந்தார்கள். அந்தப் புனிதர்களை எண்ணும் போதெல்லாம் எனது நெஞ்சு புல்லரிக்கும்**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

**www.sangathamil.ca**

# டெஹ்ரான் அமெரிக்க தூதரக முற்றுகை: 1980 இல் ஈரான் பணயக்கைதிகள் மீட்புத் தோல்வி!

– ஐங்கரன் விக்கினேஸ்வரா –

17.01.2026

ஈரானிய ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிராக அவர்களின் அரசாங்கம் வன்முறையைப் பயன்படுத்தினால், அவர்களை “மீட்க” அமெரிக்கா தயாராக இருப்பதாக டிரம்ப் கூறியுள்ளார். அமெரிக்கா, முழுமையாகத் தயாராக, எதற்கும் ஆயத்தமாக இருப்பதாக டிரம்ப் தெரிவித்துள்ளார். ஈரான் விவகாரத்தில் டிரம்ப்பிற்கு முடிவெடுக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது என்றும் மேற்குலக ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

ஆனால் அவர் இறுதியில் என்னதான் செய்ய விரும்புகிறார். ஈரானில் மீட்பு நடவடிக்கைகள் என்றால், பலருக்கும் நினைவில் வருவது, 1980 ஈரானில் பணயக் கைதிகளாக இருந்த மீட்பு நடவடிக்கையின் தோல்வியையே. இதன் முன்னர் 1970களில் வியத்நாம் தோல்விகளும், பின்னர் 2021இல் ஆப்கானை விட்டும் புறமுதுகு காட்டி ஓடிய வரலாறும் அறிந்ததே.

ஆனால் இப்போது டிரம்ப் முடிவெடுக்கும் நேரம் வந்துவிட்டது என்று கூறிவரும் மேற்குலக நாடுகளின் முன்னைய வரலாற்றை மறந்து விட்டனர் என்றே தோன்றுகிறது.

ஈரானில் வன்முறை, அடக்குமுறை பாரியளவில் அதன் முழு வீச்சும் அதிர்ச்சியூட்டும் வகையில் வெளிவந்துள்ள நிலையில், டிரம்ப் எப்படிப் பதிலளிப்பார் என்பதை உலகம் உற்று நோக்குகிறது.

ஜனாதிபதி டிரம்பைத் தவிர, அவர் என்ன செய்யப் போகிறார் என்பது வேறு யாருக்கும் தெரியாது, என்று வெள்ளை மாளிகையின் பத்திரிகைச் செயலாளர் கரோலின் லெவிட் கூறினார். உலகம் காத்திருந்து யூகிக்கட்டும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சாத்தியமான நடவடிக்கைகள் குறித்து மூத்த அதிகாரிகள் ஜனாதிபதிக்கு விளக்கமளிக்க உள்ளனர். இதேவேளை செய்தியாளர்களிடம் பேசிய டிரம்ப், மிகவும் கடுமையான சில விருப்பங்களை பரிசீலித்து வருவதாகக் கூறினார்.

வெனிசுலாவில் கிடைத்த வெற்றியால் உற்சாகமடைந்துள்ள நிலையில் - நிக்கோலஸ் மதுரோவைப் பிடித்ததை அமெரிக்க வரலாற்றில் மிகவும் வெற்றிகரமான நடவடிக்கைகளில் ஒனறாக டிரம்ப் விவரித்தார். இராணுவத்தைப் பயன்படுத்தும் நோக்கம் கணிசமானதாக உள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.



## டெஹ்ரான் அமெரிக்க தூதரக முற்றுகை:

டெஹ்ரானில் அமெரிக்க தூதரக முற்றுகை 1979, நவம்பர் 4ஆம் தேதி நடைபெற்றது. இஸ்லாமிய மாணவர்கள் ஈரானின் தலைநகரான டெஹ்ரானில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தைத் தாக்கி, 90க்கும் மேற்பட்டோரைப் பிணைக் கைதிகளாகப் பிடித்தனர்.


நாட்டிலிருந்து தப்பி ஓடிய மன்னர் ஷாவை அமெரிக்கா தங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும், ஈரானில் அவர் மீது விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் அந்த மாணவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

மாணவர்கள் அமெரிக்க தூதரகத்தைக் கைப்பற்றுவதைத் தடுக்க ஈரானின் புரட்சிகரப் பாதுகாப்புப் படையினரோ அல்லது காவல் துறையினரோ எந்த முயற்சியும் எடுக்கவில்லை. அதோடு, ஈரானியத் தொலைக்காட்சிகளும் இந்த முற்றுகையை நேரலையாக ஒளிபரப்பி மாணவர்களின் செயலுக்கு ஆதரவு தெரிவித்தது.

தூதரகத்தின் உள்ளே இருந்தவர்களில் ஒருவர் தொலைபேசி வாயிலாகச் செய்தியாளர்களிடம் பேசினார். இந்தச் செயல் தங்களின் வலிமையை நிரூபிக்கும் ஒரு நடவடிக்கை என்றும், பிணைக் கைதிகள் அனைவரும் பாதுகாப்பாக உள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார். இரண்டு வார முற்றுகைக்குப் பிறகு, அமெரிக்கத் தூதரகத்திலிருந்து 13 பெண்கள் மற்றும் கறுப்பினப் பிணைக் கைதிகள் விடுவிக்கப்பட்டனர்.



## தோல்வியடைந்த ஆபரேஷன் ஈகிள் க்ளா:




1980இல் ஈரானில் சிறைபிடிக்கப்பட்ட அமெரிக்கர்களை மீட்க ஜிம்மி கார்ட்டர் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கை “ஆபரேஷன் ஈகிள் க்ளா” (Operation Eagle Claw) படு தோல்வியில் முடிந்தது. பனிப்போர் காலத்தில் இது ஒரு பெரிய அவமானகரமான தோல்வியாக பார்க்கப்பட்டது.

இந்த நடவடிக்கையில் எட்டு அமெரிக்க வீரர்கள் உயிரிழந்தனர் மற்றும் எந்தப் பணய கைதிகளும் மீட்கப்படவில்லை. இது ஜிம்மு கார்ட்டர் நிர்வாகத்திற்கு பெரும் அவமானத்தை ஏற்படுத்தியது. மேலும் இந்த சம்பவத்தில் பல ஹெலிகாப்டர்கள் ஈரானால் கைப்பற்றப்பட்டன.”



இந்த தோல்விகர நடவடிக்கை ஜிம்மி கார்ட்டர் அதிபரின் பதவிக் காலத்தின் இறுதியில் ஒரு முக்கிய நிகழ்வாக அமைந்தது. 1980இல் ஈரானில் சிறைபிடிக்கப்பட்ட அமெரிக்கர்களை மீட்க ஜிம்மி கார்ட்டர் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கை போன்று தற்போது ஈரானில் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளும் சாத்தியமா என்பது தெரியவில்லை.

**ஈரானில் மீட்பு நடவடிக்கைகள் என்றால், பலருக்கும் நினைவில் வருவது, 1980 ஈரானில் பணயக் கைதிகளாக இருந்த மீட்பு நடவடிக்கையின் தோல்வியையே. இதன் முன்னர் 1970களில் வியத்நாம் தோல்விகளும், பின்னர் 2021 இல் ஆப்கானை விட்டும் ஓடிய வரலாறும் அறிந்ததே. ஆனால் இப்போது டிரம்ப் முடிவெடுக்கும் நேரம் வந்துவிட்டது என்று கூறிவரும் மேற்குலக நாடுகளின் முன்னைய வரலாற்றை மறந்து விட்டனர் என்றே தோன்றுகிறது**

1980 ஈரானில் தடுத்து வைக்கப்பட்டிருந்த அமெரிக்கர்களை மீட்க ஜிம்மி கார்ட்டர் 1980இல் மேற்கொண்ட பேரழிவுத் திட்டம் குறித்து டிரம்ப் சமீபத்தில் விமர்சித்து நளினமாக குறிப்பிட்டார். அமெரிக்கப் படைகளை களத்தில் இறக்கும் எந்தவொரு முயற்சிக்கும் ஏற்படக்கூடிய ஆபத்துகள் குறித்து ஜம்மி கார்ட்டர் அறிந்திருக்க வேண்டும்.

ஈரானின் கிழக்கு பாலைவனத்தில் ஒரு ஹெலிகாப்டரும், EC-130 போக்குவரத்து விமானமும் தரையில் மோதிக்கொண்டதில் எட்டு அமெரிக்க இராணுவ வீரர்கள் இறந்தனர்.

அந்தத் தோல்வியடைந்த நடவடிக்கையும், தெஹ்ரானில் முக மூடியணிந்த அமெரிக்க படையினர் கேமராக்களுக்கு முன்னால் பரிதாபகரமாக அணிவகுத்து நிறுத்தப்பட்ட காட்சியால் ஏற்பட்ட அவமானமும், அந்த ஆண்டின் பிற்பகுதியில் ஜிம்மி கார்ட்டர் தேர்தல் தோல்வியடைய ஒரு முக்கியக் காரணமாக அமைந்தது.

இந்த தோல்வியின் பின்னர், அவர் தேர்தலில் வெற்றி பெற்றிருப்பாரா என்று எனக்குத் தெரியாது, என்று கடந்த வாரம் நியூயார்க் டைம்ஸ் பத்திரிகையாளர்களிடம் டிரம்ப் கூறினார். ஆனால் அந்தப் பேரழிவிற்குப் பிறகு அவருக்கு நிச்சயமாக எந்த வாய்ப்பும் இல்லை என்று டிரம்ப் கூறினார்.

## ஆப்கானில் புறமுதுகுட்டு ஓடிய அமெரிக்கா:

அமெரிக்க இராணுவம் ஆப்கான் மண்ணை விட்டும் புறமுதுகு காட்டி ஓடி ஐந்து ஆண்டுகள் ஆகின்றது. நான்கு அமெரிக்க அதிபர்கள், இருபது வருட கால ஆக்கிரமிப்பு 10,000 க்கும் மேற்பட்ட அமெரிக்க படையினர் உயிரிழந்தனர். மேலும் 2 டிரில்லியன் டாலர்கள் செலவிடப்பட்டது.

ஆப்கானியர்களுக்குக் கிடைத்த மிகப்பெரிய வெற்றியாக, அமெரிக்கா விட்டுச் சென்ற 40,000 இராணுவ வாகனங்கள், 300,000 கனரக ஆயுதங்கள், 42,000 கண்காணிப்பு மற்றும் தகவல் தொடர்பு சாதனங்கள் கைப்பற்றப்பட்டன. மேலும் பல இராணுவ விமானங்கள் மற்றும் ஹெலிகாப்டர்களும் கைப்பற்றப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.



# 39 ஆம் ஆண்டு
# வீரவணக்கம்



லெப். கேணல் பொன்னம்மான் [அற்புதன்]
[யோகரத்தினம் குகன்]
கலட்டி, யாழ் – 23.12.1956]

## 14.02.1987 அன்று கைதடியில் சிறீலங்காப் படையின் நாவற்குழிமுகாமைத் தாக்கும் முயற்சியின்போது எதிர்பாராது ஏற்பட்ட வெடிவிபத்தில் வீரச்சாவைத் தழுவிக்கொண்டவர்கள்




மேஜர் கேடில்ஸ்
[மகாலிங்கம் திலீபன்
கண்டாவளை, கிளி
11.05.1966]



கப்டன் வாசு
[உருத்திராபதி சுதாகர்
வல்வெட்டித்துறை, யாழ்
13.03.1961]



லெப். சித்தார்த்தன்
[வைத்திலிங்கம் வசீகரன
சுண்டுக்குளி, யாழ்
09.05.1959]




2 ம் லெப். பரன்
[கிருட்னர் அர்ச்சுனன்
வல்வெட்டித்துறை, யாழ்
27.05.1967]



வீரவேங்கை குமணன்
[கந்தையா மோகனலிங்கம்
மட்டுவில், யாழ்
20.10.1965]




வீரவேங்கை தேவன்
[தம்பிப்பிள்ளை வசந்தகுமார்
மீசாலை, யாழ்
24.02.1963]



வீரவேங்கை யோகேஸ்
[சுந்தரன் தனபாலசிங்கம்
ஆழியவளை, யாழ்
09.06.1960]



வீரவேங்கை கவர்
[கதிர்காமு நகுலேஸ்வரன்
வவுனியா
23.12.1966]



வீரவேங்கை அக்பர்
[அருளம்பலம் யோகநாதன்
மட்டுவில், யாழ்
22.05.1963]

## புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

# மலையகத் தியாகிகள் வாரம்: வரலாற்றின் வேர்களும் உரிமைகளுக்கான எதிர்காலப் பயணமும்

15.01.2026






ஒரு சமூகத்தின் இருப்பு என்பது அதன் வரலாற்றின் ஆழத்திலும், அந்த வரலாற்றைக் கட்டியெழுப்பச் சிந்தப்பட்ட இரத்தத்திலும் தங்கியுள்ளது. "வேர் இல்லாத மரமும், வரலாற்றை மறந்த சமூகமும் நீடித்து நிலைக்க முடியாது" என்ற கூற்றுக்கு இணங்க, இலங்கையின் மலையகத் தமிழ் சமூகம் தனது இரு நூறு ஆண்டுகால வரலாற்றில் சந்தித்த இழப்புகளும், தியாகங்களும் ஈடு இணையற்றவை. இலங்கையின் பொருளாதாரத் தூணாகத் திகழும் தேயிலைத் தோட்டங்களை உருவாக்குவதற்காகக் காடு மேடுகளைத் திருத்தி, குளவிக் கடியிலும், கொடிய நோய்களிலும் மடிந்து போன ஆயிரக்கணக்கான தொழிலாளர்களின் ஆன்மாக்கள் இன்றும் அந்த மலைச் சரிவுகளில் அலைந்து கொண்டிருக்கின்றன.

அவர்களின் தொடர்ச்சியான உரிமைப் போராட்டத்தின் முதல் வித்தாகத் திகழ்ந்த முல்லோயா கோவிந்தன் தொடங்கி, இன்று வரை நிலத்திற்காகவும், ஊதியத்திற்காகவும் போராடும் ஒவ்வொரு தொழிலாளியும் இந்த வரலாற்றின் நாயகர்களே. மலையகத் தியாகிகள் வரலாற்றில் 1940 ஜனவரி 10 என்பது ஒரு மறக்க முடியாத திருப்புமுனை. 1930-களின் இறுதியில் பிரித்தானியக் கம்பனிகளின் ஆதிக்கத்தில் இருந்த தேயிலைத் தோட்டங்களில் தொழிலாளர்கள் அடிமைகளாக நடத்தப்பட்டனர். மிகக்குறைந்த ஊதியம், முறையற்ற வேலை நேரம் மற்றும் அடிப்படை வசதிகளற்ற லயன் குடியிருப்புகள் எனத் தொழிலாளர்கள் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்தனர்.

1939 ஆம் ஆண்டின் இறுதியில் ஹேவாஹெட்ட 'முல்லோயா' தோட்டத்தில் தொழிலாளர்கள் தங்களது உரிமைகளுக்காகவும், சம்பள உயர்வுக்காகவும் கிளர்ந்தெழுந்தனர். இது இலங்கைப் பெருந்தோட்ட வரலாற்றில் ஒரு தீர்க்கமான தொழிற்சங்கப் போராட்டமாக மாறியது. 1940 ஜனவரி 10ஆம் திகதி, போராட்டத்தை ஒடுக்குவதற்காகப் பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் முல்லோயா கோவிந்தன் அநியாயமாகக் கொல்லப்பட்டார். இந்தத் துப்பாக்கிச் சூடு மலையக அரசியல் மற்றும் தொழிற்சங்க வரலாற்றை மாற்றியமைத்தது. தொழிலாளர்களின் இரத்தம் முதல்முறையாக உரிமைக்காகப் பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் விவாதிக்கப்பட்டது. கோவிந்தனின் தியாகம் மலையக மக்களிடையே ஒரு அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்தியது. அதன் நினைவாகவே, ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 10 ஆம் திகதி "மலையகத் தியாகிகள் தினம்" ஆகவும், ஜனவரி 4 முதல் 10 வரை தியாகிகள் வாரமாகவும் கடைப்பிடிக்கப்படுகிறது



## மலையகத் தியாகிகளின் பரிமாணங்கள்

மலையக உரிமைப் போராட்டம் என்பது ஒரு சில சம்பவங்களுடன் சுருங்கிவிடக் கூடியதல்ல. அது தொழில் உரிமை, குடியுரிமை, மொழி உரிமை எனப் பல தளங்களைக் கொண்டது. முல்லோயா கோவிந்தனுக்குப் பிறகு 1970-களில் இடம்பெற்ற அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்கு எதிரான போராட்டங்கள் முக்கியமானது. குறிப்பாக, 1986 இல் வேதன உயர்வு கோரி நடைபெற்ற வேலைநிறுத்தப் போராட்டங்களின் போது பொலிஸாரால் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டு சம்பவங்களில் பலர் கொல்லப்பட்டதாக கூறப்படுகின்றது. சம்பளப் போராட்டம் என்பது நவீன காலத்தின் ஒரு மாபெரும் அறவழிப் போராட்டமாகும். இதில் பங்கேற்ற தொழிலாளர்கள் சந்தித்த அடக்குமுறைகளும், இழப்புகளும் வரலாற்றில் பதியப்பட வேண்டியவை. அதேநேரம், 1948 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட குடியுரிமைச் சட்டம் மலையக மக்களின் முதுகெலும்பை உடைத்தது.

பல இலட்சக்கணக்கான மக்கள் நாடற்றவர்களாக மாற்றப்



பட்டனர். இந்த அநீதிக்கு எதிராக காந்தி வழியில் அறப்போராட்டங்களை முன்னெடுத்த மலையகத் தலைவர்களும், அந்தப் போராட்டங்களில் ஈடுபட்டுத் தியாகங்கள் செய்த சாதாரண மக்களும் போற்றுதலுக் குரியவர்கள். கிட்டத்தட்ட 40 ஆண்டுகாலப் போராட்டத் திற்குப் பின்னரே பலருக்குக் குடியுரிமை கிடைத்தது என்பது வரலாற்றின் கசப்பான உண்மை. இதேவேளை, இனக்கலவரங்களின் போது மலையக மக்கள் நேரடியான இலக்குகளாக மாறினர். தோட்டப் பகுதிகளில் வீடுகள் எரிக்கப்பட்டன, மக்கள் அடித்துக் கொல்லப்பட்டனர். மலையக மக்களின் தியாகம் என்பது வெறும் தொழிற் சங்கப் போராட்டத்துடன் மட்டும் நின்றுவிடவில்லை. இன வாதத்திற்கு எதிரான தற்காப்புப் போராட்டமாகவும் அது இருந்தது. வட-கிழக்கு நோக்கிய மலையக மக்களின் இடப்பெயர்வு என்பது அவர்களின் ஒரு புதிய தியாக அத்தியாயத்தின் தொடக்கமாகும்.

## உள்ளூர் எல்லையைத் தாண்டிய நினைவேந்தல்

முன்பு மலையகத் தியாகிகள் தினம் என்பது அந்தந்தத் தோட்டங்களுக்குள்ளும் அல்லது ஒரு சில தொழிற்சங்க அலுவலகங்களுக்குள்ளும் மட்டுமே முடங்கிக் கிடந்தது. ஆனால், இன்று நிலைமை மாறியுள்ளது. இன்று வடக்கு, கிழக்கு மற்றும் தெற்கு என இலங்கையின் அனைத்துப் பகுதிகளிலும் மலையகத் தியாகிகளுக்காக சுடர் ஏற்றப் படுகின்றன.

இது இலங்கையில் வாழும் தமிழ் பேசும் மக்களிடையேயான ஒருமைப்பாட்டைக் காட்டுகிறது. மறுபுறம் ஐரோப்பா, கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் வாழும் மலையக வம்சாவளியினரான புலம்பெயர் தமிழர்களும் இன்று சர்வதேசத் தளத்தில் இந்தத் தியாகங்களை எடுத்துச் செல்கின்றனர். சமூக ஊடகங்கள் வழியாக கோவிந்தன் போன்ற தியாகங்களை வரலாறு உலகெங்கும் பரப்பப்படுகிறது. தொழிற்சங்க அரசியலுக்கு அப்பாற்பட்டு, மலையக இளைஞர்கள் இன்று தங்களின் வரலாற்றைத் தேட ஆரம்பித்துள்ளனர்.

"வேர்களைத் தேடுதல்" என்ற நோக்கில் அவர்கள் முன்னெடுக்கும் கலை, இலக்கிய முயற்சிகள் தியாகிகளின் வரலாற்றைச் சாகாவரம் பெற்றதாக மாற்றுகின்றன. இவ்வாறான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்ற போதிலும் அடுத்த தலைமுறைக்கு மலையக தியாகிகள் புரிந்த தியாக செயல்கள் கடத்தப்படுவதில் குறைபாடு நிலவுகிறது. எனவே, மலையகத் தியாகிகளை வெறும் சிலைகளில் மட்டும் வைத்துப் பார்க்காமல், அவர்களின் கனவுகளை நனவாக்குவதே உண்மையான அஞ்சலியாகும். குறிப்பாக தியாகிகளின் பெயர்கள், அவர்கள் உயிர்நீத்த இடங்கள் மற்றும் போராட்டச் சூழல்கள் முறையாக ஆவணப்படுத்தப்படவில்லை. இதற்கான ஒரு தேசிய நூலகம் அல்லது ஆவணக் காப்பகம் மலையகப் பகுதியில் உருவாக்கப்பட வேண்டும்.

ஒவ்வொரு தோட்டத்திலும் அந்தத் தோட்டத்தில் தியாகம் செய்தவர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்ட நினைவுத் தூபிகள் அமைக்கப்பட வேண்டும். தியாகிகள் எதற்காகப் போராடினார்களோ, அந்த அடிப்படைப் பிரச்சனை இன்றும் தீரவில்லை. "லயன் வாழ்க்கை" மாற வேண்டும். தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தும் நாம், ஒவ்வொரு தோட்டத் தொழிலாளிக்கும் சொந்தமாக ஒரு சிறு துண்டு நிலமும், கௌரவமான வீடும் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும். மலையக இளைஞர்கள் பெருந்தோட்டத் துறையை விட்டு வெளியேறி, உலகளாவிய ரீதியில் கல்வியிலும் பொருளாதாரத்திலும் முன்னேறி வருகின்றனர். இந்தநிலை மேலும் வலுப்பெற வேண்டும். அறிவுசார் சமூகம் மட்டுமே தனது வரலாற்றை வீரியமாகப் பேச முடியும்.

தியாகிகளின் தியாகத்தால் கிடைத்த வாய்ப்புகளைச் சரியாகப் பயன்படுத்தி, சமூகத்தை அடுத்த கட்டத்திற்கு நகர்த்த வேண்டும். "மலையகத் தமிழர்" என்ற தனித்துவமான தேசிய அடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும். தியாகிகள் வாரம் என்பது வெறும் நினைவேந்தல் வாரம் மட்டுமல்ல, அது ஒரு சமூகத்தின் அரசியல் பலத்தைக் காட்டும் வாரமாகவும் மாற வேண்டும். அனைத்து மலையக அரசியல் கட்சிகளும், அமைப்புகளும் தியாகிகள் விடயத்தில் ஒன்றுபட்டு நிற்க வேண்டும். மலையகத் தியாகிகள் சிந்திய இரத்தம் வீண்போகக் கூடாது. அவர்கள் ஏற்றி வைத்த போராட்டத் தீப்பந்தம், இன்றும் லயன் குடியிருப்புகளில் வறுமையிலும் அறியாமையிலும் வாடும் மக்களின் வாழ்வை ஒளிரச் செய்ய வேண்டும். 1940இல் கோவிந்தன் ஆரம்பித்த அந்தப் பயணம், ஒரு கௌரவமான சமூகமாக மலையக மக்கள் தலைநிமிரும் வரை தொடர வேண்டும்.

வரலாற்றை மறந்தால் வழிதவறிப் போவோம். ஆகவே, இந்தத் தியாகிகள் வாரத்தில் நம் முன்னோர்களின் வீரத்தையும், தியாகத்தையும் போற்றுவோம். அவர்களின் கனவான "உரிமையுள்ள வாழ்வை" வென்றெடுக்க உறுதி பூண வேண்டும்.

-நன்றி: மருதன் ராம்



# பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாப்பது: NPP தமிழ் மக்களுக்கு காட்டும் மாற்றம்?

27.01.2025

கடந்த செவ்வாய்க்கிழமை, யாழ்ப்பாணம், தந்தை செல்வா கலையரங்கில், ஒரு கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டது. சட்டத்துக்கும் கொள்கைகளுக்குமான யாழ்ப்பாண கற்கை நிலையத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட இக்கருத்தரங்கில், அரசாங்கம் பயங்கரவாத தடைச் சட்டத்துக்கு பதிலாக ஒரு புதிய சட்டத்தை கொண்டு வர இருக்கும் பின்னணியில் அந்த சட்ட மூலத்தின் வரைவை குறித்த ஒரு கலந்துரையாடலாக அது அமைந்திருந்தது.






சட்டத்துக்கும் கொள்கைகளுக்குமான யாழ்ப்பாண கற்கை நிலையத்தின் பணிப்பாளர், குருபரன், “பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும்” புதிய சட்ட வரைபை அதன் ஒவ்வொரு பகுதியாக விரிவாக எடுத்துக் கூறினார். அதன்பின் அது தொடர்பாக அங்கு வந்திருந்தவர்கள் கருத்து தெரிவித்தார்கள். அரசாங்கம் புதிய சட்ட வரைவை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவிக்கும் பின்னணியில், அது தொடர்பான குடிமக்கள் சமூகங்களின் கருத்தை கேட்டு தொகுத்து அனுப்புவதும் அக்கருத்தரங்கின் நோக்கங்களில் ஒன்று என்று கூறப்பட்டது.

பயங்கரவாத தடைச் சட்டத்தை அகற்ற வேண்டும் என்றுதான் தமிழ் மக்கள் பல தசாப்தங்களாக கூறி வருகிறார்கள் போராடி வருகிறார்கள். அதற்கு பதிலாக ஒரு புதிய சட்டத்தை கொண்டு வருமாறு கேட்கவில்லை. இன்று இக்கட்டுரையானது புதிய சட்ட வரைபில் உள்ளடக்கப்பட்ட சட்ட ரீதியிலான ஏற்பாடுகளை ஆராயப்போவதில்லை. மாறாக, இக்கட்டுரையின் நோக்கம் என்னவென்றால், ஒரு புதிய சட்டம் ஏன் அரசாங்கத்துக்குத் தேவையாக இருக்கிறது? அதிலும் குறிப்பாக தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திற்கு ஏன் தேவையாக இருக்கிறது? என்பதைச் சற்று ஆழமாகப் பார்ப்பதுதான்.

சட்டம் என்பது தேவ சபையில் நிறைவேற்றப்படும் புனிதமான ஆவணம் அல்ல. அதை மனிதர்கள்தான் உருவாக்குகிறார்கள். யார் அந்த மனிதர்கள் என்றால், ஒரு நாட்டின் நாடாளுமன்றத்தில் யார் பெரும்பான்மையாக இருக்கிறார்களோ அவர்கள்தான். இதை இன்னும் நடைமுறை வார்த்தைகளில் சொன்னால், அந்த நாட்டை ஆட்சி செய்யும் அரசாங்கத்தின் பிரதிநிதிகள் ஒரு சட்டத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுகிறார்கள். எனவே அரசாங்கத்தின் கொள்கை எதுவோ அதுதான் சட்டமாக நிறைவேற்றப்படும். அரசு நிரந்தரமானது. அரசாங்கம் குறிப்பிட்ட காலத்துக்கு ஒருமுறை தெரிவு செய்யப்படுவது. இதில் அரசுக் கொள்கையை மீறி அரசாங்கம் போக முடியாது. எனவே அரசின் கொள்கை எதுவோ அதை அரசாங்கம் தன்னுடைய புதிய நிலைமைகளுக்கு ஏற்ப சட்டமாக நிறைவேற்றுகின்றது. அல்லது ஏற்கனவே இருக்கும் சட்டங்களைத் திருத்துகின்றது.

இலங்கைத் தீவின் அரசுக் கட்டமைப்பு எனப்படுவது சிங்கள பௌத்த உணர்வுகளை அதிகம் பாதுகாக்கும் ஒரு சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பு என்பது உலகம் முழுவதற்கும் தெரியும். அந்த சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பின் கொள்கைகள் எவையோ அவைதான் சட்டமாக்கப்படும். இந்த அடிப்படையில் பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு பதிலாக கொண்டு வரப்படும் புதிய சட்டத்தின் பின்னால் உள்ள அரசாங்கத்தின் உளவியலை விளங்கிக் கொள்ள வேண்டும்.

பயங்கரவாத தடைச் சட்டம் கடந்த பல தசாப்தங்களில் தமிழ் மக்களுக்கு எதிராக மட்டுமல்ல சிங்கள மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் எதிராகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்தை நசுக்கும் அரச நடவடிக்கைகளின் ஒரு பகுதியாகத்தான் பயங்கரவாத தடைச் சட்டம் உருவாக்கப்பட்டது. தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்தை பயங்கரவாதமாக சித்திரித்து அதனை ஒடுக்குவதற்கு உரிய ஏற்பாடுகள் அங்கே உண்டு. எனினும் பின்னர் அது சிங்கள, முஸ்லிம் மக்களுக்கு எதிராகவும் பிரயோகிக்கப்பட்டது. ஜேவிபியின் இரண்டாவது ஆயுதப் போராட்டத்தின்போது, ஜனாதிபதியாக இருந்த ஜெயவர்த்தன, தமிழ் ஆயுதப் போராளிகளை “பயங்கரவாதிகள்” என்று அழைத்தார். ஆனால் ஜேவிபியினரை “நாசகார சக்திகள்” என்று அழைத்தார். வார்த்தைகளுக்குள்ளும் நுட்பமாக இன முரண்பாடு?

கடந்த முக்கால் நூற்றாண்டுக்கு மேலாக தமிழ் மக்கள் காலத்துக்கு காலம் வெவ்வேறு கோரிக்கைகளை முன்வைத்து வெவ்வேறு வடிவங்களில் போராடி வந்திருக்கிறார்கள். போராடி வருகிறார்கள். தொடக்கத்தில் கடந்த நூற்றாண்டில் தமிழ் மக்கள் சத்யாக்கிரக வழியில் போராடினார்கள். ஆனால் அப்போது இருந்த அரசாங்கம் அதனை அரச வன்முறைகளின் மூலம் தோற்கடித்தது. அறவழிப் போராட்டத்தை தமிழ் தலைவர்கள் ஒரு கட்டத்துக்கு மேல் முன்னெடுக்கவில்லை. ஆனால் மேற்படி தலைவர்களால் உருவேற்றப்பட்ட தமிழ் இளையவர்கள் ஆயுதப் போராட்டத்தைத் தொடங்கினார்கள். அதுவும் பின்னர் 2009 இல் தோற்கடிக்கப்பட்டது. இப்பொழுது கடந்த 16 ஆண்டுகளாக தமிழ் மக்கள் வெவ்வேறு கோரிக்கைகளை முன்வைத்து மீண்டும் அறவழியில் போராடி வருகிறார்கள்.

தமிழ் மக்கள் அறவழியில் போராடியபோது அதை சிங்கள பௌத்த அரச கட்டமைப்பு தன் போலீசார் மற்றும் படையினரின் மூலம் நசுக்கியது. அவசர காலச் சடடத்தைக் கையில் எடுத்து. பின்னர் ஆயுதம் போராட்டம் தொடங்கிய பொழுது அதனை நசுக்குவதற்கு சட்டரீதியாக பயங்கரவாத தடைச் சட்டத்தை கொண்டு வந்தது. பயங்கரவாத தடை சட்டத்தைக் குறித்த விமர்சன பூர்வமான கட்டுரைகளை தொகுத்து “மனித உரிமைக்கும் அபிவிருத்திக்குமான நிலையம் (CHRD)” 2009ஆம் ஆண்டு ஒரு நூலை வெளியிட்டது. இந்நூலின் அறிமுக உரையில், பேராசிரியர். ஜெயதேவ் உயாங்கொட பின்வருமாறு கூறுகிறார்…

“இலங்கையின் காலனித்துவத்திற்குப் பிந்தைய அரசியல் வரலாறு ஒரு தனித்துவமான பரிமாணத்தைக் கொண்டுள்ளது. 1971 முதல் பெரும்பாலான ஆண்டுகளில் நாடு ஏதேனும் ஒரு வகையான விதிவிலக்குச் சட்டதின் கீழ் – அவசரகாலச் சட்டம் அல்லது பயங்கரவாதத் தடைச் சட்டம் ஆகியவற்றின் கீழ்– ஆளப்பட்டுள்ளது. 1971 மார்ச்சில் அவசர நிலை அமலுக்கு வந் தது. அது 1976 வரை தொடர்ந்தது. ஒரு குறுகிய கால இடை வெளிக்குப் பிறகு, 1978 இல் அவசரநிலை மீண்டும் அறிமுகப் படுத்தப்பட்டது. அடுத்த ஆண்டு PTA அறிமுகப்படுத்தப் பட்டது. அடுத்தடுத்த ஆண்டுகளில், இலங்கை மக்கள் அவசரகாலச் சட்டம் அல்லது PTA இல்லாமல், அவ்வப்போது, மிகக்குறுகிய காலத்திற்கு மட்டுமே சாதாரண சட்டத்தின் கீழ் வாழ வாய்ப்புக் கிடைத்தது, இவ்வாறு, சாதாரண சட்டம் விதிவிலக்காக இருந்து வருகிறது. இந்தக் கதையை சற்று நாடகத்தனமான மொழியில் மீண்டும் கூறினால், 1971 முதல். இலங்கையில் அவசரகாலச் சட்டம் ‘சாதாரண’ சட்டமாக இருந்துவருகிறது. மேலும் சாதா ரண சட்டமானது, ‘அவசரகாலச் சட்டத்தின்’ நிலைக்கு உயர்த் தப்பட்டுள்ளது”.



**Lawyers hold signs during a protest against the Prevention of Terrorism Act (PTA) law, which allows for the prolonged detention of suspects without trial, in Colombo on September 23. 2022.**

இது எதைக் காட்டுகிறது? சாதாரண சட்டங்களின் மூலம் இந்த நாட்டை ஆள முடியாத ஓர் அரசியல் சூழல் தொடர்ந்து நிலவி வருகிறது என்பதைத்தான். அசாதாரண சட்டங்களே சாதாரண சட்டங்களைப் போல தொடர்ச்சியாக பிரயோகிக்கப்படுவது, இந்த நாட்டின் சட்டச் சூழலை, ஜனநாயகச் சூழலை கேள்விக்கு உள் ளாக்குவது.

குறிப்பாக 2009இல் ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப்பட்டு விட்டது என்று கூறிக்கொள்ளும் சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பானது, தொடர்ந்து எதற்கு எதிராக பயங்கரவாதத் தடைச் சட்டத்தை வைத்திருக்க வேண்டும்? ஏனென்றால் பயங்கரவாதத் தடைச் சட்டம் போன்ற ஒரு சட்டத்தை தமிழ் அரசியல் செயற்பாட்டாளர்களின் தலைக்கு மேல் தொங்க விடுவதன் மூலம், அவர்களைத் தொடர்ந்தும் ஒரு கட்டத்துக்கு மேல் போராட விடாமல் தடுக்கலாம். தமிழ் மக்களின் அரசியல் எதிர்ப்பை பயங்கரவாதமாக சித்தரிக்கக் கூடிய சட்ட வாய்ப்புகளை அது எப்பொழுதும் பேணும். எனவே இங்குள்ள அரசியல், இராணுவ நோக்கம் எதுவென்றால், தமிழ் மக்களை போராட முடியாத மக்களாகத் தொடர்ந்து பேணுவதுதான்.

தமிழ் மக்களைப் போராடாமல் வைத்திருப்பதற்கு காலத்துக்கு காலம் பொருத்தமான சட்டங்களை அவர்கள் பயன்படுத்துவார்கள் என்பதற்கு இங்கு மற்றொரு உதாரணத்தை சுட்டிக் காட்ட வேண்டும். கோவிட்-19 பெருந்தொற்று ஏற்பட்ட காலகட்டத்தில், அரசாங்கத்திற்கு எதிராகப் போராடிய தமிழ்ச் செயற்பாட்டாளர்களுக்கு எதிராக தனிமைப்படுத்தல் சட்டம் பயன்படுத்தப்பட்டது.

காலத்துக்கு காலம் அவர்களுக்கு தமிழ் மக்களை அச்சுறுத்த, போராட விடாமல் தடுக்க ஏதாவது ஒரு சட்டம் தேவை. பல தசாப்தங்களாக தொடர்ச்சியாக பேணப்பட்டு வரும் இந்த அரசியல் பாரம்பரியத்தில் அனுரவும் மாற்றங்களை செய்யத் தயார் இல்லை என்பதைதான் புதிய சட்ட வரைபு காட்டுகின்றது.

கிட்டத்தட்ட 15 மாதங்களுக்கு முன்பு மாற்றத்தை வாக்களித்து ஆட்சிக்கு வந்த இந்த அரசாங்கமானது, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் விடயத்தில் அதாவது தமிழ் மக்களை ஒடுக்கும் சட்ட ஏற்பாடுகளின் விடயத்தில் திருப்பகரமான மாற்றம் எதையும் செய்யத் தயாரில்லை என்பதைத்தான் புதிய சட்ட வரைபு காட்டுகின்றது.

இத்தனைக்கும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் அடித்தளமாக இருப்பது ஜேவிபி.அதுவும் இரண்டு தடவைகள் ஆயுதப் போராட்டம் நடத்திய இயக்கம். இரண்டு தடவைகள் கொடூரமான விதங்களில் நசுக்கப்பட்ட ஓர் இயக்கம். 75 ஆயிரத்திற்கும் குறையாத அதன் தோழர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். காணாமல் ஆக்கப்பட்டிருக்கிறார்கள். மிகக் கொடூரமான, மனித குலத்தை அவமானப்படுத்தும் சித்திரவதைகளின் மூலம் அவர்கள் விசாரிக்கப்பட்டு, கொல்லப்பட்டார்கள். எனவே பயங்கரவாதத் தடைச் சட்டம் போன்ற சட்டங்களின் ருசி எத்தகையது என்பது ஜேவிபிக்கு நன்கு விளங்கும்.

அதுமட்டுமல்ல,சில ஆண்டுகளுக்கு முன்பு அதாவது ஜேவிபி எதிர்க்கட்சியாக இருந்த காலகட்டத்தில், பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிராக தமிழரசு கட்சி முன்னெடுத்த போராட்டங்களில் ஜேவிபியும் பங்குபற்றியிருக்கிறது. அப்பொழு தெல்லாம் பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கவேண்டும் என்ற நிலைப்பாட்டை அவர்கள் வெளிப்படுத்தியும் இருக்கிறார்கள். ஆனால் ஆளுங்கட்சியாக வந்ததும் அவர்கள் தங்களுடைய முன்னைய வாக்குறுதிகள் அனைத்தையுமே கைவிட்டு விட்டார்களா?

இந்த அரசாங்கம் அரகலய போராட்டத்தின் விளைவு. அந்தப் போராட்டத்தை முன்னெடுத்த அமைப்புகள் அண்மையில் ஒன்று கூடி பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குமாறு வேண்டுகோள் விடுத்திருக்கின்றன. ஆனால் அந்தப் போராட்டத்தின் கனிகளை தேர்தல் வெற்றியாக மாற்றிய தேசிய மக்கள் சக்தியானது, புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை கொண்டு வர முயற்சிக்கின்றது.

மாற்றம் என்பது, ஜனாதிபதி அரைக்கால் சட்டையோடு யாழ்ப்பாணத்தின் தெரு ஒன்றில் உடற்பயிற்சி செய்வதோ, அல்லது தமிழ் மக்களோடு செல்பி எடுப்பதோ அல்ல. மாறாக தமிழ் மக்களை தொடர்ந்து அச்சுறுத்தலின் கீழ் வைத்திருக்கும் விடயங்களில் நிர்ணயகரமாக அரசியல் தீர்மானங்களை எடுப்பதுதான்.

நன்றி: நிலாந்தன்

# 17ஆம் ஆண்டு நினைவில்



பிறப்பு:
02.12.1982

தமிழீழ
மண்ணுக்காக:
12.02.2009

ஈகைப் பேரொளி

# முருகதாசன்

உன்னை எழுதவும் பாடவும் எமக்கிருக்கும்
வார்த்தைகளில் எதுவுமேயில்லை.
உன்னை வணங்குகிறோம்.
நீ
எரிந்தபொழுதினில் எம்நெஞ்சில்பட்ட
சுடுதழும்பை ஆறவிடாமல் வன்மம் வளர்ப்போம்.
காலம் எவ்வளவு கடந்தாலும் அனலாடிய உன்
ஆன்மத்தை, அதனிலும் உயர்ந்த உன் ஈகத்தை
எம்முள் நிரந்தரமாய் படிந்துவிட்ட காயத்தை
எதையுமே நாம் மறவோம்.
நீ நினைத்த விடுதலையை நாளைப்பொழுது
மீட்டுவரும். நம்பிக்கையோடு இரு.

# அமெரிக்க அதிபரின் ‘டூம்ஸ்டே விமானம்’: பேரழிவுகளை தடுக்கும் பறக்கும் அணு உலை!

17.01.2026

அமெரிக்க அதிபரின் அவசர கால பாதுகாப்புக்காக பயன்படுத்தப் படும் ‘டூம்ஸ்டே விமானம்’ (Doomsday-Plane) பொது வான் பாதையில் அண்மையில் பறந்தது. இந்த விமானம் இப்படி பறந்த நிகழ்வு உலகம் முழுவதும் கவனத்தை ஈர்த்துள்ளது. சாதாரண நேரங்களில் அரிதாகவே காணப்படும் இந்த விமா னத்தின் இயக்கம், மக்களிடையே பல கேள்விகளையும், ஒரு விதமான அச்ச உணர்வையும் ஏற்படுத்தியுள்ளது.

டூம்ஸ்டே விமானம் வானில் பறக்கும் ஒவ்வொரு முறையும், உலக அமைதி எவ்வளவு நுணுக்கமான நிலையில் உள்ளது என்பதை பலருக்கும் நினைவூட்டுகிறது. இது ஒரு சாதாரண விமானம் அல்ல. அமெரிக்க அரசின் மிக மோசமான அவசர சூழ் நிலைகளிலும் நிர்வாகம் மற்றும் இராணுவ கட்டளைத் தொடர் தடைப்படாமல் செயல்படுவதற்காக உருவாக்கப்பட்ட பறக்கும் கட்டளை மையம் ஆகும். திடீரென வானில் தோன் றியது ஏன் என்ற பதற்றம் ஏற்பட்டது.

### 51 ஆண்டில் முதல் முறையாக:

கடந்த 51 ஆண்டுகால வரலாற்றில் கடந்த வாரத்தில் அமெரிக்க வான்வெளியில் டூம்ஸ்டே விமானத்தைக் கண்டதாக பலரும் தெரிவித்தனர். பதற்ற நிலையின் போது மட்டுமே இந்த விமா னம் பறக்க விடப்படும் என்பதால், பொது மக்கள் அச்சமடைந் தனர். அந்த சமயத்தில் டூம்ஸ்டே விமானத்தை பாதுகாப்புத் துறை அதிகாரிகள் தான் பயன்படுத்தியதாக அமெரிக்க பாது காப்புத் துறை அமைச்சகம் விளக்கம் அளித்துள்ளது.

அமெரிக்காவை தாக்க ஏதேனும் அணு ஆயுதம் அல்லது கதிர் வீச்சுகள் வரும் நிலையில் அனைத்தையும் இந்த விமானத் தால் தடுக்க இயலும் திறன் கொண்டது. அமெரிக்காவில் நான்கு டூம்ஸ்டே விமானங்கள் உள்ளன. பனிப்போரில் இந்த விமா னங்கள் “தேசிய வான்வழி செயல்பாட்டு மையமாக” செயல் படும் வகையில் வடிவமைக்கப்பட்டன. இவை இப்போது அமெ ரிக்க பாதுகாப்பு செயலாளர் மற்றும் பிற முக்கிய ஊழியர்களை உலகம் முழுவதும் பாதுகாப்பாக பறக்க பயன்படுகிறது.

அமெரிக்காவில் உலகளவிலான பதற்ற நிலை அல்லது போர்ப் பதற்றம் ஏற்படும்போது மட்டுமே அமெரிக்க அதிபரின் ரகசிய விமானங்களில் ஒன்றான டூம்ஸ்டே விமானம் (Boeing E-4B Nightwatch) போயிங் இ-4பி நைட்வாட்ச் பறக்கவிடப்படும். இந்த விமானத்துக்குள் இருந்தவாறே அரசை இயக்கும் அள வுக்கு வசதிகள் இருக்கும் என்று கூறப்படுகிறது.

அமெரிக்க இராணுவத்தில் இடம்பெற்றுள்ள டூம்ஸ்டே, மிகவும் இரகசியமான ஒரு போர் விமானம் ஆகும். தரையில் பாதுகாப்பு இல்லை என்ற நிலை வரும்போது, அதிபரும் பாதுகாப்புத் துறை அதிகாரிகளும் இந்த விமானத்தைப் பயன்படுத்திக் கொள்வர். இந்த விமானத்தில் பாதுகாப்பான தகவல் தொடர்பு அமைப் புகள், அறைகள் உள்ளிட்ட தேவையான வசதிகள் இருக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டு உள்ளது. விமானத்தில் இருந்த வாறு இராணுவ கட்டளைகள் மட்டுமின்றி, அணு ஆயுதத் தாக் குதல் உத்தரவைக் கூட பிறப்பிக்க முடியும் என்று கூறப்படு கிறது.

### பறக்கும் அணு உலை:

இது ஒரு பறக்கும் அணு உலை என்றும் கூறப்படுகிறது. டூம்ஸ்டே விமானங்கள் அணுசக்தி தாக்குதல் போன்ற பேரழிவு ஏற்பட்டால், அரசாங்கத்தை இயக்கவும், நடமாடும் கட்டளை மையங்களாக செயல்படவும் வடிவமைக்கப்பட்டு உள்ளது. இந்த விமானங்கள் மிகவும் உயர் தொழில்நுட்பம் கொண் டவை. மேலும் அவர்களின் முக்கிய வேலை இராணுவ நட வடிக்கைகளுக்கான தகவல் தொடர்புகளை வைத்திருப்பது ஆகும்.

நாற்பது ஆண்டுகளாக செயல்பாட்டில் இருக்கும் இந்த டூம்ஸ்டே விமானங்கள் ஒரு உயர் ரகசிய இராணுவ திட்டமாகும். பேர ழிவை எதிர்க்கக்கூடிய சக்தி அணு குண்டுவெடிப்பைச் சமாளிக்க உதவும் விமானங்களின் “கவசம்” போல இது செயல்படும். இந்த விமானத்தின் முக்கிய திறன்கள், பாதுகாப்பான, குறி யாக்கம் செய்யப்பட்ட தகவல் தொடர்பு அமைப்புகள் வானி லிருந்தே இராணுவத்திற்கு உத்தரவிடும் திறன், அணு ஆயுத தாக்குதல் தொடர்பான கட்டளைகள் வழங்கும் வசதி, அதிபர் மற்றும் உயர்மட்ட அதிகாரிகளுக்கான பாதுகாப்பான அறைகள், நடுவானிலேயே எரிபொருள் நிரப்பும் வசதிகளுடன், பல நாட்கள் தொடர்ந்து பறக்க முடியும்.


இந்த விமானம், குறிப்பாக அமெரிக்க அதிபரின் உயிர் பாதுகாப் பையும், அதே நேரத்தில் நாட்டின் பாதுகாப்பு நடவடிக்கைகளை யும் உறுதி செய்ய உருவாக்கப்பட்டுள்ளது. மேலும் ஆஸ்டி ராய்டு போன்ற சிறு வானவியல் கற்களை எதிர்க்கும் திறன் கூட இந்த விமானத்திற்கு உள்ளது. அணு ஆயுத தாக்கம் நடக்க வாய்ப்பில்லை என்றாலும், அது எவ்வளவு சாத்தியம் என்றா லும், ஒவ்வொரு சூழ்நிலையிலும் வான்படை தயாராக இருக்க விரும்புகிறது. அதனால்தான் டூம்ஸ்டே விமானங்களை ஒரு சிறுகோள் தாக்கியாலும் வீழ்த்த முடியாத அளவுக்கு வலிமை யானது.



**டூம்ஸ்டே விமானம் வானில் பறக்கும் ஒவ்வொரு முறையும், உலக அமைதி எவ்வளவு நுணுக்கமான நிலையில் உள்ளது என்பதை பலருக்கும் நினைவூட்டுகிறது. இது ஒரு சாதாரண விமானம் அல்ல. அமெரிக்க அரசின் மிக மோசமான அவசர சூழ்நிலைகளிலும் நிர்வாகம் மற்றும் இராணுவ கட்டளைத் தொடர் தடைப்படாமல் செயல்படுவதற்காக உருவாக்கப்பட்ட பறக்கும் கட்டளை மையம் ஆகும்**

### 2001 நியூயோர்க் தாக்குதல் :

2001 ஆம் ஆண்டு உலக வர்த்தக மையத்தின் மீது தாக்கு தல்கள் நடந்த நாளில் வெள்ளை மாளிகையின் மீது E-4B நைட்வாட்ச் பறந்து கொண்டிருந்ததாக செய்திகள் வந்தன.




E-4B நைட்வாட்ச் மிகவும் கடினமாக உழைக்கும் திறன் கொண்டது. அத்துடன் இந்த பிரமாண்டமான விமானங்களை இயக்கும் பணியாளர்கள் எப்போதும் விழிப்புடன் இருக்க வேண்டியது அவசியம்.

### அமெரிக்க அதிபரின் ரகசிய விமானம்:

பழைய டூம்ஸ்டே விமானங்கள் உண்மையில் மாற்றியமைக் கப்பட்ட போயிங் விமானங்கள் ஆகும். அவை முதன்மையாக பொதுமக்களின் பயன்பாட்டிற்காக வடிவமைக்கப்பட்டுள்ளன. தற் போதைய டூம்ஸ்டே உண்மையில் E-4 நைட்வாட்ச் என்று அழைக்கப் படுகிறது. 1985 இல் பறந்த முதல் விமானமே முதல் டூம்ஸ்டே விமான மாகும்.

அதிநவீன தொழில்நுட்பம் விமானத் தில் இயங்குவதுடன், உலகம் எங்கும் அணுகுண்டுகளை வெடிக் கச் செய்யக்கூடிய பாரிய கட்டுப்பாட்டு மையங்கள் உள்ளன. இந்த அடிப் படையில் விமானத்தில் இருந்து முழு நாட்டையும் கட்டுப்படுத்த முடி யும். அணுசக்தி வெளிப்படுவதைத் தடுக்கக்கூடிய சிறப்புத் தொழில் நுட்பங்கள் இதில் உள்ளன. மேலும் இது கிட்டத்தட்ட ஒரு வாரம் தொடர்ந்து பறக்கக்கூடிய சக்தியும் இதற்கு உண்டு.

### மூலோபாய ஆயுதம் தாங்கிய விமானம்:

ஆயுதப் படைகளின் மூலோபாய முடி வின் மூலம் எதிரிக்கு பெரும் சேதத்தை ஏற்படுத்தக்கூடிய ஆயுதங்கள் அனைத் தும் இந்த விமானத்தில் உள்ளன. விமானத்தில் தரையில் அணு ஏவு கணையை ஏவுவது அல்லது அமெரிக்க கடற்படையின் பாலிஸ்டிக் ஏவுகணை நீர்மூழ்கிக் கப்பலில் இருந்து பேரழிவு தரும் அணு ஆயுதங்களுடன் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையை ஏவுவது போன்ற செயல்களை கூட செய்ய முடியும்.

அத்துடன் அணு வெடிப்பால் ஏற்படும் மின்காந்த அலைகளால் கூட (Electro magnetic Pulse - EMP) இதன் அமைப் புகளை பாதிக்க முடியாது. தரை இனி பாதுகாப்பாக இல்லை என்ற நிலையை எதிர்பார்த்தே இந்த விமானம் வடி வமைக்கப்பட்டுள்ளது. உலகளாவிய போர் அல்லது அணு மோதல் போன்ற அதிகபட்ச அவசர நிலைகளின் அடையாளமாக இது கருதப் படுகிறது.

உண்மையில் இந்த விமானங்களைப் பற்றி வெளி உலகிற்கு தெரிந்த அனைத்து விஷயங்களும் அவற்றின் திறன்களில் ஒரு சிறிய பகுதியாக இருக்கலாம். இந்த விமானங்களின் சரியான இருப்பிடம் மிகச் சிலருக்கு மட்டுமே தெரியும். அவர்களில் யாரும் அதைப் பற்றி பேசவோ அல்லது அதை வெளிப்படுத் தவோ முடியாது என்பது இராணுவ இரகசியமாகும்.



# தமிழ்த் தேசிய கட்சிகளின் பலவீனம்: தேசிய மக்கள் சக்திக்கு பலம்!

பா. அரியநேத்திரன்

19.01.2026



தமிழ் தேசிய கட்சிகளின் பலவீனம் தேசிய மக்கள் சக்திக்கு பலமாக மாறியது என்பதே உண்மை. கடந்த 2024, நவம்பர் 14 இல் இடம்பெற்ற நாடாளுமன்ற தேர்தலில் வடக்கு கிழக்கில் தமிழ்தேசிய கட்சிகள் பெற்ற ஆசனங்களை விட தேசிய மக்கள் சக்தி கூடிய ஆசனங்களை பெற்றுள்ளனர்.

ஆனால் இந்த உண்மை வெளியில் பலருக்கு தெரியவில்லை இதனை விளங்கிக்கொள்ளாமல் அல்லது விளங்கினாலும் அதனை மறைப்பதற்காக சிலர் தவறான கருத்துக்களை பரப்புவதை காணலாம்.

குறிப்பாக இலங்கை தமிழ் அரசுக்கட்சி வடகிழக்கில் இருந்து மக்களால் எட்டு மாவட்டங்களிலும் 07 பாராளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமே தெரிவுசெய்யப்பட்டனர் அந்த 07 பாராளுமன்ற உறுப்பினர்களுடன் 01 தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் கிடைத்தமையால் மொத்தமாக 08 ஆசனங்கள் தமிழரசுக்கட்சிக்கும், தமிழ்தேசிய மக்கள் முன்னணிக்கு 01 ஆசனமும், ஜனநாய தமிழ்தேசிய கூட்டணி க்கு 01 ஆசனமாக தமிழ்தேசிய கட்சிகளுக்கு மொத்தம் 12 ஆசனங்கள் மட்டுமே கிடைத்தன. தமிழ்தேசிய கட்சி சாராத சுயேட்சை குழுவில் வைத்தியர் அர்ச்சுனா தெரிவானார்.

ஆனால் வடகிழக்கில் எட்டு மாவட்டங்களில் இருந்து தேசிய மக்கள் சக்திக்கு மொத்தமாக 12, ஆசனங்கள் கிடைத்துள்ளன, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிக்கு 08, ஆசனங்கள் கிடைத்ததை வடக்கு கிழக்கு மக்கள் தமிழரசுக் கட்சியை ஆதரித்துவிட்டனர். தாமே வடகிழக்கு மக்களின் ஆணையை பெற்ற பெரிய கட்சி, வடக்கு கிழக்கு மக்களின் ஆணை பெற்ற கட்சி என கூறுவது பச்சைப்பொய் இது முழுப்பூசணியை சோற்றில் புதைக்கும் தவறான கருத்தாகும்.

தேசியமக்கள் சக்தி கட்சியில் 07 தமிழர்களும், 05, சிங்களவர்களும் வடகிழக்கில் இருந்து தெரிவு செய்யப்பட்டுள்ளனர் 05 சிங்கள பாராளுமன்ற உறுப்பினர்களை நீக்கி விட்டு பார்த்தாலும் 07 தமிழர்கள் தேசிய மக்கள் சக்தியிலும், 07 தமிழர்கள் தமிழரசுக்கட்சிலும் தெரிவுசெய்யப்பட்டனர் என்றால் வடகிழக்கு தமிழர்கள் தமிழ்தேசிய கட்சிகள் மீது கொண்ட வெறுப்பே சிங்கள கட்சியான தேசிய மக்கள் சக்திக்கு இந்தளவு ஆசனங்கள் கிடைத்தமைக்கான காரணம் என்பதை புரிந்து கொள்வது ஈழத்தமிழர்களின் கடமை.

கடந்த 2024, பாராளுமன்ற தேர்தலில் தமிழ்தேசிய கட்சிகளாலும். தேசிய மக்கள் சக்தியாலும் வடக்கு கிழக்கில் எட்டுமாவட்டங்களிலும் இருந்து தெரிவான உறுப்பினர்கள் விபரம்..

**இலங்கைத்தமிழ் அரசுக் கட்சி**

1. சிவஞானம் சிறிதரன், யாழ்ப்பாணம்
2. துரைராசா ரவிகரன், வன்னி
3. சண்முகம் குகதாசன், திருகோணமலை
4. ஞானமுத்து ஸ்ரீநேசன், மட்டக்களப்பு
5. இராஜபுத்திரன் சாணக்கியன், மட்டக்களப்பு
6. இளையதம்பி ஸ்ரீநாத், மட்டக்களப்பு
7. கவீந்திரன் கோடீஷ்வரன், அம்பாறை
8. பத்திநாதன சத்தியலிங்கம். தேசியபட்டியல்

**அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்**

1 கஜேந்திரகுமார். பொன்னம்பலம் - யாழ்ப்பாணம்

**ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி**
**தமிழீழ விடுதலை இயக்கம்**

2 செல்வம் அடைக்கலநாதன் - வன்னி

**சுயேட்சைக் குழு**

1. இராமநாதன் அர்சுனா-யாழ்ப்பாணம்

**தேசிய மக்கள் சக்தி**

1. கருணானந்தன் இளங்குமாரன், யாழ்ப்பாணம்
2. சண்முகநாதன் ஸ்ரீபவானந்தராஜன், யாழ்ப்பாணம்
3. ஜெயசந்திரமூர்த்தி ரஜீவன், யாழ்ப்பாணம்
4. செல்வராசா திலகேஷ்வரன், வன்னி
5. மயில்வாகனம் ஜெகதீஷ்வரன், வன்னி
6. கந்தசாமி பிரபு, மட்டக்களப்பு
7. அருண் கேமச்சந்திரன், திருகோணமலை
8. ரொஷான் அக்மீமன, திருகோணமலை
9. வசந்த பியதிஸ்ஸ, அம்பாறை
10. . மஞ்சுள ரத்நாயக்க, அம்பாறை
11. பிரியந்த விஜேரத்ன, அம்பாறை
12. முத்துமெனிக்கே ரத்வத்தே, அம்பாறை

இலங்கை சுதந்திரம் அடைந்த 1948 தொடக்கம் 2020 வரை நடைபெற்ற 16 பாராளுமன்ற தேர்தல்களில் வடகிழக்கில் இருந்து எந்த ஒரு சிங்கள பெரும்பான்மை கட்சியும் 12 பாராளுமன்ற உறுப்பினர்களை ஒரு கட்சியில் இருந்து தெரிவான சரித்திரம் இல்லை. ஈழ விடுதலைப் போராட்டம் அகிம்சை ரீதியிலும், ஆயுத ரீதியிலும் விடுதலைக்காக போராடிய மண்ணில் இதுவரை தமிழ்த்தேசிய கட்சிகளே வடகிழக்கில் கூடிய ஆசனங்களை பெற்ற வரலாறு இருந்தது சிங்கள கட்சி எதற்கும் அந்த வரலாறு இல்லை ஆனால் அது 17 வது பாராளுமன்ற தேர்தலில் 2024 ஜனாதிபதி அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி முறியடித்துள்ளது என்ற கசப்பான உண்மையை ஈழத்தமிழர்களும், புலம்பெயர் தமிழர்களும் புரிந்து கொள்ள வேண்டும். இது தமிழ்தேசிய கட்சிகளாக 2009 மே 18 க்கு பின்னர் குட்டிபோட்டு பத்து பன்னிரண்டு காட்சிகளாகவும், தலைவர்களாகவும் உள்ளவர்கள் சிந்திக்க வேண்டும்.

கடந்த தமிழர் திருநாள் 2026, ஜனவரி 16 இல் ஜனாதிபதி அநுரா யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து பொங்கல் விழாக்களில் கலந்துகொண்டு சில அபிவிருத்தி திட்டங்களையும் ஆரம்பித்துள்ளார். கடந்த ஒருவருடத்தில் அவர் யாழ்ப்பாணத்துக்கு நான்கு தடவைகள் சென்றுள்ளார். 2025 ஜனவரி 31 மே 17 செப்டம்பர் 01 தற்போது 2026, ஜனவரி 16 ஆகிய தினங்களில் அவர் பதவி ஏற்ற பின்னர் யாழ்ப்பாணத்தில் சென்று பல அபிவிருத்திகளை மேற்கொள்ளும் நிலைமை தமிழ்தேசிய கட்சிகளின் பலவீனத்தால் ஏற்பட்டது என்பதே உண்மை.

இந்த வருடம் அல்லது அடுத்த வருடம் சில வேளை மாகாண சபை தேர்தல் வடக்கிலும், கிழக்கிலும் இடம்பெற்றால் தேசிய மக்கள் சக்தியின் ஆதரவு இல்லாமல் செய்து வடமாகாண சபையையும், கிழக்கு மாகாண சபையையும் தனித்து ஆட்சியமைக்க கனவு காணும் தமிழ்தேசிய கட்சிகள் இப்போதே சிந்தித்து தாம் விட்ட தவறை சீர் செய்து ஒற்றுமை பட வேண்டும். இல்லை எனில் தனித்தனி கட்சிகளாக சிதறி பல சின்னங்களில் மாகாணசபை தேர்தலில் போட்டியிட்டால் அது மேலும் தேசிய மக்கள் சக்தி ஆளும் தரப்புக்கே சாதகமாக மாறும்.

இலங்கைத் தமிழ் தேசிய கட்சிகள் தற்போதைய பாராளுமன்றத்தில் எட்டு ஆசனங்களுடன் மூன்றாவது இடத்தில் உள்ள கட்சி என மார்தட்டினாலும் அந்த எட்டு ஆசனங்களை பெற்ற வடக்கு கிழக்கில் 12, ஆசனங்களை சிங்கள கட்சிக்கு தாரை வார்த்துக் கொடுத்த உண்மையை நெஞ்சில் கைவைத்து ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும்.

தமிழ் தேசிய கட்சிகள் எல்லாம் ஒற்றுமைப்பட வேண்டும் என தமிழரசுக் கட்சித்தலைமை கூறுவதற்கு முன்னர் தமிழரசுக் கட்சி இரண்டு அணியாக 2024 ஜனவரி 21 தொடக்கம் 2026 ஜனவரி 21 வரை இரண்டு வருடங்களாக இரண்டு அணியாக நிரந்தர தலைவரோ, நிரந்தர செயலாளரோ இன்றி மத்தியகுழுவில் சுருங்கி கட்சி உள்ளது என்பதை உணரவேண்டும். தமிழ்த்தேசிய உறுதியான கொள்கை உள்ளவர்களை ஓரம் கட்டி ஒதுக்கி செயல்படுவதால் எதிர்வரும் மாகாணசபை தேர்தல்களில் வடக்கு மாகாண சபையிலும், கிழக்கு மாகாண சபையிலும் எதிர்பார்த்த ஆசனங்களை பெறமுடியாது.


கடந்த 2013 இல் வடமாகாணசபையில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு அறுதிப்பெரும்பான்மை ஆசனங்களுடன் வடமாகாண சபையை கைப்பற்றியது போல் இம்முறை தமிழரசுக்கட்சி அறுதிப்பெரும்பான்மை ஆசனங்களை பெற முடியாது. ஏனைய தமிழ்தேசிய கட்சிகளும் பிரிந்து தனித்தனியாக வடமாகாண சபை தேர்தலில் பல சின்னங்களில் போட்டியிட்டால் வாக்குகள் சிதறும் நிலை ஏற்பட்டு மீண்டும் தேசிய மக்கள் சக்திக்கு ஆசனங்கள் அதிகரிக்க வாய்புகள் உண்டு.


கிழக்கு மாகாணசபை தேர்தல்களில் 2008இல் தமிழர் ஒருவர் முதலமைச்சரான வரலாறும் சந்திரகாந்தன் எனப்படும் பிள்ளையான் அவருடைய தமிழ்மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியில் கேட்டு தெரிவாகவில்லை. ஐக்கிய மக்கள் சுதந்திர கட்சியில் வெற்றிலைச் சின்னத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் பிள்ளையான், ஹிஸ்புல்லா இருவரும் சேர்ந்து போட்டியிட்டதால் அந்த கட்சிக்கு மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழரும், முஸ்லிம்களும் வாக்களித்தமையால் பிள்ளையானும், கிஷ்புல்லாவும் வெற்றிபெற்றனர். இருவரும் ஏட்டிக்கு போட்டியாக தாமே முதலமைச்சர் என கூறி ஊடகங்களில் கருத்து கூறினர்.


ஆனால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச பிள்ளை யானை முதலமைச்சராகவும், கிஷ்புல்லாவை சுகாதார அமைச்சராகவும் நியமித்தார். 2012 கிழக்கு மாகாணசபை தேர்தலில் முதன்முதலாக தமிழ்த்தேசிய கூட்டமைப்பு போட்டியிட்டபோதும் கிழக்கு மாகாணசபையில் 11 ஆசனங்களை மட்டுமே பெற முடிந்தது அதில் நஜீப் ஏஅகமட் முதலைமைச்சரானார். பின்னர் 2015 நல்லாட்சி அரசில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு இணக்கப்பாடு அரசியல் ஆட்சியாளருடன் சேர்ந்து இயங்கியதால் 2015 இல் கிழக்கு மாகாணசபையிலும் இணக்கப்பாடு அரசியல் ஆட்சி செய்தனர். அதிலும் முதலமைச்சர் பதவி முஸ்லிம் உறுப்பினர் நசீர் அகமட் பெற்றார். தமிழ்தேசிய கூட்டமைப்புக்கு இரண்டு அமைச்சர் பதவியும், பிரதி தவிசாளர் பதவியும் கிடைத்தன.

அதனால் கிழக்கு மாகாணத்தில் மக்கள் ஆதரவை தவிர எதிர்ப்பே தமிழ்த்தேசிகூட்டமைப்புக்கு ஏற்பட்டது.

எதிர்வரும் கிழக்கு மாகாணசபை தேர்தலிலும் அறுதிப்பெரும்பான்மையை எந்த ஒரு தமிழ்த் தேசியக் கட்சிகளும் பெற முடியாது, ஆனால் முஸ்லிம் கட்சிகள் அனைத்தும் ஒன்றாக கிழக்கில் மாகாணசபை தேர்தலை சந்திக்கும் பேச்சு வார்த்தைகளை முஸ்லிம் உலாமா சபைகளும், பள்ளிவாசல் சமூகமும், அரசியல் கட்சிகளும் சேர்ந்து இப்போதே மேற்கொண்டு வருகின்றனர். இதுவும் தமிழ்தேசிய கட்சிகளுக்கு பாடமாக அமையும் என்பது குறிப்பிடத்தக்கது.







# ஆபத்துகள் நிறைந்த கிவுல் ஓயாத் திட்டம்

"வடக்கில் குடிப்பரம்பலை மாற்றியமைக்கும், திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் ஒதுக்கக் காடுகள் மற்றும் தொல்பொருளியல் பகுதிகளை அழித்து, சுற்றுச்சூழல் பாதுகாப்பை கருத்தில் கொள்ளாது முன்னெடுக்கப்படவுள்ள இனம் சார்ந்த நீர்பாசனத்திட்டம்"

மகாவலி அதிகார சபையினால் வடமாகாணத்தின் வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு மகாவலி கங்கையின் நீரைக் கொண்டு செல்வதை இலக்காக வைத்து "மகாவலி-எல்" வலயத்திட்டம் முன்மொழியப்பட்டது.

இது, உட்கட்டமைப்பு, அபிவிருத்தி திட்டம் என்ற போர்வையில் வடமாகாணத்தில் குடிப்பரம்பலை மாற்றியமைக்கும் உள் நோக்கத்தினைக் கொண்டது என்பதை வெளிப்படையாக உணரப்பட்டு பல ஆண்டுகளாகிவிட்டன.

போரின் பின்னரான சூழலில் "மகாவலி-எல்" வலய விஸ்தரிப்புக்களுக்கான முயற்சிகள் நேரடியாகவும், மறைமுகமாகவும் முன்னெடுக்கப்பட்டபோதும், மக்கள் போராட்டங்கள் மற்றும் எதிர்ப்பு நடவடிக்கைகள் காரணமாக அந்த முயற்சிகள் முழுமையாக வெற்றியளித்திருக்கவில்லை.

காலநிலை மாற்றம் தொடர்பான அண்மைக்கால ஆய்வுகளின் பிரகாரம், "மகாவலி-எல்" வலயத்திற்கு நீரைக் கொண்டு செல்வதானது, "கல்லில் நார் உரிப்பதற்கு சமமானது" என்பது உணரப்பட்டதன் பின்னர் தற்போது புதிய மூலோபாயங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

அதனடிப்படையில் தான், "கிவுல் ஓயா" நீர்பாசனத் திட்டமும் முன்மொழியப்பட்டிருக்கின்றது. இது, "மகாவலி-எல்" வலயத்திற்கு நீரைக் கொண்டு செல்வதற்கானதொரு துணைத் திட்டம் தான்.

இந்த திட்டம் முன்னெடுக்கப்படுவதால், வடக்கின் எல்லையில் குடிப்பரம்பல் தீவிரமடையும், தொல்பொருளியல் பகுதிகள் மாயமாகும், வெள்ள அனர்த்தங்கள் ஏற்படும், சுற்றுச்சுழலின் பாதுகாப்பு மோசமாகும். குறிப்பாக, ஒதுக்கக் காடுகள் அழிக்கப்பட்டுவதோடு, யானை-மனித மோதல்கள் உட்பட விலங்குகள், பூச்சியினங்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகும்.

கிவுல் ஓயா திட்டம் பற்றிய சுற்றுச்சூழல் பாதிப்பு மதிப்பீட்டு அறிக்கையின் பின் இணைப்புக்கள் மட்டுமே பொதுமக்களுக்கு பொதுப்படையாகக் காட்சிப்படுத்தப்பட்டு அனுமதி பெறப்பட்டதாக அறிவிக்கப்பட்டதன் பின்னர், சுற்றுச்சூழல் நீதிக்கான மையம் தனது கரிசனையை வெளியிட்டு அவதானங்களை எழுத்து மூலமாகப் பரிந்துரைத்திருக்கின்றது.

ஆனால், அந்தப் பரிந்துரைகள் உட்பட, பிரதேச வாசிகளின் கோரிக்கைகள் கூட கரிசனையில் கொள்ளப்பட்டு, கிவுல் ஓயா திட்டத்திற்கான உத்தேச முன்மொழிவுகள் மீளவும் மறுசீரமைக்கப்பட்டதா என்றால் இல்லை. ஆரம்பத்தில் திட்டமிட்டவாறே அந்த நீர்ப்பாசனத் திட்டத்தினை முன்னெடுப்பதற்கு நடவடிக்கைகள் தீவிரமாக எடுக்கப்பட்டு வருகின்றன.




Figure-2:1 (A) Proposed Project layout map

## திட்டத்தின் விபரம்

வவுனியா மாவட்டத்தின் கிழக்குப் பகுதியில் உற்பத்தியாகி, முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்குளாய்க்குச் செல்லும் "மா ஓயா"வின் பிரதான கிளை நதியே கிவுல் ஓயா.

இந்தக் கிவுல் ஓயாவை மையப்படுத்தி அணையைக்கட்டுவதன் மூலமாக, வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு விவசாயத்துக்கான நீர் மற்றும் குடிநீர் வசதியை ஏற்படுத்த முடியும் என்று மகாவலி அதிகார சபை முன்மொழிந்து இந்த திட்டத்தினை வடிவமைத்துள்ளது.

இத்திட்டத்தில், நீர்ப்பாசன உட்கட்மைப்பு அபிவிருத்திக்காக 6230 மில்லியன் ரூபாவும், சுற்றுச்சூழல் பாதுகாப்புக்காக 832 மில்லின் ரூபாவுமாக, மொத்தம் 7062 மில்லியன் ரூபா செலவிடப்படவுள்ளது.

அத்துடன், குறித்த திட்டமானது, வலயம் "ஏ" - கிவுல் ஓயா நீர்த்தேக்கம் அணைக்கட்டு மற்றும் வெள்ளப் பெருக்குப் பகுதி, வலயம் "பி"- விவசாயத்திற்காக ஒதுக்கப்பட்ட நிலங்கள், வலயம் "சி" - கிவுல் ஓயா திட்டத்தின் கீழான குடியேற்ற பகுதிகள், வலயம் "டி" சிறு தாங்கிகள் மற்றும் அவற்றை அண்மித்த குடியிருப்புகள், வலயம் "ஈ" - முன்மொழியப்பட்ட யானை வழித்தடம் என்று ஐந்து கட்டங்களாக முன்னெடுக்கப்படவுள்ளது.

இத்திட்டத்தினால், ஏற்கனவே குடியேற்றப்பட்டுள்ள 4,372 குடும் பங்கள், மற்றும் புதிதாக குடியேற்றப்படவுள்ள 1626 குடும்பங்களென மொத்தமாக 6000 விவசாயக் குடும்பங்கள் நேரடிப்பயனாளிகளாகவும், 50 ஆயிரம் பேர் குடிநீரைப் பெறும் பயனாளிகளாகவும் இருப்பார்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறிப்பாக, இந்தத் திட்டத்தின் ஊடான பயனாளிகள் அனைவரும் 1983இன் பின்னர் குடியேற்றப்பட்ட "சிங்கள" விவசாயிகளாக இருக்கின்றார்கள் என்றும் அவர்களில் 0.86 சதவீதத்தினர் மட்டுமே ரோமன் கத்தோலிக்கர்கள் என்றும் ஏனையவர்கள் பௌத்தர்கள் என்றும் சுட்டிக்கூறப்பட்டுள்ளது.


குடியேற்றப்பட்டவர்களுக்கு சொந்தமாக விவசாய நிலங்கள் காணப்படாமையாலும், நீர்ப்பாசன வசதி காணப்படாமையாலும், வாழ்வாதார நெருக்கடிகளை எதிர்கொள்வதோடு, அவர்களுக்கு கல்வி, சுகாதாரம், குடிநீர் போன்ற தேவைப்பாடுகளும் அவசியமாக உள்ளன என்றும் உத்தேச திட்டத்தின் இலக்கில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தீவிரமடையும் குடிப்பரம்பல்

முன்னெடுக்கப்படும் கிவுல் ஓயா நீர்பாசனத்திட்டத்திற்கு சமாந்தரமாகத்தான் வவுனியாவிலிருந்து, முல்லைத்தீவுக்கு ஆரம்பகாலங்களில் தமிழ் மக்கள் கால் நடையாக பயணித்திருக்கின்றனர்.

குறிப்பாக, கொக்குளாயிலிருந்து, கருவாடு உள்ளிட்ட கடல்சார் பொருட்களை பொதிகளாக்கி வெடிவைத்தகல்லு, மருதோடை, காஞ்சிரமோட்டை பகுதிகளுக்கு எருமை மாடுகளில் ஏற்றி விநியோகித்ததோடு, அம்மக்கள் தமக்கு தேவையான மிளகாய் உள்ளிட்ட தானியங்களையும் மீளப் பெற்றுச்சென்ற நினைவுகள் தற்போதும் உள்ளன.

இவ்வாறிருக்கையில் தான் கிவுல் ஓயா நீர்ப்பாசனத் திட்ட முன்மொழிவின் அடிப்படையில், வடக்கில் வலிந்து குடியேற்றப்பட்ட சிங்கள பௌத்தர்களை மட்டுமே இத்திட்டம் மையமாகக் கொண்டது என்பதோடு, குடியேற்றப்பட்ட ஒரு குடும்பத்திற்கு தலா 1.17மில்லின் ரூபா நீர்வழங்கல் வசதிக்காக மட்டும் செலவிடப்படவுள்ளமையும் வெளிப்பட்டுள்ளது.




**தார்மீக அடிப்படையில், நாம் ஒரு உறுதியான அத்திவாரத்தில் நிற்கிறோம். எமது போராட்ட இலட்சியம் நியாயமானது: சர்வதேச மனித அறத்திற்கு இசைவானது. எமது மக்கள் தன்னாட்சி உரிமைக்கு உரித்தானவர்கள், தனியரசை அமைக்கும் தகுதி பெற்றவர்கள். சர்வதேச சட்டத்தின் அடிப்படையில், இந்த உரிமையை எவரும் நிராகரித்துவிட முடியாது.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

குடியேற்றப்பட்ட சிங்கள, பௌத்தர்களின் நீர்த்தேவைக்காக மட்டும் இவ்வளவு தொகை செலவிடப்படுகின்றதென்றால், அவர்களுக்கான இருப்பிடங்கள் உள்ளிட்ட ஏனைய அடிப்படை வசதிகளுக்காக எவ்வளவு செலவிடப்பட்டிருக்கும் என்பது தொடர்பிலும் ஆழமான கரிசனை கொள்ளவேண்டிய தேவை இங்கு இயல்பாகவே எழுகின்றது.


அதுமட்டுமின்றி, இந்நீர்ப்பாசனத் திட்டம் முற்றுப்பெறுகின்ற போது ஒதுக்கக் காடுகள் மேலும் அழிக்கப்பட்டு மேலதிகமான குடியேற்றங்கள் இடம்பெறுகின்றமைக்கான ஏதுநிலைகளும் இல்லாமலில்லை. அவ்விதமான நிலைமை ஏற்படுகின்றபோது வவுனியா மற்றும் முல்லைத்தீவின் குடிப்பரம்பலில் சடுதியான மாற்றங்கள் ஏற்படும்





## மாயமாகும் நிலையில் தொல்பொருள் பகுதிகள்

Archaeological Sites Situvated in Proposed Project Area







இலங்கைத் தொல்பொருளியல் திணைக்களத்தின் முதற் கடமையாக இருப்பது, நாட்டின் தொல்பொருள் பாரம்பரியத்தை நிர்வகிப்பதற்கான பிரதான ஒழுங்குமுறை அமைப்பாக உச்சபட்சமான அளவில் செயற்படுவதாகும்.

வடக்கிலும், கிழக்கிலும், தமிழர்களினது பூர்வீகமான இடங்கள் தொல்பொருளியல் திணைக்களத்தின் பெயரால் பௌத்த வரலாற்று இடங்களாக அடையாளப்படுத்தப்பட்டு ஆக்கிரமிக்கப்படுகின்ற தருணங்களில் மேலே கூறிய தமக்குள்ள முதற் கடமையின் அடிப்படையில் தான் செயற்படுகின்றோம் என்று: தொல்பொருளியல் திணைக்களம் வாதம் செய்தது. தனது செயற்பாடுகளையும் நியாயப்படுத்தியது. தற்போதும் நியாயப் படுத்திக் கொண்டிருக்கின்றது.





யாழ்.நிலாவரை, வவுனியா வெடுக்குநாறி, முல்லைத்தீவு குருந்தூர்மலை, திருகோணமலை கன்னியா பிள்ளையார் ஆலயம், மட்டக்களப்பு மயிலத்தமடு, மாதவனை உள்ளிட்ட பகுதிகளை மீட்கும் போராட்டங்களின் போதும் பேச்சுவார்த்தைகளின் போதும் தொல்பொருளியல் திணைக்களத்தின் பிரதிபலிப்புக்கள் அதற்கு மிகச்சிறந்த உதாரணங்களாகவுள்ளன.

அவ்வாறிருக்கையில், கிவுல் ஓயா நீர்பாசனத் திட்டம் முழுமைப்படுத்தப்படும் பட்சத்தில் அப்பகுதியில் உள்ள வரலாற்று இடங்கள், இந்து, பௌத்த மடாலய தளங்கள், மட்பாண்டங்கள் மற்றும் தளங்கள், பிற தொல்பொருள் இடங்கள் உள்ளிட்டவைக்கு பெரும் பாதிப்புக்கள் ஏற்படவுள்ளன.





குறிப்பாக, வலயம் – “ஏ”இல் 9இடங்களும், வலயம் – “பி”இல் 17இடங்களும், வலயம் – “சி”இல் 19இடங்களும், வலயம் – “டி”இல் 2இடங்களுமாக மொத்தம் 47 தொல்பொருளியல் இடங்கள் முறையாக பராமரிக்க முடியாதும் சில நீரினுள் மூழ்கி அடையாளமே தெரியாது போவதற்கான சத்தியங்களும் அதிகமுள்ளன.

பாதிப்புக்குள்ளாகும் பகுதிகள் ஏற்கனவே தொல்பொட்களைக் கொண்டுள்ளவையென உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில் கிவுல் ஓயா திட்டத்திற்கு தொல்பொருளியல் திணைக்களம் எவ்வாறு பச்சைக்கொடி காண்பித்தது? கூடவே, கிவுல் ஓயா திட்டத்திற்காக தொல்பொருளியல் திணைக்களம், தனது முதற் கடமையிலிருந்தே விலகி நிற்கின்றதா?

தமிழர்களின் பூர்வீகத்தை பறைசாற்றும் வகையில் வன்னி இராச்சியத்துடன் தொடர்புடைய தொன்மங்களே அதிகளவில் இப்பகுதியில் காணப்படுவதற்கான சந்தர்ப்பங்கள் உள்ளதாக இப்பகுதிக்கு கள வியஜம் மேற்கொண்டிருக்கும் தொல்பொருள் ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

அவ்வாறாயின், தமிழர்கள் சார்ந்த தொன்ம விடயங்களை பொருட்டாக கொள்ளாது தொல்பொருளியல் திணைக்களம் இனரீதியான பாகுபாட்டுடன் செயற்பாடுகளை முன்னெடுகின்றது என்ற சந்தேகம் எழுவதை இவ்விடத்தில் தவிர்க்க முடியாதுள்ளது.

## வெள்ளத்தால் மூழ்கப்போகும் கிராமங்களும் குளங்களும்

கிவுல் ஓயா திட்டம் முற்றுப்பெறும் பட்சத்தில், காட்டுப்பூவரங் குளம், வெடிவைத்தகல்லு, மருதோடை, காஞ்சிரமோட்டை, கூழாங்குளம் ஆகிய கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கும் அபாயத்தில் உள்ளன. குறிப்பாக, காட்டுப்பூவரங்குளத்தில் 430 ஏக்கர்களும், வெடிவைத்தகல்லில் 475 ஏக்கர்களும் வெள்ள அனர்த்த அபாயத்தில் உள்ளன.

இந்தக் கிராமங்களில் இன்னமும் தமிழ் மக்களின் மீள்குடி







யேற்றம் நிறைவேறாத நிலைமை நீடித்துக் கொண்டிருக்கையில் தான் இவ்வறான வெள்ள அனர்த்த அபாய நிலைமை தோற்றம் பெற்றுள்ளது.

இக்கிராமங்களில் பூர்வீகமாக வாழ்ந்தவர்களுக்குச் சொந்தமான உறுதிக்காணிகள் மற்றும் வாழ்வாதார நிலங்கள் காணப்படுகின்றபோதும் அவர்களுக்கு உரிய அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதில் இன்னமும் தாமதங்கள் நீடித்துக்கொண்டிருக்கின்றன.

இதனைவிடவும், இராமன்குளம், வேலன்குளம் உள்ளிட்ட சிறு குளங்கள் மற்றும் நீரேந்துப்பகுதிகள் இத்திட்டத்தின் ஊடாக மூழ்கும் நிலையே உருவாகியுள்ளமை குறிப்பிடதக்கதாகின்றது.

## கருத்திற்கொள்ளப்படாத சுற்றுச்சூழல் பாதுகாப்பு

வவுனியா பெரியகட்டிக்குளம் பகுதியில் காணப்பட்ட ஒதுக்கக் காடுகள் அழிக்கப்பட்டே கிவுல் ஓயா திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது. அத்துடன் கொக்குத்தொடுவாயில் உள்ள "கிரிபன் வெவ" என்று பெயர் மாற்றப்பட்டுள்ள ஆமையன் குளத்திற்கு நீரை நகர்த்துகின்றபோது 2500 ஹெக்டெயர் காடுகள் அழிந்துவிடும் என்று சுற்றுச்சூழல் பாதிப்பு மதிப்பீட்டு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இத்திட்டத்தினை அண்மித்த புதிய குடியேற்றங்கள் காரணமாக, 1500 ஹெக்டெயர் அளவிலான வாழ்விடத்தினை வன ஜீவராசிகள் இழப்பதால் மனிதன்-யானை மற்றும் ஏனைய வன ஜீவராசிகளுக்கிடையிலான மோதல் தீவிரமடையும் என்று வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் கவலை வெளியிட்டுள்ளதாகவும் சுற்றுச்சூழல் பாதிப்பு மதிப்பீட்டு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இத்திட்டத்தால், மேம்படுத்தப்படுத்தப்படவுள்ள விவசாய நிலங்களைப் பாதுகாப்பதற்காக மின்சார வேலிகள் அமைக்கப்படுமாக இருந்தால் காட்டுயானைகள் மற்றும் ஏனைய வன ஜீவராசிகளின் நடமாட்டம் கேள்விகுறியாகும் சூழல் தோன்றுவதால் அவற்றின் உயிர்வாழ்வு சம்பந்தமான பிரச்சினைகள் உருவாகுகின்றன.

காட்டுயானைகள் உள்ளிட்டவை, புதிய வழித்தடங்களை நாடினால் மின்சார வேலிகளை மேலும் 50 கிலோமீற்றருக்கு அதிகரிக்கும் நிலைமைகள் ஏற்படுவதோடு, அதற்காக, மேலதிக நிதி ஒதுக்கீடும் தேவையாகும் என்றும் வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைகளம் கரிசனை வெளியிட்டுள்ளது


மனிதன்-யானை மற்றும் ஏனைய ஜீவிராசிகளுக்கு இடையிலான மோதலைத் தடுப்பதற்காக நீர்ப்பாசனத் திட்டத்தின் அணைக்கு கீழே வழித்தடம் ஒதுக்கப்பட்டுள்ளது. மின்சார வேலி தடுப்புக்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. ஆனால் இவை பூரணப்படுத்துவதற்கு முன்னதாக விவசாய நிலங்களுக்கு பிரவேசிக்கும் யானைகள் உள்ளிட்ட வன ஜீவராசிகளை தடுப்பதற்கான எவ்விதமான திட்டங்களும் கூறப்படவில்லை.

எதிர்காலத்தில், ஒதுக்காடுகளை அழிக்கும் நிலைமைகள் மேலும் தீவிரமடைந்தால் நீண்டகாலத்தில் மழைவீழ்ச்சி குறைவடைவதற்கான நிலைமைகள் தோற்றம் பெறலாம் என்றும், திட்டப் பகுதியில் பதிவு செய்யப்பட்டுள்ள மொத்த 88 தாவர இனங்களில் இரண்டு தேசிய அளவில் அச்சுறுத்தலுக்கு உள்ளானவை என்றும் முக்கியமான ஏழு தவர இனங்கள் உள்ளன என்றும் அடையாளம் காணப்பட்டுள்ளது.

அத்துடன், பதிவுசெய்யப்பட்ட 214 விலங்கு இனங்களில், 14 உள்ளூரைச் சேர்ந்தவையாக இருப்பதோடு நான்கு இனங்கள் உலக அளவில் ஆபத்துக்குள்ளானவையாகவும் எட்டு இனங்கள் தேசிய அளவில் அழிந்து வருபவையாகவும் உள்ளன. பறவைகளில், 10 புலம்பெயர்ந்த இனங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

ஆகவே, சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பில் அவதானம் செலுத்துகின்றபோது இத்திட்டத்தின் நேர்மறையான முடிவுகளை விடவும் எதிர்மறையான தாக்கங்களே அதிகமாக இருக்கின்றன.

பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியிலும், பல ஆபத்துக்கள் நிறைந்திருக்கின்ற கிவுல் ஓயா திட்டமானது, வெளிப்படைத்தன்மையற்ற வகையில், களஆய்வு அறிக்கைகள் தயார்படுத்தப்பட்டு, வரையறைகளைக் கடந்து அதிகாரத்தின் பால் அனுமதிகள் வழங்கப்பட்டு உள்நாட்டு நிதி ஒதுக்கீட்டிலேயே திட்டத்தினை நடைமுறைச் சாத்தியமாக்குவதற்கான தயார்படுத்தல்கள் முன்னெடுக்கப்படுகின்றன.







அதனடிப்படையில் கிவுல் ஓயா திட்டத்தின் பின்னால் உள்ள நோக்கையும், இலக்கையும் இலகுவாகப் புரிந்து கொள்ள முடிகின்றதல்லவா?

நன்றி: ஆர். ராம் - வீரகேசரி 26.06.2022

# “இலங்கையில் இடம்பெற்ற மோதல் தொடர்பான பாலியல் வன்முறைகளால் பாதிக்கப்பட்டவர்கள் தங்களுக்கு ஏற்பட்ட அநீதிக்கு உடனடி நீதியும், பொறுப்புக் கூறலும் வழங்கப்படுவதுடன், தமக்கு தொடர்ச்சியான உளவியல் மற்றும் சமூக ஆதரவும் தேவை”

– சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்திட்டம் –

15.01.2026

ஜொகானெஸ்பேர்க் : இலங்கையில் திட்டமிட்டும் பரவலாகவும் இடம்பெற்ற மோதல் தொடர்பான பாலியல் வன்முறைகளால் பாதிக்கப்பட்டவர்கள் தங்களுக்கு ஏற்பட்ட அநீதிக்கு உடனடி நீதியும், பொறுப்புக் கூறலும் வழங்கப்படுவதுடன், தமக்கு தொடர்ச்சியான உளவியல் மற்றும் சமூக ஆதரவும் தேவையென்றும் கூறுகின்றார்கள். சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்திட்டம் (ITJP), பாதிக்கப்பட்டு, உயிர்பிழைத்து, வெளிநாடுகளுக்குத் தப்பி வந்து வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழர்களுடன் இரண்டு ஆண்டுகள் தாம் நடத்திய கலந்தாய்வின் முடிவுகளை இன்று வெளியிட்டுள்ளது. பாலியல் வன்முறைகளால் பாதிக்கப்பட்டவர்களின் தேவைகளை மையமாகக் கொண்ட இழப்பீடுகள் எப்படி இருக்கவேண்டும் என்பதை இந்த அறிக்கை ஆராய்கின்றது.

“என்னைப் பொறுத்தவரையில், இழப்பீடு என்பது பிரதானமாக உளரீதியான நிவாரணமே ஆகும்-பாதிக்கப்பட்டவர்களை உளரீதியாகவும், சிகிச்சை மூலமாகவும் குணமடைவதற்கு உதவுவதே. இரண்டாவதாக, இந்த அட்டூழியங்களுக்காக இலங்கை ஆட்சியாளர்களைப் பொறுப்புக்கூற வைக்க வேண்டும்” இவ்வாறு பாதிக்கப்பட்டு, உயிர்பிழைத்த ஒருவர் கூறினார்.

2009இல் முடிவடைந்த ஆயுத மோதலின்போதும், அதற்குப் பின்னரும் சிறீலங்கா பாதுகாப்புப் படையினரால் பாலியல் வன்புணர்வுக்கும் இதர பாலியல் வன்முறைகளுக்கும் ஆளாகி, உயிர்தப்பிய ஆண்கள், பெண்கள் என ஐம்பது பேரிடம் ITJP கலந்தாய்வு நடாத்தியது. சிறீலங்காவில் போர்நடந்த வடக்கிலும் கிழக்கிலும் இவ்வாறான கலந்தாய்வினை நடாத்துவது பாதுகாப்பானதும் கிடையாது அதற்கு அனுமதி கிடைக்கவும் மாட்டாது என்பதால் இந்த ஆய்வு இலண்டனில் நடாத்தப்பட்டது. 68 பக்கங்களைக் கொண்ட “Opening a Conversation: The Justice and Reparations Needs of Exiled Tamil Survivors of Conflict-related Sexual Violence” என்னும் இந்த அறிக்கையில் பாதிக்கப்பட்டவர்களால் வரையப்பட்ட சித்திரங்களும் அவர்களது வாக்குமூலங்களிலிருந்து சில மேற்கோள்களும் இடம்பெற்றுள்ளன.

இக்கலந்தாய்வில் கலந்துகொண்டவர்களில் பலர் போர் முடிந்த பின், ஒரு தசாப்தத்திற்கும் மேலாக சிறீலங்காவில் வாழ்ந்தவர்கள். அவர்கள் தமக்கு அவசரமான தேவைகள் எவை என்பதை அடையாளம் கண்டு வெளிப்படுத்தினர். முழுமையான உளவள மற்றும் ஆரோக்கிய ஆதரவு, பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பான குடியிருப்பு, சேர்ந்திருக்கும் உணர்வையும் சமூகத்தையும் மீளவும் கட்டியெழுப்புவதற்கான வாய்ப்புகள், சட்டரீதியான தீர்வுகள், மற்றும் குற்றவாளிகளை அடையாளம் கண்டு சட்டநடவடிக்கைகள் எடுத்தல் என்பன இதில் அடங்கும். மகிழ்ச்சி நிரம்பிய வாழ்க்கை, பாதுகாப்பான சூழல், ஆரோக்கியமான மனநிலை, தரமான கல்வியைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு” என்பதே அவர்களின் விருப்பமாக இருந்தது.

பாலியல் வன்முறைகள் தனிநபர்கள் மீதும் பரந்துபட்ட தமிழ்ச் சமூகத்தின் மீதும் ஏற்படுத்தியிருக்கும் நீண்டகாலப் பாதிப்புக்களை இந்த அறிக்கை வெளிப்படுத்துகின்றது.

“அதன் தாக்கம் உணர்வை மரத்துப்போகச் செய்துவிட்டது” என்று ஒருவர் கூறினார்.” அவமானத்தின் சின்னமாக நாங்கள் பார்க்கப்படுகின்றோம்” என இன்னொருவர் தெரிவித்தார்.



தாம் இலங்கையில் இருந்தபோதும் சரி, அல்லது புலம்பெயர்ந்து இருக்கும்போதும் சரி தங்களது வாழ்க்கையில் பயம், களங்கம் மற்றும் தனிமை வாட்டுவதாக பாதிக்கப்பட்டவர்கள் விபரித்தார்கள். சீருடை தரித்தவர்கள் மற்றும் பாதுகாப்புப் படையைச் சேர்ந்தவர்கள் தொடர்பான பயங்கரக் கனவுகள், திடீர் நினைவுகள் என்பன இப்பாதிக்கப்பட்டவர்களை அவர்களது குடும்பத்திடமிருந்தும் சமூகத்திடமிருந்தும் விலக்கி வைத்திருக்கின்றன. மேலும் அவர்கள் தங்கள் வாழ்க்கையை மீளக் கட்டியெழுப்புவதற்கு போராடிக் கொண்டிருக்கின்றார்கள். “பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானவர்களுக்கு கிணற்றில் குதித்தோ அல்லது தூக்கில்தொங்கியோ தங்கள் உயிர்களை மாய்த்துக் கொள்வதைத் தவிர வேறெந்தத் தெரிவும் இல்லை” என பாதிக்கப்பட்டவர்களில் ஒருவர் தெரிவித்தார். தன்னுடைய உடலிலுள்ள தழும்புகள் பற்றி தன்னுடைய சிறுமகன் தன்னிடம் கேட்டபோது தனக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை என பாதிக்கப்பட்ட ஒரு தந்தை வேதனையுடன் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்டு உயிர் தப்பியவர்கள், முதலில் தாம் அரசால் பாதிக்கப்பட்டதாகவும், பின்னர் தங்களது சொந்தச் சமூகத்தினாலும் பாதிப்படைந்ததாகவும், தமது இரட்டைப் பாதிப்புப் பற்றிக் கூறினார்கள். “இது எங்கள் குடும்பத்திற்கே பிரச்சினையை ஏற்படுத்துகின்றது - எங்களது சொந்தக் குடும்பமே எங்களை விமர்சித்து, ஒரங்கட்டுகின்றது, எங்கள் சமூகமும் அதையேதான் செய்கின்றது”.
“சில நேரங்களில், சிறீலங்கா பாதுகாப்புப் படையினரின் பாலியல் தாக்குதல்களுக்கு நாங்கள் ஆளாக்கப்படுகின்ற நேரத்தில், தமிழ்ச் சமூகத்திலுள்ள இதர மக்கள் எங்களைத் துஷ்பிரயோகம் செய்து, அதனையே எமக்கும் செய்ய முயல்கின்றனர்.”


ஆண்களையும் பெண்களையும் கொண்ட இக்குழு, ஒரு உளவளத்துணைச் செயற்பாட்டிற்காக வாரந்தோறும் இலண்டனில் சந்தித்தது - இதற்கான நிதியுதவி தற்போது நிறுத்தப்பட்டுள்ளது. பிரித்தானியாவிலும் இலங்கையிலும் மருத்துவ மற்றும் உளவளத்துணை உதவிகளைப் பெற்றுக்கொள்வதில் சிரமங்களை எதிர்கொண்டதாகத் தெரிவித்தனர்.

பாலியல் வன்முறையிலிருந்து உயர்தப்பிவந்த ஆண்களும் பெண்களும் ஒன்றாக இருந்து தங்களது அனுபவங்களைப் பற்றி வெளிப்படையாகப் பேசியது இதுவே முதன்முறையாகும். “இந்தக் கலந்தாய்வில் கலந்துகொண்ட பின்னர், பாலியல் வன்முறைகளால் ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஒரே மாதிரியான தாக்கங்களே ஏற்படுகின்றன என்பதைப் புரிந்துகொண்டேன். இது முக்கியமான உண்மை” என இன்னொரு பாதிக்கப்பட்டவர் தெரிவித்தார்.

இதுவரை பேசப்படாமல் இருந்த இப்படியான விடயத்தைப் பற்றிப் பேசுவதற்கு பங்கேற்பாளர்கள் ஆரம்பத்தில் தயக்கம் காட்டினர், ஆயினும் பேசுவதற்குப் பாதுகாப்பான சூழல் உள்ளது என்பதை உணர்ந்தபின்னர், அவர்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து இதுபற்றிக் உரையாடத் தொடங்கினார்கள்: “பாதிப்புக்கு ஆளாக்கப்பட்ட பின்னர் கண்ணாடி முன்னால் நின்று எங்களையே எம்மால் பார்க்கமுடியவில்லை. ஆனால் இப்போது எங்களால் அதனைச் செய்யமுடியும். இது ஒரு பெரும் சாதனையே,” இவ்வாறு பாதிக்கப்பட்ட ஒரு பெண் கூறினார்.

வெறுமனே பாலியல் வன்முறைகள் மட்டுமன்றி, அதிபயங்கரமான மீறல்களையும் இப்பாதிக்கப்பட்டவர்கள் எதிர்கொண்டார்கள். “பொதுவாக, அவர்களும் அல்லது அவர்களது அன்புக்குரியவர்களும் வலுக்கட்டாயமாக சண்டைக்கு ஆட்சேர்க்கப்பட்டார்கள், திரும்பத் திரும்ப இடம்பெயர்ந்தார்கள், குண்டுத் தாக்குதல்களுக்கும் எறிகணைத் தாக்குதல்களுக்கும் ஆளானார்கள், பட்டினியால் வாடினார்கள், மருத்துவ உதவியின்றித் தவித்தார்கள், தமது விருப்பத்திற்கு மாறாகத் தடுத்துவைக்கப்பட்டார்கள், சித்திரவதைக்கு ஆளாக்கப்பட்டார்கள், வலிந்து காணாமல் ஆக்கப்படுவதையோ அல்லது விசாரணை ஏதுமின்றிச் சுட்டுக்கொல்லப்படுவதையோ நேரடியாகக் கண்டார்கள்” இவ்வாறு ITJP இன் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜஸ்மின் சூக்கா தெரிவித்தார்.

INTERNATIONAL TRUTH AND JUSTICE PROJECT




இழப்பீடுகள் பற்றிய இந்த ஆய்வு பாலியல் வன்முறைகள் பற்றியே குறிப்பாக கவனம் செலுத்திய போதிலும், பாதிக்கப்பட்டவர்கள் தாங்கள் ஒரு குறிப்பிட்ட இனம் என்பதற்காக நடாத்தப்பட்ட பரந்துபட்ட தாக்குதலின் ஒரு பகுதியாகவே இதனை நோக்கினர்.

“தமிழர்களுக்கான தனித்துவமானதும் கலாச்சார ரீதியிலானதுமான அடையாளங்களையும், மனோதிடத்தையும் அழித்தொழிக்கும் நோக்குடன் நடாத்தப்படும் சித்திரவதையின் ஒரு பகுதியாகவும் தனிநபர்களை அவமானப்படுத்துவதற்கும் நன்றாகத் திட்டமிட்டு வேண்டுமேன்றே இத்தாக்குதல்கள் அரங்கேற்றப்படுகின்றன.”

தாங்கள் அனுபவித்த பாலியல் வன்முறை தங்களது முழுச் சமூகத்தின் மீதும் ஆழமான மனஉளைச்சலை ஏற்படுத்தியுள்ளதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தார்கள்: “பெண்களை, ஏன் பெண்களின் சடலங்களைக் கூட எவ்வாறு சிறீலங்கா இராணுவம் துஸ்பிரயோகம் செய்தது என்பது பற்றிய காணொளிகள் வெளிவந்து, எங்கள் சமூகத்தின்மீது பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது” என அவர்கள் கூறினார். குற்றவாளிகள் தண்டிக்கப்படவேண்டும் என்பதே அவர்களின் பெரு விருப்பம். ”அவ்வாறு நடந்தால் அது எமக்குச் சிறிய ஆத்ம திருப்பதியைக் கொடுக்கும்”.

2009இல் போர் முடிவுக்கு வந்ததிலிருந்து முன்னர் மோதல் நடந்த பகுதிகளில் தமிழர்களுக்கு எதிராக பாதுகாப்புப் படையினர் மேற்கொள்ளும் கடத்தல், சித்திரவதை, பாலியல் வன்முறைகள் தொடர்ந்தும் நடைபெற்றுவந்துள்ளது. ஐ. நா. அமைப்புக்கள் சிறீலங்காப் பாதுகாப்புப் படையினரால் தொடர்ந்தும் வன்முறைகள் நடாத்தப்படுவதாகத் திரும்பத்திரும்ப வெளிப்படுத்தியபோதிலும், சிறீலங்கா அரசாங்கம் இதனை மறுப்பதுடன், இக்குற்றங்கள் நடைபெறவில்லை என்றும் சொல்லிவருகின்றது. சர்வதேச சட்டப் பொறுப்புக்களை மீறும் இந்த மறுப்பு, பாதிக்கப்பட்டவர்களுக்கு மேலும் பாரதூரமான மனஉளைச்சலை ஏற்படுத்தியுள்ளது. அரசாங்கத்தினால் பரவலாக கடைப்பிடிக்கப்பட்டுவரும் குற்றம் புரிந்தவர்களுக்கான தண்டனை விலக்களிப்புத் தொடர்பிலும் சர்வதேச சமூகம் தீர்க்ககரமாகச் செயற்படத் தவறியது தொடர்பிலும் பாதிக்கப்பட்ட பலர் தங்கள் கோபத்தையும் விரக்தியையும் வெளிப்படுத்தினார்கள். “முகவர் அமைப்பு” தொடர்பிலான விவாதம் அவர்கள் மத்தியில் ஆழமாகப் புதைந்திருந்த உணர்வுகளை வெளிப்படுத்தி, தம்மைவிட்டு விலகாத துரோகம் மற்றும் அநீதி உணர்விற்கு ஒரு தீர்வு வேண்டும் கோரிக்கையாக மாறிய காரசாரமானதாக மாறியது:


“எனது குடும்ப உறுப்பினர்கள் அனைவருமே இப்போரில் இறந்துபோனார்கள். ஆனால் சிறீலங்கா அரசாங்கத்தைப் பொறுப்புக்கூற வைப்பதற்கு சர்வதேச சமூகம் எதனையுமே செய்யவில்லை. தற்போது நீங்கள் “முகவர் அமைப்புக்கள்” பற்றி எம்மிடம் கதைக்க விரும்புகின்றீர்களா? சர்வதேச சமூகமே எதுவும் செய்யாதபோது, எங்களால் எதைத்தான் செய்யமுடியும்?”

தாம் அனுபவித்த குற்றச்செயல்களுக்கு நீதிகிடைக்காதது மீண்டும் மீண்டும் பேசுபொருளாக மாறியது:

“சட்ட முறைமையில் எமக்கான தீர்வு கிடைக்கப்போவது கிடையாது. நாம் ஒருவரைப் பொறுப்புக்கூற வைப்பதற்கு முயன்றால் கூட, அவர்கள் ,திலிருந்து தப்புவதற்கு மேலும் பத்து முறைகளைக் கண்டுபிடித்துவிடுவார்கள். குற்றவாளிகள் தண்டிக்கப்படுவதில்லை,” எனப் பாதிக்கப்பட்ட ஒரு ஆண் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்டவர்களது உள ஆரோக்கியத்திற்கும், கௌரவத்திற்கும், அவர்கள் மீண்டும் இயல்புநிலைக்குத் திரும்பி வருவதற்கும் நீதியும் பொறுப்புக்கூறலும் அத்தியாவசியமானவை என்பதை இக்கலந்தாய்வு காட்டுகின்றது. பாலியல் வன்முறைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நம்பகரமான சர்வதேச பொறுப்புக்கூறல் கட்டமைப்பும், பாதிக்கப்பட்டவர்களை மையப்படுத்திய முழுமையான பரிகாரங்களும், நீடித்து நிலைக்கக்கூடிய உளவளத்துணையும் அவசியம் என்பதை ,து வலியுறுத்துகின்றது.

சிறீலங்காவில் நடந்துவரும் மீறல்கள் தொடர்பில் கவனம் செலுத்தும்படியும், தண்டனையின்மையினையும் மறுதலிப்பினையும் முடிவுக்குக் கொண்டுவரும்படியும், தொடர்ந்து நடைபெற்றுவரும் அடக்குமுறைக்கு எதிராகத் தங்கள் மௌனத்தை உடைக்கும் பாதிக்கப்பட்ட உயிர்பிழைத்தவர்களின் குரல்களை வலுப் படுத்தும்படியும் ஐக்கிய நாடுகள் சபை, அதன் உறுப்






புநாடுகள், நன்கொடையாளர்கள் ஆகியோரிடம் ஐவுதீ அழைப்பு விடுக்கின்றது.

-முற்றும்-

செய்தியாசிரியர்களுக்கான குறிப்பு: அந்த அறிக்கையானது உலகளாவிய உயர்தப்பியர்களின் நிதியத்தின் (Global Survivors Fund_GSF) அனுசரணையுடன் ITJP இனால் தயாரிக்கப்பட்டது.





# தமிழீழ விடுதலை வரலாற்றில் பெப்ரவரி

## சிங்களம் மட்டும் சட்டம்



மூத்த சிங்கள இனவாதியான எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்காவினால் சிறீலங்காப் பாராளு மன்றத்தில் சிங்களம் மட்டும் சட்டம் 08.02.1956 அன்று கொண்டு வரப்பட்டது. இச்சட்டத்தால் இலங்கைத்தீவில் தமிழ் இரண்டாம்பட்ச மொழியாக்கப்பட்டது.

## தியாகி திருமலை நடராஜன் நினைவு நாள்



04.02.1957அன்று சிங்ளச் சிறீ சட்டத்தை எதிர்த்து தமிழர் தேசமெங்கும் சிறீலங்காவின் சுதந்திரதினத்தை தமிழர்கள் பகிஸ்கரித்தனர். திருமலையில் சிங்கக்கொடியை அகற்றி கறுப்புக் கொடியைக் கட்டமுயன்ற 22 வயது நிரம்பிய இளைஞனான திருமலை நடரராஜன் சுட்டுக் கொல்லப்பட்டான். இனப்பற்றும் தேசப்பற்றும் நிரம்பிய தியாகி நடராஜன். எவ்.ஜி.மனுவல். டீ. சில்வா என்ற சிங்களக் காடையனால் கோழைத்தனமான முறையில் சுடப்பட்டான்.

## சிறீலங்காப் பொலிசார் மீதான முதல் தாக்குதல்

14.02.1977 அன்று காங்கேசன்துறை மாவிட்டபுரப் பகுதியில் சிறீலங்காப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோத்தர் ஒருவர் விடுதலைப் புலிகளின் தாக்குதலில் கொல்லப்பட்டார்.

## சிறீலங்காவின் காவல்துறைப் பரிசோதகர் கொல்லப்பட்டார்

தமிழின அழிப்பில் முன்னின்ற பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியான பரிசோதகர் விஜயவர்தனாவும் அவரது சாரதியும் விடுதலைப் புலிகளால் 18.02.1983 அன்று சுட்டுக்கொல்லப்பட்டனர்.

## குருநகர் சிறீலங்கா ஆக்கிரமிப்பு இராணுவ முகாம் தகர்ப்பு

பல நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்களின் வதை முகாமாக விளங்கியதும், சிறீலங்கா இராணுவத்தின் பிராந்தியக் காரியாலயமாக விளங்கியதுமான குருநகர் இராணுவ முகாம் கட்டிடங்கள் விடுதலைப் புலிகளால் 24.02.1984 அன்று வெடிவைத்துத் தகர்க்கப்பட்டன.

## கொக்கிளாய் சிறீலங்கா ஆக்கிரமிப்பு இராணுவ முகாம் மீதான தாக்குதல்

13.02.1985 அன்று கொக்கிளாய் சிறீலங்கா இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலே தமிழீழ விடுதலை வரலாற்றில் முதலாவது சிங்கா ஆக்கிரமிப்பு இராணுவ முகாம் தகர்ப்பு முயற்சி ஆகும். இத் தாக்குதல் 5 மணித்தியாலங்கள் நீடித்தது. இத்தாக்குதலில் நூற்றிற்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். முப்பதிற்கு மேற்பட்டோர் காயமடைந்தனர். இதேவேளை நாயாற்று முகாமிலிருந்து உதவிக்கு வந்த சிங்கள இராணுவத் தொடரணி மீது மேற் கொள்ளப்பட்ட கண்ணிவெடித் தாக்குதலின் போது 30 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இத்தாக்குதல் நடவடிக்கையின் விளைவாக சிறீலங்கா இராணுவம் திரியாய், கொக்கிளாய் பகுதிகளிலிருந்து பின்வாங்கி பதவியாவில் நிலைகொண்டது.

## அம்பாறை உடும்பன்குளப் படுகொலை

தென்தமிழீழத்தின் அம்பாறை உடும்பன்குளப் பகுதியில் வயல் வேலை செய்துகொண்டிருந்த 60 தமிழர்கள் சிறீலங்கா அதிரடிப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டு வைக்கோலுக்குள் வைத்து எரியூட்டப்பட்டனர். இச்சம்பவம் 19.02.1986 அன்று இடம்பெற்றது.



## லெப். கேணல் பொன்னம்மான் உட்பட 7 போராளிகள் வீரச்சாவு




விடுதலைப் புலிகளின் மத்திய குழு உறுப்பினரும் மூத்த தளபதியுமான லெப்.கேணல் பொன்னம்மான் 14.02.1987 அன்று கைதடியில் இடம்பெற்ற எதிர்பாராத வெடிவிபத்தில் வீரச்சாவைத் தழுவிக் கொண்டார். ஆயிரக்கணக்கான புலிவீரர்களை உருவாக்கிய பயிற்சி முகாம்களுக்கு பொறுப்பாளராகவும், இராணுவத் தொழில் நுட்பப்பிரிவில் பலசாதனைகளையும் இவர் படைத்தார். கைதடியில் நிகழ்ந்த வெடிவிபத்தில் இவருடன் மேஜர் கேடில்ஸ், கப்டன் வாசு, லெப். சித்தாத்தன், 2ம்லெப். பரன், வீரவேங்கை யோகேஸ், வீரவேங்கை தேவன், வீரவேங்கை குமணன், வீரவேங்கை அக்பர், வீரவேங்கை கவர் ஆகிய 7 போராளிகள் வீரச்சாவடைந்தார்கள்.

## வன்னிவிக்கிரம முறியடிப்பும் உலங்குவானூர்தி தகர்ப்பும்



வவுனியா பூவரசங்குள வழியாக வன்னி விக்கிரம என்ற குறியீட்டுப் பெயருடன் முன்னேற முற்பட்ட சிறீலங்கா இராணுவம் வந்த வழியே திருப்பி அனுப்பப்பட்டது. இதன் போது 10.02.1991 அன்று உலங்குவானூர்தி ஒன்று விடுதலைப் புலிகளின் விமான எதிர்ப்புப் படையணிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டது.

## முல்லைத்தீவு பூனைத்தொடுவாய் மீனவர் படுகொலை

18.02.1994 அன்று முல்லை பூனைத்தொடுவாய் கடற்பகுதியில் கடற்றொழிலில் ஈடுபட்ட மீனவர்கள் மீது கடற்படையினர் மேற்கொண்ட கண்மூடித்தனமான தாக்குதலில் 10 மீனவர்கள் கொல்லப்பட்டனர்.



## கிளிநொச்சியின் மையப்பகுதி மீட்பு

கிளிநொச்சியூடாக யாழ் குடாநாட்டிலிருந்து பேரூந்தில் சுதந்திரதினத்திற்கு தமிழர்களைக் கண்டிக்குக் கொண்டு வருவேன் எனச் சபதம் செய்த ரத்வத்தையின் பேராசை, 01.02.1998 அன்று கிளிநொச்சியின் மையப்பகுதி விடுதலைப் புலிகளால் கைப்பற்றப் பட்டதையடுத்து நிராசையானது. அதன் போது விடுதலைப் புலிகளால் 5 கி.மீ நீள நகரப்பகுதி மீட்கப்பட்டது. அத்துடன் பல நூற்றுக்கணக்கான முன்னணி சிங்களப் படையினர் கொல்லப்பட்டனர், நூற்றுக்கணக்கான இராணுவத்தினர் மடைந்தனர். காயமடைந்தனர்.



## 02.02.1998 அன்று கிளிநொச்சியில் சிங்கக்கொடி பறப்பைமாற்றி தமிழீழக் கொடியை பறக்க செய்த தாக்குதலுக்குப் பலம் சேர்த்து வீரச்சாவடைந்த 13 கரும்புலிகள்

சிறீலங்காவின் சுதந்திரதினப் பொன்விழாக் கொண்டாட்டத்திற்கு கிளிநொச்சியூடாக யாழ். மக்களை கொண்டுசெல்வோம் என்ற இறுமாப்பு மிக்க சிங்கள அரசதரப்பின் நிலைப்பாட்டுக்கு 02.02.1998 அன்று விடுதலைப் புலிகள் கொடுத்த பலமான அடி. கிளிநொச்சி நகர் மீட்பாகும். கிளிநொச்சியில் சிங்கக் கொடி பறப்பைமாற்றி தமிழீழத் தேசியக் கொடியை பறக்கச் செய்த தாக்குதலுக்குப் பலம் சேர்த்துக் கொடுத்த கரும்புலிகளான லெப். கேணல் சுபேசன், மேஜர் ஜெயராணி, மேஜர் குமுதன், மேஜர் ஆசா, மேஜர் மாங்கை, கப்டன் தனா, கப்டன் இந்து, கப்டன் நளாயினி, கப்டன் செங்கதிர், கப்டன் குமரேஸ், கப்டன் உமையாள், கப்டன் நெடியோன், கப்டன் அருணன் ஆகியோர் வீரச்சாவடைந்தனர்.




## லெப். கேணல் நிர்மா வீரச்சாவு – 28.04.2001



தமிழீழத்தில் இடம்பெற்ற பல முக்கிய களங்கள் லெப்.கேணல் நிர்மா (மேரிசாந்தினி ஞானசுந்தரம், கிளிநொச்சி - 23.09.173)வின் பணியை வேண்டிநின்றன. லெப். கேணல் பொன்னம்மான் கண்ணிவெடி அணியின் 2வது பொறுப்பாளராக செயற்பட்டவர். தீச்சுவாலை 01 எதிர் நடவடிக்கை வெற்றிக்கு வலுச்சேர்த்து வீரச்சாவை தழுவிக் கொண்டார்.

## லெப். கேணல் கௌசல்யன் வீரச்சாவு – 07.02.2005



மட்டு அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளரான கௌசல்யன் சுனாமியால் பாதிக் கப்பட்ட கிழக்கு மாகாணத்தின் மீள்கட்டுமானப் பணிகளைச் சிறப்பாக மேற்கொண்ட வேளை 07.02.2005 அன்று மட்டு மாவட்ட இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதியில் வைத்து சிறீலங்கா இராணுவத்தால் நடாத்தப்பட்ட தாக்குதலில் வீரச்சாவடைந்தார். இவருடன் மேஜர் புகழ்மாறன், மேஜர் செந்தமிழன், 2ம் லெப். விதிமாறன் ஆகியோரும் வீரச்சாவடைந்தார்கள்.

## அம்பாறை மாவட்ட முன்னால் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சந்திரநேரு அரச பயங்கரவாதத்தினால் சாவடைந்தார்.






அம்பாறை மாவட்ட முன்னால் நாடாளுமன்ற உறுப்பினரும் மனித உரிமை ஆர்வலருமான திரு. சந்திரநேரு அரியநாயகம் 07.02.2005 அன்று மட்டு மாவட்ட இராணுவ கட்டுப்பாட்டு பகுதியில் வைத்து சிறீலங்கா இராணுவத்தால் நடாத்தப்பட்ட தாக்குதலில் படுகாயமடைந்து 08.02.2005 அன்று மருத்துவமனையில் சாவடைந்தார். இவரின் இனப்பற்றிற்கும் விடுதலைப் பற்றிற்கும் மதிப்பளித்து தமிழீழ தேசியத் தலைவர் அவர்கள் மாமனிதர் என்ற அதியுயர் தமிழீழத்தின் தேசிய விருதை வழங்கிக் கௌரவித்தார்.


## லெப். கேணல் தவா(துவம்) உட்பட நான்கு போராளிகள் வீரச்சாவு – 17.02.2008

தமிழீழ தேசியத்தலைவரின் மாவீரர் நாள் உரைகள், பேச்சுவார்தைகள், சமர்கள படப்பிடிப்புக்கள், ஒளிவீச்சு சஞ்சிகை உருவாக்கம், தேசிய தொலைக்காட்சியின் முதன்மை படப்பிடிப்புக்கள், அரங்க நிகழ்வுகள், தமிழீழ திரைப்படங்கள் உருவாக்கம் என தமிழீழ விடுதலைப் போராட்த்தின் அனைத்து வரலாற்று நிகழ்வுகளையும் ஆவணமாக பதிவு செய்த லெப். கேணல் தவா 17.02. 2008 அன்று மேஜர் புகழ்மாறன், போர் உதவி படைவீரர்களான நிதர்சனப் பணியாளர்கள் ரவி, அகிலன் ஆகியோரும் மண்ணின் மடியில் மடிந்தனர்.






## சிறீலங்காவின் "பாவதா" தரையிறக்கும் கப்பலும் "வலம்புரி" சரக்குக் கப்பலும் மூழ்கடிக்கப்பட்ட பெரும் கடற்சமரின் போது வெற்றிக்கு வலுச் சேர்த்து வீரச்சாவடைந்த 11 கடற்கரும்புலிகளின் நினைவு நாள் – 22.02.1998



சமர் நடந்த நாளில் கடற்புலிகளால் எடுக்கப்பட்ட
நிகழ்படக் காட்சியிலிருந்து:
இடது பக்கம் நிற்பது “வலம்புரி”, வலது பக்கம் நிற்பது “பாவதா”

திருகோணமலையிலிருந்து யாழ். குடாவுக்கென “பாவதா” தரையிறக்கும் கப்பலும் இராணுவ சரக்குக்கப்பலான “வலம்புரி”யும் மேலும் இரண்டு போர்க்கப்பலும் 8 டோரா படைகுகள் பாதுகாப்பு வழங்க துருப்புக்களையும் இராணுவ தளபாடங்களையும் கொண்டு சென்ற “பாவதா” தரை யிறக்கும் கப்பலும் “வலம்புரி” சரக்குக்கப்பலும் மூழ்கடிக்கப்பட்ட பெரும் கடற்சமரின் போது



வெற்றிக்கு வலுச்சேர்த்து வீரச்சாவடைந்த 11 கடற்கரும்புலிகளான லெப். கேணல் கரன், மேஜர் தமிழினியன், மேஜர் சுலோயன், மேஜர் குமரேஸ், கப்டன் வள்ளுவன், மேஜர் தமிழ்மங்கை, கப்டன் வனிதா, கப்டன் ஜனார்த்தினி, கப்டன் நங்கை, கப்டன் தமிழன்பன், கப்டன் மேகலா ஆகியோரின் நினைவு நாள் 22.02.1998.

## ஈகைப்பேரொளி முருகதாசன் நினைவு நாள் – 12.02.2009



உலகத் தமிழ் மக்களிடையெ குறிப்பாக புலம்பெயர் இளையோர்களிடையே பெரும் தாக்கத்தையும் வீரத்தையும் போராட்ட குணத்தையும் விதைத்துச்சென்ற ஈகப்பேரொளி முருகதாசன் வர்ணகுல சிங்கம் (02.12.01982). ஐ.நா மனித அவையின் முன்றலில் 2009 பெப்ரவரி 12 வியாழக்கிழமை இரவு இன அழிப்பிலிருந்து ஈழத்தமிழ் மக்களை காப்பாற்றக்கோரி தீக்குளித்து சாவை அணைத் துக்கொண்டார். இவர் 7 பக்கங்களுக்கு “உலக சமூகத்துக்கு தமிழினத்தின் சார்பில் என் ஆத் மார்த்த வேண்டுகோள்” என்ற தலைப்பில் ஒரு மரண சாசனம் எழுதி வைத்து விட்டு தீக்குளித்தார்.

## ஊடகவியலாளர் சத்திமூர்த்தி நினைவு நாள் – 12.02.2009



சிறீலங்கா இனவாத அரசு தமிழினத்தின் மீது நடத்திய இன அழிப்பு நடவடிக் கையில், அது மேற்கொண்டுவந்த கருத்து ஆக்கிரமிப்பை உடைக்கும் தமிழ்த் தேசிய ஊடகப் பணியில், அம் மண்ணில் நிகழ்ந்த கடும் ஆக்கிரமிப்பு போரினால் இடப்பெயர்வுகள், பேரவலங்கள் மத்தியில் நின்று திறம்பட செயற்பட்டு வந்தவர் சத்தியமூர்த்தி புண்ணியமூர்த்தி (30.10.1972). தமிழீழ விடுதலைப் புலிகளால் நாட்டுப்பற்றாளராக மதிப்பளிக்கப்பட்டார்.

## தமிழீழ நிதிப் பொறுப்பாளர் பிரகேடியர் தமிழேந்தி வீரச்சாவு – 10.03.2009



தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப காலகட்டத்தில் இருந்து அதன் வளர்ச்சிக்கு உறுதுணையாக தன்னை முழுமையாக அர்ப்பணித்து தனது தனித்துவமான திறமையால் நிதித்துறையை திறம்பட செயலாற்றி, தேசியத் தலைவர் அவர்களதும், போராளிகளினதும் நன்மதிப்பு வெற்றிருந்தவர். 10.03.2009 அன்று சிறீலங்கா ஆக்கிரமிப்பு படையின் எறிகணைத் தாக்குதலில் தமிழேந்தி (சபாரத்தினம் செல்லத்துரை - 13.02.1950) வீரச்சாவடைந்தார்.

## முதலாவது வான் கரும்புலித் தாக்குதல் 20.02.2009



சிறீலங்காவின் தலைநகரில் அமைந்துள்ள சிறீலங்கா வான்படை தலைமையகம் மீதும் கட்டு நாயக்காவில் அமைந்துள்ள வான்படைத்தளம் மீதும் வான் கருதம்புலிகளின் பெற்றிகரத் தாக் குதலில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட முதல் வான் கரும்புலிகளான கேணல் ரூபன், லெப். கேணல் சிரித்திரன் ஆகியோரின் நினைவுநாள் 20.02.2009.




17 ஆம் ஆண்டு
வீரவணக்கம்
ரவி
02.02.2009
இராஜா
07.02.2009
இரவிச்சந்திரன்
07.02.2009
அமரேசன்
08.02.2009
தமிழ்வேந்தன்
18.02.2009
சிவப்பிரகாசம்
21.02.2009
கோகுலகிருஷ்ணன்
25.02.2009
சீனிவாசன்
01.03.2009
எழில்வளவன்
05.03.2009
ஆனந்த்
15.03.2009
இராசசேகர்
17.03.2009
பாலசுந்தரம்
22.03.2009
மாரிமுத்து
22.03.2009
சிவானந்தன்
17.04.2009
சுப்பிரமணி
23.04.2009
தமிழின் இரத்த உறவுக்காய்
தணலிற்கே தம்முயிர் தந்து – தமிழனின்
தன் மானத்தை நிலைநாட்டிய வீரச் செம்மல்களே
எம் தொப்புள்கொடி உறவுதனை
தரணியெங்கும் உணர்த்திட்ட தீரர்களே!
உங்கள் சுடரின் வழியில் எம் பயணம் தொடரும்...
தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்